ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

[ஸ்ரீஸூக்திமாலாமலர் 25]

பேயாழ்வார் அருளிய

மூன்றாந்திருவந்தாதி

[பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்,
அப்பிள்ளையுரை விவரணத்துடன்]

பதிப்பாசிரியர்:

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்

ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

5, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.

விலை ரூ. 60] 1995 [தபால் கூலி தனி

LIBRA OFFSET PRINTERS, THANJAVUR.

2600

http://acharya.org

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

2600
27.10.09

ஸ்ரீஸூக்திமாலா மலர் 25

பேயாழ்வார் அருளிய

மூன்றாந்திருவந்தாதி

[பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்,

அப்பிள்ளையுரை,

விவரணத்துடன்]

பதிப்பாசிரியர்:-

ஸ்ரீ. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

அட்வகேட்,

3. புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

விலை ரூ.52-00 1995 தபால் தனி

LIBRA OFFSET PRINTERS, THANJAVUR Ph. 22767

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முன்னுரை

[வாக்3அம்ருதவர்ஷீ

ஸ்ரீ. உ. வே. வேளுக்குடி வரத3ாசார்ய ஸ்வாமி]

ஸர்வபதியான ஸர்வேச்வரனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் பதின்மர் என்பர் ஸம்ப்ரத3ாயம் வல்ல பெரியோர். ஆழ்வார்களுள் அவதாரத்தின் முதன்மையைப்பற்றி, பொய்கையார் பூதத்தார் பேயார் என்னும் இவர்கள், முதலாழ்வார்கள் என வ்யபதே3சிக்கப்படுகிறார்கள். அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்து. இந்த உலகின் இருள் நீக்கியருளினார்கள் இவ்வாழ்வார்கள். புறவிருளைப் போக்கும் ஆதி3த்யாதி3 தேஜ: பதா3ர்த்த2ங்கள். அஜ்ஞானமாகிற உள்ளிருளைப் போக்குமவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களாகிய இவ்வாழ்வார்களிறே. இவர்கள் போக்குவதும் வருத்தும் புறவிருளிறே. ''கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான் கனவிருளகன்றது'' என்னும்படி பா3ஹ்யாந்த4காரத்தைப் போக்கிக்கொண்டு உதிக்குமிறே ஆதி3த்யன். உள்ளிருளான அஜ்ஞானாந்த4காரம் கழிவது— ''தமோ பா3ஹ்யம் விநச்யேத்து பாவகாதி3த்ய ஸந்நிதௌ4। பா3ஹ்யமாப்4யந்தரஞ்சைவ விஷ்ணுப4க்தார்க்க ஸந்நிதௌ4॥'' என்கிறபடியே ஸ்ரீவைஷ்ணவாவதார விசேஷத்தாலேயிறே. இருள் வருத்தத்தைப் பண்ணக் கடவதாகும். பா3ஹ்ய விஷய ப்ராவண்யத்துக்குடலான அஜ்ஞானம் புறவிருள். இதுவும் கழியும் ஆழ்வார்கள் அவதாரத்தாலே என்றபடி.

அஜ்ஞானமாவது ஸ்வஸ்வரூபத்தையும், பரஸ்வரூபத்தையும் அறியாமை. இது ஜ்ஞாநாநுத3யம், விபரீதஜ்ஞாநம் என இரு வகைப்படும். இவ்விருளைப் போக்கவே முதலாழ்வார்கள் திருவவதாரம் என்றபடி. தங்கள் செந்தமிழ்ப் பாக்களாலும் இன்கவிகளாலுமிறே இவர்கள் இருளைப்போக்குவது. ''இன்கவி பாடும் பரமகவிகள்'' என்று இன்பமாரியும், ''செந்தமிழ் பாடுவார்'' என்று அருள் மாரியும் கொண்டாடினார்களிறே முதலாழ்வார்களை.

''பரமாத்ம ஸ்வரூபம் அசேஷவிசேஷ ப்ரத்யநீக-சிந்மாத்ரம். விபூ4திரஹிதம், கு3ணரஹிதம், ஸ்ரீரஹிதம். 'சூ1ந்யம்'' என்பர் சிலர் மருளுற்றவர். இது ''ஜக3தி விததம் மோஹநமித3ம் தம:'' என்கிறபடியே இவ்வுலகை இன்றளவும் பற்றிக் கிடக்கும் பேரிருளாகும். இவ்விருளைப் போக்கித்தெருளை உண்டாக்கினார்கள் தெருளுற்ற ஆழ்வார்களான முத

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முன்னுரை

[வாக3ம்ருதவர்ஷீ
ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரத3ாசார்ய ஸ்வாமி]

ஸ்ரீயப்பதியான ஸர்வேஶ்வரனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் பதின்மர் என்பர் ஸம்ப்ரதா3யம் வல்ல பெரியோர். ஆழ்வார்களுள் அவதாரத்தின் முதன்மையைப்பற்றி, பொய்கையார் பூதத்தார் பேயார் என்னும் இவர்கள், முதலாழ்வார்கள் என வ்யபதே3ஶிக்கப்படுகிறார்கள். அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்து, இந்த உலகின் இருள் நீக்கியருளினார்கள் இவ்வாழ்வார்கள். புறவிருளைப் போக்கும் ஆதி3த்யாதி3 தேஜ: பதார்த்த2ங்கள். அஜ்ஞானமாகிற உள்ளிருளைப் போக்குமவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களாகிய இவ்வாழ்வார்களிறே. இவர்கள் போக்குவதும் வருத்தும் புறவிருளிறே. "கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான் கனவிருளகன்றது" என்னும்படி பா3ஹ்யாந்த4காரத்தைப் போக்கிக்கொண்டு உதிக்குமிறே ஆதி3த்யன். உள்ளிருளான அஜ்ஞானாந்த4காரம் கழிவது— "தமோ பா3ஹ்யம் விநஶ்யேத்து பாவகாதி3த்ய ஸந்நிதௌ4। பா3ஹ்யமாப்4யந்தரஞ்சைவ விஷ்ணுப4க்தார்க்க ஸந்நிதௌ4 ॥" என்கிறபடியே ஸ்ரீவைஷ்ணவாவதார விஶேஷத்தாலேயிறே. இருள் வருத்தத்தைப் பண்ணக் கடவதாகும். பா3ஹ்ய விஷய ப்ராவண்யத்துக்கடலான அஜ்ஞானம் புறவிருள். இதுவும் கழியும் ஆழ்வார்கள் அவதாரத்தாலே என்றபடி.

அஜ்ஞானமாவது ஸ்வஸ்வரூபத்தையும், பரஸ்வரூபத்தையும் அறியாமை. இது ஜ்ஞாநாநுத3யம், விபரீதஜ்ஞாநம் என இருவகைப்படும். இவ்விருளைப் போக்கவே முதலாழ்வார்கள் திருவவதாரம் என்றபடி. தங்கள் செந்தமிழ்ப் பாக்களாலும் இன்கவிகளாலுமிறே இவர்கள் இருளைப்போக்குவது. "இன்கவி பாடும் பரமகவிகள்" என்று இன்பமாரியும், "செந்தமிழ் பாடுவார்" என்று அருள்மாரியும் கொண்டாடினார்களிறே முதலாழ்வார்களை.

"பரமாத்ம ஸ்வரூபம் அஶேஷவிஶேஷ ப்ரத்யநீக-சிந்மாத்ரம். விக்3ரஹரஹிதம், கு3ணரஹிதம், ஸ்ரீரஹிதம். 'ஶுத்3த4ம்'" என்பர் சிலர் மருளுற்றவர். இது "ஜக3தி விததம் மோஹநம் இத3ம் தம:" என்கிறபடியே இவ்வுலகை இன்றளவும் பற்றிக் கிடக்கும் பேரிருளாகும். இவ்விருளைப் போக்கித்தெருளை உண்டாக்கினார்கள் தெருளுற்ற ஆழ்வார்களான முத

http://acharya.org

ஸ்ரீ:

பாசுரங்களின் ஸூசிகை

	பாசுரம்	பக்கம்
1	திருக்கண்டேன்	14
2	இன்றே கழல்	20
3	மனத்துள்ளான்	22
4	மருந்தும் பொருளும்	27
5	அடிவண்ணம்	31
6	அழகன்றே	34
7	கழல் தொழுதும்	36
8	நாமம் பல சொல்லி	38
9	கண்ணுங் கமலம்	42
10	தேசுந் திறலுந்	45
11	நன்கோதும்	48
12	அறிவென்றும்	52
13	படிவட்டத்	56
14	மாற்பால்	58
15	பணிந்துயர்ந்த	62
16	வந்துதைத்த	65
17	சென்றநாள்	69
18	வாய்மொழிந்து	71
19	அருளாதொழியுமே	74
20	மூன்றுலக	78
21	பேசுவார்	80
22	வடிவார்	84
23	விரும்பிவிண்	88
24	வருங்காலிருநில	90
25	தொழுதால்	92
26	சிறந்தவென்	95
27	ஆரேதுயருழந்தார்	99
28	அடைந்ததரவணை	102
29	பேய்ச்சிபால்	104
30	சேர்ந்த திருமால்	107
31	இவையவன்	110
32	பாற்கடலும்	114
33	பாலகனாய்	116
34	அன்றிவ்வுலகம்	118
35	காண்காணென	121
36	கையகனலாழி	124
37	அவற்கடிமை	126
38	தானே தனக்கு	129
39	இறையாய்	133
40	உளன்கண்டாய்	135
41	மன்னு மணிமுடி	140
42	கோவலனாய்	143
43	சினமாமதகளிற்றின்	147
44	உலகூழியும்	150
45	புரிந்து மதவேழம்	152
46	மலைமுகடு	156
47	நின்றபெருமானே	159
48	நீயன்றே	161
49	செற்றதுவும்	163
50	சூழ்ந்த துழாய்	165
51	அவனே யருவரை	168
52	எய்தான் மராமர	171
53	முயன்று தொழு	173
54	தாளால் சகட	175
55	பெரிய வரைமார்வில்	179
56	நிறம் வெளிது	181
57	பொலிந்திருண்ட	184
58	தெளிந்த	188

http://acharya.org

59	வாழும் வகை	190
60	பெற்றம் பிணை	193
61	பண்டெல்லாம்	195
62	விண்ணகரம்	197
63	தாழ்சடையும்	200
64	இசைந்தவரவமும்	204
65	அங்கற்கிடரின்றி	207
66	காய்ந்திருளை	210
67	ஆங்குமலரும்	213
68	பார்த்த கடுவன்	215
69	வெற்பென்று	217
70	புகுமதத்தால்	222
71	களிறுமுகில்	224
72	குன்றொன்றினாய	227
73	இடம் வலமேழ்	231
74	நலமே வலிதுகொல்	233
75	சார்ந்தகடு	236
76	பொருப்பிடையே	239
77	ஆய்ந்தவருமறை	243
78	அரணாம் நமக்கு	249
79	ஓர்த்தமனத்தராய்	251
80	நின்றெதிராய	255
81	நெஞ்சால் நினைப்	258
82	உணரிலுணர்	262
83	இனியவன்	265
84	உளனாய	268
85	கவியினார்	271
86	எழில்கொண்ட	275
87	கலந்து மணி	278
88	அது நன்றிது	280
89	முடிந்தபொழுதில்	284
90	சிலம்பும் செறி	288
91	மண்ணுண்டு	291
92	மகன் ஒருவர்க்கு	294
93	நினைத்துலகில்	297
94	உய்த்துணர்வு	300
95	புகுந்திலங்கு	303
96	வாழ்த்தியவாயராய்	306
97	அலரெடுத்த	308
98	இமஞ்சூழ் மலையும்	310
99	தொட்ட படை	313
100	சார்வு நமக்கென்	316

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த

மூன்றாம் திருவந்தாதி

தனியன் வ்யாக்யானம்

குருகைகாவலப்பனருளிச்செய்த தனியன்

சீராரும் மாடத் திருக்கோவ லூரதனுள்
காரார் கருமுகிலைக் காணப்புக்கு—ஓராத்
திருக்கண்டே னென்றுரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே யுகந்து.

நெஞ்சே—எனது நெஞ்சமே! சீர் ஆரும் மாடம்—அழகு பொருந்திய மாடங்களையுடைய. திருக்கோவலூர் அதனுள்—திருக்கோவலூரில் ஓர் இடைகழியில். கார் ஆர் கரு முகிலை—கார்காலத்துக் கரிய மேகம் போன்ற எம்பெருமானை. காணபுக்கு—ஸேவிக்கப் புகுந்து. ஓரா—நெஞ்சென்னும் உட்கண்ணாலே அநுஸந்தித்து. திருக்கண்டேன் என்று உரைத்த—'திருக்கண்டேன் என்று தொடங்கி நூறுபாசுரம் அருளிச்செய்த. சீரான்—சீர்மை பொருந்திய பேயாழ்வாருடைய. கழலே—திருவடிகளையே. உகந்து உரை—மகிழ்ந்து பேசு;

அவதாரிகை:— பரப₄க்தி பரஜ்ஞான பரமப₄க்திகளையுடையராய், அத்தாலே ப₄க₃வத்ஸாக்ஷாத்காரத்தையுடைய

மூன்றாம் திருவந்தாதி

தனியன் வ்யாக்யான விவரணம்

அவதாரிகை:— இத்தனியனை அருளிச்செய்தவர் நாத₂முனிகளின் சிஷ்யர்களில் ஒருவராய், நாதமுனிகளிடமிருந்து பக்தி யோகத்தை உபதேசம் பெற்றவரான குருகைகாவலப்பன் என்னும்

http://acharya.org

ராய், ததேககாநுபவபரராய், "ज्ञानतृप्तस्य योगिनः" (ஜ்ஞாந த்ருப்தஸ்ய யோகிந:) என்னும்படி ததேககசரகராய், லோகயாத்ரையில் கண்வையாதே அலௌகிகராய் வர்த்திக்கிற முதலாழ்வார்களில் * மாடமாமயிலையிலே அவதரித்து "மஹதாஹ்வயர்" என்னும்படி நிரதிசயப்ரேமத்தை யுடையராய், அத்தாலே 'திருக்கண்டேன்' என்றுரைத்த பேயாழ்வார் திருவடிகளில் நிரந்தராநுஸந்தாநத்தை விதிக்கிறது இதில்.

வ்யா:— (சீராரும் மாடத்திருக்கோவலூரதனுள்) *சீரேறுமறையாளர் நிறைந்த செல்வத் திருக்கோவலூராகை யாலே ஸ்ரீமத்தாய் அவர்களுக்குப்பாங்காக வஸிக்கும்படி

ஆசார்யராவர். இத்தனியனில் அவர் கருதுவதாவது,- முதலாழ்வார்கள் மூவரும் முறையே பரபக்தி, பரஜ்ஞானம், பரமபக்தி ஆகியவற்றை விசேஷமாக உடையவர்கள்; அதனால் பரமபுருஷனைத் தம் நெஞ்சிலே ஸாக்ஷாத்கரித்திருப்பவர்கள்; அவனை அனுபவிப்பதிலேயே ஈடுபட்டிருப்பவர்கள்; "பரமபுருஷ ஜ்ஞானத்தாலே திருப்திபெற்றிருக்கும் யோகியினுடைய" என்கிறபடியே அவனை அனுபவிப்பதிலேயே தரித்துநிற்பவர்கள்; உண்டியே உடையே உகந்தோடும் உலகயாத்திரையில் பற்றற்று பகவத் விஷயத்திலேயே மண்டியிருப்பவர்கள்; திருக்கோவலூரில் ஒன்று சேர்ந்த இம்மூவருக்குள், "மாடமாமயிலை" [பெரியதிரு 2-5-2] எனப்படும் மயிலையிலே அவதரித்து, "மஹதாஹ்வயர்" ['பேய்' (பெரியவர்) என்னும் பெயருடையவர்] என்கிறபடி பரமபக்தி நிலையையடைந்த ஒப்புயர்வற்ற காதலை உடையவராய், அந்தப் பரமபக்தியாலே 'திருக்கண்டேன்' என்று தொடங்கி இம்மூன்றாம் திருவந்தாதியாலே பகவத் விஷயத்தைத் தாம் ஸாக்ஷாத்கரித்தபடியைப் பேசிய பேயாழ்வார் திருவடிகளை எப்போதும் அனுஸந்திக்க வேண்டும் என்று நெஞ்சை நோக்கி விதிக்கையேயாகும்.

வ்யா:— (சீராரும் மாடத் திருக்கோவலூர்) "சீரேறும் மறையாளர் நிறைந்த செல்வத் திருக்கோவலூர்" [பெரியதிரு 2-10-] ஆகையாலே, வைதிகச் செல்வம் நிறையப்பெற்றதாய், அந்த சீரேறும் மறையாளர் வாழ்வதற்குத் தகுதிபெற்ற மாடமாளிகை

http://acharya.org

பான மாடங்களையுமுடைத்தாய் அத்தாலே ததே3க நிரூபணீயமுமாயிருக்கிற திருக்கோவலூரென்றபடி. கோவலன் வர்த்திக்கையாலே அதுவே நிரூபகமான தேசம். (ஊர்) "தானுகந்த ஊர். பின்புள்ளார்க்கும் ஆஶ்ரயணீயனாகைக்காக க்ருஷ்ண கு3ணசேஷ்டிதங்களெல்லாம் தோற்ற "நீயும் திருமகளும் நின்றாயால்" இத்யாதி3ப்படியே வர்த்திக்கிற தே3சம்.

(அதனுள்) இப்படி விலக்ஷணமான தேசத்துக்குள்ளே. விலக்ஷணராலே * அன்றெரிந்த * ஞானச்சுடர் விளக்கு

களையுடையதாய், அதனாலே, அவ்வைதிகச் செல்வத்தையும், அம்மாடங்களையுமிட்டே நிரூபிக்கவேண்டியிருக்கிற (லக்ஷணமுரைக்கவேண்டியிருக்கிற) திருக்கோவலூர் என்றபடி. (திருக்கோவலூர்) திருக்கோவலூர் ஆயனாராகிய கோவலன் வாழும் இடமாகையாலே, திருக்கோவலூர் என்றே வழங்கப்பட்டுவரும் ஊர் என்கை. [illegible] விசேஷணவிசேஷ்யங்களிரண்டாலும் முறையே பா4க3வத [illegible] ஸம்ப3ந்த4ங்கள் உள்ள ஊர் என்றதாயிற்று. (ஊர்) "தானுகந்த ஊர்" [திருநெடு 6] என்கிறபடியே பரமபுருஷன் உகந்த திவ்யதேசம். முதலாழ்வார்களோடு நெருக்குண்பதை [illegible] "நீயும் திருமகளும் நின்றாயால்" [முதல்திருவ 86] [illegible] பாசுரத்திற்படியே இடைகழியிலே ஆவிர்ப்பவித்ததோடன்றி பின்புள்ளாரும் இழக்கவேண்டாதபடி, க்ருஷ்ண கு3ண சேஷ்டிதங்களெல்லாம் தோற்றத் திருக்கோலங்கள்கொண்டு [illegible] திகழும் தேசம் என்றபடி.

(அதனுள்) அத்திருக்கோவலூரிலே ஓரிடைகழியிலே. உள்ளே [illegible] ரிஷியும், வெளியே ப்ரயோஜநாந்தரபரரான [illegible] நிருக்கையாலே, அநந்யஸாத4னராய், அநந்யப்ர [illegible] இவர்களோடு நெருங்கியாவது வாழவேண்டும் [illegible] ன்றோ. (அதனுள் காணப்புக்கு) இப்படி விலக்ஷண [illegible] உள்ளே விலக்ஷணமானதொரு விஷயத்தைக் [illegible] காண்பதாகில், இருளின்றியிருக்கவேணுமே; [illegible] ட்டிருந்ததோ? எனில், "வெய்யகதிரோன் [illegible]" [முதல்திருவ 1] "நன்புருகி ஞானச்சுடர்விளக்கு [illegible]" [இரண்.திருவ-1] "வருத்தும் புறவிருள் மாற்ற எம்

http://acharya.org

களாலே * புறவிருளும் * இதயத்திருளும் போனவாறே (காரார் கருமுகிலைக் காணப்புக்கு) * மழை முகிலேபோல்வானை அவனைப் * பொலிந்திருண்ட கார்வானிற்படியே கண்டு அநுபவிக்கப்புக்கு; புறமழைக்கு ஒதுங்கினவர்க்கு உள்ளும் * மழை முகிலாயிருக்கிறபடி. (காணப்புக்கு * அன்பு கூரும்படியான நாம் அநுபவிக்கப்புக்கு. (அகனுள் காரார் கருமுகில்) *குறுங்குடியுள் முகில்போலே கருபாவர்

பொய்கைப்பிரான் மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி, ஒன்றத் திரித்து அன்றெரித்த திருவிளக்கை [இராமாநுச-8] "இறைவனைக் காணும் இதயத்திருள்கெட, ஞானமென்னும் நிறைவிளக்கேற்றிய பூதத் திருவடி" [இராமாநு-9] என்கிறபடியே லோகவிலக்ஷணரான முதலிரண்டு ஆழ்வார்களும் லோகவிலக்ஷணமான வெய்யகதிரோனுகிற விளக்கையும், ஞானச் சுடர் விளக்கையும் ஏற்றுகையாலே, புறவிருளும், இதயத்திருளும் நீங்குகையாலே இருள் கெட்டிருந்தது என்கை. காணப்புகுந்த விலக்ஷண விஷயந்தான் எது? எனில்: (காரார் கருமுகிலைக் காணப்புக்கு) "மழைமுகிலே போல்வான்றன்னைச் சீரணங்கு மறையாளர் நிறைந்த செல்வத் திருக்கோவலூரதனுள் கண்டேன்" [பெரிய திருமொழி 2-10-10] என்று கலியன் அருளியபடியே மழைபொழியும் மேகம் போன்றவனை அவனைக் காணப்புகுந்து. வெளியிலே லௌகிகமான மழைக்கு அஞ்சிப் புகுந்தவிடத்திலே, அலௌகிகமான கருணம்ருதவர்ஷியான காளமேகத்தைக் காணப்புக்கார் என்றபடி. அப்படிக் கருமுகிலாகத் தான் கண்டபடியை இவர் பாசுரமிட்டதுண்டோ? எனில்:- "பொலிந்திருண்ட கார்வானின் மின்னேபோல் தோன்றி மலிந்து திருவிருந்தமார்பன்" [மூன்-திரு 57] என்ற பாசுரத்திலே திருவிருந்த மார்பனை மின்னலோடு கூடிய கார்மேகமாகப் பேசினாரன்றோ. (காணப்புக்கு) "ஆனந்தம் அரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்புகூரும் அடியவர்கட்கு ஆரமுதமானான் தன்னைத் திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே" [பெரியதிருமொழி 2-10-4] என்கிறபடியே அன்புகூருமடியவரான நாம் அநுபவிக்கப்புகுந்து. (திருக்கோவலூரதனுள் காரார் கருமுகில்) "குறுங்குடியுள் முகில்" [திருநெடு 17] என்ற திருக்குறுங்குடிக் காளமேகம் போலே, இதுவும் ஒரு கருணைஜலத்தைப் பொழியும் மேகமன்றோ. (காரார் கருமுகிலை) மழை பொழியு

http://acharya.org

மான மேகமிறே. (காரார் கருமுகிலை) வர்ஷுகவலாஹகம் போலே மேகதகாந்தியாயிருக்கை. காளமேகமன்றிக்கே வர்ஷுகவலாஹக த்ருஷ்டாந்தாலே ஒரு நிவேஶநத்திலே ஒதுங்கப்புக்கு மூவரையொழிய மற்றொரென்று ஆராயுமிடத்து என்றபடி. ஏவம் விதகுணவவனை * நெஞ்சென்னும் உட்கண்ணாலே காணப்புக்கு. (ஓரா) திருவுள்ளத்திலே அவ்வநுபவம் விஶதமாம்படி. ஓர்ந்து—அநுஸந்தித்து; மனனம் பண்ணி.

(திருக்கண்டேனென்றுரைத்த) அவ்வநுபவஜநிதப்ரீதியாலே தாம் ஸாக்ஷாத்கரித்தபடியை "திருக்கண்டேன்" என்று தொடங்கி, பின்புள்ளார்க்கும் ப்ரஸித்தமாக

மேகம்போலே திருமேனி நிறமிருக்கிறபடி. (காணப்புக்கு) நம்மாழ்வார் பெரியதிருவந்தாதியில் (28) அருளியபடியே, *என் நெஞ்சும் கட்கண்ணால் காணத்தகாததாகையாலே, *நெஞ்சென்னும் உட்கண்ணாலே காணப்புகுந்து என்றபடி. (ஓரா) திருவுள்ளத்திலே அவ்வநுபவம் தெளிவாகப் பிறக்கும்படி மனனம்பண்ணி அநுஸந்தித்து. இப்படிக் கொள்ளாமல், வேறுவிதமாகவும் பொருள் கொள்ளலாம். அதாவது,— (திருக்கோவலூரதனுள் காரார் கருமுகிலைக் காணப்புக்கு) திருக்கோவலூராகிற ஊரினுள்ளே மழை பொழியும் மேகங்களைக்காண, அதற்கு அஞ்சி ஓரிடைகழியிலே ஒதுங்கப்புகுந்து; (ஓரா) 'இப்படி மழைக்கு அஞ்சி ஒதுங்கின மூவராகிய நம்மைத்தவிர வேறு யார் புகுந்து நெருக்குகிறார்கள்' என்று ஆராய்ந்தவளவில் என்றபடி.

(திருக்கண்டேன் என்று உரைத்த) அவ்வனுபவத்தால் உண்டான ஆநந்தத்தாலே, தாம் அவனை நெஞ்சென்னும் உட்கண்ணாலே கண்டபடியை, "திருக் கண்டேன்" என்று தொடங்கும் மூன்றாம் திருவந்தாதியாலே பின்புள்ள நம்மைப்போல்வார்க்கும் உஜ்ஜீவிக்கலாம்படி அருளிச்செய்த. (திருக்கண்டேன்) மற்றை இரண்டு ஆழ்வார்களும் விளக்கேற்றினார்கள்; இவர் அதன் ஒளியைக் காரார் கருமுகிலைக் கண்டார். ஜ்ஞாநமும், பக்தியும் அவர்களுடைய நிலைகள்; ஸாக்ஷாத்காரம் இவருடையது. "மன்னியபேரிருள் மாண்டபின் கோவலுள் மாமலராள் தன்னொடு

http://acharya.org

அருளிச்செய்தது. (சீரான்கழலே) இப்படி ஸ்ரீமானை அ
பு4வித்த ஸ்ரீயையுடையரான ஸ்ரீமானுடைய ஸ்ரீபாதங்களே
"மாமலராள் தன்னோடு மாயனைக்கண்டமை காட்டு
தமிழ்த் தலைவன் பொன்னடி" என்னக்கடவதிறே
(உரைக்கண்டாய் நெஞ்சேயுகந்து) அவர் "திருக்கண்டேன்"
என்று அநுஸந்தித்தாற்போலே நீயும் அவர் திருவடிகளை
வாக்காலே அநுஸந்திக்கப்பார். "यद्धि मनसा ध्यायति तद्वाचा
वदति" (யத்3தி4 மநஸா த்4யாயதி தத்3வாசா வத3தி) இறே

(நெஞ்சே யுகந்து) இப்படி ததீ3யசேஷத்வத்துக்குத்
தகுந்த நெஞ்சே! அநுஸந்திக்குமிடத்தில் ஹர்ஷத்துடனே

மாயனைக்கண்டமை காட்டும் தமிழ்த்தலைவன்" [இராமாநுச-10]
என்றாரன்றே அமுதனாரும். (சீரான்கழலே) இவ்வண்ணமாக
"திருக்கண்டேன்" என்று தொடங்கித் திருவுடைய தேவனை
அநுபவித்த திருவுடைய 'செல்வரான பேயாழ்வாருடைய
திருப்பாதங்களையே. "தமிழ்த்தலைவன் பொன்னடி" [இராமாநுச-10]
என்று அமுதனாரும் இதைப் பொன்னடி [செல்வமாயிருக்கும் அடி]
என்று போற்றினாரன்றே. அன்றிக்கே, 'சீரான்' என்று பகவானை
காண்கைக்குக் காரணமான ஜ்ஞானம், பக்தி முதலான குணங்களை
உடையவர் என்றுமாம். (உரைக்கண்டாய் நெஞ்சே உகந்து)
அவர் "திருக்கண்டேன்" என்று தாம் கண்ட பகவத்விஷயத்தை
வாக்காலே சொன்னாற்போலே, நீயும் நீ கண்ட ஆழ்வார் திருவடி
களை வாயாலே சொல்லுவாயாக." "யத்3தி4 மநஸா த்4யாயதி தத்3வாச
வத3தி" [ ] [எதை மனத்தினால் தியானிக்கிறானோ
அதை வாக்கினாலும் சொல்லுகிறான்] என்கிறபடியே மனத்தினால்
கண்டதையே வாக்கினால் சொல்லுவது என்னும் நியமம் உண்டன்றோ

(நெஞ்சே!) ப4க3வத்விஷயத்திலும் பா4க3வதவிஷயம் நன்றென்
றுக்கும் எனக்கு பு4ண்யமான நெஞ்சே! "மந ஏவ மநுஷ்யாணாம் காரண
ப3ந்த4மோக்ஷயோ:" [விபு6-7-28] [மனமே மனிதர்களின் பந்தமோக்ஷ
ங்களுக்குக் காரணமாகிறது.] என்கிறபடியே * நின்றவா நில்லா நெஞ்சா
யிருந்து என்னை ஸம்ஸாரத்தில் தள்ளாமல், பகவத்விஷயத்திலும்
பாகவதவிஷயம் நன்று என்னும் உறுதியில் என்னிலும் முற்பட்ட
நெஞ்சாயிருந்து எனக்கும் உய்வளிக்கிறாயன்றோ என்று நெஞ்சை

http://acharya.org

அருளாநிற்கிறது. "உகந்து பணி செய்து" என்னுமாபோலே. "தனிமாத்தெய்வத்தடியவர்க்கு இனி நாமாளாகவே இசையுங் கொல்" என்றாரிறே. சீரானென்று ப₄க₃வத் ஸாக்ஷாத்காரஹேதுவான ஜ்ஞானப₄க்த்யாதி₃ கு₃ணங்களை யுடையரென்னவுமாம்.

இத்தால் ப₄க₃வத் ஸாக்ஷாத்காரமுடையராய் அத்தை ஸம்ஸாரிகளும் அநுபவிக்கும்படி ஸ்வஸூக்தி முகே₂ந ப்ரகாசிப்பிக்கும்வர்களான ஸ்ரீமான்கள் திருவடிகள் நித்யாநுஸந்தே₄யமென்றதாய்த்து.

பிள்ளைலோகம் ஜீயர் அருளிய
மூன்றும் திருவந்தாதித் தனியன் வ்யாக்யாநம் முற்றிற்று.
பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்.

கொண்டாடுகிறார்: (உகந்து உரை) பகவத்விஷயத்திலும் சிறப்புற்ற பாகவதவிஷயத்தை உரைக்கிறாயாகையாலே, உரைக்கும்போது உகப்புடன் உரைப்பாயாக. "உற்றேன் உகந்து பணிசெய்து" [திருவாய் 10-8-10] என்றாப்போலே. "தனிமாத்தெய்வத்து அடியவர்க்கு இனி நாம் ஆளாகவே இசையுங்கொல் ஊழிதோறூழி ஓவாதே" [திருவாசிரியம் 3] என்று நம்மாழ்வாரும் இப்பேற்றையே ஸர்வ காலமும் பெறவேணும் என்று ஆசைப்பட்டாரன்றோ.

இத்தனியனால், பரமபுருஷனைக் கண்டவர்களாய், அக்காட்சியை ஸம்ஸாரிகளும் அனுபவிக்கும்படி ஸ்ரீஸூக்திகளை அருளிச் செய்த வர்களான செல்வமுடையவர்களின் செல்வத்திருவடிகளே அனைவர்க்கும் எப்போதும் அநுஸந்திக்கத்தக்கவை என்று சொல்லப் பட்டதாயிற்று.

ஸ்ரீவைஷ்ணவ ஸுத₃ர்ஸந பத்ராதி₄பஞன
ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமிதாஸன் இயற்றிய
மூன்றும் திருவந்தாதித் தனியன் வ்யாக்யானவிவரணம் முற்றிற்று.
பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

மூன்றுந்திருவந்தாதி வ்யாக்யானம்

அவதாரிகை:— உப₄யவிபூ₄தி யுக்தனென்றநுஸந்தித்தார் முதலாழ்வார். அதுக்கு வாசகமப்தம் நாராயணசப்தமென்றார் நடுவிலாழ்வார். அதுக்கு ஸ்ரீசப்தம் கூட்டிக்கொள்ளவேணு மென்கிறாரிவ்வாழ்வார். ஜ்ஞாநத்தைச்சொல்லுகிறது வையந் தகளி. ஜ்ஞாநவிபாகையான பக்தியைச் சொல்லுகிறது அன்பே தகளி. பக்தியாலே ஸாக்ஷாத்கரித்தபடி சொல்லு கிறது இதில்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சன பத்ராதிபஞன
ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமிதாஸன் இயற்றிய

மூன்றுந்திருவந்தாதி வ்யாக்யானம்

அவதாரிகை

முதல் திருவந்தாதியிலே, "வையந்தகளியா...சுடராழியான்" என்று தொடங்குகையாலே உப₄யவிபூ₄திகளோடு கூடியவன் ஸர்வேச்வரன் என்றார் முதலாழ்வார். இரண்டாந்திருவந்தாதியிலே, "நாரணற்கு ஞானத்தமிழ் புரிந்தநான்" என்று தொடங்குகையாலே ஸர்வேச்வரனைச் சொல்லும் தனிப்பெயர் நாராயணசப்தம் என்று காட்டினார் இரண்டாமவர். இம்மூன்றுந்திருவந்தாதியிலே, "திருக் கண்டேன்" என்று தொடங்குகையாலே லக்ஷ்மீஸம்பந்தத்தையிட்டுப் பரதத்வநிர்ணயம் செய்கிறார் மூன்றுமவர். இம்மூவரையும் அடியொற் றியே நம்மாழ்வாரும் "உயர்வற" என்னும் முதல் திருவாய்மொழி யாலே உபயவிபூதியுடையவன் என்றும், இரண்டாம் திருவாய் மொழியிலே "வண்புகழ் நாரணன்" என்று நாராயணசப்தத்தைக் கொண்டும், மூன்றும் திருவாய்மொழியில் "திருவுடையடிகள்" என்று லக்ஷ்மீ ஸம்பந்தத்தைக் காட்டியும் பரதத்வநிர்த்தாரணம் செய்தாரன்றே. இவற்றிலிருந்து ஆழ்வார்கள் ஒருவர்க்கொருவர் நினைவறிந்து பரிமாறுமவர்கள் என்று தெளிவாகிறது.

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

இயற்பா மூன்றுந்திருவந்தாதி
அப்பிள்ளை உரையின் அவதாரிகை

[illegible] ப்ரஸாதலப்₃த₄மான பரப₄க்திரூபாபந்நஜ்ஞாந [illegible] ந்நாலே உப₄யவிபூ₄திநாத₂னை எம்பெருமா

[illegible] திருவந்தாதிகளிலும் முறையே ஜ்ஞானப₄க்தி ஸாக்ஷாத் [illegible] விளக்கப்படுகின்றன என்றும் நிர்வஹிப்பதுண்டு. [illegible] திருவந்தாதியிலே "வையந் தகளியா...சுடராழியான்" என்று [illegible] யையும், நித்யவிபூ₄தியையும் உடையவன் என்று [illegible] மேற்பாசுரங்களில் அதையே விவரித்துக்கொண்டு [illegible], உப₄யவிபூ₄தியை உடைய நாராயணனே உலகிற்கு [illegible] ஜ்ஞானம் முதல் திருவந்தாதியிலே சிறந்து விளங் [illegible] திருவந்தாதியில் "அன்பே தகளியா" என்று [illegible] "[illegible]னவன்ருல் யானுடைய அன்பு" என்று முடிக்கை [illegible]வார் முதலாழ்வாரால் அனுபவிக்கப்பட்ட உப₄ய [illegible], அவற்றுக்கு ஸ்வாமியான நாராயணனையும் அன் [illegible]யாலே அநுஸந்தித்து, பக்திபரவஶராய்க் கவி [illegible] [illegible]ரும் திருவந்தாதியிலே இப்பேயாழ்வார் "திருக் [illegible] பொன்மேனி கண்டேன்" [1] "இன்றே கழல்கண் [illegible] [illegible]ன் என விரும்பும் கண்கள்" [35] "பங்கயமே [illegible] காட்டும்" [55] "நெடுமால் நிறம்போலக் கார் [illegible] காட்டும் கலந்து" [86] "கண்ணு நின்மேனி மலர்ந்து [illegible] காட்டும்......தண்டுழாய்க் கோமானை அந்திவான்காட் [illegible] [illegible]ர்வெண்ணும் ஒளிகொள் விளக்கேற்றி வைத்தவனை [illegible]த்தேன்" [94] என்று, முதலிலும் நடுவிலும் முடிவிலும் [illegible] முற்றிய ஸாக்ஷாத்காரநிலையை விளங்கவைத்தார். [illegible]க்ஷாத்காரங்கள் மூன்றும் மூவர்க்கும் உண்டா [illegible] [illegible]யத்தைப்பற்ற மூன்றும் முறையே மூவர்க்கும் [illegible]கிறோம். ஞானம் முற்றிய பக்தியின் தொடக்கநிலை [illegible]: பக்தி முற்றியநிலை இரண்டாமவருடையது; [illegible] ஏற்படும் ஸாக்ஷாத்காரநிலை மூன்றுமவருடையது. [illegible] யது காரணநிலை; பிந்திய ஆழ்வார்க [illegible] [illegible]நிலை. உப₄யவிபூ₄தியையும் அநுஸந்தித்துப் [illegible] முதல்வருடையது. அதுமுற்றி பக்திநிலையை [illegible]

http://acharya.org

னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளைப் பரிபூர்ண மாக அநுபவித்துப்பேசினார் பொய்கையார். ஸ்ரீபூதத்தா எம்பெருமானருளாலே விளைந்த பரபக்தி வையந்தகளி

அடைந்தபடி இரண்டாமவரது; அது முற்றி ஸாக்ஷாத்கார நிலை அடைந்தபடி மூன்றாமவரது. ஒருவருடைய நிலை மற்றவர்க்கு முற்றக்கூடுமோ? எனில்: இம்மூவரும் பராவஜ்ஞர்களாய், ஒருவர் கொருவர் கருத்தறிந்து பரிமாறுகையாலே கூடும். இதனாலே இம்மூன்று திருவந்தாதிகளையும் த்ரிமுநிவ்யாகரணம்போலே ஏ ஶாஸ்த்ரமாகக் கூறுவர்கள் நம்முடைய பூர்வாசார்யர்கள். ஆ மூன்று திருவந்தாதிகளிலும் ஜ்ஞாந பக்தி ஸாக்ஷாத்காரங்கள் விளக்கப்பட்டன என்றபடி.

மூன்று திருவந்தாதிகளிலும் பரபக்தி பரஜ்ஞாந பரமபக் நிலைகள் விளக்கப்படுவதாக நிர்வஹிப்பதுமுண்டு. அதாவது உபயவிபூதிகளுக்கும் நாதனாய், அனைத்திலும் மேலாயிருக்கி ஸர்வேஶ்வரன் தன்னுடைய ஸ்வரூபம், ரூபம், ஸ்வரூபகுணங்கள் ரூபகுணங்கள், விபூதிகள் ஆகியவற்றைத் தன் நிர்ஹேதுககடாக்ஷ த்தாலே ஆழ்வாருக்கு உண்டான பரபக்தியென்னப்படும் ஜ்ஞானவிசே ஷத்தாலே காட்டக்கண்டு அவற்றை அநுபவித்து, அந்த அநு பவத்தாலுண்டான ஆநந்தவெள்ளத்தாலே, தான் அநுபவித்தபடியே "வையம் தகளியா" என்று தொடங்கி ரூபகுண விபூதிகளோடுகூடி எம்பெருமானைப்பேசி, "வாயவனையல்லது", "திருமாலையல்ல ஏத்தேன்" முதலான பாசுரங்களிலே ப்ராப்தாவான ஜீவனுடை அநந்யார்ஹ ஶேஷத்வஸ்வரூபத்தையும், "இலக்கியான் பாதம் மருவா தார்க்குண்டாமோ வான்" "ஓரடியும் சாடுதைத்த" முதலான பாசுர ங்களிலே ஸர்வஸ்வாமியான ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே பண்ணு நித்யகைங்கர்யமே நம் அநந்யார்ஹஶேஷத்வ ஸ்வரூபத்திற்கு தகுந்த ப்ராப்யமென்பதையும், அந்த ப்ராப்யத்தை நமக்குக் கை படுத்தித் தரவல்லதாய், நம் அத்யந்த பாரதந்த்ர்யஸ்வரூபத்திற்கு தகுந்ததான உபாயமும் அவன் திருவடிகளே என்பதையும் முடி கட்டினார் முதல் திருவந்தாதியிலே முதலாழ்வார்களில் முதல்வரா பொய்கையாழ்வார்.

அடுத்தபடியாக பூதத்தாழ்வார், முதல்திருவந்தாதியிலே பொய்கையாழ்வார் அருளிச்செய்த எம்பெருமானுடைய ஸ்வரூ

http://acharya.org

கேட்கையாலே பரஜ்ஞாநாவஸ்த2மாம்படி பரிபக்வமாய், அந்த பரஜ்ஞாநத்தாலே அவன்படியை ஒன்றொழியாமல் அநுபவித்து த்ருஷ்டராய்ப்பேசினார். அவர்களிருவருடைய ப்ரஸாதத்தாலே ப4க3வத்ப்ரஸாத3மடியாகத் தமக்குப் பிறந்த பரப4க்தி பரமப4க்திபர்யந்தமாகமுற்றி. அத்தாலே கடலைக்கண்டவன் அதுக்குள்ளுண்டான முத்து மாணிக்காதி3களைத் தனித்தனி கண்டு உகக்குமாபோலே. லக்ஷ்மீ ஸங்க2 கௌஸ்துபா4திகளுக்கிருப்பிடமாய், அவயவஸௌந்த3ர்யாதிகளாலே அலையெறிகிற * பெரும்புறக்கடலான எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து அநுபவிக்கிறார் பேயார். உப4யவிபூ4தியுக்த

ஸ்வரூபவிபூதிகளைக் கூடவிருந்து மேன்மேலாக அனுபவித்துச் செல்லுகையாலே பரமபுருஷனுடைய நிர்ஹேதுககிருபையே காரணமாக உண்டாகி வளர்ந்த தம்முடைய பரபக்தியானது பரஜ்ஞான நிலையை அடையுந்தாம்படி முற்றி வளர, பரஜ்ஞானம் எனப்படும் அவ்வவஸ்தையாலே அவனுடைய ஸ்வரூபாதிகளை முழுவதும் கண்டு அனுபவித்துத் தான் அனுபவித்த வழியிலே உலகினரும் அறிந்து அநுபவித்து வாழும்படி "நடைவிளங்குதமிழ்மாலை" [பெருமாள் திரு 1-11] என்னத்தக்க இரண்டாம் திருவந்தாதியிலே தன் அனுபவத்தைப் பேரானந்தத்துடன் பேசி முடித்தார்.

அடுத்தபடியாகப் பேயாழ்வார், பகவானுடைய நிர்ஹேதுகக்ருபையால் தமக்குப்பிறந்த பரபக்தியானது முதலாழ்வார்கள் இருவருடைய கடாக்ஷத்தாலேயும், அவர்களுடைய பிரபந்தங்களைக் கூடவிருந்து அநுபவிக்கையாலும், பரஜ்ஞானநிலையையும் கடந்துபரமபக்தியளவாக முற்றப்பெற்று, அதுகாரணமாகக் கடலைக்கண்டவன் அதற்குள்ளேயிருக்கும் முத்து, மாணிக்கம் முதலான ரத்தினங்களைத் தனித்தனியே கண்டு உகப்பதுபோலே 'திருக்கண்டேன்' என்று தொடங்கி, கடலைப்போலே, பெரியபிராட்டியார், ஸங்கம், கௌஸ்துபரத்தினம் முதலானவைகளுக்கு இருப்பிடமாய், அவயவ ஸௌந்தர்யம் முதலான திருக்குணங்களாகிற அலையெறியப்பெற்றதாய், "பெரும்புறக்கடல்" [பெரியதிரு 7-10-1] "மலைகளும், மாமணியும், மலர்மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற அலைகடல் போன்றிவர்" [பெரியதிரு 2-9-5] என்று அழைக்கப்படும் பகவத்ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரித்து அனுபவிக்கிறார் இம்மூன்றாம் திருவந்தாதியிலே.

http://acharya.org

னென்றார் பொய்கையார்; அவனுக்கு வாசகஸப்$_{3}$த$_{3}$ம் நார

பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளாகிற மூன்று நிலைகளு மூன்று ஆழ்வார்களுக்கும் தனித்தனியே பரிபூர்ணமாக உண்டா யிருக்கச்செய்தேயும், ஒவ்வொருவர்க்கு ஒவ்வொன்று விஞ்சி. மற்றை யிரண்டும் அதற்குள் அடங்கியிருக்கும். முதலாழ்வாருக்கு, ப ஜ்ஞான பரமபக்திகள் அப்ரதா$_{4}$னமாகத்தோற்றும்படி பரபக்தியே விஞ்சியிருக்கும். இரண்டாமவருக்குப் பரபக்தி முற்றிப்பழுத்ததாய் பரமபக்தியைத் தோற்றுவிப்பதான பரஜ்ஞானமே ப்ரதா$_{4}$னமா யிருக்கும். மூன்றாமவருக்குப் பரமபக்தியே ப்ரதா$_{4}$னமாய், பரபக் பரஜ்ஞானங்களிரண்டும் அதன்கீழே அடங்கிக்கிடக்கும். பரபக் முதலானவற்றின் உத்பத்தியும், வளர்ச்சியும், இன்னாருக்கு இன்ன காலத்தில் இன்னது பிரதானமாகவும், இன்னது அப்ரதானமாகவும் ஆகக்கடவது என்னும் நியமமும் ஈச்வரனுடைய ஸங்கல்பத்தாலே ஏற்படக் குறையில்லை.

பரப$_{4}$க்தி முதலானவற்றின் லக்ஷணமென்னவெனில்: "பகவ ஸ்வரூபாதிகளை நேரே காணவேணும் என்னும் ஆசை பரபக்தி அவற்றைக் காண்பது பரஜ்ஞானம்; கண்டபின்பு மேன்மேலே அனுபவிக்க ஆசைப்படுவது பரமபக்தி" என்பது ஒரு லக்ஷணம். "பகவானோடு கூடினால் இன்புறுவதும் பிரிந்தால் துன்புறுவதா யிருக்கை பரபக்தி; 'அந்தமில்பேரின்பத்து அடியரோடிருந்தமை' [திருவாய் 10-9-11] என்கிறபடியே பரமபதத்திற்போலே பரிபூர்ண மாகக் காண்கை பரஜ்ஞானம்; அவனை அனுபவிக்கப் பெறாவிடில் நீரைப்பிரிந்த மீன்போல உயிரிழக்கும்படியிருக்கை பரமபக்தி" என்பது மற்றொரு லக்ஷணம். ஆராய்ந்து பார்த்தால் இரண்டு லக்ஷணங்களும் ஒன்றாகவேயிருக்கும். ப்ரமாணங்களில் கண்ட ஸாதனங்களை அனுஷ்டித்தவர்களுக்கு இந்தப் பரபக்தி முதலான நிலைகள் முக்திநிலையிலே உண்டாகும்; மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்களுக்கு இங்கு இருக்கும்போதே பகவானுடைய அருளாலே உண்டாயின. இனி, ஸர்வஜ்ஞரான ஆசார்யர்களுக்கு "பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளையே 'இயல்வாகக் கொண்ட வருக' என்னைச்செய்" [சரணாகதிகத்யம்] என்று பரமபுருஷனிடம் பிரார்த்தித்துப் பெறும்படியிருக்கும் இந்நிலைகள். பரபக்தி முதலான இம்மூன்றையும் சாஸ்திரங்கள் ஜ்ஞாநம், த$_{3}$ர்ஶனம், ப்ராப்தி என்று கோஷிக்கின்றன. "ஜ்ஞாதும் த்$_{3}$ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச"

http://acharya.org

யணசப்தமென்றார் ஸ்ரீபூதத்தார். இவர் அத்தோடே ஸ்ரீமச்சூப்₃தை₃த்தையுங்கூட்டிக்கொள்ள வேணுமென்கிறார்.

[கீதை 11-54] என்றானன்றோ கீதாசார்யன். "ஸம்ஜ்ஞாயதே, ஸந்த்₃ருஶ்யதே வாப்யதி₄க₃ம்யதே" [விபு 6-5-57] என்று ஜ்ஞாந த₃ர்ஶந ப்ராப்திகளைச் சொன்னாரன்றோ ஸ்ரீபராசரபகவான்.

முதலாழ்வார் "வையம் தகளியா" என்றும், இரண்டாமவர் "அன்பே தகளியா" என்றும், மூன்றாமவர் "திருக்கண்டேன்" என்றும் தொடங்குவதின் கருத்தென்ன? எனில்; "வருத்தும் புறவிருள் மாற்ற" [இராமா-8] என்று அமுதனார் அருளியபடியே பரமபுருஷனுக்கு உரிய உலகை ஒருவர்க்கும் உரியதல்லவென்றும், மற்ற தெய்வங்களுக்கு உரியதென்றும் மயங்குகிற வெளி விஷயங்களைப்பற்றிய அஞ்ஞானமாகிற இருள் நீங்கும்படி, பூமி முதலான பஞ்சபூதங்களையும், அவற்றாலான பொருள்களையும் அகலாகவும், நெய்யாகவும் விளக்காகவும் உருவகப்படுத்திக்கொண்டு பேசினார் பொய்கையாழ்வார். இரண்டாமவர் ஆத்மாவினுள்ளிருக்கும் பகவத்பக்தியின பல நிலைகளாகிற அன்பு, ஆர்வம், பரஜ்ஞானம் ஆகியவற்றை அகலாகவும், நெய்யாகவும், விளக்காகவும் உருவகப்படுத்தலாம்படி பகவத்விஷயத்திலே பொய்கையாழ்வாரைக் காட்டிலும் ஆழ்ந்து அநுபவித்து, "இறைவனைக் காணும் இதயத்திருள்கெட" [இராமா-9] என்று அமுதனார் அருளியபடியே ஸர்வேச்வரனைக் காணும் † நெஞ்சென்னும் உட்கண்ணைப்பற்றிகிடக்கும் * உள்ளிருள் நீங்கும்படியாக, தனக்குத்தானே பிரகாசிக்கும் ப்ரத்யக்₃ வஸ்துவான ஆத்மபரமாத்மஸ்வரூபஸ்வபா₄வங்களில் உண்டாகக்கூடிய ‖ ஸம்ஶயவிபர்யயங்களை அறுத்தார்.

இவ்வண்ணமாக முதல்வர் இருவரும் இருவிதமான விளக்கேற்றியதனால் புறவிருளும், இதயத்திருளும் அழிந்தவுடன் ஏற்படும் பகவத்ஸாக்ஷாத்காரத்தை, "திருக்கண்டேன்" என்று தொடங்கி மூன்றாம் திருவந்தாதியாலே பேசுகிறார் மூன்றாமவர். இதையே,

"மன்னிய பேரிருள் மாண்டபின், கோவலுள் மாமலராள்
தன்னொடு மாயனைக் கண்டமை காட்டும் தமிழ்த்தலைவன்" [10]

---

† பெரியதிருவ-28. * ஆசார்யஹ்ருதயம்-83. ‖ ஸம்சயம்-ஐயம்; பழுதையைக்கண்டு, 'பாம்போ, பழுதையோ' என்று ஸந்தேஹிப்பது போன்ற ஐயம். விபர்யயம்–திரிபு; பழுதையைப் பாம்பென்றே கருதுவதுபோன்ற விபரீதஜ்ஞாநம்.

http://acharya.org

பேயாழ்வார் அருளிச்செய்த

மூன்றாம் திருவந்தாதி

1. திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்க னணிநிறமுங் கண்டேன் — செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று.

இன்று — (முதலாழ்வார்கள் இவரும் கூட்டக்கண்ட) இப்போது, என் ஆழி வண்ணன் பால் — கடல்வண்ணனான எம்பெருமானிடத்திலே, திரு — பெரிய பிராட்டியாரை கண்டேன் — ஸேவிக்கப்பெற்றேன்; பொன்மேனி — அழகிய திருமேனியையும் கண்டேன் — ஸேவிக்கப்பெற்றேன்; திகழும் — விளங்குகின்ற, அருக்கன் — ஸூர்யனைப்போன்ற, அணி — அழகிய, நிறமும் — ஒளியையும், கண்டேன் — ஸேவிக்கப்பெற்றேன்; செரு — யுத்தபூமியிலே, கிளரும் — சீறியெழுகிற, பொன் ஆழி — அழகிய திருவாழியையும், கை — (வலது) திருக்கையிலே கண்டேன் — ஸேவிக்கப்பெற்றேன்; புரி சங்கம் — (பாஞ்சஜன்யமாகிற) வலம்புரிச் சங்கையும் (மற்றொரு திருக்கையிலே) கண்டேன் — ஸேவிக்கப்பெற்றேன்

‡ வ்யா. — (திருக்கண்டேன்) ஸ்ரீமத்தன்மையைக் கண்டேன்; (பொன்மேனி கண்டேன்) ஆயிருக்கும் ஆகாரங்கண்டேன்;

---

‡ அவதாரிகை: — அவனைக் காண்கிற காட்சியிலே எல்லா முண்டாயிருக்கச்செய்தேயும் ஆநுகூல்யத்தாலே அது

என்று, அமுதனாரும் அருளினார். ஆக இம்மூன்று திருவந்தாதியின் தொடக்கங்களை இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதைக் காட்டுகின்றன.

1. ‡ அவை — எல்லா உடைமையும் அதிசயமாகக்கொண்ட அவனைக் காண்கிற காட்சியிலே எல்லாவற்றையும் கண்டதாயிருந்தபோதிலும், அவையின் மிகுதியாலே, அவனுடைய அந்தரங்கச் செல்வங்களில்வற்றை 'அது கண்டேன்; இது கண்டேன்' என்று தாம் கண்டு அநுபவிக்கப்பெற்றபடி பேசுகிறார் முதற்பாசுரத்தில்.

---

‡ பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம் தடித்த பெரிய எழுத்துக்களிலும், அப்பிள்ளையுரை மெல்லிய பெரிய எழுத்துக்களிலும், நம்முடைய விவரணம் சிறிய எழுத்துக்களிலும் தரப்படுகிற

http://acharya.org

கண்டேன் இதுகண்டேனென்று தாம் கண்டநுபவிக்கப் பெற்றபடி பேசுகிறார்.

உரை:— எனக்கு ஸ்வம்மாய் கடல்போலே ஸர்மஹர் மான் வடிவையுடையவன் பக்கலிலே ஆழ்வார்கள் இருவரும் காட்டக்கண்ட இன்று தன்னையொழிந்தாரடங்கலும்

வ்யா:—(என் ஆழிவண்ணன் பால் கண்டேன்) பக்தபாரதந்திர்யத்தையாலே உடைமைப்பொருள்போலே எனக்கு வசப்பட்டிருக்கிறவனும், கடல்போலே கண்டார் களைப்பையாற்றும் வடிவையும், அலையெறியும் நீர்மையையும் ரத்னங்களுக்கெல்லாம் (சிறந்த பொருள்களுக்கெல்லாம்) இருப்பிடமாயிருக்கும் தன்மையையும் பெற்றிருப்பவனிடத்திலே பல ரத்னங்களைக் கண்டேன். கடலிலே ரத்னங்களைக் காணவேணுமாகில் அதிலே மூழ்கி ரத்னங்களை எடுத்துக்காட்டுவார் வேண்டாவோ? என்னில், உண்டு என்கிறார்,—(இன்று) முதலிரு ஆழ்வார்களும் தம் திருவந்தாதிகளிலே காட்டக்கண்ட இன்று கண்டேன். (இன்று) "நீயும் திருமகளும் நின்றாயால்" [முதல் திருவ 86] என்று முதலாமவர் அருளியபடியே எங்களோடு நெருக்குண்பதை விரும்பி அவன் நாங்களிருக்கும் இடைகழியைத்தேடி வந்து தன் நிர்ஹேதுககிருபையாலே தானே தன்னைக்காட்டிய இன்று கண்டேன் என்றும் பொருள் கொள்ளலாம். கண்டரத்னங்களும் அலைகளும்தான் எவை யென்பதைப் பாசுரத்தின் மற்ற அடிகள் அனைத்தாலும் காட்டுகி[illegible] (திருக்கண்டேன்) முதன்முதலில் பெரியபிராட்டியாரைக் கண்டேன். குடத்துக்கு குடத்வம் (குடமாயிருக்கும் தன்மை) போலே, பரமபுருஷனுக்கு ஸ்வரூப நிரூபகதர்மமாயிருப்பவளாய், உலகத்திற் செல்வங்களுக்கெல்லாம் அதிதேவதையாய், சிதசித்தீச்வரர்களாகிற தத்வத்ரயங்களும் தன்னைப்பற்றி நின்று ஸத்தையும் பெருமையும் பெறவேண்டும்படியிருப்பவளாய், அவனுடைய செல்வங்களில் தலையான செல்வமாயிருப்பவளாய், இப்படிப் பலவிதங்களில் தலைமை பெற்றிருக்கும் ஸ்த்ரீரத்னமான பெரியபிராட்டியாரை முதலில் கண்டேன்.

"குழற்கோவலர் மடப்பாவையும் மண்மகளும் திருவும் நிழற்போல்வனர் கண்டு நிற்குங்கொல்" [*2480] "திருமால் வைகுந்தமே" [3740] "மாதவன் வைகுந்தன்" [428] "வடிவுடை மாதவன் வைகுந்தம்" [3762] "வானுடை மாதவா" [384] என்று பராவஸ்தையிலும்,

---

* இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் திவ்யப்ரபந்த பாசுர எண்கள் மயிலை மாதவதாஸன் பதிப்[illegible] [illegible]வை.

http://acharya.org

தன்னைப்பற்றி லப்₃த₄ஸ்வரூபராக வேண்டும்படி ப்ரதா₄னையான பெரியபிராட்டியாரைக் கண்டேன்.

"திருமால் திருப்பாற்கடலே"[3740] "அரவத்தமளியினோடும் அழகிய பாற்கடலோடும் அரவிந்தப் பாவையும் தானும்" [452]என்று வ்யூஹாவஸ்தையிலும்,

"மைதிலிதன் மணவாளா" [322] "திருமலிந்து திகழுமார்பு"[135] "ஆயர்குலமுதலே மாதவா மராமரங்களெழுமெய்தாய்" [2724] "அடலாழியானை திருமால்" [1083] "வாமனன் மாதவன்" [1684] என்று ஆமையாகவும், ப்ரஹ்மசாரியாகவும், ராமகிருஷ்ணாதிகளாகவும் அவதரித்த ஸர்வ விபவங்களிலும்,

"அரவிந்தப்பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து" [452] "மார்வமென்பதோர் கோயிலமைத்து மாதவன் என்னும் தெய்வத்தைநாட்டி" [323] "திருமார்பனைச் சிந்தையுள் வைத்துமென்பீர்" [1159] "திருமாலே, பிரியாது வந்தெனது மனத்திருந்த வடமலையை" [1404] 'பாவை பூமகள் தன்னொடும் உடனே வந்தாய் என் மனத்தே மன்னிநின்றாய்" [1609] "திருமாமகளைப் பெற்றும் என் நெஞ்சகம் கோயில்கொண்ட பேரருளாளான்" [1797] "திருமால் வந்தென் நெஞ்சுநிறையப்புகுந்தான்" [3744] என்று அந்தர்யாமி நிலையிலும்.

"திருவுடையாள்மணவாளா திருவரங்கத்தே கிடந்தாய்" [183] "திருவாளன் திருப்பதி" [411] "திருவரங்கமென்பதுவே என்திருமால் சேர்விடம்" [406] "திருவாளன் இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவரங்கம்"[421] "வேங்கடத்தென் திருமால்"[577] "வேங்கடத்துத் தன்னுகத் திருமங்கை தங்கியசீர்மார்வற்கு" [580] "அகிலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை உறைமார்பா--திருவேங்கடத்தானே" [3335] "திருவிளையாடு திண்டோள் திருமாலிருஞ்சோலைநம்பி"[589] "திருக்கோட்டியூர் திருமாலவன்" [326] "திருமால் திருமங்கையோடாடு தில்லைத் திருச்சித்ரகூடம்" [1161] "திருமால்தன் கோயில் அரிமேய விண்ணகரம்" [1247] "மலர்மகள் காதல்செய் கணபுரமடிகள்தமிடம்"[1711] "திருத்தண்காவில் வெஃகாவில் திருமால்"[2065] "ஒருவல்லித்தாமரையாள் ஒன்றிய சீர்மார்வன் திருவல்லிக்கேணியான்"[2297]என்று எல்லா அர்ச்சாவதாரஸ்தலங்களிலும். ஆக இப்படி எல்லா நிலைகளிலும் எம்பெருமானோடு கூடியிருக்கும் புருஷகாரபூ₄தையாக எல்லா ஆழ்வார்களாலும் அருளிச்செய்யப்பட்ட இவளை முன்னிட்டுக்கொண்டு அவனைப்பேசுகிறார். ஸர்வமங்களஸ்வரூபிணியான இவளையே தொடக்கத்திலும் முடிவிலும் அநுஸந்திப்பதென்னும் பெருமை இப்பிரபந்தம் ஒன்றுக்கேயுள்ள தனிச்சிறப்பு.

http://acharya.org

(திகழுமருக்கனணி நிறமுங்கண்டேன்) இருவரும் சேர்ந்த சேர்த்தியாலே இளவெய்யில் கலந்தாற்போலே இருக்கிறபடி. (செருக்கிளரும் பொன்னாழி கண்டேன்) அஸ்த$_2$ாநே ப$_4$யசங்கை

அவளும் தண்ணீர் தண்ணீரென்று மேல் விழும்படியிருப்ப தாய். பொன்போலே ஸ்ப்ருஹணீயமாயிருக்கிற திரு மேனியைக் கண்டேன். மரகதகி$_3$ரியிலே உதித்து ஒளி விட்டுக்கிளருகிற ப$_3$ாலார்க்கனைப்போலே இருவருடைய ஒளியும் தன்னிலே கலசி விளங்காநின்றுள்ள அழகிய நிறத்தையும் கண்டேன். இச்சேர்த்திக்கு என் வருகிறதோ

தே$_3$வதே$_3$வ தி$_3$வ்யமஹிஷியைக் கண்டேன் என்றவுடன், அவளிருக்கும் ஸிம்ஹாஸனமாய், பொன்னின் ஒளிபோன்ற அவளிருக்கும் இருப்பிடமான பொன்மேனியைக் கண்டேன் என்கிறார் அடுத்த படியாக,— (பொன்மேனி கண்டேன்) தாகமெடுத்தவன் 'தண்ணீர் தண்ணீர்' என்று துடிப்பதுபோலே, என்றும் பிரியாத நித்யாநபாயினியான அவளும் "இறையும் அகலகில்லேன்" என்று அநுஸந்தித்து மேல்விழும்படி பொன்போலே ஆசைப்படத்தக்கதாயிருக்கும் திருமேனியைக் கண்டேன். 'ஆழி வண்ணன்' என்று கடலாகச் சொல்லப்போகிறாராகையாலே, * மலைகளும், மாமணியும், மலர்மேல் மங்கையும், சங்கமும் தங்குகின்ற அலைகடல்போன்ற பொன்மேனியைக் காட்டுகிறார் என்றும் கொள்ளலாம். இனி. இவளுடைய சேர்த்தியாலும், மேலே சொல்லப்போகும் பொன்னாழி புரிசங்கம் முதலானவற்றின் ஒளியாலும் ஸூர்யனைப்போன்ற பல நிற ஒளிகள் அலையெறிகிறபடியாலும் அலைகடல் போன்றவன் என்கிறார்,— (திகழும் அருக்கன் அணிநிறமும், கண்டேன்) பெருமாளும் பிராட்டியுமான சேர்த்தியாயிருக்கையாலே பச்சைமாமலையிலே உதித்து ஒளிவிட்டு எழுகிற இளஞ்சூரியனைப்போலே இருவருடைய ஒளியும் ஒன்றுக்கொன்று பரபா$_4$க$_3$மாகக் (வர்ணச் சேர்த்தியழகையளிப்பதாகக்) கலந்து திகழும் அழகிய நிறத்தையும் கண்டேன். சேர்த்தியாலே வந்த ஸமுத$_3$ாயஶோபை$_4$யைச் சொல்லுகிறது. இனி, இச்சேர்த்திக்கு ரக்ஷகராயிருப்பாரும் அருகிலுண்டு என்கிறார்,— (செருக்கிளரும் பொன் ஆழி கண்டேன்) 'இச்சேர்த்திக்கு என் வருகிறதோ!' என்று அஸ்த$_2$ாநே (தகாத விடத்தில்) ப$_4$யஶங்கைபண்ணி (தீங்கு நேரிடுமோ என்று

http://acharya.org

பண்ணி "வடிவாய்நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கை
பல்லாண்டு, வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்
லாண்டு" என்கிறபடியே திருவாழியைக் கண்டேன். (
சங்கம் கைக்கண்டேன்) "प्राञ्जलिं प्रह्वमासीनं" (ப்ராஞ்ஜ
ப்ரஹ்வமாஸீநம்)என் கிறபடியே. (என்னாழிவண்ணன்பாலின்
கடல்போலே ஸ்ரமஹரமான வடிவை எனக்குக்காட்டின
பக்கலிலே. (திருக்கண்டேன் — பொன்மேனிகண்டே
ப்ரபைக்குஆஸ்ரயங்கண்டேன். (திகழுமருக்கனணிநிற

என்று அஸ்தாநே பயஸங்கைபண்ணி யுத்தோத்முக
கண்டார் மேலே சீறிவிழா நிற்பதாய். ஸ்யாமள
அவன் வடிவுக்குப் பகைத்தொடையாம்படி பொன்போ
நிறத்தையுடைத்தான திருவாழியைக் கண்டேன்.
வாழியைப்போலே சீறிவிடுகையன்றிக்கே. எங்கேயெங்
யென்று சுற்றும் முற்றும் சீறிப்பார்க்கிற ஸ்ரீபாஞ்ச

ஜயமுற்று) எப்போதும் போருக்குக் கிளர்ந்து நிற்பவ
அநுகூலப்ரதிகூல விபாகமறக் கண்டார்மேலே சீறிவிழுகிறவ
ஆழிவண்ணனை அவன் நிறத்தையும் அருக்கன் அணி
மாக்கும்படி பரபாகமாக (பகைத்தொடையாக) இருக்கும் பெ
போன்ற திருநிறத்தையுடையவனை ஸுதர்ஸனாழ்வானைக் கண்டே
அவன் மார்பிலே திருவிருப்பதைக் கண்டவுடன், 'செருக்கிள
பொன்னாழி கண்டேன்' என்கையாலே, இச்சேர்த்திக்கு
வருகிறதோ!' என்று வயிறுபிடித்து,

"வடிவாய்நின் வலமார்பினில் வாழ்கின்றமங்கையும் பல்லாண
வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
[திருப்பல

என்ற பெரியாழ்வாரைப்போலே திருவுக்கும், பொன்மேனிக்
பொன் ஆழிக்கும் பல்லாண்டு பாடுகிறார் என்
கொள்ளலாம். இனி,

'படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்

என்ற அவரைப்போலே, சங்கத்துக்கும் பல்லாண்டு பாடுகி
மேலே,— (புரிசங்கு கண்டேன்) திருவாழியைப்போலே அரு

http://acharya.org

கண்டேன்) இருவரும் கலந்தகலவியாலே பிறந்த ஸமுத$_3$ாய சோபை. (என்னாழிவண்ணன்பால்) கடலிலேயிறே பிராட்டியும் மற்றுமுள்ள ரத்நங்களுமெல்லாம் பிறப்பது. (இன்று) அவன் காட்டக்கண்டவின்று. இவர்கள் புருஷகாரமாகக் கண்டவின் றென்னவுமாம். 1.

யத்தை வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும்படி அழகிதான திருக்கையிலே கண்டேன். இன்று-நிர்ஹேதுகமாக என்னவுமாம். புரிசங்கு—''கூனற்சங்கம்'' என்னுமாபோலே ஶேஷத்வத்தாலே எப்போதும் ப்ரஹ்வீப$_4$ாவத்தை யுடைத்தாயிருக்குமென்னவுமாம். 1.

வந்தால் சீறிவிடுவது மாத்திரமன்றிக்கே, பெருமுழக்கால் எங்கும் பரவி, 'எங்கே எங்கே' என்று எதிரிகளைச் சுற்றும் முற்றும் தேடிப்பார்த்து "அவர்கள் நெஞ்சிலே நெருப்பைக் கொட்டிப் பிளக்கும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் கண்டேன். புரிசங்கு—நாற்புறமும் புரிந்து பார்க்கும் (சுற்றித் தேடிப்பார்க்கும்) சங்கம். அன்றிக்கே, 'புரி' என்று ''கூனற்சங்கம்'' [பெருமாள் திரு 1-8] ''கூனேறுசங்கம்'' [பெருமாள் திரு 4-1] என்றாற்போலே வளைந்திருப்பதைச் சொல்லுவதாய், ஶேஷத்வத்தாலும், ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வபாரத்தாலும் ''ப்ராஞ்ஜலிம் ப்ரஹ்வமாஸீநம்'' [ரா-அ 4-42] [கை கூப்பியவனாய், வளைந்து நிற்கும் தம்பியை] என்றிருக்கும் தம்பியைப்போலே ப$_4$வ்யனாயிருப்பவன் என்பதாகவும் கொள்ளலாம். (சங்கு ஒரு கைக் கண்டேன்) இச்சங்கத்தோடு சேர்த்தியில்லாமல் தனியாயிருந்தாலும், 'த்$_3$ருஷ்டிதோஷம் பட்டுவிடுமோ' என்று ஆலத்தியெடுக்கத்தக்க அழகையுடைய திருக்கையிலே இச்சங்கத்தை -யும் கண்டேன். (ஆழிவண்ணன் பால் சங்கம் கைக்கண்டேன்) கடலின் கையிலே (அலையிலே)யன்றோ சங்கம் இருப்பது என்று கருத்து. (என்னாழிவண்ணன் பால்) கடல்போலே கண்டார் களிப்பையாற்றும் வடிவைத் தானே எனக்குக் காட்டியவனிடத்திலே. ஆக, பிராட்டிக்கும், மற்றுமுள்ள எல்லா ரத்னங்களுக்கும் இருப்பிடமான கடலைப்போலே இருப்பவனிடத்திலே அவை எல்லாவற்றையும் கண்டேன் என்று தம் பரமப$_4$க்தியாலே தொடக்கத்திலேயே பரமபுருஷனை அனுபவித்தாராயிற்று. 1.

http://acharya.org

2. இன்றே கழல்கண்டேன் ஏழ்பிறப்பும் யானறுத்தேன்
பொன்தோய் வரைமார்பில் பூந்துழாய்—அன்று
திருக்கண்டு கொண்ட திருமாலே உன்னை
மருக்கண்டு கொண்டென் மனம்.

பொன் தோய்—பொன்மயமான ஆபரணங்கள் சேரப் பெற்றதும். வரை—மலைபோன்றதுமான. மார்பில்—திருமார்பிலே. பூந்துழாய்—திருத்துழாயை உடையவனாய். அன்று—கடல்கடைந்த அக்காலத்தில். திரு—பெரியபிராட்டியார். கண்டுகொண்ட—அநுபவிக்கும்படியாகப் பெற்ற. திருமாலே—லக்ஷ்மீவல்லபனே! என் மனம்—அடியேனுடைய மனமானது உன்னை—உன்னிடத்தே. மருக் கண்டு கொண்டு—பொருந்தி (உன்னைப்) பெற்றது; (அதனால்) யான்—அடியேன். இன்றே—இன்று. கழல்—உனது திருவடிகளையே. கண்டேன்—கண்டு அநுபவிக்கப்பெற்றேன்; ஏழ்பிறப்பும்-எல்லாப்பிறப்புகளையும் அறுத்தேன்—(இனிமேல் தொடராதபடி) ஒழித்துக் கொண்டேன்.

வ்யா:—(இன்றே யித்யாதி) கைங்கர்யமே யாத்ரையாம் படியாயிற்று. (ஏழ்பிறப்பும் யானறுத்தேன்) ப்ரதிப₃ந்த₄க...

அவ:—அவனைக்கண்டபோதே விரோதி₄வர்க்க₃மடையப் போயிற்றென்கிறார்.

உரை:—பொன் தோய்ந்த மலை போலே ஒளிபெற்று சிக்கென்று பரந்து ஶ்லாக்₄யமான திருமார்பிற்சாத்தின...

2. அவ:—'இந்த அநுபவத்திற்குத் தடைகள் பல இருக்குமே!' என்னும் ஐயமெழ, அவனைக் கண்டகணத்திலேயே ப₄க₃வத₃நுப₄வத்திற்குத் தடையாயிருக்கும் அனைத்தும் சூரியனைக்கண்ட பனி போலும், நெருப்புப் பொறிபட்ட பஞ்சுக்குவியல்போலும் அழிந்தொழிந்தன என்கிறார்.

வ்யா:—(பொன் தோய் வரை மார்பில் பூந்துழாய்த் திருமாலே) பொன்தோய்ந்த மலைபோலே, திருவாபரணங்களோடு சேர்ந்து ஒளிபெற்று விளங்கும் சிக்கென்று (உறுதிபெற்றுப்)-பரந்து சிறந்...

http://acharya.org

போயிற்றென்று தோற்றும்படியாயிற்று. (பொன்தோயித்யாதி) "पश्यतां सर्वदेवानां ययौ वक्षःस्थलं हरेः" (பஶ்யதாம் ஸர்வதே₃வாநாம் யயௌ வக்ஷஸ்த₂லம் ஹரே:) என்று பிராட்டி தானே ஆசைப்பட்டு வந்து ஏறும்படியான மார்பு படைத்த

அழகிய திருத்துழாயையுடையனாய், அம்ருதமத₂நம் பண்ணின அக்காலத்திலே த₃ரித்₃ரன் நிதி₄யைக் கண்டாற்போலே பெரியபிராட்டியால் "ययौ वक्षःस्थलं हरेः" (யயௌ வக்ஷஸ்த₂லம் ஹரே:) என்னும்படி கண்டுகொள்ளப்பட்டவனாய், உன்னை விலவனுக்குள்ள அபி₄நிவேஶம் குளப்படியென்னும்படி பிராட்டி பக்கலிலே கடல்போலே பெருகிவருகிற அபி₄நிவேஶத்தையுடையவனே! என்னுடைய மனஸ்ஸானது ஶ்ரிய:பதித்வத்தால் வந்த பெருமையை நினைத்துப் பிற்காலி

திருமார்பில் சார்த்தின அழகிய திருத்துழாயை உடைய லக்ஷ்மீ வல்லப₄னே! இந்தத் திருமார்பிலே ஆசைப்பட்டு அதை வாஸஸ்தானமாகக் கொண்டவளைச் சொல்லுகிறார் அடுத்தபடியாக,–(அன்று திருக் கண்டுகொண்ட திருமாலே) ஆயிரம் தோளால் அலைகடல் கடைந்த அக்காலத்திலே,

"தி₃வ்யமால்யாம்ப₃ரத₄ரா ஸ்நாதா பூ₄ஷணபூ₄ஷிதா।
பஶ்யதாம் ஸர்வதே₃வாநாம் யயௌ வக்ஷ:ஸ்த₂லம் ஹரே:||"
[வி. பு. 1-9-105]

[ஸ்நானம் செய்தவளாய், அப்ராக்ருதமான மாலைகளையும் வஸ்திரத்தையும் தரித்தவளாய், ஆபரணங்களையணிந்தவளான பிராட்டி, எல்லா தேவர்களும் கண்டுகொண்டிருக்கும்போதே ஹரியின் திருமார்பகத்தை அடைந்தாள்] என்று பராஶரமஹர்ஷியுரைத்தபடியே எல்லாச் செல்வங்களுக்கும் அதி₄தே₃வதையான பெரியபிராட்டியாராலே, பரமத₃ரித்₃ரன் பெருநிதியைக்கண்டாற்போலே கண்டு கொள்ளப்பட்ட லக்ஷ்மீவல்லப₄னே! (திருமாலே) திருவிடம் மயக்கமுடையவனே! ஆசையை வெளிக்காட்டும் இயல்வில்லாத பெண்மையையுடையவள்தானே எல்லாருமபார்க்கத் திருமார்பில் ஏறும்படியான பேராசையைக் காட்டிய பிராட்டியுடைய ஆசையும் உன்னின் எதிரிலே ஒரு குளம்படி என்னும்படி பிராட்டியிடம் கடல் போலே பொங்கிவருகிற மிக்கபேராசையை உடையவனே! (உன்னை)

http://acharya.org

ஶ்ரிய:பதியை. (உன்னையித்யாதி) ஒரு ப்ரயோஜநத்தைக் கொண்டு போகையன்றிக்கே உன்பக்கலிலே மருவிற்று என் மனஸ்ஸு. 2.

3. மனத்துள்ளான் மாகடல் நீருள்ளான் மலராள்
தனத்துள்ளான் தண்டுழாய் மார்பன்—சினத்துச்
செருநருகச் செற்றுகந்த தேங்கோதவண்ணன்
வருநரகம் தீர்க்கும் மருந்து.

மா கடல் நீர் உள்ளான்—*பெரிய திருப்பாற்கடல் நீரிலே* திருக்கண் வளர்ந்தருள்பவனும், **மலராள் தனத்து உள்ளான்**—*மலர்மகளின் திருமுலைத்தடத்திலே அடங்கிக் கிடப்பவனும்,* **தண் துழாய் மார்பன்**—*குளிர்ந்த திருத்துழாயைத் திருமார்பி லணிந்தவனும்.* **செருநர்**—*எதிரிகளானவர்கள்.* **உக**—*அழியும் படி,* **சினத்து**—*சீற்றத்தினாலே.* **செற்று**—*அழித்து.* **உகந்த**—

யாதே. அவளோட்டை உறவை நினைத்துக் கூசாதே பொருந்திக் கண்டு கொண்டது. ஆகையாலே அந்த:புர பரிகரமான நான் இன்று உன் திருவடிகளைக் கண்டநுப விக்கப் பெற்றேன். அநுப$_4$வ விரோதி$_4$யான ஜந்ம பரம்பரையையும் ஸவாஸநமாகப் போக்கினேன். **மருக் கண்டுகொண்டு**-*மருவிக் கண்டு கொண்டது என்றபடி.* 2.

இப்படித் திருவுக்கும் திருவாகிநிற்கும் பெருமையை உடைய உன்னை. (என்மனம் மருக்கண்டு கொண்டு) எனப்பெருமானது இப்பெருமையை நினைத்துப்பின்வாங்காமல் புருஷகாரபூ$_4$தையாய்,தாயான அவளோடு சேர்ந்திருப்பதைக்கண்டு உன்னோடு பொருந்திக் கண்டுகொண்டது. (இன்றே கழல் கண்டேன்) இப்படி என் மனம் கண்டுகொள்கை யாலே பிராட்டியின் பரிஜனமான நான் இன்று திருவடிகளைக் கண்டு அனுபவிப்பதே போது போக்காகப் பெற்றேன். ஏகாரம் இதுவே போதுபோக்கு என்று காட்டுகிறது. (ஏழ் பிறப்பும் யான் அறுத்தேன்) இப்படி, ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வமே போதுபோக்காகப் பெறுகை யாலே, இனி வரவிருக்கும் பிறப்புக்கள் அனைத்தையும் அடியோடு அறுத்துக் கொண்டேன் என்பது உறுதி. மருக்கண்டு கொண்டு—மருவிக்கண்டு கொண்டது என்றபடி. 2.

http://acharya.org

ஒழிந்தவனும். தேங்கு ஓதம் வண்ணன்—நிறைந்த கடல் போன்ற வடிவையுடையவனும் வரு நரகம் தீர்க்கும் மருந்து:- தவிர்க்கமுடியாமல் வரக்கூடிய ஸம்ஸாரமாகிற நரகத்தைப் போக்கவல்ல மருந்து போன்றவனுமான ஸர்வேச்வரன். மனத்து உள்ளான் — என் நெஞ்சில் வந்து (பேர்க்க முடியாதபடி) வாழ்கிறான்.

அவ:— (மனத்துள்ளான்) கீழ் இவருடைய மநஸ்ஸு அங்கே மருவினபடி சொல்லிற்று. அவன் இவருடைய மநஸ்ஸை யல்லதறியாதபடி சொல்லுகிறது இதில்.

வ்யா:— (மனத்துள்ளானித்யாதி) ஆச்ரித ரக்ஷணத்துக்காகத் திருப்பாற்கடலிலே கிடந்து. அவ்வோபாதி பெரியபிராட்டியார் திருமுலைத்தடத்தையும் ஒருஸ்தாநமாக்

அவ:— இப்படி தன்னுடைய மநஸ்ஸு அவன் பக்கலிலே மருவிக் கண்டவாறே அவனும் தம்முடைய மநஸ்ஸிலே அபிநிவிஷ்டனாய்க் கலந்தபடியை அருளிச்செய்கிறார்.

உரை:— பிராட்டி மேல்விழுந்து அநுபவிக்கும்படி ஸ்ரமஹரமான திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமார்வையுடையனாய். தாமரைப்பூவை இருப்பிடமாக உடையளான பெரிய பிராட்டியாருடைய அவயவாந்தரங்களிலழகு குமிழிருக்கும்படி திருமுலைத்தடத்திலே அத்யபிநிவிஷ்டனாய்க்

3. அவ:—முன் பாசுரத்தில் தம்முடைய மனம் அவனிடம் பொருந்தினபடியைப் பேசினார்; இத்தையே கொண்டு அவன் தம்முடைய மனத்தைத்தவிர மற்றது அனைத்தையும் அறியாதவனானான் என்கிறார் இப்பாசுரத்தில்.

வ்யா:— இவர் மனத்தில் வாழுகைக்காக இவன் செய்த செயல்களைப் பாசுரத்தின் எஞ்சிய பகுதிகள் பேசுகின்றனவாகையாலே, 'மனத்துள்ளான்' என்பதைக் கடைசியில் கூட்டிப் பொருள் கொள்ளவேணும். (மாகடல் நீருள்ளான்) என் மனம் தான் வாழ்வதற்குப் பாங்காக ஆகின்றவரையில், அதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றவனாய், என் மனத்தில் வாழ்வதற்கு ஸமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு, பரந்த இடமுடையதான திருப்பாற்கடல் நீரிலே கண்வளர்ந்தருள்கின்றவனானான். (மலராள்

http://acharya.org

உடையனாய். தண்டுழாய்மார்பனாய். சினத்திலேசெருநரான வர்கள் மங்கும்படிசெற்று ஆஶ்ரிதவிரோதிகள் போகப்பெற்றோமென்றுகந்து அத்தாலே ஶ்ரமஹரமான வடிவையுடையனாய்

கொண்டு அடங்கி வர்த்திக்குமவனாய். என் மனஸ்ஸாங்காமளவும் அவஸரப்ரதீக்ஷனாய்க்கொண்டு. இடமுடைத்தான திருப்பாற்கடலில் நீரிலே கண்வளர்ந்தருளுமவனாய் சத்ருவர்க்கம் உருத்தெறியிராதபடியழிக்கத்தக்கதாகச் சீறியழித்துப் பொகட்டு ஆஶ்ரிதவிரோதி போகப்பெற்றோமென்று உகந்தவனாய். அத்தால் தேங்கின கடல் போலே ஶ்ரமஹரமான வடிவையுடையனாய்

தனைத்துள்ளான்) அழகாலே தன் ஸ்வாதந்திரியத்தையும். உபதேசத்தாலே என்னையும் திருத்தவல்ல புருஷகாரபூதையாய் தாமரைப்பூவை இருப்பிடமாக உடையவளான பெரியபிராட்டியாருடைய மற்ற அவயவங்களில் அழகுகள் காட்டில் எரித்த நிலாவாம்படி, அவனுடைய பேரன்பே வடிவெடுத்ததான திருமுலைத்தடங்களிலே திருப்பாற் கடலிற்போலே மிக்க ஈடுபாடுகொண்டு 'அவளுடைய ஸ்தனங்களாகிய தாமரைகளைச் சுற்றித்திரியும் வண்டோ இவன்' என்று ரஸிகர்கள் ஈடுபடும்படி அவளுடைய ஸ்தனங்களினுள்ளே அடங்கிக்கிடப்பவன். புருஷோத்தமனுக்கு நாரீணாம் உத்தமையிடமுள்ள அப்ராக்ருதமான பெருங்காதலைக் காட்டும் இச்செயல் ப்ராக்ருதச்சாயையிலே இருந்தாலும், ப்ராக்ருதமாக நினைக்கவும் தக்கதன்று. ஆக, என்னைச் சேரவிடுகின்ற தாயிடமும் மிக்க ஈடுபாடு கொ[illegible]னாயிருந்தான் என்னைத் திருத்துவதற்காக என்று கருத்து. [illegible] துழாய் மார்பன்) அப்பிராட்டி தானும், தன் பெண்[illegible]யும் கணிசியாமல் மேல் விழுந்து அநுபவிக்கும்படி, களைப்பை [illegible]ற்றும் குளிர்ச்சியையுடைய திருத்துழாய் மாலையை உடையவன். என்னை வெல்வதற்குத் தனிமாலையிட்டிருப்பவன் என்றுமாம். (சினத்துச் செருநருகச் செற்று உகந்த தேங்கோதவண்ணன்) தன்னிடத்தில் சினத்தினாலே தன்னோடு எதிரிடுமவர்கள் உருத்தெரியாமல் அழியும்படி போரிட்டு. 'அடியார்க்கு விரோதிகள் நீங்கப்பெற்றோம்' என்று மகிழ்ந்தவனாய், அதனாலே கருணைநீர் நிறைந்து தேங்கின கடல் போலே களைப்பையாற்றும் வடிவை உடையவன் 'செருநகர் உக சினத்துச் செற்று' என்று கூட்டிப் பதவுரையில் போலும் பொருள் கொள்ளலாம். என் மனத்தைத் தான் அடையத்தடையாயிருந்தவர்களையும் அழித்தவன் என்றபடி

http://acharya.org

அநுபவித்தல்லது விடாத நரகத்தைக் கடக்கைக்கு பேஷஜமானவன். (மனத்துள்ளான்) என்னுடைய மநஸ்ஸிலுள்ளான். 3.

அந்த மாகடலில் பள்ளிகொள்ளப் பழகவிட்டு என் மனக்கடலிலே வந்து நித்யவாஸம்பண்ணி வாழுமவனானவன் தப்பாமல் வரக்கடவதான ஸம்ஸாரமாகிற நரகத்தை ஸவாஸநமாகப் போக்கும் ஔஷதம். 3.

(வருநரகம் தீர்க்கும் மருந்து) வருநரகம்-தவிர்க்கமுடியாமல் நேரும் நரகம். "அவஶ்யமநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம ஶுபாஶுபம்-நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிஶதைரபி" [செய்த புண்யபாபகர்மங்கள் அவசியம் அநுபவித்தே தீரவேண்டியவையாகும். நூற்றுக்கணக்கான கற்பகோடிகாலங்களானாலும் கருமம் அநுபவிக்காமல் தீராது.] என்று சாஸ்திரங்களில் சொல்லப்படும் கர்மங்களின் பலமாகத் தவிர்க்கமுடியாமல் வரும் நரகம்போன்ற ஸம்ஸாரமாகிற வியாதியை வாஸனையோடு போக்கும் மருந்தாயிருந்தான். "நிர்வாணம் பேஷஜம் பிஷக்" என்று ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலும் இவன் மருத்துவனாகவும் மருந்தாகவுமிருப்பவன் என்று கோஷிக்கப்பட்டான்றே. மருத்துவனாயிருக்கையாவது பலப்ரதனாயிருக்கை; மருந்தாயிருக்கையாவது பலகரணமாய், உபாயமாகவேயிருக்கை. மாகடல் நீரிலும், மலராள் தனத்திலும் இருந்ததும், தண்டுழாய்த்தனிமாலை மணிந்ததும், செருநருக்கச் செற்றதும் என்னுடைய வருநரகத்தைத் தீர்ப்பதற்காக என்று கருத்து. மறுமையில் உமக்கு வரும் பலனிருக்கட்டும்; இம்மையில் அவனுக்கு ஏதாவது பலனுண்டோ? எனில்: (மனத்துள்ளான்) என் மனத்திலிருப்பதற்காகவே அவன் இப்பாடுகள் பட்டான் என்கிறார். (மனத்துள்ளான்) மாகடல் நீர் முதலான வற்றையும் மறந்து என் மனத்திலேயே அழுந்திக்கிடக்கிறான் அதைப்பெற்றபின்பு என்று கருத்து.

> திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலே என் தலையே
> திருமால் வைகுந்தமே தண்திருவேங்கடமே எனதுடலே
> அருமாமாயத்து எனதுயிரே மனமே வாக்கே கருமமே
> ஒருமாநொடியும் பிரியான் என் ஊழிமுதல்வன் ஒருவனே"
>
> [திருவாய் 10-7-8]

http://acharya.org

"கல்லும் கனைகடலும் வைகுந்த வானாடும்
புல்லென்றொழிந்தனகொல் ஏபாவம்—வெல்ல
நெடியான் நிறங்கரியான் உட்புகுந்து நீங்கான்
அடியேன துள்ளத் தகம்" [பெரியதிருவந்தாதி 68]

"நாகத்தணைக் குடந்தை வெஃகா திருவெவ்வுள்
நாகத்தணை அரங்கம் பேரன்பில்—நாகத்
தணைப்பாற்கடல்கிடக்கும் ஆதி நெடுமால்
அணைப்பார் கருத்தனாவான்" [நான் திருவ 36]

"வெற்பென்றிருஞ்சோலை வேங்கடமென்றிவ்விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும் நீர்மைபோல்—நிற்பென்(று)
உளங்கோயில் உள்ளம் வைத்துள்ளினேன் வெள்ளத்(து)
இளங்கோயில் கைவிடேல் என்று" [இர-திருவ 54]

"தலைமேல் புனைந்தேன் சரணங்கள் ஆலின்
இலைமேல் துயின்றான் இமையோர் வணங்க
மலைமேல் தான் நின்(று)என் மனத்துள் இருந்தானை
நிலைபேர்க்கலாகாமை நிச்சித்திருந்தேனே" [திருவாய்10-4-4]

"பணிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்தென்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பி
தனிக்கடலே தனிச்சுடரே தனியுலகே என்றென்று
உனக்கிடமாயிருக்க என்னை உனக்குரித் தாக்கினையே"
[பெரியாழ் திரு 5-4-9]

என்று மற்றையாழ்வார்களும் தம் மனம் முதலான அவயவங்களி லிருப்பை விரும்பியே எம்பெருமான் பரம் வியூஹம் முதலானவிடங் களிலிருந்துகொண்டு அரும்பாடுபடுகிறான் என்றும், மனத்தைப் பெற்றபின் மற்றவற்றை உபேக்ஷிக்கிறான் என்றும் அருளிச்செய்தன ரன்றோ. அப்பிள்ளையுரையில், "மனத்துள்ளான்" என்றதற்குப் பிறகு "வருநரகம் தீர்க்கும் மருந்து" என்ற தொடரைக்கூட்டிப் பொருள் கொண்டார். "மாகடல் நீர்" முதலானவற்றிலிருப்பு தன் மனத்திலிருப்பதற்காகவென்றும், தன் மனத்திலிருந்தது தன் வருநரகத்தைத்தீர்க்கைக்காகவென்றும் கருத்து. 3.

http://acharya.org

4. மருந்தும் பொருளும் அமுதமும் தானே
திருந்திய செங்கண்மா லாங்கே—பொருந்திய
[ஒருவன் திருவடியை நீட்டினான். மற்றொருவன் அத்திருவடியை உவப்புடன் விளக்கினான். வேறொருவன் அத்திருவடி நீரைத் தலையாலே தாங்கினான். இவர்களுள் எவன் பெரியவன் என்பதைக் காணலாகாதோ?] என்கிறபடியே திரிவிக்ரமனாய் நின்ற நிலையிலேயே இவனே ஸர்வேஶ்வரன் என்று அறுதியிடலாம்படி இருந்தவனுக்கு என்று கருத்து. மால்-பெரியவன்; ஸர்வேஶ்வரன். அன்றிக்கே இந்திரன் முதலான அடியார்களிடத்திலே அன்புடையவனுக்கு என்றும் பொருள் கொள்ளலாம். அவ்வன்பினாலேயே

http://acharya.org

வனுக்குத் திருவபி₄ஷேகமானது ஆகாசத்தையூடறுத்து அண்டபி₄த்திக்கவ்வருகே நீண்டது. 13.

14. மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு
நூற்பால் மனம்வைக்க நொய்விதாம்— நாற்பால
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதம் பணிந்து.

நாற்பால வேதத்தான்—*நான்கு வகைப்பட்ட வேதங்களாலே சொல்லப்படுபவனும்.* **வேங்கடத்தான்**—*திருமலையிலே நிற்கும் எளிமையுடையவனும்.* **விண்ணோர் முடி தோயும் பாதத்தான்**—*நித்யஸூரிகளின் முடிகள் பொருந்தும்படியான திருவடிகளையுடையவனுமான எம்பெருமானுடைய* **பாதம்**—*திருவடிகளை.* **பணிந்து**—*ஆஶ்ரயித்து.* **மால் பால்**—*அந்த ஸர்வேஶ்வரனிடத்திலே.* **மனம் சுழிப்ப**—*நெஞ்சு ஈடுபட. (அதனாலே)* **மங்கையர் தோள் கைவிட்டு**—*ஸ்த்ரீ*

வபி₄ஷேகமானது அந்தரிக்ஷாதி₃களான ஊர்த்₄வலோகங்களை ஊடுருவிக்கொண்டுபோய் அண்டகடாஹத்தளவும் செல்ல வளர்ந்ததே! இதென்ன ஆஶ்சர்யமென்றநுப₄விக்கிறார். 13.

தன் பெருமைக்குத்தகாதபடி தன்னதான உலகைத் தானே மாவலியிடம் கையேந்தி வாங்கினான் என்று கருத்து. (நீண்ட முடிவட்டம்) பெருக்கெடுத்து வரும் ஆறு சுழித்துக்கொண்டு வெள்ளமிடுவதுபோலே, சுழித்து எழுகின்ற ஒளிவெள்ளத்தை யுடையதாய், நீண்டு வளர்ந்த திருமுடியானது. (ஆகாய மூடறுத்து) அந்தரிக்ஷம் முதலான மேல் உலகங்களை ஊடுருவிக்கொண்டுபோய். (அண்டம்போய் நீண்டதே) "ஸ பூ₄மிம் விஶ்வதோ வ்ருத்வா அத்யதிஷ்ட₂த்த₃ஶாங்கு₃லம்" [பு ஸூ] [அவர் உலகம் முழுவதையும் வியாபித்து, அதற்குமேலும் நெடுந்தூரம் வளர்ந்தார்.] என்கிறபடியே, ரக்ஷ்யத்தின் அளவல்லாத ரக்ஷகனின் பாரிப்பாலே, அண்டச்சுவர் வரையிலும் சென்று அதையும் ஊடுருவிக்கொண்டு அதற்கப்பாலும் வளர்ந்ததே! இதுஎன்ன ஆச்சர்யம்! என்று அநுபவிக்கிறார். 13.

http://acharya.org

களின் தோளோடே அணையவேணுமென்கிற ஆசையைக் கைவிட்டு நூல் பால்-(வேதம் முதலிய) சாஸ்திரங்களிலே. மனம் வைக்க-மனம் செலுத்துவதற்கு. நொய்விது ஆம்-எளிதாகும்.

அவ:— (மாற்பால்) "அறிவென்னுந்தாள்கொளுவி" என்கிறபாட்டிற் சொல்லுகிறபடி இந்த்ரியஜயம்பண்ணி அறிகை அரிதாயிருந்ததீ; அஶக்தர் இழக்குமத்தனையோ வென்னில். இழக்கவேண்டாத உபாயம் சொல்லுகிறது.

அவ:— கீழ "ஐம்புலனும் தம்மில் செறிவென்னும் திண்கதவம் செம்மி" என்று. இந்த்ரியஜயம்பண்ணுகை அரிது; இந்த்ரியஜயம் பண்ணினார்க்கல்லது அவனைக்காண முடியாது; கண்டாலல்லது இந்த்ரியங்களை ஜயிக்க முடியாது; ஆனபின்பு அஜிதேந்த்ரியரான அஶக்தர் அவனையிழக்குமித்தனையோ? என்னில், 'அஜிதேந்த்ரியரானார்க்கும் கண்ணாலே கண்டாஶ்ரயிக்கலாம்படி திருமலையிலே வந்து ஸுலபனானான்; ஆனபின்பு அவனை எளிதாக ஆஶ்ரயிக்கலாம்' என்கிறார்.

---

14. அவ:— "அறிவென்னும் தாள் கொளுவி" என்கிற பாசுரத்தில் "ஐம்புலனும் தம்மில் செறிவென்னும் திண்கதவம் செம்மி" என்று யோகாப்யாஸத்தாலே ஶுபாஶ்ரயமான அந்தர்யாமி ரூபத்திலே நெஞ்சைச் செலுத்தியவர்களுக்கு இந்திரியங்களை வெல்லலாமென்றும் இப்படி இந்திரியங்களை வென்றார்க்கல்லது அவனைக் காணமுடியாது என்றும் கூறினார். இப்படி யோகாப்யாஸம் செய்யமுடியாத அஶக்தர்கள் ஶுபாஶ்ரயமான திருமேனியிலே நெஞ்சு செலுத்தமுடியாதாகையால், அவர்கள் இந்திரியங்களை வெல்வதும் அவனைக்காண்பதும் அரிதன்றோ எனனும் கேள்வியெழ, "இப்படி யோகாப்யாஸத்தால் அந்தர்யாமியைக் கண்டு இந்திரியங்களை வெல்லமுடியாதவர்களுக்கும் கண்ணாலே கண்டு ஆஶ்ரயித்து இந்திரியங்களை வெல்லலாம்படி ஶுபாஶ்ரயத் திருமேனியோடே திருமலையிலே அர்ச்சாவதாரமாக வந்து எளியனானான். ஆகையாலே, தம்மைப்போலே அவன்தானே தன்னைக் காட்டப்பெறாத அஶக்தர்களும் அவனை அடையலாம்" என்கிறார் இப்பாசுரத்தில்.

http://acharya.org

வ்யா:— (நாற்பாலவேதத்தான்) நாலுவகையான வேதத்தாலே ப்ரதிபாதிக்கப் படுமவன். வேதை$_3$கஸமதி$_4$க$_3$ம்யனாகில் கண்ணாலே காண்கிற ஶப்$_3$த$_3$ாதி$_3$களை அநுபவிப்பார்க்குக் காணவரிதிறேயென்னில்; (வேங்கடத்தான்) கண்ணாலே கண்டநுபவிக்கும்படி திருமலையிலே வந்து நின்றவனை. ஆகில் கண்ணாலே காணப்படுகிற சப்தாதிகளோடொக்குமோவென்னில், (விண்ணோர் முடிதோயும் பாதத்தான்) இப்படி

உரை:— நாலு வகைப்பட்ட வேதங்களாலே ப்ரதிபாதிக்கப்படுமவனாய், இப்படி ஓலைப்புறத்திலே கேட்டுப் போகாதே கண்டநுபவிக்கலாம்படி திருமலையிலேவந்து நிற்கிற ஸௌலப்$_4$யத்தையுடையனாய், இப்படி ஸுலப$_4$னான நிலைதன்னிலே நித்யஸூரிகளும் திருவடிகளிலே தலைமடுத்தாஶ்ரயிக்கலாம்படி பெரிய மேன்மையையுடையனானவ

வ்யா:— (நாற்பால வேதத்தான்) நாலு[illegible]பட்ட வேதங்களாலே பரம்பொருளாக முழங்கப்படுபவ[illegible]படி வேதத்தாலேயே அறியப்படுபவனாகில், கண் முதலான இந்திரியங்களாலே சப்தம் முதலான விஷயங்களை அனுபவிப்பதிலேயே பயின்று கொண்டிருக்கும் ஸம்ஸாரிகளுக்குக் காண அரிதாயிற்றே என்னில்.— (வேங்கடத்தான்) இப்படி ஓலைப்புறத்திலே கேட்டுப்போவது மாத்திரமன்றிக்கே, கண்டு அநுபவிக்கலாம்படி திருமலையிலே வந்து நிற்கின்ற எளிமையையுடையவன். அப்படியானால் கண் முதலான இந்திரியங்களாலே அனுபவிக்கப்படும் சப்தம் முதலான விஷயங்களைப்போலே இவ்விஷயமும் தாழ்ந்ததோ? என்னில்.— (விண்ணோர் முடிதோயும் பாதத்தான்) இப்படி எளியனாய் இருந்தபோதிலும், அயர்வறும் அமரர்களான நித்யஸூரிகளும் திருவடிகளிலே தலையைவைத்து ஆஶ்ரயிக்கலாம்படி பெரியமேன்மையை உடையவன். ஆகையாலே ஶப்தாதி விஷயங்களைப்போலே இவ் விஷயம் தாழ்ந்ததோ என்று ஶங்கிக்க இடமில்லை என்று கருத்து. (பாதம்பணிந்து) யோகாப்யாஸத்தாலே அந்தர்யாமியைக் காண முடியாதவர்களும் அர்ச்சாமூர்த்தியான இவனுடைய பாதத்தைப் பணியலாம் என்று கருத்து. (பாதம் பணிந்து) சேஷபூ$_4$தனை தன் ஸ்வரூபத்துக்குத் தக்கபடி திருமேனியிலே மற்ற அவயவங்கள் நிற்க, திருவடிகளையே பணிந்து. (மாற்பால் மனம் சுழிப்ப)

http://acharya.org

திருமலையிலே நிற்கிறவன் நித்யஸூரிகளுக்கு ஸ்ப்ருஹணீய னானவன். அவன் திருவடிகளிலே பணிந்து. (மாற்பால் மனம் சுழிப்ப) வ்யாமுக்₃த₄னாயிருக்கிறவன் பக்கலிலே மநஸ்ஸூ சுழிக்க. (மங்கையர் தோள் கைவிட்டு) நரகத்திலே மூட்டக்கடவதான ஸ்த்ரீகளுடைய தோளைக் கைவிட்டு. (நூற்பால்மனம் வைக்க நொய்விதாம்) ப்ரமாணங்களிலே அல்பம் மநஸ்ஸை வைக்கவெளிதாம். 14.

னுடைய திருவடிகளை ஆஶ்ரயித்து ஸர்வேஶ்வரன் பக்க லிலே மனஸ்ஸூ ப்ரவணமாக, போ₄க₃யோக்₃யமான பருவத்தைக் காட்டித் துவக்கக்கடவ ஸ்த்ரீகளுடைய தோளோடேயணைந்தநுபவிக்கவேணுமென்னும் ஆசையை ஸவாஸநமாகவிட்டு வேத₃ாதி₃ ஶாஸ்த்ரங்களிலே மனஸ்ஸை வைக்கைக்கு எளிதாம். 14.

முற்கூறிய மேன்மையையும் எளிமையையும் ஒருசேரப்பெற்ற ஸர்வேஶ்வரனிடத்திலே நெஞ்சை ஈடுபடுத்தினால். நம்மிடம் அன்பாலே தன்னை எளியனாக்கி வைத்திருப்பவனிடம் நாமும் அன்பைச் செலுத்தினால் என்றுமாம். யோக₃ாப்₄யாஸத்தாலே அந்தர்யாமியைக் காணமுடியவில்லை என்னும் குறைதீரத்தானே தன் திருமேனியை அனைவர்க்கும் காட்டி நிற்கையாலே, அர்ச்சாமூர்த்தியிடத்திலே மனத்தை ஈடுபடுத்துவது ஸம்ஸாரிகளுக்கும் எளிது என்று காட்டுகிறார். (மங்கையர்தோள் கைவிட்டு) சிற்றின்பத்துக்குத் தகுதிபடைத்த மங்கைப்பருவத்தைக்காட்டி ஈடுபடுத்துகின்ற பெண்களுடைய தோளோடே அணைந்து அவ்வின்பத்தையனுபவிக்க வேணும் என்னும் ஆசையானது, திருமாலிடத்திலே ஈடுபட ஈடுபடத்தானே வாஸனையோடு தொலையும் என்று கருத்து. இதையே "அத்தோள் தொழுதார் பிறந்தார் பிறந்து எய்தும் பேரின்பமெல்லாம் துறந்தார்" (இர-திருவ-42) என்று பூதத்தாழ்வாரும் அருளினார். இங்கு மங்கையர் தோளைச் சொன்னது நரகத்தை அடைவிக்கும் ஶப்தாதிவிஷயானுபவம் அனைத்துக்கும் உபலக்ஷணம். (நூற்பால் மனம் வைக்க நொய்விதாம்) முற்கூறிய வாறு சப்தாதி விஷயானுபவம் கழிந்தவுடன் வேதம் முதலான ஶாஸ்த்ரங்களிலே சிறிதேனும் மனத்தைவைக்க எளிதாகும். மனம் வைத்தபின் தக்க உபாயத்தை அனுஷ்டித்து அவனை அடைவதும் எளிது என்று கருத்து. 14.

http://acharya.org

15. பணிந்துயர்ந்த பௌவப் படுதிரைகள் மோத
பணிந்தபண மணிகளாலே—அணிந்தங்
கனந்தனணைக் கிடக்குமம்மான் அடியேன்
மனந்தனணைக் கிடக்கும் வந்து.

பணிந்து உயர்ந்த—*தாழ்ந்தும் ஏறியும் வீசுகின்றவையான,* **பௌவம் படுதிரைகள்**—*கடலிலுண்டான அலைகளானவை.* **மோத**—*எல்லாப்புறமும் அடிக்க.* **பணிந்த**—*(அத்திவலைகள் திருமேனியில் படாதபடி குடைபிடித்தாற் போலே) கவிந்திருக்கிற.* **பணம்**—*படங்களிலுண்டான.* **மணிகளாலே**—*மாணிக்கங்களினாலே.* **அணிந்த**—*அலங்கரிக்கப்பட்டிருக்கிற,* **அனந்தன்**-*திருவனந்தாழ்வானாகிற.* **அணை**-*திருப்பள்ளிமெத்தையிலே.* **கிடக்கும்**-*சயனிக்கிற.* **அம்மான்**-*ஸர்வேஶ்வரன் (அங்கப் படுக்கையிற் பொருந்தாதே).* **அங்கு**—*அங்கு நின்றும்.* **வந்து**—*புறப்பட்டுவந்து.* **அடியேன்தன்**—*அடியேனுடைய.* **மனம் அணை**—*மனமாகிற படுக்கையில்.* **கிடக்கும்**—*திருக்கண் வளரா நின்றான்.*

அவ:— (பணிந்து) அவனாலே ஸ்வய[illegible] பட்டவனுக்கு துக்கமொன்றுமில்லையிறே என்கிறது.

வ்யா:— (பணிந்தித்யாதி) தாழ்வதுகிளருவதானகடல் திரைகளை மோத. மோதவென்கிறது—குறுந்திவலை படிலும்

அவ:— *இப்படியரியனானவனை நீர்கண்டு அநுபவிக்கப் பெற்றபடி எங்ஙனேயென்ன. 'நிர்ஹேதுகமாக என் ஹ்ருதயத்திலேபுகுந்து கண்வளரக்கண்டேன்' என்கிறார்.*

---

15. அவ:—சென்ற பாசுரங்களில் எம்பெருமானையடைய அரிய வழியையும் எளிய வழியையும் காட்டினார். 'இவ்வழிகளிலே எவ்வழியிலே நீர் முயன்று அவனைக்கண்டீர்' என்னும் கேள்வி எழ, 'அவன் தானே என் நெஞ்சிலேபுகுந்து நிர்ஹேதுகமாகத் தன்னைக் காட்டக்கண்ட எனக்கு இவ்விருவழிகளிலும் உள்ள சிரமம் சிறிதும் இல்லை' என்கிறார்.

http://acharya.org

திருமேனியிலே ஒரு மலை விழுந்தாற்போலேயிருக்கை. (பணிந்த பணமணிகளாலே) அத்திவலைகள் திருமேனியில் படாதபடி காத்த பணத்தின் மணிகளாலே. (அணிந்தித்யாதி) அதினாலே அலங்க்ருதனான திருவனந்தாழ்வானென்கிற படுக்கையிலே கிடக்கிற ஸர்வேஶ்வரன். (வந்து அடியேன் மனங்

உரை:— ஸ்வஸந்நிதா₄நத்தாலே மேலே கிளர்ந்தும், கீழேவிழுந்துஞ் செல்லுகிற கடலில் உண்டான அலைகளானவை நாலுபாடுங்கண்பாராமலலைக்க. அத்திவலைகள் திருமேனியில் படாதபடி குடைபிடித்தாற்போலே கவிந்திருக்கிற ப₂ணாமண்ட₃லத்திலுண்டான மாணிக்கங்களாலே அழகுபெற அலங்கரிந்துக் கொண்டிருக்கிற திருவனந்

வ்யா:— (பணிந்துயர்ந்த பௌவப் படுதிரைகள் மோத) 'எம்பெருமானை ஸ்பரிசிக்கவேண்டும்' என்னும் ஆவலாலே மேலே எழுவதும், கீழே விழுவதுமாயிருக்கும் கடலில் உண்டாகும் அலைகளானவை நாற்புறமும் எம்பெருமானுடைய மென்மையை நோக்காமல் மலை மோதுவதுபோலே மோதிக்கொண்டிருக்க. 'மோத'என்னும் பதம், சிறு திவலை பட்டாலும், திருமேனியிலே ஒரு மலைவிழுந்தாற்போலேயிருக்கும் திருமேனி மென்மையைக் காட்டுகிறது. இப்படி நாற்புறமும் மலைகள்போலே அலைகள்மோதக் கேட்பாரற்றுக்கிடக்கிறதோ? என்னில். காப்பாருண்டு எனகிறார் மேலே,— (பணிந்த பணா மணிகளாலே அணிந்து) அத்திவலைகளில் ஒருசிறிதும் திருமேனியிலே படாதபடி குடைபிடித்தாற்போலே, கவிந்திருக்கும் பணாமண்டலத்தில் (படங்களில்) உள்ள மணிகளாலே அழகுபெற அலங்கரித்துக்கொண்டுள்ள. (அனந்தன் அணைக்கிடக்கும்அம்மான்) திருவனந்தாழ்வானென்கிற திருப்பள்ளி மெத்தையிலே சயனித்திருக்கிற ஸர்வேஶ்வரன். (அனந்தன்) எத்தனை அலை மலைகள் மோதினாலும், அவற்றையெல்லாம் தானே தாங்கிக்கொண்டு எம்பெருமானைக் காக்கவல்ல அனந்த பலத்தையுடையவன். அஸ்த₂ாநே ப₄யஶங்கையில் அநந்தனாய் (அளவற்றவனாய்) இருப்பவன் என்றுமாம். "அமிதௌஜா: பர்யங்க:" [அளவற்ற பலத்தையுடையவன் படுக்கை] என்றதன்றோ கௌஷீதகி உபநிஷத்தும். (அங்கு அனந்தன் அணைக்கிடக்கும் அம்மான்) அத்தகைய படுக்கையில் கிடப்பதினி

http://acharya.org

தனணைக்கிடக்கும்) அப்பெரிய படுக்கையிலே கிடக்குமவன் பரியவுமறியாதே. அப்படுக்கை வாய்ப்புமின்றிக்கேயிருக்க வந்து என் மநஸ்ஸிலே தங்காநின்றான். எங்கே தங்குமவன் எங்கே தங்காநின்றான்? கிடக்க வொருபடுக்கையில்லாதவன் படுக்கையுள்ள விடந்தேடிவருமாபோலே. திருவயோத்யையிலுள்ளார் அவனைச் சரணம்புக்குக்கிடக்க. "आवासन्त्वहमिच्छामि" (ஆவாஸந்த்வஹமிச்சா₂மி) என்றிருந்தாற்போலே. 15.

தாழ்வானகிற திருப்பள்ளி மெத்தையிலே பள்ளி கொண்டருளாநின்றுள்ள ஸர்வேஶ்வரன் அந்தப் படுக்கையிற் பொருந்தாதே அங்குநின்றும் அத்யபி₄நிவிஷ்டனாய்க் கொண்டுவந்து அநந்யார்ஹஶேஷபூ₄தனான என்னுடைய மனஸ்ஸாகிற படுக்கையிலே பள்ளிகொண்டருளாநிற்கும். 15.

ருந்தே இவனே ஸர்வேஶ்வரன் என்பது தெளிவாகிறது. (வந்து அடியேன் மனந்தன் அணைக்கிடக்கும்) அந்தப் படுக்கையிற்பொருந்தாமல் அங்குநின்றும் பெருங்காதலுடன் அடியேனிருக்குமிடந்தேடி வந்து, தனக்கே அடிமைப்பட்டிருக்கும் என் மனமாகிற படுக்கையிலே பள்ளிகொண்டருள்வான். (அங்கு கிடக்கும் அம்மான் வந்து அடியேன் மனந்தன் அணை கிடக்கும்) அப்பெரிய படுக்கையிலே கிடப்பவன், அவ்வனந்தனைப்போலே பரியவும் அறியாதே, மென்மை, குளிர்த்தி, நறுமணம் முதலான படுக்கைக்குணங்களுற்ற என் கல்மனத்திலே தங்கினான்! எங்கே படுத்திருந்தவன் ங்கே வந்து படுத்துக்கொண்டான்? தங்க ஓரிடமும், கிடக்க ஓர் படுக்கையும் இல்லாதவனுக்கு அரண்மனையில் மெத்தென்ற பஞ்ச சயனம் கிடைத்தாற்போலே, அவ்வரிய படுக்கையைவிட்டு இக்கல் மனத்தை விரும்பினான்! திருவயோத்தியிலுள்ளோர் 'அயோத்திக்கு வரவேணும்' என்று அவனைச் சரணம்புகுந்து நிற்க, அவர்களைவிட்டுக் காடுசென்று. 'ஆவாஸம் த்வஹமிச்சா₂மி' [ரா•ஆர 5-34] [ஓரிருப்பிடத்தை வேண்டுகிறேன்] என்று ரிஷிகளிடம் இருப்பிடம் கேட்டுநின்றதுபோலே இருந்தது இது என்று கருத்து. இப்படி மேல் விழுந்து அவன்தானே என்னைத்தேடிவந்தமையாலே, அவனை முயன்று பெறும் எவ்வழியிலும் துவண்டு நான் சிரமப்படவில்லை என்றாராயிற்று. 15

16. வந்துதைத்த வெண்டிரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்திவிளக்கு மணிவிளக்காம்—எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்பன்
திருவல்லிக் கேணியான் சென்று.

ஒரு அல்லி தாமரையாள்—ஒப்பற்ற அழகிய இதழ்களை உடைய தாமரைப்பூவை இருப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியார். சென்று ஒன்றிய சீர் மார்பன்—வந்து பொருந்திய அழகிய திருமார்பையுடையவனும், வெண் திரைகள் வந்து உதைத்த செம் பவளம் வெண் முத்தம்—வெளுத்த அலைகள் மோதித்தள்ளிய சிவந்த பவழங்களும் வெளுத்த முத்துக்களும். அந்தி விளக்கும் அணி விளக்கு ஆம்—மாலை நேரத்தை விளங்கவைக்கும் மங்களதீபங்களாக ஆகப்பெற்ற. திருவல்லிக்கேணியான்—திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருப்பவனுமான பெருமான், எந்தை—எனக்கு ஸ்வாமி.

அவ:— (வந்து) இப்படி வந்து தங்குகைக்கடி பிராட்டியோடேயிருக்கை யென்கிறார்.

அவ:— திருப்பாற்கடலில் நின்றும் தம் திருவுள்ளத்துக்கு வருகிறபோது திருவல்லிக்கேணியிலே தங்கினானென்கிறார்.

---

16. அவ:— இப்படித் தாம் பரகதஸ்வீகாரத்துக்கு விஷயமானதற்குக் காரணமென்னவெனில்: திருப்பாற்கடலினின்றும் சேதநன் ஒருவனைக் கிடைக்கப்பெறுவோமோ? என்னும் ஆசையாலே திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளியபோது, 'இவ்வருகிலே வந்த இவனைக் கடாக்ஷிக்கவேண்டும்' என்று பிராட்டி புருஷகாரம் செய்கையே காரணம் என்கிறார்.

http://acharya.org

வ்யா:— (வந்தித்யாதி) வந்து உதையாநின்றுள்ள வெண்டிரைகளாலே உண்டான சிவந்த பவளமும். ஒளியை யுடைத்தான முத்தும். அந்திக்கு ப்ரகாஶகமாக நின்ற மங்கள தீபத்தை யுடைத்தான திருவல்லிக்கேணியிலே நின்றவன். (சென்று ஒருவல்லித்தாமரையாள் ஒன்றிய சீர்மார்பன்) "पश्यतां सर्वदेवानां ययौ वक्षःस्थलं हरेः" (பஶ்யதாம் ஸர்வ

உரை:— அழகிய அல்லியையுடைத்தான தாமரையை இருப்பிடமாகவுடையளாய். நிரதிஶய போக்யையான பெரியபிராட்டியார், அம்ருதமதனஸமயத்திலே நிற்கிற தேவர்களை மதியாமற்சென்று "இறையுமகலகில்[illegible]ன்" என்று பொருந்தி வர்த்திக்கும்படியான அழ[illegible] திரு

வ்யா:— (வந்துதைத்த வெண்திரைகள் செம்பவள [illegible]வெண் முத்தம்) கரையிலே வந்து உதைக்கின்ற வெண்மைமிக்க அலைகளில் உள்ள சிவந்த பவளங்களும், வெளுத்து ஒளிமிக்க முத்துக்களும். வெண்திரைகள் வந்துதைத்த செம்பவள வெண்முத்தம் என்று கூட்டி, கடலின் அலைகள் வந்து தள்ளாநின்றுள்ள செம்பவளக்கொடிகளும், வெண்முத்துக்களும் என்றும் கொள்ளலாம். இது மற்ற ரத்னங்களுக்கும் உபலக்ஷணம். (அந்தி விளக்கும் அணி விளக்காம் திருவல்லிக்கேணியான்) செம்பவளங்களும், வெண்முத்துக்களும் கரு நீலம் முதலான மற்ற ரத்தினங்களும் மாலை நேரத்தை விளங்கவைக்கும் பல நிறமுடைய மங்களதீபங்களாயிருக்கும் திருவல்லிக்கேணியில் நித்ய வாஸம் செய்பவன். 'வந்துதைத்த வெண் திரைகள்' என்று தொடங்கியுள்ள விசேஷணத்திற்குக் கருத்து என்னவெனில்: யாத்ருச்சிகமாக எறியப்பட்ட பவளங்களும், முத்துக்களும், ரத்தினங்களும் கரையை அணிசெய்வதுபோலே ஸம்ஸாரத்திற்கு அணிவிளக்காயிருக்கும் சில புருஷரத்னங்களை நாமும் கிடைக்கப் பெறுவோமோ? என்னும் ஆசையாலேயே இவன் திருப்பாற்கடலில் நின்றும் திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளினன் என்று உணர்த்துகிறபடி.

இவனுடைய ஆசை நிறைவேறியபடியைப் பிற்பகுதியிலே பேசுகிறார். (ஒரு அல்லித் தாமரையாள் சென்று ஒன்றிய சீர் மார்பன்) ஒப்பற்ற அழகையுடைய இதழ்களையுடைய தாமரையிலே

http://acharya.org

15. திரிந்தது வெஞ்சமத்துத் தேர்கடவி அன்று
பிரிந்தது சீதையைமான் பின்போய் — புரிந்ததுவும்
கண்பள்ளி கொள்ள வழகியதே நாகத்தின்
தண்பள்ளி கொள்வான் றனக்கு.

வெம் சமத்து— (கண்ணனாயிருந்தபோது) கொடிய (பாரத) யுத்தத்திலே, தேர் கடவி— (பார்த்தஸாரதியாகித்) தேரை நடத்திக்கொண்டு, திரிந்தது- அலைந்ததும், அன்று- இராமனாகத் திருவவதரித்தபோது, மான் பின் போய்— மாரீசனாகிற மாயமானின் பின்னே சென்று, சீதையை பிரிந்தது — பிராட்டியைப் பிரிந்து துயருற்றதும், கண்— தரையிலே,பள்ளி கொள்ள-படுத்துக்கொள்ள, புரிந்ததுவும்- விரும்பியதும், (ஆகிய இச்செயல்கள் எல்லாம்), நாகத்தின் தண் பள்ளி கொள்வான் தனக்கு— திருவனந்தாழ்வானாகிற குளிர்ந்த படுக்கையில் பள்ளிகொண்டிருக்கும்பெருமானுக்கு, அழகியதே— தக்கவையோ?

பெரி அவ:-(திரிந்தது) திருவுலகளந்தருளினபடி ப்ரஸ்துதமாகையாலே அல்லாத அவதாரங்களிலும் ஆஶ்ரிதார்த்தமாக மிகப்பட்ட மிறுக்குகளை நினைத்து வெறுக்கிறார்.

அவ:—இவர்கள் இப்படி தங்கள் உடம்பைப் பேணிப் பேய்களாய்த்திரிய, இவர்களுக்காக க்ருஷ்ணனாவது ராமனாவதாய்க்கொண்டு அதிஸுகுமாரமான திருமேனியோடே அவன் பட்ட மிறுக்குகளை நினைத்து வெறுக்கிறார்.

அவ:—திரிவிக்கிரமனாகிக் காட்டையும், மேட்டையும், பூவிலும் மென்மைமிக்க தன் திருவடிகளாலே அளந்துபட்ட சிரமம் சென்ற பாசுரத்தில் நினைவுக்கு வந்தவுடன், இப்பாசுரத்தில் மற்ற அவதாரங்களில் அடியார்களுக்காகப் பட்ட பாடுகளை நினைத்து வெறுக்கிறார். அன்றிக்கே, பண்டிப் பெரும்பதியையாக்கிப் பழிபாவங் கொண்டு வாழும் பேய்களான இந்த ஸம்ஸாரிகளுக்காக அவன் ராமனாகவும் கண்ணனாகவும் அவதரித்து, மென்மைமிக்க திருமேனியோடு பட்டபாடுகளை நினைத்து வெறுக்கிறார் என்றுமாம்.

http://acharya.org

பார்த்துக் கிடக்கத் திருமார்பிலே ஏறினாள். "तयावलोकिता देवाः" (தயாவலோகிதா தே₃வா:) பின்னை ஸர்வேச்வரன் இவர்களுடைய அலமாப்பைப்பாராயென்று திருவுள்ளத்தாலே நினைத்தபடி தோற்றப் பின்னை அவளாலே பார்க்கப்பட்டவர்கள். "प्रदेहि सुभगे हारम्" (ப்ரதே₃ஹி ஸுப₄கே ஹாரம்) அவன் நினைவுஞ் சொல்லுமறிந்திறே சிலரைக் கடாக்ஷிப்பதும். சிலரைக் கொண்டு கொடுப்பதும். பெரியபிராட்டியார் தானே சென்றடையும் திருமார்பையுடையனாய். திருவல்லிக்கேணி யானானவன். (எந்தை) எனக்கு ஸ்வாமி. 16.

யுடைத்தான திருவல்லிக்கேணியிலே தங்கினவன் எனக்கு ஸ்வாமி. "ஒருவல்லித் தாமரையாள் சென்றொன்றிய சீர்மார்வனாய் வெண்டிரைகள் வந்துதைத்த செம்பவள வெண்முத்தமந்திவிளக்கு மணிவிளக்கான திருவல்லிக்கேணி யானெந்தை" என்றந்வயம்.

மல் அநாதரித்துத் திருமார்பில் ஏறினாள் என்றபடி. இவளால் அநாதரிக்கப்பட்டால் அவர்களுடைய செல்வங்கள் அனைத்தும் அழிந்துவிடுமே என்று சிந்தாகுலனான எம்பெருமான், 'இவர்களுடைய கஷ்டத்தைப் பாராய்' என்று முகக்குறிப்பாலே உணர்த்த, "தயாऽவலோகிதா தே₃வா:...பராம் நிர்வ்ருதிமாக₃தா:" [வி-பு 1-9-106] [அவளாலே கடாக்ஷிக்கப்பட்ட தேவர்கள் மேலான இன்பத்தை அடைந்தனர்.] என்று அதன் பின்பே இந்த தேவர்களைக் குழந்தைகளைத் தாய் கடாக்ஷிப்பதுபோலே, கடாக்ஷித்தாள் அகிலஜகந்மாதாவான அலர்மேல்மங்கை. அவன் நினைவறிந்தன்றோ இவள் எல்லாச் செயல்களையும் புரிவது.

"ப்ரதே₃ஹி ஸுப₄கே₃ ஹாரம் யஸ்ய துஷ்டாऽஸி பா₄மிநி"
[ரா-யு 131-80]

[மங்களமானவளே! எவனிடம் நீ உகப்புடையளோ, அவனுக்கு இந்த ஹாரத்தை அளிப்பாய்.] என்று அவன் நியமித்த பின்பு அவன் நினைவறிந்தன்றோ ஹாரத்தை அநுமனுக்குக் கொடுத்தாள். (சென்று ஒன்றிய சீர்மார்பன் திருவல்லிக்கேணியான் எந்தை) பெரியபிராட்டியார் தானே சென்று அடைந்த திருமார்பை

http://acharya.org

17\. சென்றநாள் செல்லாத செங்கண்மா லெங்கள்மால்
என்றநா ளெந்நாளும் நாளாகும்—என்றும்
இறவாத வெந்தை யிணையடிக்கே யாளாய்
மறவாது வாழ்த்துகவென் வாய்.

* செங்கண் மால் எங்கள் மால் என்ற நாள்—'செந்தாமரைக் கண்ணன் நம்மிடத்துப் பேரன்புடையனாயிருக்கிறான்' என்று சொல்லப்பெற்ற நாள் உண்டானால். சென்ற நாள்—கீழ்க்கழிந்த காலங்களும், செல்லாத (நாள்)—இனிமேல் வரப்போகிற நாள்களுமாகிற. எந்நாளும்—எல்லாக் காலங்களும், நாள் ஆகும்—நல்ல காலமேயாகும்; என்றும் இறவாத எந்தை—ஒருநாளும் அழிவில்லாதவனான எம்பெருமானுடைய. இணை அடிக்கே—இருதிருவடிகளுக்கே. ஆள் ஆய்-ஆட்பட்டு. மறவாது-மறவாமல். என் வாய் வாழ்த்துக-என்வாய் வாழ்த்த வேணும்.

அவ:— (சென்றநாள்) அவளோடே கூடியிருக்கையாலே பலத்துக்குத் தட்டில்லை. இனி என்னுடைய வாக்கானது அவனை விச்சேதமின்றிக்கே அநுபவிப்பதாக.

அவ:— இப்படிப்பட்ட ஸர்வேஶ்வரனை நம்பக்கல் வ்யாமுக்தனென்றறிவதொரு நாளுண்டானால், இதுக்கு முன்பும் பின்புமுள்ள காலமெல்லாம் ஸப்ரயோஜனமாய்த் தலைக்கட்டுங்கிடீரென்கிறார்.

உடையவனாய்த் திருவல்லிக்கேணியிலே நித்யவாஸம் செய்தவனே என் ஸ்வாமி. அவளுடைய புருஷகார பலத்தாலேயே அடியேன் அவன் தன்னாலேயே மேல்விழுந்து விஷயீகரிக்கப்பெற்றேன். அத்தாயானவள் தானே தேடிச்சென்று அவனை அடைந்து, அவனை நானிருக்குமிடம் தேடிவரச் செய்தாள்! என்று ஆச்சரியப்படுகிறார். 16.

17\. அவ:— இப்படிப்பட்ட அப்பிராட்டியோடு அவன் கூடியிருக்கையாலே எனக்குப் பலத்துக்குக் குறையில்லை. இப்படி அவன் நம்மிடம் ஈடுபட்டிருப்பவன் என்று அறிவதொரு நாள்

http://acharya.org

வ்யா:— (செங்கண்மா லெங்கண்மா லென்றநாள் சென்ற நாள் செல்லாத எந்நாளும் நாளாகும்) ஸர்வேஶ்வரன் என் பக்கலிலே வ்யாமோஹத்தைப் பண்ணினனென்று அறிந்த நாள். கழிந்தநாள். வரக்கடவ நாளான எவ்லாநாளும் நல் விடிவாம். இந்நாள் வரும்படி கழிந்தநாளாகையாலே போன நாளுமழகிது. மேல் விச்சேதமின்றிக்கே அநுபவிக்கப் பெறுகையாலே வரும் நாளும் அழகிது. (என்றுமித்யாதி) ஒரு

உரை:— 'புண்டரீகாக்ஷனை ஸர்வேஶ்வரன் அந்தக் கண்ணாலே குளிரநோக்கி நம்பக்கலிலே வ்யாமோஹத்தைப் பண்ணினன்' என்னுமறிவு பிறந்ததொரு நாளுண்டானால், இந்நாள் மருவுகைக்குடலாய்க்கொண்டு கழிந்தநாள்களும், இப்பேற்றை அநுபவித்திருக்கைக்குக்குறுப்பாய்க்கொண்டு மேல் வரக்கடவ நாள்களுமான எல்லா நாள்களும் அடிக் கழஞ்சு பெற்றுச்செல்லுகிற நல்ல நாளாய்த் தலைக்கட்டும்; உண்டானால், முன்பும் பினபுமுண்டான எல்லா நாட்களும் பய னுடையதாகும். இனி, என்னுடைய வாயானது பொழுது போக்குக்கு உறுப்பாக அவனை இடைவிடாமல் வாழ்த்தக்கடவது என்கிறார்.

வ்யா:— (செங்கண்மால் எங்கள் மால் என்ற நாள் சென்ற நாள் செல்லாத எந்நாளும் நாளாகும்) "செந்தாமரைக் கண்ண னை ஸர்வேஶ்வரன், அந்தக் கண்ணாலே குளிரக் கடாக்ஷித்து என்னோடு தொடர்புடையாரளவும் அன்பைச் செலுத்தினன்" என்னும் அறிவு பிறப்பதொரு நாள் உண்டானால், நல்வி பிறந்த இந்நாள் மாத்திரமன்றிக்கே, இந்நாள் வந்து சேருவதற்கு உறுப்பாகக் கழிந்த நாள்களும், இப்பெறும் பேற்றை அநுபவித்திருப்பதற்கு உறுப்பாய் வரவிருக்கும் நாள் களும் ஆகிய எல்லா நாள்களும் பயனுடைய நல்ல நாள்களாய் முடிகின்றன. கடந்த நாள்கள் இந்நாளிலே வந்து முடிகையாலே நன்னாளாகி விடுகின்றன. மேலே இடைவெளியில்லாமல் அனுப விப்பதற்கு உறுப்பாகையாலே வரவிருக்கும் நாள்களும் நன்னாளாகி விடுகின்றன என்று கருத்து. ஆக, எனக்குப் பேற்றுக்குக் குறையில்லை; என் நாள்கள் எல்லாம் வீணாகாமல் பயனுடைவை யாகிவிட்டன என்றாராயிற்று. இனி, போதுபோக்கும் வழியைக் காட்டுகிறார் பாசுரத்தின் பிற்பகுதியாலே. (என்றும் இறவாத எந்தை)

http://acharya.org

நாளுண்டாய் ஒரு நாளின்றிக்கேயொழியுமுறவின்றிக்கே நித்யனுன பிதாவினுடைய. வாக்கானது விச்சேதமின்றிக்கே வாழ்த்துக. 17.

18. வாய்மொழிந்து வாமனனாய் மாவலிபால் மூவடிமண்
நீயளந்து கொண்ட நெடுமாலே—தாவியநின்
எஞ்சா விணையடிக்கே யேழ்பிறப்பு மாளாகி
அஞ்சா திருக்க வருள்.

ஒரு நாளுண்டாய் ஒரு நாளில்லையாயிருக்கையன்றிக்கே. "भूतानां योऽव्ययः पिता" (பூ₄தாநாம் யோऽவ்யய: பிதா) என்கிறபடியே ஸர்வகாலத்திலும் அழியாத என் பிதாவானவனுடைய ஒன்றுக்கொன்றொப்பான திருவடிகளுக்கே அடிமையாய்க்கொண்டு என்னுடைய வாகிந்த்ரியமானது விஸ்ம்ருதி ப்ரஸங்கமின்றிக்கே ஏத்துவதாக. 17.

"க₃ங்க₃ாயா: ஸிகதா தா₄ரா யதா₂ வர்ஷதி வாஸவே।
ஶக்யா க₃ணயிதும் லோகே ந வ்யதீதா: பிதாமஹா:॥"
[விஷ்ணுஸ்ம்ருதி-20]

[இந்திரன் மழை பொழியும்போது கங்கையில் மணல்கள் எப்படி எண்ணமுடியாதவையோ. அப்படியே இவ்வுலகில் அழிந்துபோன பிரம்மாக்கள் எண்ணமுடியாதவர்கள்.] என்கிறபடியே கர்ம வசப்பட்டுப் பிறந்தும் செத்தும் நின்று இடரும் பிரமன் உருத்திரன் முதலான மற்ற தெய்வங்களைப் போல் ஒருநாள் இருந்து ஒருநாள் அழியும் உறவுடையவனாயிராமல், என்றும் அழிவில்லாதவனாய். "பூ₄தாநாம் யோऽவ்யய: பிதா" [விஷ்ணு ஸஹஸ்ரநாமாத்தியாயம்] [ஜீவராசிகளுக்கு அழிவற்ற தந்தையாயிருப்பவன்.] என்கிறபடியே எனக்குத் தந்தையாயிருப்பவனுடைய, (இணை அடிக்கே ஆளாய்) ஒன்றுக்கு மற்றொன்றே ஒப்பான திருவடிகளுக்கே அடிமைப் பட்டதாய்க்கொண்டு. (என் வாய் மறவாது வாழ்த்துக) என்னுடைய வாகிந்திரியமானது கணமும் மறவாமல் மங்களாஶாஸனம் செய்வதாகுக. இங்கு வாய் வாழ்த்துவதைச் சொன்னது மற்ற இரு கரணங்களான மனமும், காயமும் அவற்றுக்குரிய வகையில் கைங்கரியம் செய்வதற்கும் உபலக்ஷணம். ஆக, பேற்றில் குறையில்லாமையாலே, முக்கரணங்களாலும் அடிமை செய்வதொன்றே அதி₄காரிக்ருத்யம் என்றாயிற்று. 17.

வாமனன் ஆய்— வாமநரூபியாகி. மாவலி பால்— மஹாபலியினிடத்தில் (சென்று). வாய் மொழிந்து—(பிள்ளைத் தனமான சில) வாய்மொழிகளைச் சொல்லி. மூ அடி மண்— மூவடி நிலத்தை (யாசித்துப் பெற்று). அளந்து கொண்ட— அதை அளந்து கொண்ட. நெடு மாலே—ஸர்வேஶ்வரனே! எஞ்சா—(அழகில்) சுருங்குதலில்லாததாய். தாவிய—உளந்ததான. நின் இணை அடிக்கே—உனது இரு பாதங்களுக்கே. ஏழ் பிறப்பும்—எல்லாப் பிறவிகளிலும். ஆள் ஆகி—நான் அடிமைப்பட்டவனாய். அஞ்சாது இருக்க— பயங்கெட்டிருக்கும்படி. நீ அருள்—நீ கிருபைபுரிய வேணும்.

அவ:—(வாய்மொழிந்து) உன்னுடைமையை யொன்றுஞ் சோரவிடாத நீயென்னைக் கைக்கொண்டருளவேணுமென்கிறார்.

வ்யா:— (வாமனனாய் வாய்மொழிந்து) ஸ்ரீவாமனனாய். "மாவலி! மூவடிமண் தா" என்றருளிச்செய்து. (மாவலியித்யாதி) அவன் தரப் பின்னை அளந்து கொண்ட ஸர்வேஶ்வரனே!

அவ:— காலத்ரயத்திலுமழிவுவாராமலநுபவிக்கப்பெற்ற எனக்குத் திருவடிகளில் நித்யகைங்கர்யத்தையும் தந்து. தத்விரோதியான ஸம்ஸாரபயத்தையும் மாற்றியருள வேணுமென்கிறார்.

உரை:— ஸர்வாதிகனான நீ வாமனனாகி. ஆஸுர ப்ரக்ருதியான அவனிரங்கும்படி. "கொள்வன் நான்" என்றாற்போலே சில முக்தஜல்பிதங்களைப்பண்ணி மஹாபலி பக்கலிலே சென்று மூன்றடிமண்ணை அபேக்ஷித்து. அவன் தரப் பின்னை அளந்துகொண்ட ஸர்வேஶ்வர...

---

18. அவ:—இப்படி அடிமை செய்வதற்கும் அவனுடைய இசைவு வேண்டுகையாலே, "உன் உடைமையை ஒரு சிறிதும் சோரவிடாத நீ, திருவடிகளில் நித்யகைங்கர்யத்தையும் தந்து. அதற்கு விரோதியான ஸம்ஸார பயத்தையும் மாற்றியருளவேணும்" என்று பிரார்த்திக்கிறார்.

http://acharya.org

(தாவியவித்யாதி) திருவுலகளந்தருளினவனுடைய கல்யாண மான திருவடிகளிலே நிர்ப்பயனாய் காலமெல்லாமடிமை செய்திருக்கும்படி அருள். ஔஷதத்தை ஸேவித்தானொருவன்

வகுத்தசேஷியான உன்னுடைய அநாயாஸேந ஜகத்தை அளந்துகொண்டதாய், அஸங்கோசமான அழகையுடைத் தாய், பரஸ்பர ஸத்ருசமான திருவடிகளுக்கே "ஒழிவில் காலமெல்லாம்" என்கிறபடியே காலதத்வமுள்ளதனையும்

வ்யா:—(வாமனனாய் வாய்மொழிந்து) நெடியோனை நீ உன் இயல்புக்குமாறாகக் குறட்பிரமசாரியாகி, அஸுரஸ்வபாவமுள்ள அவனும் இரங்கும்படி "கொள்வன் நான் மாவலி! மூவடிதா" [திருவாய் 6-8-9] என்றாற்போலே சில சிறுபிள்ளைப்பேச்சுக்களைப் பேசி. (மாவலிபால் மூவடிமண் நீ அளந்துகொண்ட நெடுமாலே!) மஹாபலியிடம் சென்று மூன்றடி மண்ணை வேண்டி, அவன் அதைத் தந்தவுடன் சிறிய வடிவைப் பெரியவடிவாக்கி எல்லாவுலகை யும் "அளந்துகொண்ட ஸர்வேஸ்வரனே! (நெடுமாலே) எல்லார் தலையிலும் காலை வைக்கையாலே நீயே ஸர்வேஸ்வரன் என்று கருத்து. மாவலியையும் அழிக்காமல் இந்திரன் காரியத்தை ஸாதித்துத் தருவதற்காகக்கொடுப்பதையல்லால் கொள்வதறியாத உன் இயல்வை யும் மாற்றிக்கொண்டு யாசகனாகி நின்றது அடியார்களிடத்திலுள்ள பேரன்பாலேயன்றோ என்றும் கொள்ளலாம், (தாவிய நின் எஞ்சா இணையடிக்கே) அநாயாஸமாக உலகை அளந்துகொண்டதாய், வகுத்த ஸ்வாமியான உன்னுடையதாய், சுருக்கமற்ற அழகையுடைய தாய், ஒன்றையொன்று ஒத்ததான திருவடியிணைக்கே. ஏகாரத் தாலே அநந்யார்ஹஶேஷத்வத்தைக் காட்டுகிறது. எல்லார் தலையிலும் காலைவைத்தமையாலும், வகுத்த சேஷியினுடைய திருவடிகளாகையாலும், அழகில் ஒப்பற்றவையாகையாலும் இவை தவிர வேறொன்றைப்பற்ற வழியில்லை எனக்காட்டுகிறார். கைக் குழந்தைக்குத் தாய் முலைபோலே எம்பெருமானுடைய மற்ற அவயவங்களைக்காட்டிலும் சேதனனுக்கு இவையே உத்தேஸ்ய மாகின்றன எனவும் உணர்த்துகிறார். (ஏழ்பிறப்பும் ஆளாய்) "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்" [திருவாய்3-3-1] என்கிறபடியே காலமுள்ள வரையில் அடிமை செய்யவேணும் என்று பிரார்த்திக்கிறார்.

http://acharya.org

தனக்கு பயமின்றிக்கே ஸர்ப்பத்தின் வாயிலே கைகொடா நின்றானிறே. அவனுடையவருள் பெற்றவன்றே ஸம்ஸாரத்திலேயிருந்து பயங்கெடவிருக்கத்தட்டில்லை யிறே. 18.

அடிமைசெய்து, இவ்வடிமைக்கு அழிவுவரில் செய்வதென்னென்று நானஞ்சாதே நிர்ப்ப₄ரனாயிருக்கும்படி பண்ணியருளவேணும். நெடுமால் — ஆச்ரிதர்பக்கல் வ்யாமுக்₃த₃னென்னவுமாம். 18.

(ஏழ்பிறப்பும் ஆளாய்) "காமயே வைஷ்ணவத்வம் து ஸர்வஜந்மஸு கேவலம்" [ஜிதந்தே 1-13] [எல்லாப்பிறப்புக்களிலும் வைஷ்ணவத்வத்தை மாத்திரமே நான் ஆசைப்படுகிறேன்.] "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்-" [திருப்பாவை 29] என்று கூறியபடியே உன் இணையடிக்கே ஆட்படும் சிறப்பு வாய்க்குமாகில், எத்தனை பிறப்புகள் எடுத்தாலும் எடுக்கத் துணிவுடையேனாயிருக்கிறேன் என்று கருத்து. (அஞ்சாதிருக்க அருள்) "இவ்வடிமைக்கு அழிவு ஏற்பட்டால் என் செய்வேன்?" என்று அஞ்சாமல் நான் கவலையற்றவனாயிருக்கும்படி செய்வதொன்றே நீ செய்யவேண்டியது. இவ்வருள் புரிந்தாயாகில், எத்தனை பிறவிகள் இவ்விருள் தருமாஞாலத்தில் நான் எடுத்தாலும் எனக்கு அது மோக்ஷதுல்யமாகும் என்று கருத்து.

"தூங்கார் பிறவிக்கள் இன்னம் புகப் பெய்து
வாங்காய் என்று சிந்தித்து நான் அதற்கஞ்சி
பாம்போடு ஒரு கூறையிலே பயின்றாற்போல்
தாங்காதுள்ளம் தள்ளும் என் தாமரைக்கண்ணா"
[பெரியதிரு 11-8-3]

என்று ஸம்ஸாரத்தில் பிறவியெடுப்பதைப் பாம்போடு கூடி வாழ்வது போலே பயங்கரமானது என்று அறிவுடையார் அருளிச்செய்திருக்க, பிறவிகளை வேண்டுவது பொருந்துமோ? எனில்: பாம்பின் விஷத்தை முறிக்கும் எட்டிக்காய் முதலான மூலிகைகளைத் தின்று உடலை வலுப்படுத்திக்கொண்டவன் பயமில்லாமல் பாம்பின் வாயிலே கையிடுவதைக் காண்கிறோம். அவ்வண்ணமே ஸம்ஸாரமோக்ஷஸ்தி₂திப்ரவ்ருத்தி₄ஹேதுவான அவனுடைய அருளாகிற ஔஷதம் கிட்டுமாகில் ஸம்ஸாரகால ஸர்ப்பத்தின் வாயிலே

http://acharya.org

19. அருளா தொழியுமே யாலிலேமேல் அன்று
தெருளாத பிள்ளையாய்ச் சேர்ந்தான்—இருளாத
சிந்தையராய்ச் சேவடிக்கே செம்மலர் தூய்க் கைதொழுது
முந்தையராய் நிற்பார்க்கு முன்.

இருளாத சிந்தையர் ஆய்—*அஞ்ஞானவிருள் சேராத நெஞ்சையுடையராய்க்கொண்டு*, சே அடிக்கே—*சிவந்த திருவடிகளுக்கே*. செம் மலர் தூய்—*செவ்விப் புஷ்பங்களை ஸமர்ப்பித்து*. கை தொழுது—*அஞ்ஜலிபண்ணி*. முந்தையர் ஆய் நிற்பார்க்கு—*(பகவத் விஷயத்தில்) முற்பட்டு நிற்கும் பக்தர்களுக்கு*— அன்று—*முன்பொருகாலத்தில்*. தெருளாத பிள்ளை ஆய்—*அறியாத சிறு குழந்தையாய்*. ஆல் இலை மேல் சேர்ந்தான்—*ஆலந்தளிரில் கண்வளர்ந்த பெருமான்*, முன் அருளாது ஒழியுமே-*முற்பட்டுக் கிருபைபண்ணமற்போவனோ?*

அவ:— (அருளாது) அருளென்னுங்காட்டில் அருளுமோ வென்று திருவுள்ளம் விசாரிக்க நமக்கருளாதொழியுமோ என்கிறார்.

அவ:— *"அஞ்சா திருக்கவருள்" என்று நாம் அவனை இப்படி நிர்பந்தித்தால். அவன் நம்முடைய அயோக்யதையைப் பார்த்து உபேக்ஷித்தல், அன்றிக்கே நம் கார்யம் செய்கைக்கு சக்தனன்றிக்கேயிருத்தல் செய்யிலோவென்று திருவுள்ளம் பிற்காலிக்க. அவன் நம் கார்யம் செய்கைக்கு சக்தனே. நம்மயோக்யதையைப் பார்த்து உபேக்ஷிப்பதும் செய்யான் காணென்கிறார்.*

புகுந்து புறப்படத் தடையில்லையன்றோ. அவனுடைய அருள் கிட்டுமோ, கிட்டாதோ என்று அஞ்சினவன்று பிறவிகள் பயங்கரமாகவுமிருக்கும்; அவனுடைய அருள் கிட்டுவது உறுதியென்று தெளிவுபிறந்து அச்சம் நீங்கினவன்று பிறவிகளே உத்₃தே₃ஶ்யமாகவுமிருக்கும் என்று அறியத்தக்கது. 18.

19. அவ:— "அஞ்சா திருக்க அருள்" என்று அவனை நிர்ப்பந்தித்தவுடன் அவன் அருள்செய்து விடுவானோ? நம்முடைய

(ஆலிலையித்யாதி) ஆலிலையிலே சேர்ந்து வ்யாமுக்$_3$த$_4$னை பிள்ளை நமக்கு அருளாதொழியுமோ? (இருளாதவித்யர்தி)

உரை— பகவத்விஷயத்தில் அஜ்ஞானைகதே$_3$ஹமும் ஊடு கலசாத ஹ்ருதயத்தையுடையராய்க்கொண்டு சிவந்த திருவடிகளிலே அழகிய செவ்விப்பூக்களை அடைவுகெடப் பணிமாறி, கைகளாலே அஞ்ஜலி ப$_3$ந்த$_4$த்தைப்பண்ணி

தகுதியின்மையைப்பார்த்து நம்மை அவன் அலட்சியப்படுத்தவும் கூடும்; வலிய பாபம்செய்த நம் காரியம் செய்ய சக்தியற்றவனு யிருக்கவும் கூடும்" என்று திருவுள்ளம் தயங்கத்தொடங்க, "அவன் நம் காரியம் செய்ய சக்தியையும் உடையவனே; நம் தகுதி யின்மையைப் பார்த்துக் கைவிடவும் மாட்டான்" என்று நெஞ்சைப் பார்த்து ஆறுதல் கூறுகிருர்.

வ்யா:— (அருளாதொழியுமே) நமக்கு அருள்புரியாமலிருப் பானே? நமது வலியபாபங்கள் பெருந்தடையிருக்கும்போது அவன் நமக்கு அருள்புரிய வல்லவனே? என்ன, (ஆலிலைமேல் அன்று தெருளாத பிள்ளையாய்ச் சேர்ந்தான்) ப்ரளயகாலத்திலே உலகம் அழியப்புக்கவன்று, அன்றலர்ந்ததொரு ஆலந்தளிரிலே அறி வுக்கு இடமில்லாததொரு பச்சிளம்பிள்ளையின் வடிவைக்கொண்ட வனுய்ப் பள்ளிகொண்டு உலகை அழியாதபடி வயிற்றிலேவைத்து ரக்ஷித்த அக$_4$டிதக$_4$டநாஸமர்த்த$_2$னன்றே இவன். எத்தனை வலிய பாபங்களையும் அழித்து நமக்கு அருள்புரியத்தடையுண்டோ? என்று கருத்து. (ஆலிலைமேல்...)

"பாலன் தனதுருவாய் ஏழுலகுண்டு. ஆலிலையின்
மேலன்று நீ வளர்ந்த மெய்யென்பர்—ஆலன்று
வேலைநீர் உள்ளதோ? விண்ணதோ? மண்ணதோ?
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு" [முதல்திருவ69]

என்கிறபடியே எல்லாவுலகையும் சிறிய வயிற்றிலே வை ஓராலிலையில் பள்ளிகொள்வது என்ன ஸாஹஸம்? எ (தெருளாதபிள்ளை) மேலெழப்பார்த்தால் அறிவே ஏற்படாத பச்சிளம்பிள்ளை செய்யும் காரியமாகத்தானிருக்கிறது இது. ஆராய்ந் தால் அக$_4$டிதக$_4$டநாஸாமர்த்$_2$யத்தை விளக்கும் அருஞ்செய லாகவன்றே இச்செயல் இருக்கிறது. இப்படிச் சேராதனவற்றை

http://acharya.org

இருளாதசிந்தைகளையுடையராய்த் திருவடிகளிலே புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு கைகளாலே தொழுது முற்பாடராயிருக்கிறவர்களுக்கு.(முன்னருளாதொழியுமோ) முன்னே யருளானோ? 19.

ஆஸ்ரயித்து முற்பாடராய் இருக்கிற அதிகாரிகளுக்கு முன்னே ஜகத்து ப்ரளயத்திலே அழியப்புக்கவன்று பவனையிருப்பதோராலந்தளிரின்மேலே அறிவு கலசாத முக்தசிசுவாய்க்கொண்டு பள்ளிகொண்டருளின அகடிதகடநா ஸமர்த்தன் அருளாதொழியுமோ? யோக்யருக்கு முன்னே அயோக்யரான நமக்குத் தன் அகடிதகடநாஸாமர்த்யத்தாலேயருளும்; நீ பயப்படவேண்டாவென்று திருவுள்ளத்தை "மா ஶுச:" (மா ஶுச:) என்று தேற்றியருளுகிறார். 19.

யும் சேர்த்துவைக்கும் திறனுடையவன் அழிக்கவொண்ணாத நமது பாபத்தையும் அழித்து அருள்புரியவல்லவனே என்றாயிற்று. நமக்குப் பல தகுதியின்மைகளிருக்கும்போது நமமை அலட்சியப்படுத்தி விடுவானோ? எனில், உள்ள சில தகுதிகளைக்கொண்டு நம்மைக் கைக்கொள்வானேயொழிய, இல்லாத தகுதிகளை நினைத்துக் கைவிடமாட்டான் என்கிறார் பிற்பகுதியாலே,— (இருளாத சிந்தையராய்) பகவத்விஷயத்தில் ஒரு சிறிதும் அறியாமையற்ற நெஞ்சுடைமை நமக்கு உள்ளது: இதுவே போதும் நமக்கு அவன் அருள்புரிவதற்கு. அறிவுடைமையிருந்தாலும், நம் பொழுதுபோக்கு இதர விஷயங்களிலேயானால், அதையிட்டு அவன் உபேக்ஷிக்கக்கூடுமே? எனில், நமது பொழுதுபோக்கும் நம்மை விஷயத்திலேயுள்ளதாகையாலே கவலையில்லை என்கிறார்,— (சேவடிக்கே செம்மலர்தூய்க் கைதொழுது முந்தையராய் நிற்பார்க்கு) அவனுடைய சிவந்த திருவடிகளிலே அழகிய செவ்விப் பூக்களை அன்பினலே முறைகெடத்தூவி, கைகளாலே அஞ்ஜலியைச் செய்து ஆஶ்ரயித்து இதர விஷயங்களில் நெஞ்சு செலுத்தாமல் பகவத் விஷயத்திலேயே முற்பட்டு நிற்பவர்களாய் இருக்கும் நாம்: அத்தகைய நமக்கு அருளாதொழிவனோ? என்று கருத்து. இத் தகுதிக்கும் மேற்பட்ட தகுதியுடைய கர்மஜ்ஞாநபக்தியோகநிஷ்டர்களுக்கே முதலில் அருளுவானேயொழிய, அல்பயோக்யதை படைத்த நமக்கு முதலில் அருளுவானோ? எனில் (முன் அருளா

19 முன்னுலக முண்டுமிழ்ந்தாய்க்கு அவ்வுலக மீரடியால்
பின்னளந்து கோடல் பெரிதொன்றே—என்னே
திருமாலே செங்க ணெடியானே எங்கள்
பெருமானே நீயிதனைப் பேசு.

முன்—முன்பொருகாலத்தில். உலகம்—உலகங்களையெல்லாம். உண்டு–திருவயிற்றிலே வைத்திருந்து. உ[illegible]ய்க்கு–பிறகு வெளிப்படுத்தின உனக்கு. அவ்[illegible]–அந்த வுலகங்களை. பின்—பின்பொருகாலத்தில். ஈர் அடியால்—இரண்டு திருவடிகளால். அளந்து கோடல்—அளந்து கொள்வதானது. பெரிது ஒன்றே—பெரியவொரு காரியமாகுமோ? [இல்லை.]. திரு மாலே—திருமகள்கேள்வனே! செம் கண் நெடியானே—சிவந்த திருக்கண்களையுடைய பெரியவனே! எங்கள் பெருமானே—எமக்கு ஸ்வாமியானவனே! நீ இதனை பேசு—நீ இதை (எனக்குத் தெரிய)ச் சொல்லவேணும்; என்னே—இஃது என்ன ஆச்சரியம்!

அவ:— அவன் தன்னையபேக்ஷித்தார்க்குந் தன்னையழிய மாறியும் கார்யம் செய்யுமவனன்றோவென்கிருர்.

தொழியுமே) "அங்கங்களில் நிறைவுபெற்ற குழந்தைகளிடத்திற் காட்டிலும், அங்கங்களில் குறைவுடைய குழந்தையிடத்திலே பரிவு மிக்கு முதலில் அருளும் தாயைப்போலே ஜ்ஞானசக்திகள் மிக்க அவர்களுக்கு முன்னே, அவற்ருல் குறைந்த நமக்குத் தன் அகடிதகடநாஸாமர்த்யத்தாலே அருளாதொழிவனோ? நீ பயப்படவேண்டா" என்று திருவுள்ளத்தைத் தேற்றுகிருர். அவன் "பயப்படாதே" [கீதை 18-66] என்று அர்ஜுனனைத் தேற்றியது போலே இவர் தம் நெஞ்சைத் தேற்றுகிருர். (முந்தையராய் நிற்பார்க்கு முன் அருளாதொழியுமே) அவன் விஷயத்தில் நாம் முற்பட்டு நின்ருல் நம்மை அருள அவன் முற்பட்டு நிற்க மாட்டானோ என்றுமாம். 19.

20. அவ:— ப்ரயோஜநாந்தரபரராய்த் தன்னை வேண்டியவர்களுக்கும் தன் இயல்வை மாற்றிக்கொண்டும் காரியம் செய்யும் நீ அநந்யப்ரயோஜனரான நம் காரியம் செய்யாயோ? என்கிருர்.

http://acharya.org

வ்யா:— (முன்னுலகமித்யாதி) உன்கையிலே பருத்தி பட்ட பன்னிரண்டும் பட்ட இந்த லோகந்தன்னையே பெருது பெற்ருயாக அளந்துகொள்கை. இது பெரியதொன்றே?

உரை:— முன்பொருகாலத்திலே ஜகத்தையெல்லாம் திருவுத₃ரத்திலே எடுத்துவைத்துப் புறப்படவிடுவதாய்ச் செய்த உனக்கு இப்படி இஷ்ட ஸர்வசேஷ்டாவிஷயமான அந்த லோகத்தைப் பின்பொருநாளிலே இரண்டு திருவடிகளாலே அளந்து கொள்கையான இது பெரியதொரு செயலாய்ச் செய்தாயோ? ஸ்ரிய:பதியாய் அவளோட்டைச்

'வ்யா:—(முன் உலகம் உண்டு உமிழ்ந்தாய்க்கு) ஆதியில் ப்ரளய காலத்தில் உலகனைத்தையும் நோவுபடாதபடி திருவயிற்றில் வைத்துநோக்கி, அதற்குப்பின் ஸ்ருஷ்டிகாலத்தில் சேதனவர்க்கம் உய்வதற்காக மறுபடியும் அவ்வுலகத்தை வெளிப்படுத்தின உனக்கு. இங்கு உண்டு உமிழ்ந்த இருசெயல்களைச் சொன்னது " படைத்திடந்து உண்டு உமிழ்ந்து தேர்ந்து உலகளிக்கும் "[திருவாசிரியம்6] " பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்து அன்றுடனே விழுங்கிக் கரந்து உமிழ்ந்து இடந்தது " [திருவாய் 4-10-3] என்று அ... செய்யப்பட்ட பல செயல்களையும் காட்டுகிறது. (அவ்வுலகம் ஈரடியால் பின் அளந்து கோடல் பெரிதொன்றே) பருத்தி ஆடையாம்போது (1) கொட்டையெடுத்தல் (2) அடித்தல் (3) சுருட்டல் (4) நூலாக்குதல் (5) பரவோட்டுதல் (6) நெய்தல் (7) மடித்தல் (8) விற்றல் (9) தோய்த்தல் (10) உலர்த்தல் (11) உடுத்தல் (12) கிழித்தல் என்னும் பன்னிரண்டு பாடுகள் படுவது போலே, பலபல பாடுகளையும் உன் கையிலே நிரந்தரமாகப் பட்டுவரும் இவ்வுலகையே, பின்பொருகாலத்தில் உன் இயல்வுக்குத் தகாதபடி யாசகனுகிச்சென்று மாவலிடம் மூவடிமண் வேண்டி, அவன் அதை அளித்தவுடன் பெருநதது பெற்றதுபோலே பூரிப்படைந்து வளர்ந்து இரண்டு அடியால் அளந்துகொண்டது பெரியதொரு காரியமோ? (என்னே!) உன் பெருமைக்குத் தகாததொரு சிறுசெயலாகவன்றே இது எங்களுக்குத் தோற்றுகிறது. இதை ஒரு பெரிய செயலாக எல்லோரும் பேசுகிருர்களே! என்று ஆச்சரியப்படுகிருர். எத்தகைய பெரியவன் இச்செயலைச் செய்தான் என்பதைப் பேசுகிருர் மேலே,— (திருமாலே)

http://acharya.org

(என்னே திருமாலே யித்யாதி) உன்னுடைய மேன்மைக்கும் இத்தாழ்ச்சிக்குமெங்கே சேர்த்தியுண்டு? நீ இத்தைச்சொல்ல வேணுமென்று எத்திறமென்கிருர். 20.

21. பேசுவார் எவ்வளவு பேசுவர் அவ்வளவே
வாசமலர்த் துழாய் மாலையான்—தேசுடைய
சக்கரத்தான் சங்கினன் சார்ங்கத்தான் பொங்கரவ
வக்கரனைக் கொன்ருன் வடிவு.

சேர்த்தியாலே சிவந்த திருக்கண்களையுடையனாய். ஒருவராலும் அளவிடவொண்ணாத பெருமையையுடையனாய். எங்களுக்கு ஸ்வாமியானவனே! நீ இத்தை அருளிச்செய்ய வேணும். இந்த்₃ரன் பல் காட்டினது பொறுக்கமாட்டாமல் உன் வ்யாமோஹத்தாலே செய்த செயலித்தனையிறே. என்னே—இதென்ன ஆச்சர்யமென்று வித்₃த்₄ராகிருர். 20.

உலகிற்காணும் செல்வங்களுக்கெல்லாம் அதிதேவதையான திருவுக்கும் திருவாயிருப்பனான நீயன்ரே யாசகனாய்ச் சென்ருய்! (செங்கண்) அவளுக்கும் நாயகனாயிருக்கையால் உபயவிபூதிச் செல்வத்தையும் உடையவனாயிருப்பவன் என்பதைக் கோட்சொல்லித் தரும் சிவந்த திருக்கண்களையுடைய நீயன்ரே ஒரு க்ஷுத்ரனிடம் உன் விபூ₄தியையே யாசித்துப் பெற்ருய்! (நெடியானே!) ஒருவராலும் அளவிடவொண்ணாத பெருமையையுடைய நீயன்ரே அனைத்திலும் தாழ்ந்த யாசகவேஷத்தை மேற்கொண்டாய்! (எங்கள் பெருமானே!) எங்களைப்போன்ற அநந்யப்ரயோஜனர்களுக்கு ஸ்வாமியான நீயன்ரே ப்ரயோஜநாந்தரபரனான இந்திரன் காரியம் செய்வதற்காக உன்னை இப்படித் தாழ்த்திக்கொண்டாயே! (நீ இதனைப் பேசு) இப்படி அனைத்திலும் பெரியவனான நீயே இதை அருளிச்செய்யவேணும். 'எத்திறம்!' [திருவாய் 1-3-1] என்ற நம்மாழ்வாரைப்போலே இந்நீர்மையிலே ஈடுபடுகிருர். ப்ரயோஜநாந்தரபரனான இந்திரன் 'குடியிருப்பைத் தரவேணும்' என்று பல்லைக்காட்டினதற்கு இரங்கி, உன் ஆஶ்ரிதபக்ஷபாதத்தாலே இச்செயலைச் செய்த நீ அநந்யப்ரயோஜனரான எங்களுடைய காரியத்தை அவசியம் தலைக்கட்டித்தருவாய் என்று கருத்து. 20.

http://acharya.org

வாசம் மலர் துழாய் மாலையான்—மணம்மிக்க பூக்களோடு கூடின திருத்துழாய் மாலையை அணிந்தவனும். **தேசு உடைய சக்கரத்தான்**—ஒளியையுடைய திருவாழியை தரித்தவனும். **சங்கினன்**—ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஏந்தியவனும். **சார்ங்கத்தான்**—சார்ங்கவில்லையுடையவனும். **பொங்கு அரவம் வக்கரனை கொன்றான்**—மிக்க ஆரவாரமுடையனாய் வந்த தந்த வக்ரனைக் கொன்றொழித்தவனுமான எம்பெருமானுடைய, **வடிவு**-இயல்வுகள் (எப்படிப்பட்டவையென்னில்) **பேசுவார் எவ்வளவு பேசுவர் அவ்வளவே**—பேசுகின்ற அவரவர்கள் எவ்வெவ்வளவு பேசுகின்றார்களோ அவ்வவ்வளவேயாம்.

அவ:— (பேசுவார்) கீழ் திருவுலகளந்தருளினவிடம் ப்ரஸ்துதமாகையாலே அப்படி வரையாதே பரிமாறும் க்ருஷ்ணாவதாரத்தைச் சொல்லுகிறார்.

வ்யா:— (பேசுவாரித்யாதி) பேசுமவர்களுக்கு யாதோரளவுண்டு அவ்வளவு பேசிப்போமத்தனை. விஷயத்தைப்

அவ:— அவனை ஒருவராலும் அளவிட்டுப் பேசவொண்ணாது கிடீரென்கிறார்.

உரை:— பரிமளம் அலையெறியாநின்றுள்ள பூத்தாரையுடைத்தாய். ஐச்வர்யஸூசகமான திருத்துழாய்மாலையாலே

---

21. அவ:— கீழே வஸிஷ்டசண்டாள விபாகமற எல்லார் தலையையும் திருவடிகளாலே தடவிக்கொடுத்த திரிவிக்கிரமனைப் பற்றிப் பேசுகையாலே, அவனைப்போலே வாசிபாராமல் பெண்ணுக்கும் பேதைக்கும் கட்டவும் அடிக்கவுமாம்படி தன்னை அளித்த கண்ணனைப் பேசத்தொடங்கி, 'அவனை ஒருவராலும் அளவிட்டுப் பேசமுடியாது கிடீர்' என்கிறார்.

வ்யா:—(பேசுவார்) அவனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளை இதற்குமேல் பேசவொண்ணாது' என்னும்படி பரிபூர்ணமாகப் பேசவல்ல வால்மீகி, வியாஸர், பொய்கையார், பூதத்தார்

பரிச்சே₂தி₃த்துப் பேசப்போகாது. (வாசமித்யாதி) பரிச் சேதிக்கப்போகாமைக்கு இவை தனித்தனியே ஹேதுக்கள்.

அலங்க்ருதனுய், நிரவதி₄கதேஜஸ்ஸையுடைத்தான திருவாழி பாஞ்சஜந்யம் ஸ்ரீஸார்ங்கம் இவற்றையுடையனுய். பெரிய கிளர்த்தியோடே எங்கேயெங்கேயென்று பெரிய ஆர வாரத்தைப் பண்ணிக்கொண்டுவந்த து₃ர்தவக்ராஸுரனே

போல்வார்; 'இன் கவிபாடும் பரமகவிகள்' என்றும், 'பாலேய் தமிழர்' என்றும் போற்றப்படுகிறவர்கள். (எவ்வளவு பேசுவர்) தங்கள் ஜ்ஞானஶக்திகளைக் கொண்டு எவ்வளவு பேசவல்லவர்களா யிருக்கிறுர்களோ; (அவ்வளவே) அவ்வளவு பட்டவனுகத் தன் ஸ்வரூப ஸ்வபாவங்களை அமைத்துக்கொள்ளுகிறுன் ஸர்வேஶ்வரன்; இப்படி அவன் தன்னை அமைத்துக் கொள்வதாலே அவர்களும் அவனைப் பேசியவர்களாகக் கொண்டாடப் படுகிறுர்களேயல்லாமல், அவர்கள் அவனை உள்ளபடி பேசிமுடித்துவிட்டார்கள் என்றே, அவர்களுடைய பேச்சுக்குள் அவன் பெருமை அடங்கிவிட்டதென்றே பொருளல்ல. இனி, பாசுரத்தின் எஞ்சிய பகுதியாலே, அவனுடைய பெருமைகள் அளவிடவொண்ணுதவை என்பதற்கு ஐந்து ஹேதுக் களைக் காட்டுகிறுர். (வாசமலர்த்துழாய் மாலையான்) பரிமளம் அலையெறியா நிற்கும் மலர்களையுடையதாய், 'இவனே ஸர்வேஶ்வரன்' என்பதைக் காட்டித்தருவதான துழாய்மாலையாலே அலங்கரிக்கப் பெற்றவன்.

"நாறு இணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறு பெறு துறக்கம்" [பரிபாடல்]

என்று சங்கத்தமிழர்சொல்லியபடியே, முளைக்கும்போதே மணத்துடன் முளைக்கும் இதன் நறுமணமே இதைத் தனிமாலையாகக்கொண்டவன் மோக்ஷமளிக்கவல்ல பரம்பொருள் என்று காட்டித்தருமன்றே.

"வாராயின முலையாள் இவள் வானோர் தலைமகனும்
சீராயின தெய்வநன்னேயிது. தெய்வத்தண்ணந்துழாய்த்
தாராயினும், தழையாயினும் தண் கொம்பதாயினும் கீழ்
வேராயினும், நின்ற மண்ணுயினும் கொண்டு வீசுமினே"
[திருவிருத்தம் 54]

http://acharya.org

(பொங்கரவ வித்யாதி)விஸ்த்$_3$ருமமான சப்தத்தையுடையனுன தந்தவக்த்ரனைக் கொன்றவனுடைய வடிவு பேசுவாரெவ்வளவு பேசுவர்; அவ்வளவே. 21.

முடித்துப் பொகட்டவனுடைய ப்ரகாரம் மறுபாடுருவப் பேசுகைக்கு ஶக்தராயிருக்குமவர்கள் தங்கள் ஜ்ஞான சக்திகளைக்கொண்டெவ்வளவு பேசவல்லவர்கள், அவ்வளவே யாயிருக்குமல்லது உள்ளபடி கண்டு பேசவொண்ணு தென்கை. 21.

என்று ஆழ்வார் அருளியபடியே தாரோடு, தழையோடு, தண் கொம்போடு, கீழ் வேரோடு, நின்ற மண்ணேடு வாசியற நறுமணம் வீசும் சிறப்புடையதாய் தண்மை மிக்கதாய், தெய்வத் தன்மையுடையதாய், ஸகல வியாதிகளையும் போக்கடிப்பதாயிருப்ப தன்றோ வாசமலர்த்துழாய். வேறு எந்தப் புஷ்பமும் இப்பெருமைகளை உடையதல்லாமையாலே, இதைத் தனிமாலையாய் உடையவனே பரம்பொருள் என்பதை எளிதில் நிர்ணயிக்கலாம் என்று கருத்து. (தேசுடைய சக்கரத்தான்) கோடி ஸூர்யப்ரகாஶமான சக்கரத்தாழ்வானை தரிக்கவல்லவனுகையாலும் இவனே எவராலும் பேசவொண்ணுத பரம்பொருள் என்பது விளங்கும் என்றபடி. (சங்கினன்) "ஸ கோ$_4$ஷோ தா$_4$ர்த்தராஷ்ட்ராணும் ஹ்ருத$_3$யானி வ்யதா$_3$ரயத்" [கீதை 1-19] [அந்தப் பாஞ்சஜந்ய முழக்கம் திருதராஷ்டிர புத்திரர்களின் நெஞ்சங்களைப் பிளந்தது.] "படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியம்" [திருப்பல்.2] "பெருமுழக்கால் அடங்காரை எரியழலம்புகவூதி" [திருவாய் 4-4-8] என்கிறபடியே போரிலே எதிரிகளின் நெஞ்சங்களைப் பிளந்து எரிக்கவல்ல முழக்கத்தையுடைய வலம்புரிச்சங்கத்தை ஏந்தியமையாலும் இவனே எவராலும் பேசிமுடிக்கவொண்ணுத பரம்பொருளாகிறுன் என்று கருத்து. (சார்ங்கத்தான்) "சார்ங்கம் என்னும் வில்லாண்டான்" [திருப்பல் 12] "தாழாதே சார்ங்கமுதைத்த சரமழை" [திருப்பாவை 4] என்கிறபடியே தொடுத்துவிட்டால் தன்னுலல்லது எவராலும் நிறுத்தவொண்ணுத சரமழையைப் பொழியும் சார்ங்கமென்னும் வில்லாண்டவனுயிருக்கையாலும் இவனே எவராலும் பேசிமுடிக்கவொண்ணுத பரம்பொருளாகமுடியும் என்று கருத்து. இப்படி அலங்காரப்பெருமையும், ஆயுதப்பெருமையும் மாத்திரமன்று, இவனுடைய ஶத்ருநிரஸநஸாமர்த்தியத்தைப் பார்த்தாலும்,

http://acharya.org

22. வடிவார் முடிகோட்டி வானவர்கள் நாளும்
கடியார் மலர்தூவிக் காணும்—படியானை
செம்மையாலுள்ளுருகிச் செவ்வனே நெஞ்சமே
மெய்ம்மையே காண விரும்பு.

இதைத் தெளிவாக அறியலாம் என்கிருர்,— (பொங்கரவ வக்கரனைக் கொன்ருன்) மிகவும் பொங்கிக் கிளர்ந்தவனுய், 'கண்ணன் எங்கே எங்கே' என்று பெரிய ஆரவாரத்தைப் பண்ணிக்கொண்டு வந்த த₃ந்தவக்ரன் என்ற அஸுரனை அவலீலையாகக் கொன்ற வனுகையாலும் இவனே பேசவொண்ணுத பரம்பொருள் என்று கருத்து. கண்ணன் ருக்மிணியைத் தேரேற்றிச்சென்றபோது சிசுபாலனுக்குப் பரிந்து வந்தவன் தந்தவக்ரன். (வடிவு) இத் தகையவனுடைய ஸ்வரூபஸ்வபாவங்கள் பேசவல்லவர்கள் எவ்வளவு பேசமுடியுமோ அவ்வளவாக அமைக்கப்பட்டிருக்கும் என்று கீழோடே அந்வயம். சிறந்த ஞானிகள் பேசினுல் அவை அவர்களுடைய ஞானத்தின் அளவுக்குத்தக்கபடியிருக்கும். நம்மைப் போன்ற ஞானத்திற் குறைந்தவர்கள் பேசினுல், நமது சிறிய ஞானத்துக்கும் தக்கபடி அமைக்கப்படும். ஞானத்திற் சிறந்தவர்களோடு குறைந்தவர்களோடு வாசியற அவன் வடிவைப் பேசித் தலைக்கட்டமுடியாதவர்கள் என்னும் விஷயத்தில் ஒருபடிப்பட்டவர்களே என்று பாசுரத்தின் திரண்டபொருள்.

யத்₃வா ஶ்ரமாவதி₄ யதா₂மதி வாப்யஶக்த:
ஸ்தௌம்யேவமேவ க₂லு தேऽபி ஸதா₃ ஸ்துவந்த: ।
வேதா₃ஶ்சதுர்முக₂முகா₂ஶ்ச மஹார்ணவாந்த:
கோ மஜ்ஜதோரணுகுலாசலயோர் விஶேஷ: ॥
[ஸ்தோ-ர-8]

[அன்றிக்கே, ஶக்தியற்ற யான் களைப்பு உண்டாகும் வரையிலாவது, புத்திக்குத் தெரிந்த வரையிலாவது துதிக்கிறேன். எப்போதும் துதிக்கும் அந்த வேதங்களும், நான்முகன் முதலியவர்களும் இப்படியேயல்லவோ துதிப்பது; பெரிய கடலினுள்ளே முழுகிப் போகிற (சிறிய) அணுவுக்கும், (பெரிய) குலமலைக்கும் என்ன வித்தியாசம்?] என்று ஆளவந்தார் அருளியதும் இங்கு அறியத்தக்கது.

http://acharya.org

நெஞ்சமே—ஓ மனமே! வானவர்கள்—நித்யஸூரிகள். வடிவு ஆர்—அழகு நிறைந்த. முடி—கிரீடங்களை. கோட்டி—வணங்கச்செய்து. கடி ஆர் மலர்—மணம் பொருந்திய பூக்களை. நாளும்—நாள்தோறும். தூவி—முறைகெட இட்டு. காணும் படியானை—(எப்போதும்) காணப்பெற்ற திருமேனியையுடையனான எம்பெருமானை. செம்மையால்—முறைப்படியே. உள் உருகி-மனம் உருகி. செவ்வனே-நேரான வழியாலே. மெய்ம்மெயே—உள்ளபடியே. காண—ஸேவிப்பதற்கு. விரும்பு—ஆசைப்படு.

அவ:— (வடிவார்) அவன்படி பரிச்சேதிக்கப் போகாத பின்பு அவன்தானே காட்டக்காணென்கிறார்.

வ்யா:—(வடிவாரித்யாதி) த$_3$ர்சநீயமாயிருந்துள்ள முடிகளைவணக்கித் தேவர்கள் நாள்தோறும் பரிமளம் மிக்கிருந்

அவ:—ஒருவராலும் அவனையளவிட்டுப் பேசவொண்ணாதென்றவர் தன் திருவுள்ளத்தைக்குறித்து "நீ முன்னமவனை அழகிதாக ஸாக்ஷாத்கரிக்கையிலே ஶ்ரத்$_3$தை$_4$பண்ணுகிடாய்' என்கிறார்.

உரை:—அழகுமிக்கிருந்துள்ள அபி$_4$ஷேகங்களை வணக்கி நித்யஸூரிகள் நாடோறும் பரிமளம்மிக்கிருந்துள்ள புஷ்பங்களை அக்ரமமாகப் பணிமாறி "सदा पश्यन्ति" (ஸதா$_3$

---

22. அவ:— அவனுடைய ஸ்வரூபஸ்வபாவங்கள் அளவிட்டுப் பேசமுடியாதவையானபின்பு, 'அவன் தானே தன்னைக் காட்ட, அழகாகக் காணவேணும்' என்று விருப்பத்தைச் செய்வாயாக என்று தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்.

வ்யா:—(வடிவார் முடிகோட்டி) அழகு நிறைந்த முடிகளைச் சாய்த்து. கோட்டுதல்-வளைத்தல்; வணக்குதல். (வானவர்கள்) "யத்ர பூர்வே ஸாத்$_4$யா: ஸந்தி தே$_3$வா:" [பு. ஸூ] [யாதொரு பரமபதத்தில் அநாதிஸித்தர்களாய், ப்ராப்யர்களான தேவர்கள் உள்ளனரோ] "யத்ர ருஷய: ப்ரத$_2$மஜா யே புராணா:" [எந்தப்

http://acharya.org

துள்ள புஷ்பத்தைக் கார்ய புத்தியின்றிக்கே திருவடிகளிலே பொகட்டுக்காணும் ஸ்வபாவத்தையுடையவனை. (செம்மையாலுள்ளுருகி) " அவன் சேஷி-நான் சேஷபூதன் "

பஶ்யந்தி) என்கிறபடியே இதை விடாமற்கண்டநுப விக்கும் வடிவழகையுடையவனை. அவன் சேஷி நாம் சேஷபூதரென்னும் முறையாலே தத்வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்து ஹ்ருதயம் ஶிதிலமாய். நாம் ஒரு யத்நம் செய்யாதிருக்கத்தானே தன்னைக்கொடுவந்து காட்டக்காண்

பரமபதத்தில் முன்னமே சென்ற முக்தர்களும், அநாதிகாலமா யிருக்கும் நித்யர்களும் பகவதனுபவம் செய்கின்றனரோ] என்று வேதங்களிற் கூறப்படும் அப்ராக்ருதரான நித்யமுக்தர்களைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். ப்ராக்ருதாலோகத்திலுள்ள பிரமன் முதலான தேவர்களைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (நாளும் கடியார் மலர்தூவி) தினந்தோறும் பரிமளம் நிறைந்த புஷ்பங்களை அத்யந்தபக்தியாலே முறைகெடத்தூவி. " அத்யந்த பக்தி யுக்தஸ்ய ந ஶாஸ்த்ரம் நைவ ச க்ரம: " [அதிகமான பக்தியோடு கூடியவனுக்கு சாஸ்திரமுமில்லை; கிரமமுமில்லை.] என்று சொல்லப்படுகிறதன்றோ. (நாளும் காணும் படியானை) " தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய: " [விஷ்ணு ஸூக்தம்] [விஷ்ணுவின் அந்த மேலான பதத்தை நித்ய ஸூரிகள் எப்போதும் காண்கிறார்கள்] என்று வேதங்களில் சொன்னபடியே எப்போதும் காணும் திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவனை; படி—விக்ரஹம்; எப்போதும் காணப்படும் இயல்வை உடையவனை என்றும் கொள்ளலாம்; படி—ஸ்வபாவம்; இயல்வு. ' நாளும் ' என்பதை நாளும் தூவி நாளும் காணும் ' என்று இரண்டு இடங்களிலும் அந்வயிக்கலாம். வானவர்கள் ' என்றதற்கு பிரமன் முதலான தேவர்களைப் பொருளாகக் கொள்ளும்போது " தினந் தோறும் வணங்குதல், மலர்தூவி அர்ச்சித்தல் முதலான ஸாதனங்களைச் செய்து, மிக்க முயற்சியாலே ஒருகால் காணும் படியை உடையவன் " என்று பொருள் கொள்ளவேணும். "நேரே கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணன் அடிக்கமலம் தன்னை அயன்" [முதல்திருவ 56] என்கிறபடியே பெரும்பாலும் அவனைக் காணாதவர்களாய், மிகமுயன்று ஒரொருகால் காண்பவர்களா யிருப்பவர்களன்றோ ப்ரஹ்மாதி தேவர்கள். இப்படி நித்யஸூரி

http://acharya.org

என்னும் முறையாலே ஹ்ருதயம் சிதி$_{2}$லமாய். (செவ்வனே) அவன் காட்டும் வழியாலே. (நெஞ்சமே மெய்ம்மையே காண விரும்பு) ப்ரயோஜந நிரபேக்ஷமாகக் காண ஆசைப்படு. 22.

கிற செவ்வைவழியாலே. மனஸ்ஸே! ஒரு குணவிஷ்கார மாத்ரத்திலே தெகுட்டிவிடாதே பத்தும்பத்தாக ஸாக்ஷாத் கரிக்கையிலே விருப்பத்தைப்பண்ணு. வானவர்களென்று ப்ரஹ்மாதி$_{3}$களாகவுமாம். படி—விக்$_{3}$ரஹம். 22.

கள் ஸதாநுபவம் பண்ணும்படியாகவும், ப்ரஹ்மாதி தேவர்கள் மிகமுயன்று காணும்படியாகவுமிருப்பவனை, நீ அவன் காட்டக் காண விரும்புவாய் என்கிறார்.— (செம்மையால் உள்ளுருகி) "அவன் உடையவன்; நாம் உடைமை; உடைமையைப்பெற உடையவன் முயலவேணுமேயல்லது; உடையவனைப்பெற உடைமை முயலவேணுமோ" என்று முறையறிந்து, இவ்வநுஸந்தானத்தாலே இம்முறையின் சிறப்பையறிந்து நெஞ்சுடைந்து உருகி; (செவ்வனே காண விரும்பு) இம்முறையை அறிந்தார்க்கு அவன் தானே தன்னைக காட்டுவானகையாலே, ஓர் முயற்சியுமில்லாமல் அவன் தானே தன்னைக் காட்டக் காண்கையாகிற நேர்வழியாலே அவனைக் காணவிரும்புவாய். தம் முயற்சியால் அவனைக் காண்பது கரடு முரடான சுற்றுவழியென்றும், அவனாலே அவனைக் காண்பது ராஜபாட்டையான நேர்வழியென்றும் கருத்து. (மெய்ம்மையே காண விரும்பு) ஒரு குணத்தை அவன் காட்டிய மாத்திரத்தாலே போதுமென்று நினைத்துவிடாமல், பரிபூர்ணமாக ஸாக்ஷாத்கரிக்க விருப்பத்தைச் செய். மெய்ம்மையே—பரிபூர்ணமாக. அன்றிக்கே, மற்றொரு ப்ரயோஜனத்தைக்கருதி அவனைக் காணவிரும்புவதைப் பொய்க்காட்சியாகக்கொண்டு, வேறு ஒரு பயனைக் கருதாமல் அவனைக் காண்பதையே பயனாகக்கொண்டு காணும் மெய்க் காட்சியைக் காண விரும்புவாயாக என்பதாகவும் கொள்ளலாம். (நெஞ்சமே) என்னிலும் முற்பட்டுநிற்கும் நெஞ்சமே! 'சேஷசேஷி ப$_{4}$ாவத்தை நன்கறிந்த நெஞ்சமே! தம் முயற்சியால் மாத்திரம் எவராலும் அவனைக் காணமுடியாது என்றறிந்த நெஞ்சமே! என்று பலவாறாகக் கருத்துரைக்கலாம். ஆக, அவன் தானே தன்னைக்காட்டவேணும் என்று விரும்பித் தன் முயற்சியினின்றும் கைவாங்கிநிற்பதே ப்ரபன்னனுக்கு ஸ்வரூபம் என்றதாயிற்று. 22.

http://acharya.org

23. விரும்பிவிண் மண்ணளந்த அஞ்சிறைய வண்டார்
சுரும்பு துளையில் சென்றூத—அரும்பும்
புனந்துழாய் மாலையான் பொன்னங் கழற்கே
மனந்துழாய் மாலாய் வரும்.

அம் சிறைய வண்டு—அழகிய சிறகுகளையுடைய பெண் வண்டுகளும். **ஆர் சுரும்பு**—அவற்றைப் பிரியாத ஆண் வண்டுகளும். **துளையில் சென்று ஊத**—நரம்புகளில் படிந்து ஊத (அதனால்). **அரும்பும்**—மலரப்பெற்ற. **புனம் துழாய் மாலையான்**—புனத்திற்போலே செவ்விமாறாத திருத்துழாய் மாலையை அணிந்தவனான எம்பெருமானுடைய. **விரும்பி விண் மண் அளந்த பொன் அம் கழற்கே**—ஆசைப்பட்டு விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையுமளந்த மிகவழகிய திருவடிகள் விஷயத்திலே. **மனம்**—எனது நெஞ்சானது. **துழாய்**-ஆழ்ந்து. **மால் ஆய் வரும்**-மிகமயங்கிக் கிடக்கின்றது.

அவ:— (விரும்பி) உபதேசம் பலித்தபடி சொல்லுகிறது.

வ்யா:— (விரும்பி யித்யாதி) பொன்னங்கழற்கே விரும்பி என்னவுமாம். விருப்பத்தோடே விண்ணும் மண்ணுமளந்த

அவ:— "காணவிரும்பு" என்று இவர்சொன்ன வாய் மூடுவதற்கு முன்னே, திருவுள்ளம் அவன் திருவடிகளிலே பிச்சேறி விழுகிறபடியைக் கண்டு விஸ்மிதராகிறார்.

உரை:—அழகிய சிறகையுடைத்தான வண்டும், அத்தை விட்டு நீங்காதே சேர்ந்து வர்த்திக்கக்கடவ சுரும்புமாகிற

---

23. அவ:—'காண விரும்பு' என்று இவர் உபதேசித்து வாய் மூடுவதற்கு முன்னே, இவர் மனம் அவன் திருவடிகளிலே பெருங் காதலைச் செய்கின்றபடியைக்கண்டு ஆச்சர்யப்படுகிறார்.

வ்யா:-(அம் சிறைய வண்டு ஆர் சுரும்பு) அழகிய சிறகையுடைய பெண் வண்டும், அதை விட்டுப்பிரியாது பொருந்திவாழும் ஆண்வண்டுமாகிற இரண்டும். 'வண்டு' என்னும் சொல் வண்டுகள் அனைத்தையும் குறிக்குமாயினும், சுரும்பாகிற ஆண்வண்டைத் தனியே எடுக்கையாலே, இங்கு பெண்வண்டைக் குறிக்கிறது.

http://acharya.org

அழகிய சிறகையுடைத்தான வண்டார்க்கும் சுரும்பு நரம்பறிந்தூத அரும்பாநின்றுள்ள புனந்துழாய் மாலையானுடைய விலக்ஷணமான கழலிலே மநஸ்ஸானது வ்யாமோஹத்தைப் பண்ணித் துழாவி வாராநின்றது. 23.

இவை ரஸஸிரைகளிலே வாய்வைத்தூத. அவற்றாலே கணுத்தோறும் அரும்பிச்செல்லாநிற்பதாய். திருமேனியின் ஸ்பர்சத்தாலே தன்னிலத்தில் நின்றாற்போலே செவ்வி பெற்றுச் செல்லுகிற திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனானவனுடைய. ஆகாசம். பூமி முதலானவற்றை உகந்து அளந்துகொண்ட ஸ்ப்ருஹணீயமான திருவடிகளிலே மனஸ்ஸானது முன்னடி தோன்றாமல் நின்ற நிலம் துழாவிக் கொண்டு பிச்சேறி வாராநிற்கும். மனம் விரும்பித்துழாய் மாலாய் வருமென்று மனஸ்ஸோடே சேர்க்கவுமாம். 23.

(விரும்பித்துளையில் சென்று ஊத)தேனில் விருப்பத்தாலே நரம்பறிந்து ரஸ நரம்புகளிலே வாய்வைத்து ஊத. 'விரும்பி' என்பதை 'விரும்பி ஊத' 'விரும்பி அளந்த' 'விரும்பி மாலாய் வரும்' என மூன்றிடங்களிலும் அந்வயித்துக்கொள்ளலாம். (அரும்பும் துழாய் மாலையான) இப்படி வண்டூதுவதாலே கணுத்தோறும் அரும்பு விடுகின்ற துழாய் மாலையை உடையவன். (புனந்துழாய் மாலையான்) தன்னிலத்தில் நின்று பறித்தால் வாடும் இயல்புமாறி; திருமேனியில் ஸ்பர்ஶத்தாலே அப்புனத்திற்போலவே வாடாமல் செழித்துப் புதுமைபெற்று நிற்கும் துழாய் மாலையை உடையவன். (விரும்பி விண்மண் அளந்த பொன் அம் கழற்கே) 'மாவலிக்கும் அழிவு வாராமல் இந்திரன் காரியம் செய்யப்பெற்றோமே' என்னும் ஆனந்தத்தாலே பெருநிதி பெற்றாற்போன்ற விருப்பத்துடன் தன்னுடையதான விண்ணையும் மண்ணையும் அளந்துகொண்டதாய், பொன்போலே ஆசைப்படத் தக்கதாய், அழகியதான திருவடியிணைக்கே. முதலடியிலுள்ள 'விண் மண் அளந்த' என்னும் தொடர் அர்த்தஸ்வாரஸ்யத்தை நோக்கிப் பின்னடியிலுள்ள 'பொன்னங்கழற்கே' என்றதற்கு விஶேஷணமாகக் கொள்ளப்பட்டது. ஶப்தஸ்வாரஸ்யத்தைக் கொண்டு 'விண் மண் அளந்த அஞ்சிறைய வண்டு' என்று கூட்டிப் பொருள் கொண்டால், ஆகாயத்திலும், பூமியிலும் எங்கும் சுற்றித்திரிகிற

http://acharya.org

24. வருங்கா லிருநிலனும் மால்விசும்பும் காற்றும்
நெருங்குதீ நீருருவுமானான்—பொருந்தும்
சுடராழி யொன்றுடையான் சூழ்கழலே நாளும்
தொடராழி நெஞ்சே தொழுது.

ஆழி நெஞ்சே—*கடல்போன்ற மனமே!* இரு நிலனும்—*பரப்புடைய பூமியும்,* மால் விசும்பும்—*அளவிறந்த ஆகாசமும்,* காற்றும்—*வாயுவும்,* நெருங்கு தீ—*பிரிக்க முடியாது சேர்ந்திருக்கும் தேஜஸ்ஸும்,* நீர் உருவும் ஆனான்—*ஜலதத்துவமும் ஆகிய பஞ்சபூதங்களுக்கும் அந்தர்யாமியானவனும்,* பொருந்தும் சுடர் ஆழி ஒன்று உடையான்—*தனக்குப் பொருந்திய ஒப்பற்ற சோதியுடைய சக்கரத்தையுடையவனுமான எம்பெருமானுடைய,* சூழ் கழலே—*அடியாரை வசப்படுத்திக்கொள்ளுகிற திருவடிகளையே,* வருங்கால் நாளும்—*மேலுள்ள காலமெல்லாம்,* தொழுது—வணங்கி, தொடர்—*பின்பற்றியிரு.*

அவ:— (வருங்கால்) ஆசைபிறந்தபின் விச்சேதமின்றிக்கே அநுபவிக்கப்பார்.

அவ:— *அபிநிவிஷ்டராய்க்கொண்டு எல்லாம் செய்தோமிறேயென்று இறுமாந்திராதே. நெஞ்சே! மேல்விழுந்து* அவனை ஆச்ரயிக்கப் *பார்கிடாயென்கிறார்.*

அழகிய சிறகையுடைய வண்டு' என்று பொருள்படுகிறது. (மனம் விரும்பித்துழாய் மாலாய் வரும்) மனமானது விருப்பத்தைச் செய்து, அவ்விருப்பத்தாலே முன்னடி தெரியாமல், நின்ற நிலத்தைத் துழாவிக்கொண்டு, மயக்கமே ஓர் வடிவெடுத்ததோ என்னும்படி அத்திருவடிகளிலே மயங்கி நிற்கும். ஆக 'காணவிரும்பு' என்று உபதேசித்தவுடன், விருப்பத்தின் உச்சநிலையில் தம்மனம் நிற்பதைக்கண்டு ஆச்சரியப் பட்டுப் பாசுரம் அருளிச் செய்தாராயிற்று. 23.

24. அவ:—"நெஞ்சே! பெருங்காதல்கொண்டு எம்பெருமானிடம் ஈடுபட்டுவிட்டோம்; இனிச்செய்யவேண்டியதில்லை" என்று கர்வங் கொண்டிராமல், மேல் விழுந்து அவனை ஆச்ரயித்து, ஏற்பட்ட

http://acharya.org

வ்யா:— (இருநிலனுமித்யாதி) காரணமான பூ₄தபஞ்சகமும் லீலாவிபூ₄திக்குமுபலக்ஷணம். (பொருந்துமித்யாதி) நித்யவிபூ₄திக்கும் உபலக்ஷணம். உப₄ய விபூ₄தியுக்தனுடைய சூழ்

உரை:— பரப்பையுடைத்தான பூ₄மியும், அபரிச்சே₂த்₃யமான ஆகாசமும், வாயுவும், செறிந்த தேஜஸ்தத்வமும் ஜலமுமாகிற இவ்விவபதா₃ர்த்த₂ங்களுக்கு அந்தராத்மாவாய் நிற்கையாலே லீலாவிபூ₄திவிஶிஷ்டனாய், திருக்கையிலே பொருந்தியிருக்கும் அத்₃விதீயமான தேஜோரூபமான திருவாழியையுடையனாகையாலே நித்யவிபூ₄திவிஶிஷ்டனாயிருக்

அநுபவத்திற்கு இடைவெளி ஏற்படாதபடி தொடர்ந்து அவனை அனுபவிக்க முயல்வாய்" என்று நெஞ்சைப்பார்த்து அருளிச்செய்கிறார்.

வ்யா:— (ஆழி நெஞ்சே) கடல்போலே ஆழமும, அளவுமுடைய நெஞ்சே! இனி, உப₄யவிபூ₄தியையும் உடையவனாகையால், இத்தகைய நெஞ்சால் காலமெல்லாம் அநுபவிக்கத்தக்க விஷயமுடையவன் என்று காட்டுகிறார் முதல் மூன்று அடிகளாலே,—(இருநிலனும்) பெரும் பரப்பை உடையதான பூமியும். (மால்விசும்பும்) அந்த பூமியைப்போலே அளவிட முடியாதபடி மிகப்பெரிதான ஆகாயமும். (காற்றும்) அந்த பூமியிலும், ஆகாயத்திலுமுள்ளார்க்கு உயிரளிக்கும் வாயுவும். (நெருங்கு தீ) பூமி வாயுக்களைப்போலே அந்ததிரூபமாகவேயிருந்தபோதிலும், பிரித்து எடுக்கமுடியாதபடி நெருங்கிநிற்கும் தேஜஸ்தத்துவமும். (நீர்) இவையனைத்தையும் சேர்த்துவைக்கும் நீரும். (நீருருவும் ஆனான்) இப்படிப் பஞ்சபூதமும் இவனே என்னும்படி அவற்றுக்கு அந்தர்யாமியாய் நிற்பவன். இப்படி லீலாவிபூதிகாரணமான ஐம்பெரும் பூதங்களையும் சொன்னது லீலாவிபூ₄தி முழுவதற்கும் உபலக்ஷணமாகையாலே ப்ராக்ருதமான இந்த எல்லா உலகங்களையும் சரீரமாக உடையவன் என்றதாயிற்று. (பொருந்தும் சுடராழி ஒன்றுடையான்) முற்கூறிய ப்ராக்ருதப் பொருள்களைப்போலே இவனுடைய தூய்மையோடு சேராதபடியிராமல், இவனைப்போலே அப்ராக்ருதச் சோதிமயமாயிருக்கையாலே இவனோடு சேர்ந்திருக்கும் ஒப்பற்ற திருவாழியாழ்வானை உடையவன். இங்கு நித்யவிபூதியிலுள்ள ஸூரிகளுள் சக்ரத்தாழ்வானைச் சொன்னது நித்யவிபூதி முழுவதற்கும் உப

கழலே வருங்கால் நாளுமாழி நெஞ்சே! தொழுது தொடா. கீழ் விச்சே₂தி₃த்து அநர்த்தப்பட்டது போரும். முறையாலே ஆஶ்ரயி. 24.

25. தொழுதால் பழுதுண்டே? தூநீ ருலகம்
முழுதுண்டு மொய்குழலா ளாய்ச்சி—விழுதுண்ட
வாயானை மால்விடையேழ் செற்ருனை வானவர்க்கும்
சேயானை நெஞ்சே சிறந்து.

தூ நீர் உலகம்—தூய்மையான நீரையுடைய கடலோடு கூடின உலகங்களை. முழுது—முழுவதும். உண்டு—திரு வயிற்றிலே வைத்தவனும், மொய் குழலாள் ஆய்ச்சி—நெருங்கிய கூந்தலையுடையளான யசோதையினுடைய.

ஸர்வேஶ்வரனுடைய. ஆஶ்ரிதரை ஸ்வவைலக்ஷண்யத்தாலே அடிமைப்படுத்திக்கொள்ளுகிற திருவடிகளையே. என்னுடைய நெஞ்சே! ஸ்வரூபாநுரூபமாகத்தொழுது மேல்வரும் காலமெல்லாமறியிராதே நாள் தோறும் பின்பற்றி ஆஶ்ரயி. 24.

லக்ஷணமாகையாலே, அப்ராக்ருதமான நித்யவிபூதியையும் சரீரமாக உடையவன் என்று சொல்லிற்றுயிற்று. இதற்குமேலே, ஆஶ்ரிதரை அடிமைப்படுத்திக்கொள்ளும் திவ்யமங்களவிக்ரஹத்தையும் உடையவன் என்கிருர் மேலே.—(உடையான் சூழ் கழலே) இப்படி உப₄யவிபூ₄தி விஶிஷ்டனுகையாலே ஸர்வேஶ்வரனுய், வகுத்தஸ்வாமியாயிருப்பவனுடையதாய், அடியாரைத் தன் அழகாலே தப்பமுடியாதபடி வசப்படுத்திக்கொள்வதான திருவடியையே. கைக்குழந்தைக்குத் தாய்முலைபோலே, ஶேஷபூ₄தனுக்கு த₄ாரகபோஷகபோ₄க்₃யமாயிருக்கையாலே திருவடிகளையிட்டுத் திருமேனியை உபலக்ஷிக்கிருர். (தொழுது) ஶேஷமான உன் ஸ்வரூபத்துக்குத் தக்கவாறு ஶேஷியான அவனை வணங்கி. (வருங்கால் நாளும் தொடர்) மேல் வரும் காலமெல்லாம் ஒருகணநேரமும் ஆறியிராமல், தினந்தோறும் அத்திருவடிகளையே பின்பற்றி ஆஶ்ரயித்து அநுபவிப்பாயாக. இதற்கு முன் அநாதிகாலமாக அத்திருவடியை நினையாமல் அநர்த்தப்பட்டது போதும்; இனியாவது, இடைவெளிவிடாமல் முறைப்படி ஆஶ்ரயிப்பாயாக என்று நெஞ்சுக்கு அறிவுறுத்துகிருர். 24

http://acharya.org

விழுது—வெண்ணெயை. உண்ட வாயானை—அமுதுசெய்த வாயையுடையவனையும். மால் விடை ஏழ் செற்றானை—கொழுத்த காளைகள் ஏழையும் முடித்தவனையும். வானவர்க்கும் சேயானை—பிரமன் முதலிய தேவர்களுக்கும் எட்டாத வனையுமுள்ள எம்பெருமானை. நெஞ்சே-நெஞ்சமே!. சிறந்து—சிறப்புற. தொழுதால்—வணங்கினல். பழுது உண்டே—குறை ஏதும் ஏற்படுமோ?

அவ:— (தொழுதால்) நான் சொல்லுகிறது தப்புண்டோ வென்கிறார்.

வ்யா:— (தூநீருலகம்முழுதுண்டு) சூழ்ந்தகடல் அலையாதபடிக்கீடாக லோகத்தையெல்லாம் வயிற்றிலே வைத்து.

அவ:— இவர் இப்படி உபதேசிக்கச் செய்தேயும் பூர்வ வ்ருத்தத்தை ஸ்மரித்துத் திமிர்த்திருக்கிற திருவுள்ளத்தைக் குறித்து. 'அவனை நீ கிட்டி ஆஶ்ரயித்தால் உனக்கு வருவதொரு குறையில்லை காண்' என்கிறார்.

உரை:— நிர்மலமான ஜலத்தையுடைத்தான கடலோடு கூடின. பூம்யாதி லோகங்களை ஒன்றும் பிரிகதிர்ப்படாதபடி கடலின் நீரும் கலங்காமல் இருந்த கட்டளையிலே எடுத்து

25. அவ:— இவர் இப்படி உபதேசித்தபோதிலும், அநாதி காலமாக இத்திருவடியை ஆஶ்ரயிப்பதற்கு ஏற்பட்ட இடையூறுகளை நினைத்து, 'இனியும் எனனென்ன இடையூறுகள் ஏற்படுமோ' என்று பயந்திருக்கிற நெஞ்சைப்பார்த்து, 'அவனை நீ அணுகி ஆஶ்ரயித்தபின்பு எல்லா இடையூறுகளும் அகலும்; உனக்கு எக் குறையும் ஏற்படாது' என்று தெளிவிக்கிறார்.

வ்யா:— (நெஞ்சே!) அவனுடைய தன்மையை அறிந்திருந்தும் மறந்து பயங்கொள்ளும் நெஞ்சே! உன்னை வசப்படுத்துவதற்காக அவன் செய்த செயல்களைக் கண்டாயோ? என்று அவற்றை நினைவுறுத்துகிறார் பாசுரத்தின் பெரும்பகுதியாலே. (தூநீருலகம் முழுதுண்டு) அழுக்கற்ற நீராலே சூழப்பெற்ற பூமி முதலான லோகங்களை ஒன்றும் வெளிப்படாதபடி இருந்தபடியே எடுத்துத்

http://acharya.org

(மொய்குழலித்யாதி) அநுகூலருடைய த்₃ரவ்யத்தாலல்லது தரியாதவனை. (மால்விடையேழ் செற்றானை) நப்பின்னைப் பிராட்டியுடைய ஸம்ஶ்லேஷத்துக்கு விரோதியான மதித்த எருதேழையும் செற்றவனை. (வானவர்க்குஞ்சேயானை) ஸ்வயத்னத்தால் காண்பார்க்கு மநஸ்ஸுக்கும் வாக்குக்கும் தூ₃ர ஸ்த₂னானவனை. (சிறந்து நெஞ்சே தொழுதால் பழுதுண்டே)

திருவயிற்றிலேவைத்து. அவ்வளவிலும் வயிறு நிறையாமையாலே. அழகியகுழலையுடையளான யசோதைப்பிராட்டியுடைய வெண்ணெயை அமுதுசெய்த திருப்பவளத்தையுடையனாய். நப்பின்னைப் பிராட்டியைக் கைப்பிடிக்கைக்கு இடைச்சுவரான முரட்டு ரிஷப₄ங்களேழையும் முடித்துப் பொகட்டவனாய். மிகைமிடுக்காலே காணவொருப்படும் ப்ரஹ்மாதிகளுக்கும் சால தூ₃ரஸ்த₂னாயிருக்கிறவனை,

---

திருவயிற்றிலே வைத்து. 'தூநீருலகம்' என்று விசேஷணமிடுகையாலே, பூமியைச் சூழ்ந்திருப்பதாய், காற்றடித்தாலும் அலையெறிந்து கலங்கும் இயல்வுடையதான கடலும் அலையாமலும், கலங்காமலும் (தூய்மை குன்றாமலும்) வயிற்றிலே வைத்த அக₄டிதக₄டநாஸாமர்த்₂யத்தைச் சொல்லுகிறது. (மொய்குழலாள் ஆய்ச்சி விழுதுண்ட வாயானை) ஏழுலகும் உண்டும் இடமுடைய வயிறாகையாலே, தூநீருலகம் முழுதுண்டதிலும் நிரம்பாத வயிற்றை நிரப்புவதற்காக அழகிய குழலையுடைய யசோதைப்பிராட்டியின் கைபட்ட வெண்ணெயைக் களவாடித்தின்று அக்களவு தன் வாயிலேயே வெளிப்படும்படி நின்றவனை, அன்புடையார் தொட்ட பொருள் அற்பமாயினும், அதைப் பெருவிடில் தரியாதவனாய், அதைத் தகாத வழியிலாவது உண்டபின்பே வயிறுநிரம்பும் இயல்வுடையவன் என்று காட்டுகிறார். (மால்விடையேழ் செற்றானை) நப்பின்னைப் பிராட்டியைக் கைப்பிடிப்பதற்குத் தடையாயிருந்த முரட்டுக்காளைகள் ஏழையும் ஒன்றாக அழித்தவனை. இத்தால் நமது இடையூறுகளையும் அழிக்கவல்லவன் என்று உணர்த்துகிறார். (வானவர்க்கும் சேயானை) இப்படி ஆய்ச்சிகளுக்கு எளியவனாயினும், தமக்குள்ள அதிகமான ஜ்ஞாநஶக்திகளால் அவனை அடையப்பார்க்கும் பிரமன் உருத்திரன் முதலான தேவர்களுக்கு மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாதவனை. இத்தால், எளியவர்க்கே எளியவன் என்று

ஆஸ்ரிதர்க்கு ஸௌலபனானவனைக் கிட்டித்தொழுதால் பழுதுண்டோ? 25.

26\. சிறந்தவென் சிந்தையும் செங்க ணரவும்
நிறைந்தசீர் நீள்கச்சி யுள்ளும்—உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே
தாங்கடவார் தண்டுழா யார்.

தண் துழாயார் தாம்—குளிர்ந்த திருத்துழாய் மாலையை அணிந்துள்ள எம்பெருமான். கடவார்—ஒருநாளும் விட்டு நீங்காதவனைக்கொண்டு. உறைந்ததுவும் — நித்யவாஸம் பண்ணுமிடங்கள் (எவையென்றால்). சிறந்த என் சிந்தையும்—(அனைத்திலும்) சிறந்ததான என்னுடைய நெஞ்சமும். செம் கண் அரவும்-சிவந்த கண்களையுடைய திருவனந்தாழ்வானும். நிறைந்த சீர்—நிறைந்த செல்வத்தையுடைய, நீள்—பெரிய. கச்சியுள்ளும்—கச்சித்திருப்பதியும், வேங்கடமும்—திருமலையும். வெஃகாவும்—திருவெஃகாவும். வேளுக்கைப் பாடியுமே—திருவேளுக்கைத் திருப்பதியுமாம்.

நெஞ்சே! ஸம்பந்தத்தை நினைத்து அங்குத்தைக்குத் தகுதியாய்க்கொண்டு ஆஸ்ரயித்தால் உனக்கு வருவதொரு தப்புண்டோ. 25.

…ார்த்துகிறார். (சிறந்து தொழுதால் பழுதுண்டே) அவனுக்கும் நமக்குமுள்ள உறவை நினைத்து, நம் ஸேஷத்வ ஸ்வரூபத்துக்குத் தக்கபடி தொழுதால் உனக்கு எந்த இடையூறு நேரும்? நம்முடைய ஆபத்துக்காலத்தில் நம்மை வயிற்றிலேவைத்து …நாக்குகிறபடியையும், அடியார்க்கு எளியனாயிருக்கும்படியையும், அடியாரை அடையத் தடையாயிருப்பவற்றைப் போக்கும் தன்மையுடையனாயிருப்பதையும், எளியவர்க்கே எளியவனாயிருக்கும் படியையும் அநுஸந்தித்தால், 'இடையூறு நேருமோ' என்று கலங்குவதற்கே இடமில்லை என்று நெஞ்சைத் தேற்றினாராயிற்று. 25.

http://acharya.org

வ்யா:-(சிறந்த வித்யாதி) என்னுடைய சிந்தையுள்ளும் திருவனந்தாழ்வான் மேலும் கச்சியுள்ளும் ஸாத₃ரமாகவுறைந்தது.

அவ:— இப்படிகிட்டி ஆஶ்ரயித்த தம் திருவுள்ளத்தை உகந்தருளின நிலங்களிலுங்காட்டில் அவன் விரும்பின படியையருளிச் செய்கிறார்.

உரை:-ஐஶ்வர்யஸௌசகமான குளிர்ந்த திருத்துழாயாலே அலங்க்ருதனை பெருமையையுடைய தாம். திருவுள்ளத்தில் உகப்புடனே நித்யவாஸம் பண்ணியருளிற்றும். தாம் விரும்பி மேல்விழுகைக்குத்தகுதியான என்னுடைய ஹ்ருதயத்திலும்,

26. அவ:— இப்படிச் சிறந்து தொழுத தம் திருவுள்ளத்தை, நித்ய ஸூரிகளிலும், உகந்தருளின நிலங்களிலுங்காட்டிலும் அவன் விரும்பி நின்றபடியை அருளிச்செய்கிறார்.

வ்யா:— (தண் துழாயார் தாம்) இவனே உப₄யவிபூ₄திநாயகன் என்பதைக் காட்டித்தரும் குளிர்ந்த திருத்துழாய்த்தனிமாலையாலே அலங்கரிக்கப்பெற்ற பெருமையையுடையவர் தாம். (உறைந்ததுவும்) திருவுள்ளத்தில் உகப்புடன் நித்யவாஸம் செய்தருளிய விடங்களாவன,- (சிறந்த என் சிந்தையும்) பின் சொல்லப்போவது அனைத்திலும் சிறந்த என் நெஞ்சும். திருவனந்தாழ்வான் முதலான நித்யஸூரிகளையும், திருப்பதிகளையுங்காட்டிலும் எம்பெருமான் தம் நெஞ்சையே அதிகமாக விரும்பி மேல்விழுகிறுனையாலே 'சிறந்த' என்று அதை விசேஷிக்கிறார். இக்கருத்தினாலேயே, 'ஹ்ருத₃யம் தத்₃விஜாநீயாத்₃ விஶ்வஸ்யாயதநம் மஹத்' [தை-நா] "நெஞ்சமே நீள் நகராக இருந்த" [திருவாய்3-8-2] என்றுதென்மொழி வடமொழி வேதங்களிலே ஓதப்பட்டது.

அனந்தன்பாலும் கருடன்பாலும் ஐதுநொய்தாக வைத்து. என்
மனந்தனுள்ளே வந்துவைகி வாழச்செய்தா யெம்பிரான்.
பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு. ஓடிவந்தென்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ.
வடதடமும் வைகுந்தமும் மதிள் துவராபதியும்.
இடவகைக ளிகழ்ந்திட்டென்பால் இடவகை கொண்டனையே.

என்றார் பெரியாழ்வாரும். [பெரியாழ்திரு 5-4-8, 9, 10]

http://acharya.org

(வேங்கடமித்யாதி) திருமலையிலும் திருவெஃகாவிலும் வேளுக்கைப்பாடியிலும் கடவரானமாத்ரம். கடவரானமாத்ர மென்று சொன்ன உரமெத்தாலே யென்னில்: (தண்டுழா யார்). நிறைந்த சீர் நீள்கச்சியுள்ளும். வேங்கடமும் வெஃகா வும் வேளுக்கைப்பாடியுமுறைந்ததுவும். சிறந்தவென்சிந்தை

மது₁பானமத்தரைப்போலே நிரந்தரானுப₄வத்தாலே சிவந்த கண்களையுடையனை திருவனந்தாழ்வான் பக்கலிலும். திருப்பதிகளாலே நிறைந்த ஐஶ்வர்யத்தையுடைத்தாய். போ₄க்₃யதை அளவிறந்திருந்துள்ள திருக்கச்சியிலுமாயிருக் கும்; திருமலையும் திருவெஃகாவும் திருவேளுக்கைப்பாடியு மாகிற இவ்விடங்களை. 'நிர்வாஹகரான நமக்கு விட

இனி. இப்படி அனைத்திலும் சிறந்த சிந்தையைப் பெறுவதற்கு உறுப்பாக அவன் உறைந்த இடங்களைப் பேசுகிறார். (செங்கண் அரவும்) மதுவைப்பருகி மயங்கிநிற்பாரைப்போலே. மது₄வித்₃யா ப்ரதிபாத்₃யனாய், தேவர்களுக்கு மதுவைப்போல் இனியவன் என வேதாந்தங்களில் முழங்கப்படும் ஆராவமுதை எப்போதும் அநுபவிக்கையாலே சிவந்த திருக்கண்களை உடையவனை திரு வநந்தாழ்வானிடத்திலும் உகப்புடன் உறைந்தருளினான். இங்கு திருவனந்தாழ்வானைச் சொன்னது நித்யஸூரிகள் அனைவர்க்கும் உபலக்ஷணம.

"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்.
அணையாம் திருமாற்கு அரவு" [முதல்திருவ 53]

என்று எல்லாக் கைங்கர்யங்களையும் இடைவிடாமல் செய்கின்ற வனாகையாலே அவனைவிட்டு நித்யஸூரிகளை உபலக்ஷிக்கிறார். (நிறைந்த சீர் நீள் கச்சியுள்ளும்) திருப்பதிகள் பலவற்றாலே நிறைந்த செல்வத்தையுடையதாய், இனிமையிலே எல்லையற்று நீண்டிருக்கும் திருக்கச்சியிலும் உகப்புடன் உறைந்தருளினான். பல திவ்யதேசங்கள் நிறைந்திருக்கையாலே ஆழ்வாரைப்போலே பல சேதனர்களைத் திருத்த உறுப்பாகும் என்று மற்ற திவ்ய

http://acharya.org

யும் செங்கணரவும் தாங்கடவார். உகந்த படுக்கையான திருவனந்தாழ்வானோபாதி என்னுடைய நெஞ்சை அதிக்ரமியார். அன்றிக்கே, திருவனந்தாழ்வானையும் என்னுடைய நெஞ்சையும் தம்மதாக அபிமாநித்திருப்பது; அல்லாதவற்றிலுறைந்த மாத்ரமேயென்றும் அருளிச்செய்வர். 26.

வொண்ணாதே!' என்று ப்ராப்தி மூலமாக விரும்பியிருப்பர். திருக்கச்சி முதலான திருப்பதிகளிலும் ஸூரிகளில் ப்ரதாநனை திருவனந்தாழ்வானிலுங்காட்டில் தம் திருவுள்ளத்தை மிகவும் விரும்புகையாலே மூன்று றத்திருவுள்ளத்தையருளிச் செய்தார். 26.

தேசங்களைக் காட்டிலும் கச்சியிலே மிகுந்த உகப்பைச்செய்தருளினான் என்று கருத்து. ஆக, என் சிறந்த சிந்தையையும், அதைப் பெறுவதற்கு உறுப்பாக ஆதிசேஷன் முதலான நித்யஸூரிகளையும், கச்சிப்பதியையும் மிகவும் உகந்தருளினான் என்றாராயிற்று. மற்றுமுள்ள தனித்தனித் திருப்பதிகளில் அவனுடைய உகப்பு எத்தகையது? எனில்: (வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே தாம் கடவார்) வேங்கடம், வெஃகா, வேளுக்கைப்பாடி போன்ற தனித்திருப்பதிகளை, 'இவற்றுக்குக் கடவரான (நிர்வாஹகரான) நம்மால் இவற்றை விடவொண்ணாதே!' என்று அவை தனக்கு உடைமையாகவும், தான் அவற்றுக்கு ஸ்வாமியாகவுமிருக்கும் தொடர்பைநோக்கி அவற்றைவிட்டு நீங்காமலிருப்பர். ஆக, வேங்கடம், வெஃகர், வேளுக்கைப்பாடி போன்ற ஓரொரு திருப்பதிகளைக் காட்டிலும், பல திருப்பதிகள் நிறைந்த கச்சி, நித்யஸூரிகளில் சிறந்த திருவநந்தாழ்வான், ஸாதநஸ்தலங்களான இவற்றால் ஸாதிக்கப்படும் ஸாத்யஸ்தலமான தன் நெஞ்சு ஆகியவற்றிலே மிகச்சிறந்த உகப்பைச் செய்திருப்பான் எம்பெருமான்; இதற்குக் காரணம் ஆஸ்ரிதரக்ஷணத்திற்காகவே திருத்துழாய் மாலையை தரித்திருக்கையே என்று அருளிச் செய்தாராயிற்று.

இப்படியல்லாமல், வேறுவகையாகவும் அந்வயித்துப் பொருள் கொள்ளலாம். அதாவது,— (நிறைந்த சீர் நீள் கச்சியுள்ளும், வேங்கடமும், வெஃகாவும், வேளுக்கைப்பாடியுமே உறைந்ததுவும்; தண்டுழாயார்தாம் சிறந்த என் சிந்தையும் செங்கணரவும் தாம்

http://acharya.org

27. ஆரே துயருழந்தார் துன்புற்ரு ராண்டையார்
காரேமலிந்த கருங்கடலே—நேரே
கடைந்தானேக் காரணனே நீரணேமேல்பள்ளி
அடைந்தானே நாளு மடைந்து.

கார் மலிந்த கரு கடலே—மேகங்கள் நிறைந்த கறுத்த கடலே, நேரே கடைந்தானே—தானே முன்னின்று கடைந்தவனும். காரணனே—ஸர்வ ஜகத்காரணனும். நீர் அணே மேல் பள்ளி அடைந்தானே—திருப்பாற்கடலில் (ஆதிசேஷனென்ற) படுக்கையின்மேல் பள்ளிகொண்டிருப்பவனுமான எம்பெருமானே. அடைந்து—ஆம்ரயித்து (இருப்பவர்கள்), நாளும் துயர் உழந்தார் ஆர்—ஒருநாளாவது துன்பமடைந்தவர் எவர்? துன்பு உற்ருர் ஆண்டையார் — (அப்படி) துக்கங்களே அநுபவித்தவர்கள் எங்கிருக்கிருர்கள்.

அவ:— (ஆரே) அவன்படியிதுவான பின்பு அவனே ஆம்ரயித்தும் தாங்கள் பண்ணின பாபத்தின் பலம் புஜிப்பாருண்டோ? என்கிருர்.

அவ:— இப்படிப்பட்ட அவனே ஆம்ரயித்தவர்களில் ஆரேனுமொருத்தர், தாங்கள் பண்ணின பாபபலம் புஜித்தார்களாகக் கேட்டறிவதுண்டோ? என்கிருர்.

கடவார்) கச்சிப்பதியிலும், வேங்கடத்திலும், திருவெஃகாவிலும், வேளுக்கையிலும் தவிர்க்கமுடியாதபடி வாழ்ந்தவித்தனேயே, ஆம்ரித ரக்ஷணத்திற்காகத் தனிமாலே தரித்திருப்பவன் உகந்த படுக்கையான திருவனந்தாழ்வானேப்போலே என்னுடைய சிறந்த நெஞ்சையும் கடக்கமாட்டாதவனுயிருப்பான் என்றபடி. இந்த நிர்வாஹத்தில் நீள்கச்சியென்றது கச்சிப்பதியிலுள்ளதாய், திருவெஃகாவையும், வேளுக்கைப்பாடியையும் தவிர்ந்ததான ஒரு திவ்யதேசத்தைக் காட்டுகின்றது. 'தாம் கடவார்' என்றதற்குத் தம்மதாக அபிமானித்திருப்பார் என்றும் பொருள் கொள்ளலாம். ஆக, இப்படி மூன்று விதமான நிர்வாஹத்திலும், திருப்பதிகளேயும், நித்யஸூரிகளேயுங்காட்டிலும் தம் நெஞ்சையே மிக விரும்பியிருப்பான் எம்பெருமான் என்று அருளிச்செய்தாராயிற்று. 26.

27. அவ:— அவனுடைய தன்மை இதுவானபின்பு, அவனே அடைந்தவர்களில் யாரேனுமொருவர் தாங்கள் பண்ணின

வ்யா:— (காரேமலிந்தகருங்கடலை நேரேகடைந்தானை) மேலேபடிந்த மேகங்கள் சலியாதபடி அம்ருதம்படும்படிக் கீடாகக் கடலைக்கடைந்தானை. (காரணனை) ஜகத்காரண பூதனை. (நீரணைமேல் பள்ளியடைந்தானை) ஆஶ்ரிதர்கார்யஞ் செய்கைக்காகத் திருப்பாற்கடலிலே கிட்டவந்து கிடந்தவனை. (நாளுமடைந்து ஆரேதுயருழந்தார் துன்புற்றாராண்டையார்)

உரை:— மேகங்களாலே நிறைந்த பெரியஸமுத்ரத்தை. மேற்படிந்த மேகங்கள் சலியாதபடி நேர்கொடுநேரே நின்று கடைந்தவனாய், ஜகத்காரணத்வப்ரயுக்தமான உறவை யுடையனாய், இவற்றை ரக்ஷிக்கைக்கு அவஸரப்ரதீக்ஷனாய்க் கொண்டு கடைந்த கடலின் நீரிலே திருவனந்தாழ்வானாகிற படுக்கையின் மேலே கண்வளர்ந்தருளுகிறவனை, தேவையாக வன்றிக்கே பேராகரூபமாக நாள்தோறும் ஆஶ்ரயித்து

பாபத்தின் பலமான துன்பத்தை அநுபவித்தார்கள் என்று கேட்டறிந்ததும் இல்லையென்பதில் ஆச்சரியமில்லை என்கிறார்.

வ்யா:— (காரே மலிந்த கருங்கடலை நேரே கடைந்தானை) மேகங்களாலே நிறைந்த பெரிய கடலை, ஆழியுட்புக்கு முகந்து கொடு போவதற்காகக் கடலின்மேலே படிந்த மேகங்கள் சிறிதும் அசையாதபடி தான் நேரே கடைந்த ஸமர்த்தனை. கருங்கடல்- பெருங்கடல், "நீலக்கடல் கடைந்தாய்" [திருவாய் 10-10-7] என்கிறபடியே திருமேனியொளியாலே பாற்கடல் கருங்கடலாயிற்று என்றும் கொள்ளலாம். தன்னைச் சரணடைந்த தேவர்க்க[illegible] உடம்பு நோவக் கடல்கடைந்து அமுதை எடுத்து அவர்கள் துன்பத்தைத் தீர்த்தவனன்றோ இவன்; இவனையடைந்தார் துன்புற முடியுமோ? என்று கருத்து. இப்படி இவர்களுக்காகப் பாடுபடுகைக்குக் காரணம் உறவுடையனாகையே என்கிறார் மேலே.—(காரணனை) அனைவரையும் படைத்த பிதாவாகையாலே இவனையடைந்தவர் துயருறமுடியாது என்று கருத்து. துன்பம் வந்தபோது இவனைத் தேடிப்போகமுடியாதபடி பரமபதத்திலிருப்பவனோ? எனில், அடியார் துயர் கேட்கைக்காகத் திருப்பாற்கடலில் வந்து கண்வளர்ந் தருளுகிறவன் என்கிறார்.— (நீரணைமேல் பள்ளி அடைந்தானை) தேவர்களுடைய கூப்பிடு கேட்கைக்காக, 'ரக்ஷிக்க இடமுண்டோ?'

http://acharya.org

தாந்தாம் பண்ணின நிஷித்3த4கர்மத்தினுடைய ப2லமான துக்கத்தை அவனை ஆஶ்ரயித்து அநுப4விப்பாருண்டோ? "ஆண்டையார்" என்றது-எங்குள்ளாரென்றபடி. "நாளும்" என்றது-எக்காலத்திலென்றபடி. எக்காலத்தில் எத்தேசத்தில் ஆர் அவனைப்பற்றி துஷ்கர்மப2லத்தை அநுப4வித்தார்? 27.

வைத்து. து3:க்க2ஹேதுவான பாபங்கள். உச்சிவீடுவிடாதே பண்ணினவர்களில் ஆர்தான் அந்தப் பாபப2லமான து3:க்க2த்தை அநுப4வித்தார்? அவர்கள்தான் எக்காலத்தி லுள்ளவர்கள்? ப4க்தஸமாஶ்ரயணம் பண்ணுகைக்கும் பாபப2லமநுப4விக்கைக்கும் அக்3நிநாஸிஞ்சேத்போலே என்ன சேர்த்தியுண்டு? என்றபடி. 27.

என்று எதிர்பார்த்துக்கொண்டு, இவர்களால் கடையப்பெற்ற கடலின் நீரிலேயே, அந்நீர் உறுத்தாமைக்காகத் திருவநந்தாழ்வானை மெத்தையாக விரித்து, ஜகத்3ரக்ஷணசிந்தையுடன் அதன்மேல் பள்ளிகொண்டருள்கின்றவனை. (நாளும் அடைந்து) தினந்தோறும் ஆஶ்ரயித்து. தங்கள் காரியம் சாதிப்பதற்காக அவனை அடைவதாகில், ஒருதரம் அடைந்தாலே போதுமானது; ஸ்வயம் ப்ரயோஜநமாக போ4க3ரூபமாக அடைகிறார்களாகையாலே, தினந்தோறும் ஆஶ்ரயிக்கிறார்கள் என்று கருத்து. அன்றிக்கே, 'நாளும்' என்பதை முதலடியோடு கூட்டிக்கொள்ளவுமாம்; (அடைந்து) இப்படி ஸர்வரக்ஷகனானவனை ஒருகால் ஆஶ்ரயித்து, (நாளும் ஆரே துயர் உழந்தார்) எக்காலத்தில் யார் துன்புற்றார்கள்? (ஆரே) "நானே நானாவித நரகம்புகும் பாவம் செய்தேன்" [பெரிய.திரு 1-9-2] என்கிறபடியே இடைவிடாமல் துக்கஹேதுவான பாபங்களைபுரிந்த மஹாபாபிகளாயினும் பாபப2லம் அநுப4வியார்கள் என்று கருத்து. (துன்புற்றார் ஆண்டையார்) அவனை அடைந்து துன்புற்றவர்கள் எந்த தேசத்தில் உள்ளனர்? ப்ரஹ்மருத்ராதிகளை அடைந்து துன்புற்றவர்கள் பல தேசங்களிலும் பல காலங்களிலும் இருந்திருக்கின்றனர் என்பதை ஹிரண்யன் ராவணன் ப4ஸ்மாஸுரன் முதலான பல அஸுரராக்ஷஸர்களின் கதைகளில் கேட்டிருக்கிறோம். அச்யுதனான இவனை அடைந்து ஒருவன் துன்புற்றதாக எக்காலத்திலும் எந்த தேசத்திலும் கேள்விப்பட்டதுகூட இல்லையே! என்று கருத்து. 'பகவானை அடைந்தவன் பாபப2லத்தை அநுப4வித்தான்'

28. அடைந்த தரவணைமேல் ஐவர்க்காய் அன்று
மிடைந்தது பாரத வெம்போர்—உடைந்ததுவும்
ஆய்ச்சிபால் மத்துக்கே அம்மனே! வாளெயிற்றுப்
பேய்ச்சிபா லுண்ட பிரான்.

வாள் எயிறு — வாள்போன்ற பற்களையுடையளான. பேய்ச்சி — பூதனையினுடைய. பால் — முலைப்பாலை. உண்ட — உண்டு அவளை அழித்தவனான. பிரான் — உபகாரகனானவன், அடைந்தது — பள்ளிகொண்டது. அரவு அணைமேல் — சேஷ சயனத்தின் மேலாம்; அன்று — முன்னொரு காலத்தில். ஐவர்க்கு ஆய் — பஞ்சபாண்டவர்களுக்காக. மிடைந்தது — நெருங்க நடத்தினது. வெம் பாரதம் போர் — கடுமையான பாரத யுத்தமாம்; உடைந்ததுவும் — அஞ்சி நடுங்கியதும். ஆய்ச்சிபால் — இடைச்சியான யசோதைப் பிராட்டியினிடத் துண்டான, மத்துக்கே — மத்துக்காகவாம்; அம்மனே — என்ன ஆச்சரியம்!

வ்யா:— (அடைந்ததரவணைமேல்) உகந்தார்க்குடம்பு கொடுப்பது. (ஐவர்க்காயித்யாதி) ஆஶ்ரிதர்க்காகத் தன்

அவ:— இவனைப் பற்றினார்க்குப் பாபபலமநுபவிக்க வேண்டுவது பாண்டவர்கள் தங்கள் சத்ருக்களைத் தாங்கள் நிரஸிக்குமன்றன்றோவென்கிறார்.

உரை:— பருவம் நிரம்பாதேயிருக்கச்செய்தே வாள் போலேயிருந்துள்ள எயிற்றையுடையளான பூதனையுடைய

என்று கூறுவது 'நெருப்பினால் நனைக்கிறான்' என்று சொல்லுவது போல் நடக்கமுடியாததொன்று என்றபடி. 27.

28. அவ:— இவனை அடைந்தவர்கள் துன்புறுவது, பஞ்ச பாண்டவர்களைத் தங்கள் சத்ருக்களைத் தாங்களே அழிக்க விட்டிருந்தாலன்றோ என்கிறார்.

வ்யா:— (அடைந்தது அரவணைமேல்) தான் அடைந்தவர்களுக்கு இவைபத்தையே அளிப்பவன் என்பது தோற்ற, தன் ஸ்பரிசத்தைப் பெற்றாலல்லது தரிக்கமாட்டாத திருவனந்தாழ்வானமேலே, அவனைப்

http://acharya.org

னுடம்பை அழியமாறி அம்பேற்பது. (உடைந்ததுவுமித்யாதி) பரிஹாரமின்றிக்கே ஒழிந்ததுவும் யசோதைப்பிராட்டிக்குப் பயப்பட்டு. (வாளெயிற்று இத்யாதி) பருவம் நிரம்பாதே யிருக்கச்செய்தே வாள்போலே யிருந்துள்ள எயிற்றையுடைய

பாலை வேற்று முலையென்று வாசியறிந்தமுதுசெய்து. ஜகத்துக்கொரு சேஷியைத்தந்த உபகாரகனானவன். தன்னை லல்லது செல்லாத திருவனந்தாழ்வானாகிற படுக்கையின் மேலேயாய்த்து தன் செல்லாமை தோற்றப்பள்ளி கொண்டருளிற்று. ஆஶ்ரிதரான த$_4$ர்மபுத்ராதி$_3$களுக்காக அவர்கள் வெறுவியரானவன்று தன்னையழியமாறி மேன் மேலென நெருங்கி ப்ரவர்த்தித்தது பா$_4$ரதமாகிற கொடிய

பிரிந்தால் தான் தரிக்கமாட்டான் என்பது விளங்கும்படியாக எல்லாக்காலத்திலும் ஆதரத்தோடு பள்ளிகொண்டிருப்பது. அவதரித்த நிலையிலும் அடியார் துன்பம் தவிர்க்கத் தான் துன்புற்றானன்றோ என்கிறார் மேலே.— (ஐவர்க்காய் அன்று மிடைந்தது பாரத வெம்போர்) "க்ருஷ்ணாஶ்ரயா: க்ருஷ்ணப$_3$லா: க்ருஷ்ணநாதா$_2$ஶ்ச பாண்ட$_3$வா:" [கண்ணனையே பற்றுக்கொம்பாகவும், ப$_3$லமாகவும், ஸ்வாமியாகவும் கொண்டிருந்தவர்கள் பாண்டவர்கள்] என்கிறபடியே தன்னையே உபாயமாக உறுதிபூண்ட பஞ்சபாண்டவர்களுக்காக, அவர்கள் அனைத்தையுமிழந்து நின்றவன்று, ஸர்வேஶ்வரனான தான் தன் ஸ்வரூபத்தைத் தாழவிட்டுக் கொண்டு தூது நடந்தும், தேர்ப்பாகனாகியும், மார்பிலே அம்பேற்றும் இப்படி மேன்மேலே அவர்கள் காரியத்திலே நெருங்கி ஈடுபட்டதும் பாரதமாகிற கொடிய யுத்தம். இம்மட்டோ? (உடைந்ததுவும் ஆய்ச்சிபால் மத்துக்கே) தன் எதிரிகள் தனக்கு அஞ்சுவதுபோலே தான் அஞ்சிநடுங்கியதும் யசோதையாய்ச்சியினிடமுள்ள (தயிர் கடையும்) மத்துக்கேயாம். (அம்மனே!) இது என்ன ஆச்சரியம்! எத்தனை பெருமையுடையவன் இந்நீர்மைச் செயல்களைச் செய்தான்! அப்படிப்படிப்பட்ட பெருமைதான் யாது எனில்,— (வாள் எயிற்றுப்பேய்ச்சிபால் உண்டபிரான்) பருவம் நிரம்பாத பச்சிளங்குழந்தையாயிருந்தபோது, வாள்போலே கூரிய பற்களையுடைய பேயான பூதனையுடைய விஷங்கலந்த முலைப்பாலை, வேற்று முலை என்று வாசியறிந்து, விஷத்தோடு, பாலோடு, அவளுடைய உயிரோடு வாசியற அனைத்தையும் அமுதுசெய்து தன்னைமுடிக்க

http://acharya.org

பூதனையை முடித்த உபகாரகன் அநுகூலையாயிருப்பாளொரு இடைச்சிக்குப் பயப்பட்டு, பரிஹாரமின்றிக்கேயிருப்பதே! (அம்மனே) எத்திறம்! 28

29. பேய்ச்சிபா லுண்ட பெருமானைப் பேர்ந்தெடுத்து
ஆய்ச்சிமுலை கொடுத்தாள் அஞ்சாதே—வாய்த்த
இருளார் திருமேனி யின்பவளச் செவ்வாய்
தெருளா மொழியானைச் சேர்ந்து.

பேய்ச்சி—பூதனையினுடைய, **பால்**—முலைப்பாலை, **உண்ட**—அமுதுசெய்த, **பெருமானை**—ஸர்வேஶ்வரனாய், **வாய்த்த இருள் ஆர் திருமேனி**—பொருந்திய இருள்போன்ற திருமேனியையுடையவனாய், **இன் பவளம் செம் வாய்**—இனிய பவழம்போற்சிவந்த வாயையுடையவனாய், **தெருளா மொழியானை**—உருத்தெரியாத மழலைச் சொற்களைச் சொல்லும் சிறு குழந்தையான கண்ணபிரானை, **சேர்ந்து**—கிட்டி, **ஆய்ச்சி**—யசோதையானவள், **பேர்ந்து எடுத்து**—வாரியெடுத்தணைத்துக் கொண்டு, **அஞ்சாதே**—சிறிதும் பயப்படாமல், **முலை கொடுத்தாள்**—தன் முலையை உண்ணக் கொடுத்தாள்.

பூசல். யசோதைப்பிராட்டி பக்கலுண்டான மத்துக்கே யொக்கும் தனக்கு சத்ருக்கள் அஞ்சுமாப்போலே தான் அஞ்சி சிதிலனாயிற்றதுவும். அம்மே! இவன் வல்லபடி யென்னென்று வயிறு பிடிக்கிறார். 28.

நினைந்த அவனைமுடித்து உலகிற்கு ஸ்வஸ்தியான தன்னை நமக்குத் தந்த உபகாரகன் கிழர் இந்நீர்மைச்செயலைச் செய்தது. பருவம் நிரம்பாதபோது ஒரு பேய்ச்சியை முடித்தவன், ஓராய்ச்சிக்கு பயப்பட்டுச் செயலற்று நிற்பதே! சிலர்க்கு தூ3த்யஸாரத்2யங்களைச் செய்வதே! என்று வியப்புறுகிறார். ஆக அடியார்க்கு உடம்பு கொடுப்பவனாய், அவர்களுக்காகத் தன்னை அழியமாறிக் காரியம் செய்பவனாய், அவர்கள் கட்டினாலும், அடித்தாலும் எதுவும் செய்யமாட்டாதவனாய், அவர்களுடைய எதிரிகளை அவலீலையாகப் போக்குமவனான இவனை அடைந்தவர்களுக்கு எத்துன்பமும் நேரிடமேயில்லை என்று கூறிச் சென்ற பாசுரத்தை விளக்கினாராயிற்று.28.

http://acharya.org

அவ:-(பேய்ச்சிபால்) அச்சத்துக்கு இவனுக்கொப்பில்லாதாற்போலே ஸ்நேஹத்துக்கு யசோதைப்பிராட்டிக்கு ஒப்பில்லை என்கிறது.

வ்யா:— (பேய்ச்சிபாலுண்ட பெருமானை) பூதனையை முடித்தவனை. (வாய்த்த இருளார் திருமேனி இன்பவளச் செவ்வாய்) பூதனையுடைய மடியிலே ஸ்ரம்ஹரமான வடிவை

அவ:— ப்ரஸ்துதையான யசோதைப் பிராட்டியினுடைய ஸ்நேஹகுணங்களைச்சொல்லி அவளுமொருத்தியே! என்று கொண்டாடுகிறார்.

உரை:— பூதனைபக்கலுண்டான முலைப்பாலை உண்டு அவளை முடித்து, ஜகத்துக்கு சேஷியான தன்னையுண்டாக்கித் தந்த உபகாரகனாய், அவள் மடியிலேயிருந்து முலையுண்கிற போது ஆகர்ஷகமாய்த் தோற்றுகிற அழகிய இருளோடொத்த திருமேனியையும், உகப்புத்தோற்ற ஸ்மிதம்

29. அவ:— சென்ற பாசுரத்தில் "உடைந்ததுவும் ஆய்ச்சி பால் மத்துக்கே" என்று யசோதைப்பிராட்டியிடம் இவன் பயப்பட்டதைப்பற்றிப் பேச்சு ஏற்படுகையாலே, "அவளிடம் அச்சமுடைமை விஷயத்தில் இவனுக்கு ஒப்பில்லாதாற்போலே, இவனிடம் அன்புடைமை விஷயத்தில் அவளுக்கு ஒப்பில்லை", என்று கூறி அவளுடைய குணத்திலே ஈடுபடுகிறார்.

வ்யா:— (பேய்ச்சி பால் உண்ட பெருமானை) தன்னைக்கொல்ல நினைத்த பூதனையாகிற பேய் மகளுடைய விஷங்கலந்த முலைப்பாலைத் தாய்ப்பால்போலே அமுதாக நினைத்து அமுதுசெய்து அவளை அழித்து, உலகிற்கு ஸ்வாமியான தன்னைத் தானே ரக்ஷித்துக்கொடுத்த உபகாரகனை. 'அப்போது இவன் இருந்த நிலைதான் என்னே!' என்று ஈடுபட்டு அந்நிலையை வருணிக்கிறார்.— (வாய்த்த இருளார் திருமேனி) இருளிலே ஒரு இருள் கலந்தாற்போலே அவளுடைய இருண்ட மேனியின்மேலே பொருந்தி நிற்கும் இருளன்ன மாமேனியை உடையவனாயன்றோ இருந்தான்! (திருமேனி) அடியார் களைப்பையாற்றும் திருமேனியாலே ஒரு

http://acharya.org

யுடையனாய், பவளம் போன்றிருந்துள்ள அத$_{4}$ரத்தை யுடையனாய். (தெருளாமொழியானைச் சேர்ந்து பேர்ந்தெடுத் தாய்ச்சி முலை கொடுத்தாளஞ்சாதே) பூதனைமுகத்திலே முக்$_{3}$த$_{4}$ஜல்பிதம் பண்ணுகிறவனைக்கிட்டிக் கால்நடைதந்தெடுத் துத் தாயானவள் அஞ்சாதே முலையைக் கொடுத்தாள். ஸ்வ

செய்த அழகிய பவளம்போன்ற சிவந்த திருவத$_{4}$ரத்தையு முடையனாய். அத்தசையில் அவள் முகத்தைப் பார்த்து "ஆச்சி ஆச்சி" என்றாற்போலே சொல்லுகிற அறிவு கலசாத முக்$_{3}$த$_{4}$ஜல்பிதங்களையுடையனுமானவனை. தாய் தன்னிடத்தினின்றும் போந்து கால்நடைதந்து வந்து கிட்டி யதா$_{2}$பூர்வம் ஸாத$_{3}$ரமாக எடுத்துக்கொண்டு ஸ்த்ரீத்வ ப்ரயுக்தமாயும். ஜந்மமடியாயும். வரக்கடவ ப$_{4}$யத்தை

பேய்ப் பிணத்தைத் தழுவுவதே! என்கிறார். இருளிலே இருள் கலந்தால் எவராலும் பிரித்தறிய முடியாதே? எனில், பிரித்தறிய லாம் இன்பவளச் செவ்வாயைக்கொண்டு என்கிறார்,— (இன்ப வளச் செவ்வாய்) அவள் மடியிலேயிருந்து முலையுண்ணும்போது உகப்புத்தோற்றப் புன்முறுவல் செய்யும் அழகிய பவளம்போன்ற சிவந்த அத$_{4}$ரங்களை (உதடுகளை) உடையவனாயிருந்தமையாலே இவனைப் பிரித்தறியலாம் என்று கருத்து. அவ்வாய்தான் வெறு மனேயிருந்ததோ? யசோதையிடம் பேசும் பேச்சை இவளிடம் பேசிக்கொண்டன்றோ இருந்தது! என்று ஈடுபடுகிறார் மேலே,— (தெருளாமொழியானை) அந்நிலையிலே பிணமான பேய்ச்சியான அவள் முகத்தைப் பார்த்து. யசோதைப்பிராட்டியிடம் பேசுவது போலே, "ஆய்ச்சி! ஆய்ச்சி!" என்றாற்போன்ற சிறுபிள்ளை மழலைப்பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருப்பதே! என்று ஆஶ்சர்யப் படுகிறார்.. (பேர்ந்து சேர்ந்து) தாயான யசோதைப்பிராட்டி கோரமான இந்த விருத்தாந்தத்தைக்கேட்ட பின்பும் தன் இடத்தி லிருந்து பதறி ஓடிவந்தாள். பிணத்திடம் பால்குடித்துக்கொண்டு மழலைபேசும் குழந்தையைக் கண்டபின்பும் அவனை அணுகினாள்! (எடுத்து) அணுகியபின்பும் இவளையறியாமல், அவளிடமே ஒட்டிக்கொண்டிருக்கும் அக்குழந்தையை எப்போதும்போல் அன் போடு எடுத்துக்கொண்டாள்! இத்துடன் நின்றாளோ? (அஞ்சாதே முலைகொடுத்தாள்) இத்தனை கோரக்காட்சிகளைக் கண்டபின்பு

http://acharya.org

நபத்தை அழியமாறி முலையைக் கொடுத்தாள். ஸ்த்ரீத்வ ப்ரயுக்தமிறே அச்சம். 29.

30. சேர்ந்த திருமால் கடல்குடந்தை வேங்கடம்
நேர்ந்த வென்சிந்தை நிறைவிசும்பும்—வாய்ந்த
மறைபாடக மனந்தன் வண்டுழாய்க் கண்ணி
இறைபாடி யாய விவை.

கடல்-திருப்பாற்கடலென்ன. குடந்தை—திருக்குடந்தையென்ன. வேங்கடம்—திருவேங்கடமென்ன, நேர்ந்த என் சிந்தை—நேர்பட்ட எனது ஹ்ருதயமென்ன. நிறை விசும்பும்—நிறைவுடைய பரமபதமென்ன. வாய்ந்த மறை—வாய்ப்புடைய வேதமென்ன. பாடகம்—திருப்பாடகமென்ன. அனந்தன்—ஆதிசேஷனென்ன. ஆய இவை—ஆகிய இவை யெல்லாம். வண் துழாய் கண்ணி—அழகிய திருத்துழாய் மாலையை அணிந்துள்ள. திருமால் சேர்ந்த-ஸ்ரீமந்நாராயணன் பொருந்திக் காட்சிதரும். இறைபாடி—ராஜதானிகளாம்.

யுடையளன்றிக்கே. உண்ட நச்சுப்பாலுக்கு ப்ரத்யௌஷதமாக முலைகொடுத்தாள். கெட்டேன்! ஒருத்தியுடைய ஸ்நேஹமிருக்கும்படியே! என்று வித்தகராகிறார். 29.

அஞ்சி மயங்கி விழவேண்டியிருக்க, சிறிதும் பயப்படாமல், அவள் கொடுத்து அவனுண்ட விஷப்பாலுக்கு முறிவாகத் தன்னுடைய அமுதன்ன முலைப்பாலைக் கொடுத்தாள். இவ்வளவையும் செய்தவள் தான் யார்? (ஆய்ச்சி) ஓர் பெண்பிள்ளை; அதிலும் இடக்கையும், வலக்கையுமறியாத ஆயர்குலப் பெண்பிள்ளையன்றோ இவ்வருஞ்செயலைச் செய்தது! இவளை இவ்வருஞ்செயலைச் செய்ய வைத்தது இவளுக்கு இவனிடமுள்ள பரிவன்றோ! இப்படியும் பரிவுடையவளாய் ஒருத்தியிருப்பதே! என்று ஆஸ்சர்யப் படுகிறார். 29.

http://acharya.org

அவ:— (சேர்ந்த) அவன் ஸந்நிஹிதனாகையாலே ஸ்நேஹித்தாள்; இப்போது நமக்கு ஸந்நிஹிதனன்றேயென்னில்; அவன் ஸந்நிஹிதனான இடங்கள் சொல்லுகிறார்.

வ்யா:—(கடலித்யாதி) ஸ்வாமிக்குப்படைவீடான இவை ஶ்ரிய:பதிசேர்ந்த பாடியாய இவை. இறையாயதிருமால் சேர்ந்த என்னவுமாம். "சிந்தை" என்கையாலே இத்

அவ:— அன்று அங்ஙனே அவளொருத்திக்கும் எளியனான நிலை எல்லாக் காலத்திலும் எல்லார்க்குமுண்டாம்படி கோயில்களெங்கும் வந்து நின்றருளினபடியை அருளிச் செய்கிறார்.

உரை:— திருப்பாற்கடல், திருக்குடந்தை, திருமலை இவற்றிலுங்காட்டில் ஆதரிக்கும்படி நேர்பட்ட என்னுடைய ஹ்ருத₃யம். 'த்ரிபாத்₃விபூ₄தி' என்னும்படி பரப்பையுடைத்தாய், பரமாகாஶஶப்₃த₃வாச்யமான பரமபதம். அவனை

---

30. அவ:— அவன் அவளுக்கு அப்படி எளியனாயிருந்தபடியாலே அவள் அவனிடம் அப்படி அன்பு வைத்தாள்; நமக்கு அப்படி எளியனாகவில்லையே? என்னும் கேள்வியெழ, அதைவிட எளியனாயிருக்கும் இடங்களைச் சொல்லுகிறார்.

வ்யா:— "திருமால் சேர்ந்த கடல் முதலானவை இறைபாடி—ஸ்வாமியான அவனுக்கு ராஜதானி" என்றோ, "கடல்...இவை இறையாய திருமால்சேர்ந்த பாடி—ராஜதானி" என்றோ, கூட்டிப் பொருள் கொள்ளலாம். (திருமால் சேர்ந்த கடல்) "பஶ்யதாம் ஸர்வதே₃வாநாம் யயௌ வக்ஷ:ஸ்த₂லம் ஹரே:" [வி-பு] என்கிறபடியே பிராட்டி தனக்குப் பிறந்தவீடாகையாலே உரிமையோடு பிராட்டியும் பெருமாளும் குடியிருக்குமிடம். முதல் அந்வயத்தில் 'திருமால் சேர்ந்த' என்பதை, கடல் தொடங்கியுள்ள எல்லாவிடங்களிலும் கூட்டிக்கொள்ளலாம். (குடந்தை) ஆராவமுதையுடைய திருக்குடந்தை. (வேங்கடம்) ஸ்ரீநிவாஸன் வாழும் திருவேங்கடமாம் திருமலை. (நேர்ந்த என் சிந்தை) முன்னும்பின்னும் சொல்லப்படும் அனைத்தைக் காட்டிலும் தான் ஆதரிக்கும்படி நேர்பட்ட என்னுடைய ஹ்ருதயம். 'நேர்ந்த' என்கையாலே, "இவ்விடம் நேர்படுமோ?" என்று

http://acharya.org

[illegible]ருப்பதிகளிலே வந்திருக்கிறதெல்லாம் என் ஹ்ருதயத்
[illegible]ளே புகுருகைக்கென்கிறது. "வாய்ந்த மறை" என்றத்
[illegible]லே ப்ரமாணமான வேதத்திலே நின்றத்தோடு கண்ணாலே

[illegible]ளபடி ப்ரதிபாதிக்கவல்ல அழகிய வேதம், திருப்பாடகம்
[illegible]ழ்வாருகிற இத்திருப்பதிகளெல்லாம் அழகியதிருத்
[illegible]ய்மாலையாலே அலங்கரித்துக்கொண்டிருக்கிற ஸர்வ

[illegible] புக இடம்பார்த்துக்கொண்டே அவன் மற்ற இடங்களில்
[illegible]ருக்கிறான் என்று விளங்குகிறது. (நிறை விசும்பும்) பரம
[illegible]தனுமாற பரமாகாசமும். "பாதோ₃ऽஸ்ய விஶ்வாபூ₄தானி
[illegible]ரு₃ஸ்யாம்ருதம் தி₃வி" [பு-ஸூ] [இவ்வுலகனைத்தும் அவ
[illegible] செல்வத்தில் கால்பகுதி; அவன் செல்வத்தில் முக்கால்
[illegible] அழியாததாய்ப் பரமபதத்தில் உள்ளது] என்கிறபடியே
[illegible]விலும் மும்மை பெரிதாகையாலே த்ரிபாத்₃விபூ₄தி எனப்
[illegible]தாய், குறைவாளர்கள் நிறைந்த இவ்வுலகைப் போலல்லாமல்
[illegible]டையவர்களே வாழப்பெற்றதாய், "பரமே வ்யோமந்"
[illegible]ரீயம்] என்கிறபடியே பரமாகாச சப்தத்தாலே உபனிஷத்
[illegible] சொல்லப்படும் பரமபதமும். எளிய இடங்கள் சொல்லும்
[illegible] அடைய அரிதான இதைச் சொல்லலாமோ? எனில்:
[illegible] விசும்பாகிற இதில் எப்படி அவன் நிறைந்திருக்கிறானோ,
[illegible]யே மற்றவிடங்களிலும் பூர்ணனாயிருக்கிறான் என்று
[illegible]கைக்காகச் சொல்லுகிறது. (வாய்ந்த மறை) மனிதனால்
[illegible]பெற்ற நூல்களைப்போலே இருள் துயக்குமயக்குமறப்புக்
[illegible] இடமில்லாமல், அவனை உள்ளபடி சொல்லும் வாய்ப்
[illegible] அபௌருஷேயமான வேதம். "வாய்ந்த மறை" என்கை
[illegible]ரமாணமான வேதத்தில் நின்றதோடு, கண்ணாலே காணப்
[illegible] திருப்பதிகளோடு வாசியறத் தமக்கு ஏகரீதியாக ஸேவை
[illegible]யைக் காட்டுகிறார். (பாடகம்) பாண்டவ தூதனாய்
[illegible]ளியிருக்கும் திருப்பாடகமும். (அனந்தன்) ஆதிசேஷ
[illegible] படுக்கையும். "சென்றால் குடையாம்" [முதல்திருவ 53]
[illegible]டியே இவன் எங்கு சென்றாலும் தொடர்ந்து இவனுக்கு
[illegible]மாயிருப்பவனாகையாலே திருப்பாற்கடலை எடுத்ததோடு
[illegible]யாமல் தனியே எடுக்கிறார். (வண்டுழாய்க்கண்ணி)
[illegible]கை துழாய்மாலை. "துளஸீகானநம் யத்ர தத்ர ஸந்நிஹிதோ
[illegible] [துளஸிகானனம் இருக்குமிடமெல்லாம் ஹரி இருக்கிறான்]

http://acharya.org

காணப்படுகிற திருப்பதிகளோடு வாசியற இவர்க்கு ப்ரகாசமாயிருக்கிறபடி. 30.

31. இவையவன் கோயில் இரணியன தாகம்
அவைசெய் தரியுருவ மாஞன்—செவிதெரியா
நாகத்தான் நால்வேதத் துள்ளான் நறவேற்றுன்
பாகத்தான் பாற்கட லுளான்.

இரணியனது—ஹிரண்யாஸுரனுடைய. **ஆகம்**—மார்பை. **அவைசெய்து**—பலபிளவாக்கிடுவதற்காக. **அரி உருவம் ஆனன்**—நரசிங்கமாக அவதரித்தவனும். **செவி தெரியா நாகத்தான்**—கண்ணையே செவியாகவுடையனுகையாலே தனிப்பட செவிதெரியாமலிருக்கிற திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவனும். **நால்வேதத்து உள்ளான்**-நான்கு வேதங்களுக்கும் உள்ளேயிருப்பவனும். **நறவு ஏற்றுன் பாகத்தான்**—தேன்போன்ற கங்கையை ஏற்றுக்கொண்டவனை ருத்ரனைத் திருமேனியின் ஒரு பாதியிலே உடையவனும். **பாற்கடலுளான்**—திருப்பாற்கடலில் பள்ளிகொள்பவனுமான. **அவன்**—அப்பெருமானுடைய. **கோயில் இவை**—கோயில்கள் கீழ்ப்பாட்டில் சொன்ன திருப்பதிகளாம்.

ஸ்வாமியான ஸ்ரிய:பதி அத்யபிநிவிஷ்டனுய்ச் சேர்ந்து வர்த்திக்கிற ராஜதாநியாயிருக்கும். 30.

என்கையாலே இதையும் தனியே எடுக்கிருர். அன்றிக்கே, இருப்பிடங்களை அனந்தனேடு நிறுத்தி, 'வண்டுழாய்க்கண்ணி இறை' என்று கூட்டிப்பொருள் கொள்ளவுமாம். (ஆய இவை) முற்கூறிய அனைத்தும். (வண் துழாய்க்கண்ணி இறை திருமால்சேர்ந்த பாடி) அழகிய திருத்துழாய் மாலையாலே அலங்கரித்துக்கொண்டிருப்பவனுய், அதனலேயே ஸர்வஸ்வாமியென்று பறைசாற்றிகொண்டிருப்பவனுன திருமால் மிகவும் ஆதரத்துடன் சேர்ந்து வாழ்கிற ராஜதானிகளாயிருக்கும். ஆக, இவன் எளியனுக வாழும் இடங்களைக் காட்டினராயிற்று. 30.

http://acharya.org

வ்யா:—(இரணியனித்யாதி) உபசயாத்மகமான ஹிரண்ய னுடைய சரீரத்தைப் பலவாகச்செய்து ஸிம்ஹரூபியானன்.

அவ:—"இவ்விவ்விடங்களிலே வந்துநிற்கிறவன் ஆஶ்ரித விரோதி₄களைப்போக்கி. து₃ர்மானிகளோடும் புறையறக் கலக்கும் ஶீலவான் கிடீர்" என்கிறார்.

உரை:— அவனுகந்து நித்யவாஸம் பண்ணுகிற ஸ்த₂லங் களாயிருக்கும் கீழ்ச்சொன்ன இந்தத் திருப்பதிகளெல்லாம். ஹிரண்யனுடைய முரட்டுடம்பை சி₂ன்னபி₄ன்னமென் னும்படி பல கூறும்படிபண்ணி. அவன் வரத்துக்குள்ளடங்

31. அவ:—"இவ்விடங்களிலே வந்து நிற்பவன் அடியார்களின் விரோதிகளைப் போக்குகிறவனாய், து₃ரஹங்காரமுடையவர்களோடும் ஒருநீராகக் கலக்கும் சீலகுணமுடையவனாயிருப்பவனன்றோ!" என்கிறார்.

வ்யா:— (இவை அவன் கோயில்) கீழ்ச்சொன்ன இந்தத் திருப்பதிகள் எல்லாம் அவன் உகந்து என்றும் வாழும் இருப் பிடங்களாயிருக்கும்; அவனிருந்து அரசாட்சி செலுத்தும் ராஜ தா₄னிகளாயிருக்கும் என்றார் சென்ற பாசுரத்தில்; அவன் உகந்து வாழும் இருப்பிடங்களாயிருக்கும் என்கிறார் இப்பாசுரத்தில். ஆகை யாலே புநருக்தியில்லை. அன்றிக்கே, "இத்தனையிடங்களில் அவன் நமக்காக நித்யவாஸம் செய்யும்போது, அவனைக் கைவிட்டுவிடாதே கிடாய்!" என்று தம் நெஞ்சுக்கு வலியுறுத்துவதற்காக மறுபடியும் கூறுகிறார் என்றும் கொள்ளலாம். "இவை அவன் கோயில்' என்று ஒரு வாக்யமாகவும், மேல் உள்ளதெல்லாம் ஒரு வாக்ய மாகவும் கொள்ளலாம். அன்றிக்கே, "இரணியனதாகம்...அரி யுருவமானன்...பாற்கடலுளான் அவன் கோயில் இவை" என்று ஒரே வாக்யமாகவும் கொள்ளலாம். "இரணியனதாகம்" என்று தொடங்கி, அவனுடைய ஆஶ்ரிதவிரோதி₄ நிரஸநஸ்வபா₄வத்தை யும், ஆஶ்ரிதரக்ஷணஸ்வபா₄வத்தையும் அநுப₄விக்கிறார்: (இரணி யனதாகம் அவைசெய்து அரியுருவமானன்) தின்று கொழுத்து வளர்ந்திருந்த இரணியனுடைய முரட்டு உடம்பைப் பலகூறாகச் செய்வதற்காக, அவன் வரத்துக்குள் அடங்காத நரசிங்கவுருக் கொண்டான். 'அது' என்னும் நிலைபோய் 'அவை' என்னும் நிலைவரும்படி சி₂ன்னபி₄ன்னமாகக் கிழிக்கையாலே 'அவை செய்து' என்கிறார். அரியுருவமானதற்கும், அவனுடம்பைக் கிழித்ததற்குப்

http://acharya.org

(செவிதெரியாநாகத்தான்) ஒரு இந்த்$_3$ரியத்தாலே எல்லா வற்றையும் க்$_3$ரஹிக்குமவன். சக்ஷுஶ்ஶ்ரவாவிறே. (நால் வேதத்துள்ளான்) நாலு வேதங்களாலும் ப்ரதிபாதி$_3$க்கப் பட்டவன். (நறவேற்றான்பாகத்தான்) நறவையேற்றவன்.

காத நரஸிம்ஹரூபியானவனாய், சக்ஷு:ஶ்ரவாவாகையாலே சக்ஷுரிந்த்$_3$ரியங்கொண்டே ஶ்ரோத்ரேந்த்$_3$ரிய கார்யமும் கொள்ளவல்லவனாகையாலே செவியால் தெரியும் தெரிவின்றிக்கேயிருக்கிற திருவனந்தாழ்வானுடைய திருமேனியிலே நிரந்தரஸம்ஶ்லேஷம்பண்ணி வர்த்திக்குமவனாய் நிர்த்தோ$_3$ஷ ப்ரமாணமான நாலு வேதங்களுக்கும் ப்ரதிபாத்$_3$யனாய்

இடைவெளி அதிகமில்லாமை தோற்றுவதற்காக ‘அவை செய்து அரியுருவமானான்’ என்று முன்பின்னாகக் கூறுகிறார். இத்தால் இவனுடைய ஆஶ்ரிதவிரோதி$_4$நிரஸநஸ்வபா$_4$வத்வம் கூறப் பட்டது. இனி, ஆஶ்ரிதஸம்ஶ்லேஷஸ்வபா$_4$வத்வமும், ஆஶ்ரிதரக்ஷண ஸ்வபா$_4$வத்வமும் கூறப்படுகின்றன. (செவிதெரியா நாகத்தான்) ‘‘ சக்ஷு:ஶ்ரவா: ’’ [கண்ணையே செவியாக உடையவன்] என்று வடமொழியிலும், ‘கட்செவி’ என்று தமிழிலும் பாம்புக்குப் பெய ருண்டாகையாலே, கண்ணைக்கொண்டே காதின் காரியமான கேட்டலையும் செய்யக்கூடியவனாகையாலே, செவியால் தெரியும் தெரிவு (அறிவு) இல்லாதவனான திருவனந்தாழ்வான் ‘செவி தெரியா நாகம்’ எனப்படுகிறான்; அவனுடைய திருமேனியை எப் போதும் உகந்திருப்பவனாகையாலே ‘செவிதெரியா நாகத்தான்’ எனப்படுகிறான் ஸர்வேஶ்வரன். (செவிதெரியா நாகம்) ‘‘ஸ ஶ்ருணோத்யகர்ண:’’ [அப்பரம்பொருள் காதில்லாமலே கேட்கக் கூடியது] என்ற பரமனை ஒருபுடை ஒத்திருப்பவன். (நாகத்தான்) இத்தால் இவனுடைய ஆஶ்ரிதஸம்ஶ்லேஷஸ்வபா$_4$வத்வம் சொல்லப் பட்டது. ‘‘ செவிதெரியானாகத்தான் ’’ என்று பாடங்கொண்டு, செவிதெரியானை திருவனந்தாழ்வானின் ஆகத்திலே - திருமேனி யிலே இருப்பவன் என்று பொருள் கொண்டார் அரும்பதவுரைகாரர். இவன் செவிதெரியா நாகத்தானாயிருக்கும்படியை எங்கே காண லாம் என்னில்,— (நால்வேதத்துள்ளான்) ‘‘அமிதௌஜா: பர்யங்க:’’ [கௌஷிதகீ] [அளவற்ற பலத்தையுடைய அனந்தன் பரம் பொருளுக்குப் படுக்கையாவன்] முதலானவிடங்களில் குற்ற மற்ற ப்ரமாணமான நாலு வேதங்களிலும் இவனுடைய ஆஶ்ரிதஸம்ஶ்லேஷஸ்வபா$_4$வத்வம் பேசப்பட்டது என்று கருத்து.

http://acharya.org

நறவையும் ஏற்றையுமுடைய ருத்ரனுக்குத் திருமேனியிலே இடங்கொடுத்த ஶீலவான். (பாற்கடலுளான்) திருப்பாற் கடலிலேயுள்ளவன். (இவையவன்கோயில்) கீழ்ச்சொன்னவை. நெஞ்சை வருந்தியநுவர்த்தித்தபடி. 31.

வர்த்திக்குமவனாய். ஹேயமான மது₄வையும் ருஷப₄த்தையு முடைய து₃ர்மாநியான ருத்₃ரனைத் தன் திருமேனியின் ஒரு பார்ஶ்வத்திலே உடையனாகையாலே அத்யந்தம் ஸுஶீலனுமான ஸர்வேஶ்வரன் ப்₃ரஹ்மாதி₃களுக்கு ஆஶ்ரயணீயனாய்க்கொண்டு திருப்பாற்கடலிலே கண் வளர்ந்தருளினான். 31.

தன்னை ஒருபடி ஒத்திருக்கும் திருவனந்தாழ்வானோடு ஸம்ஶ்லேஷிப்பது ஒருபுறமிருக்கட்டும்; தன்னில் மிகத்தாழ்ந்தவனாய், தமோநிஷ்ட்ட₂னான உருத்திரனோடுகூடவல்லவா இவன் ஒருநீராகக் கலந்து பரிமாறுகிறான்! என்று ஈடுபடுகிறார் மேலே.—(நறவேற்றான் பாகத்தான்) தாழ்ந்தவனான கள்ளைக் கைக்கொண்டவனைத் தன் திருமேனியிலே ஒரு பகுதியிலே உடையவன், நறவு-கள்; அதை ஏற்றவன் நறவேற்றான். ஶ்மஶானத்தில் சாம்பலைப் பூசிக்கொண்டு கள்ளைக் கைக்கொண்டு கூத்தாடுவது உருத்திரனின் லக்ஷணமன்றோ. நறவு என்று தேனாய். தேன்போலினிய கங்கையைத் தலையில் ஏற்றவன் நறவேற்றான் என்று அரும்பதவுரைகாரர் பொருள் கொண்டார். நறவேற்றான் என்றது நறவையும் ஏற்றையும் உடையவன் என்றுமாம், ஏறு-மாடு. அறிவு மயக்கத்தை விளைக்கும் கள்ளைக் கைக்கொண்டு, அறிவுகேட்டுக்கு உதாரணமாக உலகில் கூறப்படும் மாட்டின்மேல் ஏறியிருப்பவனுக்குத் தன் அடியான் என்பதையே பார்த்துத் தன் அறிவுமயமான திருமேனியின் ஒரு பகுதியிலே இடங்கொடுப்பதே! இதுவும் ஒரு குணமே! என்று பெரியவன் தாழ்ந்தாரோடு ஒருநீராகக் கலக்கையாகிற நீர்மைக்குணத்திலே ஈடுபடுகிறார். இத்தகைய சீலமெல்லையிலான் க்ஷுத்ரப்ரயோஜனங்களைப் பெற்றுப்போகைக்கு வரும் பிரமன் முதலானார்க்கு முகம் காட்டுவதற்காகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறான் என்கிறார்.—(பாற்கடலுளான்) க்ஷுத்₃ரப்ரயோஜனங்களைப் பெறுவதற்காவது தேவர்கள் தன்னிடம் வரமாட்டார்களா! என்று எதிர்பார்த்துக் கொண்டு கூப்பீடுகேட்டுமிடமான திருப்பாற்கடலிலே சயனித்திருப்

32\. பாற்கடலும் வேங்கடமும் பாம்பும் பனிவிசும்பும்
நூற்கடலும் நுண்ணூல தாமரைமேல் — பாற்பட்
டிருந்தார் மனமும் இடமாகக் கொண்டான்
குருந்தொசித்த கோபாலகன்.

குருந்து—குருந்த மரத்தை. ஒசித்த—முறித்தொழித்த **கோபாலகன்** — ஆநிரைகாக்கும் கண்ணபிரான். **பால் கடலும்**- திருப்பாற்கடலையும், **வேங்கடமும்**— திருமலையையும். **பாம்பும்**- திருவனந்தாழ்வானையும், **பனி விசும்பும்**—(ஸம்ஸார தாபங்கள் தட்டாமல்) பனிபோல் குளிர்ந்திருக்கிற பரமபதத்தையும், **நூல் கடலும்**—கடல்போற் பரந்த ஶ்ருதி முதலிய ஶாஸ்த்ரங்களையும், **நுண் நூல தாமரை மேல்பால் பட்டிருந்தார் மனமும்**— ஸூக்ஷ்மமான அந்த ஶாஸ்த்ரங்களால் சொல்லப்பட்ட ஹ்ருதயகமலத்திலே இந்திரியங்களெல்லாம் ஊன்றியிருக்கும்படி யோகத்தில் நிலைநின்ற யோகிகளினுடைய நெஞ்சையும். **இடம் ஆக கொண்டான்**—இருப்பிடமாகக்கொண்டிருக்கிறான்.

வ்யா:— (பாற்கடலித்யாதி) (நூற்கடலும்) இதிஹாஸ புராணங்களாகிற கடலும். (நுண்ணூலித்யாதி) இதிஹாஸ

அவ:— "இப்படி ஶீலவானான அவன் எழுந்தருளியிருக்குமிடங்களுக்கு ஓரெல்லையில்லை" என்கிறார்.

உரை:— குருந்தத்தை அநாயாஸேந முறித்துப் பொகட்ட கோபகுலேऽவதீர்ணனான க்ருஷ்ணன்; திருப்பாற்

பவன். இத்தனையிடங்களில் இவ்வளவு சீலகுணமுடையவனாய் அவன் நமக்காக உகந்துவாழும்போது, நெஞ்சே! நீ அவனைக் கைவிட்டுவிடலாமோ? என்று கருத்து. 31.

32\. அவ:— கீழ்ச்சொன்ன இடங்கள் மாத்திரமோ? பரம ஸௌஶீல்யகுணமுடையவனாய் அவன் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்கு ஓர் எல்லையில்லை என்கிறார்.

வ்யா:— (குருந்து ஒசித்த கோபாலகன்) அஸுரனால் ஆவேஶிக்கப்பட்டிருந்த குருந்தமரத்தை விளையாட்டாக முறித்துப்போட்டு,

http://acharya.org

புராணங்களிலே ஹ்ருதயகமலமென்று சொல்லப்படுகிறதின் மேலே வைக்கப்பட்ட இந்த்ரியங்களையுடையவர்களுடைய மநஸ்ஸைத் தனக்கிருப்பிடமாகக்கொண்டான். (குருந்தொசித்த கோபாலகன்) விரோதியைப்போக்கி ஸௌலப$_4$்யனவன். இவனுடைய உண்மையெல்லாம் பரார்த்த$_2$மென்கிறது. 32.

கடலும். திருமலையும். திருவனந்தாழ்வானும், ஸம்ஸார வெக்காயந்தட்டாதபடி குளிர்த்திமிக்கு நிரதிஶயபோ$_4$க்$_2$யமான ஸ்ரீவைகுண்ட$_2$மும். ஶ்ருதிஸ்ம்ருத்யாதி$_3$களான ஶாஸ்த்ரஸமுத்$_3$ரமும், "**पद्मकोशप्रतीकाशं हृदयं चाप्यधोमुखम्**" "**பத்$_3$மகோஶப்ரதீகாஶம் ஹ்ருத$_3$யம் சாப்யதோ$_4$முக$_2$ம்**" *என்று அதிஸூக்ஷ்மமான வேதாந்த ஶாஸ்த்ரஸித்$_3$த$_4$மான ஹ்ருதயகமலத்தின்மேலே ஸமஸ்தகரணங்களும் ப்ரவணமாம்படி யோகத்திலே ஸுப்ரதிஷ்டி$_2$தராயிருக்கிற பரமயோகிகளுடைய மனஸ்ஸுமாகிற இவ்விவஸ்த$_2$லங்களை அபி$_4$மதமான இருப்பிடமாகக் கொண்டான். 32.*

பசுக்களைக் காப்பாற்றவே ஆய்க்குலத்தில் அவதரித்த கண்ணன். திருவாய்ப்பாடியில் முளைக்கும் பூண்டுகளெல்லாம் அஸுராவிஷ்டமாயன்றோ இருந்தன. இப்படி ஆஶ்ரிதவிரோதி$_4$களை நிரஸிப்பதையே இயல்வாகக்கொண்டவன் நித்யவாஸம் செய்யும் இடங்களைச் சொல்லுகிறார் பாசுரத்தின் எஞ்சிய பகுதியாலே.— (பாற்கடலும்) கூப்பீடு கேட்குமிடமான திருப்பாற்கடலையும். (வேங்கடமும்) கானமும் வானரமும் வேடுமுடையதாய், மந்திகளோடு வானவர்கள் சந்திசெய்ய நிற்பதான வேங்கடத்தையும். '(பாம்பும்) 'செ[illegible]ருல் குடையாம்' என்ற பாசுரத்தின்படியே ஒழிவில்காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யும் திருவனந்தாழ்வானையும். (பனி விசும்பும்) ஸம்ஸாரத்திலுள்ள தாபத்ரயங்களாலும் தொடப்படாததாகையாலே, பனிபோலே தண்மைமிக்கு மிக இனிதாய் விளங்கும் பரமாகாஶமெனப்படும் பரமபதத்தையும்: (நூற்கடலும்) ஶ்ருதி, ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள், புராணங்கள் ஆகிய கடல்போன்ற சாஸ்திரங்களையும். (நுண்ணூல தாமரைமேல் பால்பட்டிருந்தார் மனமும்) அதிஸூக்ஷ்மமான அந்த ஶாஸ்திரங்களிலே "பத்$_3$மகோஶப்ரதீகாஶம் ஹ்ருத$_3$யம் சாப்யதோ$_4$முக$_2$ம்"

http://acharya.org

33. பாலகனுய் ஆலிலேமேல் பைய உலகெல்லாம்
மேலொருநா ளுண்டவனே மெய்ம்மையே—மாலவனே
மந்தரத்தால் மாநீர்க்கடல் கடைந்து வானமுதம்
அந்தரத்தார்க் கீந்தாய்நீ யன்று.

மேல் ஒரு நாள்—முன்ெருரு காலத்தில். **பாலகன் ஆய்**—சிறு குழந்தை வடிவமுடையவனுகி. **ஆல் இலே மேல்**—ஆலந்தளிரிலே. **உலகு எல்லாம்**—உலகங்களேயெல்லாம். **பைய**—மெல்ல. **மெய்ம்மையே**—உண்மையாகவே. **உண்டவனே**—அமுதுசெய்து கிடந்தவனே!. **மாலவனே**—மிகப்பெரியவனே! **நீ**—இப்படிப்பட்ட நீ. **அன்று**—அன்ெருருநாள். **மந்தரத்தால்**—மந்தரமலேயைக் கொண்டு. **மா நீர் கடல் கடைந்து**—மிகுந்த நீரையுடைய கடலேக் கடைந்து, **வான் அமுதம்**—சிறந்த அமிருதத்தை. **அந்தரத்தார்க்கு**—தேவர்களுக்கு. **ஈந்தாய்**—அளித்தாய்.

அவ:— இப்படியிருக்கிறவன் அபேக்ஷித்தார் அபேக்ஷிதத்தையெல்லாம் கொடுக்குமவன் கிடீரென்கிருர்.

[தை-நா] [தலேகீழாயிருக்கும் தாமரைபோன்ற இருதயம்] முதலான இடங்களிலே இருதயகமலம் என்று கீர்த்திக்கப்படும் நெஞ்சத் தாமரையின்மேலே தம்முடைய எல்லா இந்திரியங்களும் ஈடுபடும்படி யோகாப்யாஸத்திலே நிலேநிற்கும் பரமயோகிகளுடைய மனத்தையும். (இடமாகக்கொண்டான்) தான் மிகவிரும்பும் இடங்களாகக் கொண்டவன். இத்தனேயிடங்களில் தன்னேப் பிறர்க்கேயாக்கிக் கொண்டு அவன் வாழும்போது அவனுடைய எளிமையில் ஐயமுற இடமில்லே என்று கருத்து. 32.

33. அவ:— எளியவனுயிருக்கட்டும்; ' நாம் விரும்புகிறவற்றை நமக்கு அருளுவானே? எனில்: நாம் விரும்பாமலிருந்தகாலத்திலும் நமக்கு நன்மை செய்தவனுய், தாழ்ந்த பொருள்களே விருப்புகிறவர்களுக்கும் உடம்புநோவக்காரியம் செய்து விருப்பத்தையெல்லாம் அளிப்பவனுயிருப்பவனன்ருே அவன் என்கிருர்.

http://acharya.org

வ்யா:—(பாலகனித்யாதி) ஒரு பவனுயிருப்பதோராலிலையின் மேலே பருவம் நிரம்பாப் பிள்ளையாய். (மேலொருநாளுலகெல்லாம் பைய உண்டவனே) லோகங்களையெல்லாம் நோவுபடாமல் மெள்ளத் திருவயிற்றிலே வைத்தவன். (மெய்ம்மையே)ஐந்த்ரஜாலிகரைப்போலேயன்றிக்கே ஸத்யமே.

உரை:— *தனக்குச்சிலர் பரியவேண்டும்படி முக்3த4ஸௌ-வான விக்ரஹத்தையுடையனாய்க் கொண்டு பவனுயிருப்பதோராலந்தளிரின்மேலே பூர்வகாலத்திலே லோகங்களெல்லாவற்றையும் நெருக்குப்படாதபடி மெள்ள இந்த்3ரஜாலமாகவன்றிக்கே பரமார்த்த2மாகத் திருவயிற்றிலே வைத்து நோக்கினவனாய். இந்த அக4டிதக4டனாஸாமர்த்2யத்தாலே ஸர்வாதிகனென்று தோற்றவிருக்கிறவனே! ஏவம்வித4மான ஸக்திமாஹாத்ம்யத்தையுடையநீ. தேவர்கள், "சாகாமைக்கு*

வ்யா:— (பாலகனாய்) 'இப்பச்சிளங்குழந்தை ப்ரளயஜலத்தின் நடுவில் ஓராலிலையிலே கரணம் தப்பினால் மரணமாம்படி கண் வளருவதே' என்று தனக்குச் சிலர் பரியவேண்டும்படி பச்சிளங்குழந்தையின் வடிவையுடையவனாய். (ஆலிலைமேல்) அன்றே துளிர்விட்ட ஆலந்தளிரின்மேலே கிடந்து. (மேலொருநாள்) நம் ரக்ஷணத்தை நாம் விரும்பாமலிருந்த காலத்திலேயன்றோ நம்மை ரக்ஷித்தது. (உலகெல்லாம் உண்டவனே!) ஒருபொருள் புறப்பாடின்றி உலகனைத்தையும் தாயிருக்கும்வவண்ணமே வயிற்றிலே வைத்து ரக்ஷித்தவனல்லோ நீ! உருத்திரனைப்போலே கோரஸம்ஹாரதாண்டவமாடி உலகை நொறுக்குகிறவனன்றே! (பைய உண்டவனே!) அப்படி வயிற்றிலே வைக்கும்போதும் நெருக்குண்டு நோவுபடாதபடி மெள்ளத் திருவயிற்றிலே வைத்தவனே! (மெய்ம்மையே உண்டவனே!) இந்திரஜாலம் செய்பவரைப்போலே பொய்த்தோற்றமாயிராமல், உண்மையிலேயே உலகனைத்தையும் சிறிய திருவயிற்றிலே அடக்கியவனே! (மாலவனே!) இந்த அக4டிதக4டநாஸாமர்த்2யத்தாலே,. தன் வயிற்றில் புகுந்த நெற்றிமேல்கண்ணனும், நிறைமொழிவாய் நான்முகனும், நீண்ட நாலவாய் ஒற்றைக்கை வெண்பகட்டின் ஒருவனையும் உள்ளிட்ட அமரரையுங்காட்டிலும் தானே சிறந்த பரம்பொருள் என்பது தோற்ற நிற்பவனே! மால்—பெரியவன். இப்படி நாம் ரக்ஷணத்தை விரும்பாமலிருந்தவன்று

http://acharya.org

(மாலவனே) ப்ராணனைக்கொடுக்கவல்ல மிடுக்கையுடைத் தான அம்ருதத்தை. (அந்தரத்தித்யாதி) ஆகாசத்தே நிற்கிற வர்களுக்குக் கொடுத்தாய் நீ அன்று. 33.

34. அன்றிவ்வுலகம் அளந்த வசவே கொல்
நின்றிருந்து வேளுக்கை நீணகர்வாய்—அன்று
கிடந்தானைக் கேடில் சீரானை முன்கஞ்சைசக்
கடந்தானை நெஞ்சமே காண்.

மருந்து தேடிக்கரவேணும்'' என்று அர்த்திதவன்று மந்தரபர்வதத்தாலே, மிக்க ஜலத்தையுடைத்தான திருப் பாற்கடலைக் குளப்படி போலே கலக்கி. உடம்பைப்பூண்கட் டிக்கொடுக்கு முரப்பையுடைத்தான அம்ருதத்தை ஸ்வர்க்க வர்த்திகளான தேவர்களுக்குக் கொடுத்தருளினாய். 33.

நம்மை வயிற்றிலே வைத்து ரக்ஷித்ததோடல்லாமல், தன்னை விரும் பாமல் தாழ்ந்த பொருள்களை விரும்புவார்க்கும் உடம்பு நோவக் காரியம் செய்து விரும்பியதைக் கொடுப்பவனன்றோ என்கிறார் மேலே.—(நீ) இத்தகைய சக்திப்பெருமையை உடைய நீ. (அன்று) தேவர்கள் 'சாகாமைக்கு மருந்தான அமுதத்தைத்தரவேணும்' என்று உன்னை வேண்டிய அன்று. உயிர் சாகாமைக்கு மருந்தான உன்னை விட்டு, உடம்பு சாகாமைக்கு மருந்தொன்றைக் கேட்ட அன்று. (மந்தரத்தால் மாநீர்க் கடல் கடைந்து) தன் பெரும் சக்தியாலே, மந்தர மலையாலே மிகுந்த ஜலத்தையுடையதான திருப்பாற்கடலை ஒரு குளம்படியைப்போலே கலக்கி. (வானமுதம் அந்தரத்தார்க்கீந்தாய்) உடம்பைப் பூண்கட்டித்தரும் உரப்பு, செத்தவர்களுக்கும் ப்ராணனைக் கொடுக்கவல்ல பெருமை முதலான சிறப்புக்களைப் பெற்றிருக்கும் அமுதத்தை ஆகாசத்திலுள்ள ஸ்வர்க்கவாஸிகளான தேவர்களுக்குக் கொடுத்தாய்! வான்—சிறந்த. அந்தரம்— ஆகாசம்; (இங்கு) ஆகாசத்திலுள்ள ஸ்வர்க்கம். அந்தரத்தார்—ஸ்வர்க்கவாஸிகளான தேவர்கள். இப்படிப்பட்டவன் தாம் விரும்பியதைக் கொடுக்காமலிருப்பனோ? என்று கருத்து. 33.

http://acharya.org

நெஞ்சமே—மனமே! அன்று—முன்பொருகாலத்தில். நின்று — நின்றுகொண்டே. இவ்வுலகம் — இவ்வுலகங்களை யெல்லாம். அளந்த—அளந்ததனாலுண்டான. அசவே கொல்—சிரமத்தினாலேயோ. வேளுக்கை — திருவேளுக்கையிலே. இருந்து—வீற்றிருந்து. நீள் நகர் வாய்—(திருவெஃகாவென்கிற) பெரிய திருப்பதியில். அன்று—ஒரு காலத்தில், கிடந்தானை-பள்ளிகொண்டவனாய். கேடு இல் சீரானை-ஒருநாளும் அழிவில்லாத கல்யாண குணங்களையுடையவனாய், முன்—முன்னொருகால். கஞ்சை—கம்ஸனை. கடந்தானை—கொன்றொழித்தவனான பெருமானை. காண்—அநுஸந்திப்பாய்.

அவ:—(அன்றிவ்வுலகம்) அவனுடைய ஸத்தை பரார்த்தமான பின்பு அவனைக்காண ஆசைப்படாய் என்று தம்முடைய நெஞ்சைக்குறித்துச் சொல்லுகிறார்.

வ்யா:— அன்றிவ்வுலகமளந்த அசைவேகொல் நின்றிருந்து வேளுக்கை நீணகர்வாய்க் கிடந்து. (கேடில் சீரானை)

அவ:— காஞ்சீபுரத்திலே பலதிருப்பதிகளிலும் நிற்பது. இருப்பது. கிடப்பதாகிற அவன்படியை அநுஸந்தித்து முன்பு திருவுலகளந்தருளினபோதை ஶ்ரமத்தாலே வந்ததாகக்கொண்டு அஞ்சுகிறார்.

உரை:—திருவேளுக்கையிலே எழுந்தருளியிருந்து. மஹா நகரமான திருவெஃகாவிலே சாய்ந்தருளினவனாய், நித்ய

34. அவ:— இவ்வண்ணமாகத் தன் ஸத்தாஸ்திதி ப்ரவ்ருத்திகளையெல்லாம் அடியார்க்காகவே அவன் ஆக்கிவைத்திருக்கும் போது. அவனிடத்தில் பரிவுகொண்டு அவனைக்காண ஆசைப் படவேண்டாவோ? என்று நெஞ்சைக்குறித்துச் சொல்லுகிறார்.

வ்யா:— (அன்று இவ்வுலகம் நின்று அளந்த அசவேகொல் அன்று வேளுக்கை இருந்து நீணகர்வாய்க்கிடந்தான்) நாம் அபேக்ஷியாமலிருக்கும்போதே நம்முடைய தலைகளிலே தன் திருவடியை வைத்துத் திருவுலகளந்தருளிய அன்று. 'இவ்வுலகத்தை நின்று கொண்டே அளந்த சிரமத்தினால்தானோ வேளுக்கையிலே இருப்பதையும். திருவெஃகாவாகிற பெரிய நகரத்திலே பள்ளி கொள்வதையும் செய்தான்? நீண்ட நேரம் நின்றுகொண்டே காடும் மேடுமான இவ்வுலகை அளந்த சிரமம் போவதற்காகவே காஞ்சீபுரத்திலே வேளுக்கையென்னும் திவ்யதேசத்திலேவீற்றிருப்பதையும்,

http://acharya.org

நித்யஸித்தமான கல்யாணகுணங்களையுடையவனை. (முன் கஞ்சைக்கடந்தானை நெஞ்சமே) கம்ஸன் நினைத்த வஞ்சனையை அவன்தன்னோடு போம்படி முடித்து உபகாரகனானவனை. பூமியடங்கலும் நின்றளந்த வருத்தத்தாலேயோ திருவெஃகாவில் கண்வளர்ந்தருளுகிறதும். திருவேளுக்கையில் இருக்கிறதும் என்று நெஞ்சே! அநுஸந்தி. 34.

ஸித்தமான கல்யாண குணங்களையுடையனாய், முன்பொரு நாளிலே விரகிலே நலியப்பார்த்த கம்ஸனை முடித்துப் பொகட்டுத்தன்னை நோக்கித்தந்தவனை. நினைவற எல்லார் தலையிலும் திருவடிகளை வைக்கிறவன்று அநாயாஸேந நின்று காடுமோடையுமான இஜ்ஜகத்தை அளந்துகொண்ட அலசுதலாலேயோ இருப்பது கிடப்பதாகிறதென்று வயிறெரிச்சலாலே நெஞ்சே! அநுஸந்திக்கப்பார். 34.

திருவெஃகா என்னும் நீணகரிலே பள்ளிகொள்வதையும் செய்கிறானே? என்று பரிவு காட்டுகிறார்.

''தாளால் உலகம் அளந்த அசவே கொல்
வாளா கிடந்தருளும் வாய்திறவான்—நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணியான்
ஐந்தலைவாய் நாகத்தணை?'' [நான்-திருவ 35]

''நடந்த கால்கள் நொந்தவோ நடுங்கஞாலம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம்
கடந்த கால்பரந்த காவிரிக்கரைக் குடந்தையில்
கிடந்தவாறெழுந்திருந்து பேசுவாழிகேசனே!'' [திருச்சந்த61]

என்று திருமழிசையாழ்வாரும்,

''கொடியார் மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும்
மடியாதின்னே நீ துயில்மேவி மகிழ்ந்ததுதான்
அடியாரல்லல் தவிர்த்த அசவோ அன்றேல் இப்
படி தான் நீண்டு தாவிய அசவோ பணியாயே'' [திருவாய்8-3-5]

என்று நம்மாழ்வாரும் இப்பாசுரத்தையே அடியொற்றிப் பரிவு காட்டினார்களன்றோ. (இருந்துகிடந்தானை) இப்படித் திருப்பதிகளிலே களைப்பாற இருப்பதும் கிடப்பதும் செய்தவனை. (ஏடில் சீரானை) குற்றமற்றவையாய், அழிவில்லாதவையான கல்யாண குணங்களை உடையவனை. (முன் கஞ்சைக் கடந்தானை) முன்பொரு நாளிலே தன்னைப் பல வழிகளிலே கொல்லப்பார்த்த தீயபுந்திக் கஞ்சனை அழித்து, அவன் நினைவை அவனுக்கேயாம்படி செய்து தன்னை நமக்கு உபகரித்தவனை. (நெஞ்சமே காண்) நெஞ்சமே! இப்படிப் பரிவோடு அநுஸந்திக்கப்பார். 34.

http://acharya.org

35\. காண்காணென விரும்பும் கண்கள் கதிரிலகு
பூண்டாரகலத்தான் பொன்மேனி—பாண்கட்
டொழில்பாடி வண்டறையும் தொங்கலான் செம்பொற்
கழல்பாடி யாம்தொழுதும் கை.

கண்கள்—என்னுடைய கண்களானவை, **கதிர் இலகு**-ஒளிவிளங்கா நின்றுள்ள. **பூண்**—திருவாபரணங்களையும், **தார்**–மாலையையும், **அகலத்தான்**–திருமார்விலே உடையனை எம்பெருமானுடைய. **பொன் மேனி**—பொன்போன்ற திருமேனியை. **காண் காண் என விரும்பும்**—'காணவேணும் காணவேணும்' என்று ஆசைப்படாநின்றன; **வண்டு**—வண்டுகளானவை. **அறையும்**-ஒலிசெய்யப்பெற்ற. **தொங்கலான்**–மாலையையுடையனை அப்பெருமானுடைய, **தொழில்**–சேஷ்டிதங்களை, **பாண் கண் பாடி**—ராகத்திலே அமைத்துப் பாடி, **செம் பொன் கழல்**—சிவந்த பொன்போன்ற திருவடிகளை. **யாம்**—நாம். **கை**—கைகளினாலே. **பாடி தொழுதும்**—பாடி வணங்குவோம்.

அவ:— (காண்காணென) 'நெஞ்சமே! காண்'என்று உபதேசித்தார் கீழ். இந்த்ரியங்கள் தாம் முற்பட்டு இவரை மூட்டுமளவாயிற்று என்கிறது.

அவ:— "நெஞ்சமே காண்" என்று உபதேசித்து இவர் வாய்மூடுவதற்கு முன்னே சக்ஷுராதியான பாஹ்ய கரணங்கள் தாம் முற்பட்டுத் தம்மையும் ப்ரேரித்துக் கொண்டு அங்கே மேல்விழுகிறபடியைக்கண்டு ஆஶ்சர்யப் படுகிறார்.

35\. அவ:— சென்ற பாசுரத்தில் 'நெஞ்சமே காண்' என்று நெஞ்சுக்கு உபதேசித்து இவர் வாய்மூடுவதற்கு முன்னம் நெஞ்சுக்கு வசப்பட்ட கண் முதலான வெளியிந்திரியங்களுங்கூடத் தாமே முற்பட்டு, அவற்றுக்கு நியாமகரான தம்மையும் நியமித்துக் கொண்டு பகவத்விஷயத்திலே மேல்விழுகிறபடியைக் கண்டு ஆச்சர்யப்படுகிறார்.

http://acharya.org

வ்யா:— (கதிரிலகு பூண்டாரகலத்தான் பொன்மேனி காண்காணென விரும்பும் கண்கள்) ஒளிவிடாநின்ற ஹாரத்தையும் தாரையுமுடைத்தான திருமார்பையுடையவனுடைய ஸ்ப்ருஹணீயமான திருமேனியைக் கண்கள் காண்காணென விரும்பாநின்றது. (பாணித்யாதி) பாட்டிலே தொழிலுண்டாகப்

உரை:— என்னுடைய கண்களானவை புகர் ஒளிவிடாநின்றுள்ள ஆபரணங்களையும் திருமாலையையுமுடைத்தான அகன்ற திருமார்வையுடைத்தானவனுடைய பொன்மலை போலே ஸ்ப்ருஹணீயமான திருமேனியைக் காணவேணும் காணவேணுமென்று, க்ஷாமகாலத்தில் சிறுப்ரஜைகள் சோறு சோறு என்றலையுமாபோலே மிகவுமாசைப்படாநின்றன. பாட்டினிடத்திலே அவனுடைய திவ்யசேஷ்டிதங்களை வைத்துப்பாடி. மது₄பானமத்தமாய்க்கொண்டு

வ்யா:— (காண் காண் என விரும்பும் கண்கள்) எனக்கு வசப்பட்டு இருக்கவேண்டிய என் கண்கள், என்னையும் நியமித்துக்கொண்டு, சேதனஸமாதி₄யாலே 'பகவத்விஷயத்தைக் காணவேணும் காணவேணும்' என்று ஆசைபடத்தொடங்கின. (காண் காண் என விரும்பும்) பஞ்சகாலத்திலே சிறுகுழந்தைகள் 'சோறு சோறு' என்று அலைவதுபோலே, இவையும் உண்ணும் சோறுபருகுநீர் தின்னும் வெற்றிலையான பகவத்விஷயத்தைக் காண ஆசைப்படாநின்றன. அப்படி உண்ணும்சோறு முதலான வற்றைப்போலே ஆசைப்படக்கூடிய விஷயமோ அது? என்ன,- (கதிரிலகு பூண் தார் அகலத்தான பொன்மேனி) சுடர் ஒளிவிடும் திருவாபரணங்களையும், வைஜயந்தியெனும் வனமாலையையும் உடைய அகன்ற திருமார்பையுடைய பொன்மலைபோலே ஆசைப்படத்தக்க திருமேனியன்றோ அது; ஆகையாலே அதைக் காண் காண் எனக் கண்கள் விரும்பாநின்றன என்கிறார். இப்படிக் கண்கள் மாத்திரமல்ல; வாய் அவனைப் பாடவும், கை அவனைத் தொழவும் விரும்புகையாலே அவை சொல்லுகிறபடியும் நாம் கேட்போம் என்கிறார் பாசுரத்தின் எஞ்சிய பகுதியாலே,—(யாம்) இந்திரியங்களை நியமிக்கும் நிலைபோய், இந்திரியங்களால் நியமிக்கப்படும் நிலையை அடைந்த நாம். (பாண்கண் தொழில்பாடி) பாட்டினிடத்திலே அவனுடைய திவ்ய சேஷ்டிதங்களை வைத்துப் பாடி. (தொழில் பாடி) ஏறடர்த்ததும், ஏனமாய் நிலம் கீண்டதும்,

பாடி; பாண்தொழிலுண்டாகப்பாடியென்றுமாம். அவனுடைய தொழிலைப்பாட்டிலேவைத்துப் பாடியென்னவுமாம். (வண்டறையுந்தொங்கலான்) வண்டுகள் சப்தியாநின்றுள்ள மாலையையுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளைக் கையாலே தொழுவோம். 35.

வண்டுகள் சப்$_3$தி$_3$யாநின்றுள்ள திருமாலையாலே அலங்க்ருதனானவனுடைய. சிவந்த பொன்போலே அதிஸ்லாக்$_4$யமான திருவடிகளை நாம் வாயாரப்பாடி. கையாலே அத்யபி$_4$நிவேசமடங்கும்படி தொழுவோம். பாணென்று பாட்டாய். கண்ணென்று இடமாய். பாட்டினிடத்திலே தொழிலைவைத்துப்பாடியென்றபடி. அன்றிக்கே பாணென்று அழகாய் அழகிய தொழிலைப்பாடியென்னவுமாம். பாணருடைய தொழிலிலே-ரீதியிலே பாடியென்னுதல். பாட்டுக்களைத் தொழிலுடைத்தாம்படி பாடியென்னவுமாம். 35.

முன் இராமனாய் மாறடர்த்ததும், மண்ணளந்ததும்' [பெருமாள் திருமொழி 2-3] முதலான அவனுடைய ஆணைத்தொழில்களைப்பாடி. 'பாண்' என்று பாட்டு; 'கண்' என்று இடம். அப்படியல்லாமல், 'பாண்' என்று அழகாய், 'கண்' என்று இடமுடைமையாகிற பரப்பாய், அழகியதாய், மிகப்பரந்த அவனுடைய தொழிலைப் பாடி என்றும் பொருள் கொள்ளலாம். அப்படியுமல்லாமல், 'பாண் தொழில்கண் பாடி' என்று கூட்டி, பாணருடைய தொழிலிலே—வழியிலே பாடி என்றும் பொருள் கொள்ளலாம். அப்படியுமல்லாமல் (பாண் கண் தொழில் பாடி) என்று பாட்டினிடத்திலே தொழிலுண்டாகும்படி லக்ஷணமுண்டாகும்படியும், ஸ்வரமுண்டாகும்படியும்—பாடி என்றும பொருள்கொள்ளலாம். அப்படியுமல்லாமல் 'பாண் தொழில் கண் பாடி'. என்று, சிஷ்ட பரிக்$_3$ரஹத்தாலும், வகுத்த விஷயத்தின்ஸாகையாலும் பாடும் தொழில் ஸத்தைபெற்று நிறமும் பெறும்படி பாடி என்றும் பொருள் கொள்ளலாம். இப்படிச் சேஷ்டிதங்களைப் பாடுவதோடு வாய் திருப்தியடைந்துவிடுவதில்லை: அவன் திருவடிகளையும் பாடவைக்கிறது என்கிறார்,— (வண்டு அறையும் தொங்கலான் செம் பொன் கழல்பாடி) வண்டுகள் ஒலி செய்யும் திருமாலையை உடையவனுடையதாய், சிவந்ததாய் (அல்லது நேர்மையுடையதாய்), செம்பொன்போலே மிகச்சிறந்ததாய், ஆசைப்

http://acharya.org

36. **கைய கனலாழி கார்க்கடல்வாய் வெண்சங்கம்**
வெய்யகதை சார்ங்கம் வெஞ்சுடர்வாள்—செய்ய
படைபரவை பாழி பனிநீ ருலகம்
அடியளந்த மாய ரவர்க்கு.

பனி நீர் உலகம்— குளிர்ந்த நீரையுடைய கடல்சூழ்ந்த உலகங்களை. **அடி**–தனது திருவடிகளினலே. **அளந்த**–அளந்து கொண்ட. **மாயர் அவர்க்கு**— ஆச்சரியச் செய்கையை யுடையரான அப்பெருமாளுக்கு. **கைய**–கையிலுள்ள, **கனல் ஆழி**–சுடர்விடும் சக்கரமும், **கார் கடல் வாய் வெண் சங்கம்**—கருங்கடலில் தோன்றின வெளுத்த சங்கும். **வெய்ய**—வெம்மையுடைய, **கதை**–கதையும், **(வெய்ய)**—வெம்மையை யுடைய, **சார்ங்கம்**—சார்ங்க வில்லும், **வெம் சுடர் வாள்**—வெம்மையுடைய சுடரையுடைய நாந்தகவாளும் ஆகியவை, **செய்ய படை**—அழகிய திவ்யாயுதங்களாம்; **பரவை**–கடலானது, **பாழி**–படுக்கையாம்.

அவ:— "யாம் தொழுதும்" என்று மநோரதித்த படியே அநுபவிக்கிருர்.

படத்தக்கதான திருவடிகளை வாயாரப்பாடி. இங்கு திருவடிகளைச் சொன்னது திருமேனி, திவ்யதேசம் முதலானவற்றுக்கு உபலக்ஷணம். (பாடி) கண்களுக்கு இரையிட்டதுபோலே, வாய்க்கும் இரையிடக்கடவோம். (கை தொழுதும்) நம் ஆர்வமெல்லாம் அடங்கும்படி கையால் அவன் கழல்களைத் தொழுவோம். கண்களுக்கும், வாய்க்கும் இரையிட்டதுபோலே கைகளுக்கும் இரையிடுவோம். "வண்டு பாடி அறையும் தொங்கலானுடைய பாண்கண் தொழிலையும், செம்பொன் கழலையும் பாடிக் கை தொழுதும்" என்று கூட்டியும் பொருள் கொள்வாருண்டு. 35.

36. **அவ**:— சென்ற பாசுரத்தில் "பாடக்கடவோம்" என்று மநோரதித்தபடியே, அவனுடைய பெருமையைப்பாடி அநுபவிக்கிருர் இப்பாசுரத்தில்.

http://acharya.org

வ்யா:—(கைய கனலாழியித்யாதி.) (செயய படை கைய) இவை கையிலேயுள்ளன. "செய்ய" என்று ஆப₄ரணமான போது புகரைச் சொல்லுகிறது; ஆயுத₄மானபோது விதே₄ய மான ஆயுத₄ங்களைச் சொல்லுகிறது. (பரவை பாழி) திருப்

உரை:— குளிர்ந்த நீரையுடைத்தான கடல் சூழ்ந்த பூமியைத் திருவடிகளாலே அளந்துகொண்ட ஆஶ்சர்ய பூ₄தனை அந்த ஸர்வேஶ்வரனுக்கு ப்ரதிபக்ஷத்தின் மேலே நெருப்பையுமிழாநின்றுள்ள திருவாழி. கறுத்த நிறத்தை யுடைத்தான கடலிடத்தே பிறந்த வெளுத்த நிறத்தை யுடைத்தான ஸ்ரீபாஞ்சஜன்யம். வெவ்விதான ஸ்ரீக₃தை₃, அப்படியிருந்துள்ள ஸ்ரீஶார்ங்கம், வெவ்விய தேஜஸ்ஸை யுடைய திருக்குத்துடைவாள் இவையாகிற அழகிய திவ்யா

வ்யா:— (பனி நீர் உலகம் அடியளந்த மாயர் அவர்க்கு) குளிர்ந்த நீரை உடையதான கடல்சூழ்ந்த பூமியைத் திருவடி களாலே அளந்துகொண்ட ஆஶ்சர்யச்செயலையுடைய அந்த ஸர்வேஶ்வரனுக்கு. 'தொழில் பாடுவோம்' என்று சென்ற பாசுரத்தில் ஆசைப்பட்டதுபோலே அவனுடைய உலகளந்த தொழிலைப் பாடுகிறார். 'கழல்பாடி' என்று சென்ற பாசுரத்தில் ஆசைப்பட்டதுபோலே கழலாலே உபலக்ஷிதமான அவனுடைய திவ்யாயுதங்களை யுடைய திருமேனியையும், பள்ளிகொள்ளுமிடத்தை யும் பாடுகிறார் முதல் அடிகளாலே.— (கனல் ஆழி, கார்க்கடல் வாய் வெண் சங்கம், வெய்ய கதை, சார்ங்கம், வெஞ்சுடர் வாள் செய்ய படை கைய) எதிரிகளின்மேலே நெருப்பை உமிழும் ஸுத₃ர்ஶன சக்ரம், கறுத்த நிறத்தை உடைய கடலில் பிறந்த வெளுத்த நிறத்தையுடைய பாஞ்சசன்னியமாகிற சங்கு, எதிரி களுக்கு வெம்மைமிக்கதான கௌமோதகியெனும் கதை. அதைப் போலவே எதிரிகளுக்கு வெம்மைமிக்க சார்ங்கமென்னும் வில், அதுபோலவே எதிரிகளுக்கு வெம்மைமிக்கதாய், கூர்மையாலே சுடர்விடாநிற்பதான நாந்தகமென்னும் குத்துவாள் ஆகிய செம்மை மிக்க திவ்யாயுதங்கள் கையிலே உள்ளன. செம்மையாவது.— எதிரிகளுக்கு ஆயுதங்களாம்போது எம்பெருமான் கருதுமிடம் பொருகையாகிற விதே₄யத்வமும், அடியார்க்கு ஆபரணமாம்போது ஒளியுமாகும். (பரவை பாழி) திருப்பாற்கடல் பள்ளிகொள்ளு

http://acharya.org

பாற்கடல் படுக்கை. (பணி நீருலகமடியளந்த மாயரவர்க்கு) கடல் சூழ்ந்த பூமியளந்த ஸர்வேஸ்வரனுக்கு. 36.

37. அவற்கடிமை பட்டேன் அகத்தான் புறத்தான்
உவர்க்குங் க்ருங்கடல் நீருள்ளான் — துவாக்கும்
பவளவாய்ப் பூமகளும் பன்மணிப் பூணாரம்
திகழுந் திருமார்வன் தான்.

அவற்கு—அப்படிப்பட்ட எம்பெருமானுக்கு, **அடிமை பட்டேன்**—ஆட்பட்டவனானேன். **உவர்க்கும் கருங்கடல நீர் உள்ளான்**—உப்புக்கரிக்கின்ற கரிய கடல்நீரில் சயனித்திருப்பவனாய், **துவர்க்கும் பவளம் வாய் பூ மகளும்**—சிவந்த பவளம் போன்ற வாயையுடையளான பிராட்டியும், **பல் மணி பூண்**-பலவகையான ரத்னங்களழுத்தின திருவாபரணங்களும், **ஆரம்**—ஹாரங்களும், **திகழும்**—விளங்கப்பெற்ற, **திருமார்வன் தான்**—திருமார்பையுடையவனான எம்பிரான், **அகத்தான் புறத்தான்**—(என்னுடைய) உள்ளிலும் வெளியிலும் வாசியறக் கலந்திருக்கின்றான்;

அவ:— (அவற்கு) நான் அடிமையிலே அந்வயிக்க. ஸௌப₄ரியைப்போலே அநேகம் வடிவுகொண்டு பு₄ஜிக்க ஆசைப்படா நின்றான் என்கிறது.

யுதங்கள் திருக்கையிலேயுளவாயிராநின்றன; திருப்பாற்கடல் படுக்கையாயிராநின்றது—என்று வித்₃த₄ராய் அநுப₄விக்கிறார். 36.

அவ:— இப்படி தாம் அவனையநுபவிக்கப்புக்கவாறே. அவனும் தன் பெருமையைப் பாராமல் தம் பக்கலிலே

மிடமாயிருக்கிறது. இப்படியும் சில செய்ய படைகளிருப்பதே! இப்படியும் ஓர் படுக்கையிருப்பதே! என்று ஆச்சர்யத்துடன் பாடி. அனுபவிக்கிறார். பதவுரையிற்போலே, 'கைய கனலாழி...... வாள செய்ய படை; பரவை பாழி' என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம். 36.

37. அவ:— முப்பத்தைந்தாம் பாசுரத்தில் ஆசைப்பட்டபடி பாடுவதுடன் நில்லாமல், கைதொழுகை முதலான சேஷவ்ருத்தி

http://acharya.org

வ்யா:— (உவர்க்குங்கருங்கடல் நீருள்ளான்) திருப்பாற் கடலில் வாஸஸ்தாநமாக உடையனாய். (துவர்க்கும் பவள வித்யாதி) பெரியபிராட்டியாரையும் அநேகம் மாணிக்கங்களை

அத்யபிநிவிஷ்டனாய்க்கொண்டு பல வடிவுகொண்டு தம்மை அநுபவியாநின்றானென்கிறார்.

உரை:— அப்படிப்பட்ட வைபவத்தையுடையனான வனுக்கு ஒரு ப்ரகாரத்தாலே அடிமைபுக்கேன்; அனந்தரம் பூமியைச் சூழ்ந்து லவணோத்தரமாய்க் கறுத்திருக்கிற கடல் நீரிலே கண்வளர்ந்தருளுமவனாய், சிவந்த பவளம் போலே யிருந்துள்ள திருவதரத்தையுடையளான பெரியபிராட்டி யாரையும், பலவகைப்பட்ட ரத்னங்களையுடைத்தான

களையும் செய்யத்தொடங்கியவுடன், அவனும் தன் பெருமையைப் பாராமல், தம்மிடம் பேரார்வமுடையவனாய், பல வடிவுகொண்டு தம்மை அநுபவியா நின்றான் என்கிறார் இப்பாசுரத்தில். "வாரிக் கொண்டு உன்னை விழுங்குவன் காணில்" என்று ஆர்வுற்ற என்னையொழிய என்னில் முன்னம் பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்" [திருவாய் 9-6-10] என்ற நம்மாழ்வாரின் அநுபவம் இவர்க்கு இப்பாசுரத்தில் நடக்கிறது.

வ்யா:— (அவற்கு அடிமைபட்டேன்) 'யாம் தொழுதும் கை' என்று ஆசைப்பட்டபடியே கைதொழுகை முதலான வகைகளில் ஒன்றாலே. வாங்மனஸ்ஸுக்களுக்கு எட்டாத பெருமையை உடைய அத்தகைய பெருமானுக்கு அடிமை செய்யத் தொடங்கினேன் யான்; (அகத்தான் புறத்தான்) இவ்வளவிலே அவன் ஸௌபரியைப் போலே பல வடிவுகளை எடுத்துக்கொண்டு, என்னுடைய உள்ளோடு வெளியோடு வாசியற எல்லாவிடங்களிலும் கலந்து நின்று என்னை அநுபவியாநின்றான். "நாள்தோறும் என்னுடைய ஆக்கையுள்ளும் ஆவியுள்ளும் அல்ல புறத்தினுள்ளும் நீக்கமின்றி எங்கும் நின்றாய்" [திருவாய்4-7-6] என்ற நம்மாழ்வாருடைய அநுபவம் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இப்படி என்னை மேல்விழுந்து அநுபவிப்பவன்தான் தனக்கு ஓர் இருப்பிடமும் அநுபாவ்யங்களும் தன்னை மேல்விழுந்து அநுபவிப்பாரும் இல்லாதவனோ? என்னில், மிகச்சிறந்த இருப்பிடத்தையும், அநுபாவ்யங்களையும் அநுபோக்தாக்களையும் உடையவன் கிடீர் அவ்விருப்பிடத்தையும், அவ்வநுபாவ்யங்களையும், அவ்வநுபோக்தாக்களையும் காற்கடைக்கொண்டு என்னை அநுபவிப்பதிலே ஒருப்பட்டுநின்றான் என்கிறார் பாசுரத்தின் எஞ்சிய பகுதியாலே,—

http://acharya.org

புடைத்தாயிருந்துள்ள பூணாரத்தாலே திகழாநின்றுள்ள திருமார்பையுமுடையவன். அவனுக்கடிமைப்பட்டேன். குறைவற்ற மேன்மையையும் வடிவழகையுமுடைய ஸ்ரிய:பதியானவனானடிமையிலே அந்வயித்த மாத்ரத்திலே உள்ளும் புறம்பும் விட சக்தனாகிறிலன். 37.

ஆப₄ரணங்களையும் திருவாரத்தையுமுடைத்தாய்க் கொண்டு விளங்காநின்றுள்ள திருமார்வையுடையனை அவன் தான், அந்த ஒப்பனையையும் குறைவற்ற மேன்மையையும் பிராட்டியுடைய் ஆத₃ரத்தையும் புரிந்துபாராமல், ஸௌப₄ரியைப் போலே பலவடிவெடுத்துக்கொண்டு உள்ளோடு புறம்போடு வாசியறக்கலந்து நின்று அநுப₄வியாநின்றான். ஒருவனுடைய அபி₄நிவேஶமிருக்கும்படியே! என்று ஈடுபடுகிறார். 37.

(உவர்க்கும் கருங்கடல் நீருள்ளான்) உப்புக் கரிக்கும் கறுத்த கடல் நீரிலே சயனித்திருப்பவன். "தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி அதனுள் கண்வளரும் வானோர் பெருமான்" [திருவாய் 1-5-4] என்கிறபடியே ஸ்ருஷ்டிகாலத்தில் படைத்துக் கண்வளர்ந்த ஏகார்ணவத்தைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். அன்றிக்கே, பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானத்தையொட்டித் திருப்பாற் கடலைக் கூறுவதாகவும் கொள்ளலாம். அப்போது 'உவர்க்கும் கரும்' (உப்புக்கரிக்கும் கறுத்த) என்று விசேஷணமிட்டது வ்யர்த்த₂மாகாதோ? எனில்: பால்போனறு வெளுத்த நீரிருப்பது கொண்டு திருப்பாற்கடல் எனப்படும் அக்கடலும் நாம் காணும் கடலைப்போலே உவர்க்கும் என்று கொள்ளலாம். "நீலக்கடல் கடைந்தாய்" [திருவாய் 10-10-7] என்றவிடத்திற்போலே எம்பெருமானுடைய திருநிறத்தின் ஒளியாலே திருப்பாற்கடல் கருங்கடலாயிற்று என்றும் கொள்ளலாம். (துவர்க்கும் பவளவாய்ப் பூமகளும் பன்மணிப்பூண் ஆரம் திகழும் திருமார்பன் தான்) சிவந்த பவளம்போன்ற வாயையுடையவளாய், தாமரையின் ஸாரமெல்லாம் ஓர் வடிவெடுத்ததோ என்னும்படி தாமரையில் வீற்றிருப்பவளான பெரியபிராட்டியாரும், பலவகைப்பட்ட ரத்தினங்களையுடைய ஆபரணங்களும் ஹாரங்களும் விளங்காநிற்கும் திருமார்பை உடையவன் கிடீர் திருப்பாற்கடலான அவ்விருப்பிடத்தையும், அநுபோ₄க்த்ரியாகவும், அநுப₄ாவ்யையாகவுமிருக்கும் பூமகளையும், அநுப₄ாவ்யமான பன்மணிப்பூண்களையும் விரும்பாமல் காற்கடைக் கொண்டு எப்பெருமையுமற்ற என்னைக் கைவிடமாட்டாமல் விரும்பி, பல வடிவெடுத்து என்னுடைய உள்ளும், புறமும் கலந்து அநுபவிக்கிறான் என்று கீழோடே கூட்டிப் பொருள் கொள்வது.

http://acharya.org

38\. தானே தனக்குவமன் தன்னுருவே யெவ்வுருவும்
தானே தவவுருவும் தாரகையும்—தானே
எரிசுடரும் மால்வரையும் எண்டிசையும் அண்டத்
திருசுடரு மாயவிறை.

'துவர்க்கும்' என்றது சுவையைச்சொல்லுவதல்ல; 'துவராடை' என்றவிடத்திற்போலே செந்நிறத்தைச் சொல்லுகிறது. கருங்கடல் முதலானவற்றைக் காற்க்கடைக் கொண்டதாக இங்கு பாசுரததில் இல்லாவிடிலும், இப்பாசுரத்தை விவரிக்கப்புகுந்த மற்றையாழ்வார்கள்

அனந்தன்பாலும் கருடன்பாலும்
ஐதுநொய்தாக வைத்து என்
மனந்தனுள்ளே வந்துவைகி
வாழச்செய்தா யெம்பிரான்! [பெரியாழ் திரு 5-4-8]

பணிக்கடலில் பள்ளிகோளைப்
பழகவிட்டு, ஓடிவந்தென்
மனக்கடலில் வாழவல்ல
மாயமணாள நம்பீ! [பெரியாழ் திரு 5-4-9]

வடதடமும் வைகுந்தமும்
மதிள் துவ ராபதியும்,
இடவகைகளிகழ்ந்திட்டென்பால்
இடவகை கொண்டனையே. [பெரியாழ் திரு 5-4-10]

கல்லும் கனைகடலும் வைகுந்த வானாடும்
புல்லென் றொழிந்தனகொல் ஏபாவம்.—வெல்ல
நெடியான் நிறங்கரியான் உள்புகுந்து நீங்கான்,
அடியேன துள்ளத் தகம். [பெரிய திருவ 68]

என்று அருளிச்செய்கையாலே இங்கும் அப்படியே கொள்ள வேண்டும் 37.

http://acharya.org

எவ் வுருவும்—எல்லாப் பொருள்களும், **தன் உருவே**—*அவன் றனக்கு சரீரமாகவேயிருக்கும்;* **தவம் உருவும்**—*தபஸ்ஸைப்பண்ணிப் புண்யசரீரம் பெற்ற பிரமன் முதலானவர்களும்.* **தாரகையும்**—*நக்ஷத்திரங்களும்,* **தானே**—*அவன் றன் வடிவாகவேயிருக்கும்;* **எரி சுடரும்**—*சுடர்விடும் அக்னியும்.* **மால வரையும்**—*பெரிய குலபர்வதங்களும்.* **எண் திசையும்**—*எட்டு திக்குக்களும்.* **அண்டத்து**—*அண்டத்தினுள் உள்ள,* **இரு சுடரும்**—*சந்த்ரஸூர்யர்களும்.* **தானே ஆய இறை**—*தனக்கு ப்ரகாரமாயிருக்கப்பெற்ற எம்பெருமான்.* **தனக்கு தானே உவமன்**—*(ஒப்பற்றவனுகையாலே) தனக்குத் தானே உபமானமாயிருப்பவன்.*

வ்யா-(தனக்குவமன் தானே) தனக்குபமான ரஹிதன். உபமானராஹித்யத்துக்கடி ஸகல பதார்த்தங்களும் அவனுக்குப்ர

அவ:—*இப்படி என்னை மேல்விழுந்து விரும்புகிறவன் ஒரு காபுருஷனல்லன். ஸர்வேஶ்வரன் கிடீரென்கிருர்.*

உரை:—*தன்னையொழிந்த ஸகல பதா₃ர்த்த₂ங்களும் தனக்கு ஶரீரமாயிருக்கும்.* **தபஸ்ஸைப்பண்ணிப்** *புண்யஶரீரராய், ஸ்ருஷ்ட்யாதி₃கார்யங்களிலே அதி₄கரித்த ப்₃ரஹ்மாதி₃*

---

38. அவ:— இப்படி என்னை மேல்விழுந்து விரும்புகிறவன் ஒரு பெருமையுமற்ற தெருப்போக்கனல்லன்; தனக்குவமையில்லாத ஸர்வேஶ்வரன்கிடீர்! என்கிருர்.

வ்யா:— தனக்குவமையில்லாதவன் என்பதை முதலிற் சொல்லி, அதற்கு ஹேதுக்களைப் பாசுரத்தின் எஞ்சிய பகுதியாலே சொல்லுகிருர். (தன்னுருவே எவ்வுருவும்) "யஸ்யாத்மா ஶரீரம்" "யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம்" [ப்₃ருஹ 5-7] "தாநி ஸர்வாணி தத்₃வபு:" [வி.பு 1-22-86] "தத் ஸர்வம் வை ஹரேஸ் தநு:" [வி.பு 1-22-38] "ஜக₃த் ஸர்வம் ஶரீரம் தே" [ரா-யு 20-26] என்று ஶ்ருதி முதலான ப்ரமாணங்களனைத்தும் ஒரு மிடருக கோஷிக்கும்படியாக, தன்னைத் தவிர்ந்த எல்லாப் பொருள்களும் தனக்கு ஶரீரமாயிருக்கும். (தானே தவவுருவும் தாரகையும்)

http://acharya.org

காரமாய், தான் ப்ரகாரியாய், ப்ரகார்யந்தரமின்றிக்கேயிருக்கை. (தன்னுருவேயெவ்வுருவும்) எல்லாப் பதார்த்தங்களுமவனுக்கு

பதார்த்த₂ங்களும் நக்ஷத்ரங்களும் தானென்கிற சொல்லுக்குள்ளேயடங்கும்படி தனக்கு ப்ரகாரமாயேயிருக்கும். ஜ்வலநஸ்வபா₄வமான அக்நியும், பெரிய குலபர்வதங்களும் எட்டுதிக்குகளும் அண்டாந்தர்வர்த்திகளான சந்த்₃ரஸூர்யர்களாகிற இரண்டுவகைப்பட்ட தேஜ:பதா₃ர்த்த₂ங்களும் தனக்கு ப்ரகாரமாயிருக்கும். இப்படிக் கார்யகாரணரூபமான

" யுக₃கோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்₄ய பத்₃மபூ₄: ।
புநஸ் த்ரைலோக்ய தா₄த்ருத்வம் ப்ராப்தவாநிதி ஶுஶ்ரும:॥ "
[பார-ஸபா 14-8]

[ஆயிரங்கோடி யுகங்கள் விஷ்ணுவைக் குறித்துத் தவம் செய்து ஆராதித்து மறுபடியும் மூவுலகிற்கும் பதியாயிருக்கும் ப்₃ரஹ்மபதவியைப் பெற்ருன் பிரமன் என்று கேள்விப்படுகிறோம்.] என்றும்,

" மஹாதே₃வ: ஸர்வமேதே₄ மஹாத்மா
ஹுத்வாத்மாநம் தே₃வதே₃வோ ப₃பூ₄வ ॥ "
[பார-சாந்தி 20-12]

[மஹாதேவனை சிவன் ஸர்வமேத₄ம் எனும் யாகத்தில் தன்னையே ஹோமம் செய்து தேவதேவனுனன்.] என்றும் சொல்லுகிறபடியே நெடுங்காலம் இவனை நோக்கித் தவம் புரிந்து, அதனுல் புண்ய ஶரீரத்தைப்பெற்று, ஸ்ருஷ்டி, ஸம்ஹாரம் முதலிய பெருந்தொழில்களுக்கு உரியவரான பிரமன் சிவன் முதலியவர்களும், சோதிமயமான நக்ஷத்திரங்களும் 'தான்' என்கிற சொல்லுக்குள்ளே அடங்கும்படி தன்னைவிட்டுப்பிரிக்கவொண்ணுத ப்ரகாரமாயிருக்கும்.' பிரமன் சிவன் முதலியவர்களாயிருக்கும்' என்று மாத்திரம் சொன்னுல் சில அறிவிலிகள் ஸ்வரூபைக்யமாக மயங்கி, த்ரிமூர்த்யைக்யத்தையும், தேவதைக்யத்தையும், ஆத்மைக்யத்தையும் கூறிவிடுவார்களென்று ஆலோசித்து, இங்கு கூறப்படும் ஐக்யம் சற்றுமுன் சொல்லப்பட்ட ஶரீராத்மத்தன்மையால் ஏற்பட்டது என்பது தோற்ற, தவம்புரியும் சேதனரான ப்ரஹ்மருத்₃ராதிகளோடு, அசேதனமான நக்ஷத்திரங்களோடு வாசியற எல்லாம் அவனே கிடீர் என்கிருர். தாரகைகளாகிற அசேதனப்பொருள்கள் மாத்திரமல்ல, எல்லா அசேதனப்பொருள்

http://acharya.org

சரீரம். (தானே தவவுருவும்) தபஸ்ஸுபண்ணி, புண்யசரீர ரான அதிகாரிகளும் அவனுக்கு ப்ரகாரம். 38.

ஸகல பதார்த்தங்களும் தனக்கு ப்ரகாரமாய், தான் ப்ரகாரியாய், தனக்கொரு ப்ரகார்யந்தரமின்றிக்கேயிருக்கக்கடவ ஸர்வேஶ்வரன் தனக்குத்தானே உபமானமாயிருக்கும். இன்னமுமிப்படி இருப்பானொரு ஈஶ்வரனுண்டாகிலிறே ஒப்புச்சொல்லலாவதென்று கருத்து. 38.

களுமே தான் என்னும் சொல்லுக்குள்ளே அடங்கும்படி அவனுக்கு ப்ரகாரமாயிருக்கின்றன என்பது தோற்ற, மற்றும் சில முக்கியமான அசேதனப் பொருள்களை எடுத்து அவனோடு ஒன்றாகப் பேசுகிறார் மேலே.—(எரிசுடரும்) எரியும் இயல்வுடைய அக்னியும் தானேயாய். (மால்வரையும்) பெரியகுலபர்வதங்களும் தானேயாய். (எண்டிசையும்) "திஶஶ்ச நாராயண: விதிஶஶ்ச நாராயண:" [நாராயணோபநிஷத்] [நாலு திக்குகளும், நாலு விதிக்குகளும் நாராயணனே.] என்கிறபடியே எட்டுதிக்குகளும் தானேயாய். (அண்டத்து இருசுடரும் தானே ஆய இறை) அண்டத்தினுள்ளிருக்கும் சந்திரன் ஸூர்யன் ஆகிய இரண்டு சோதிகளும் தானேயாயிருக்கும் ஸர்வேஶ்வரன். இங்கு சில பொருள்களை எடுத்தது கார்ய நிலையிலும் காரண நிலையிலுமிருக்கும் எல்லாச் சேதநாசேதனங்களுக்கும் உபலக்ஷணம். 'தானே' என்றவிடங்களில் ஏகாரங்களாலே, இப்படியிருப்பவன் வேறு எவனுமில்லை என்று காட்டுகிறார்.

"ஜ்யோதீம்ஷி விஷ்ணுர் புவநாநி விஷ்ணு:
வநாநி விஷ்ணுர் கிரயோ திஶஶ்ச।
நத்ய: ஸமுத்ராஶ்ச ஸ ஏவ ஸர்வம்
யதஸ்தி யந்நாஸ்தி ச விப்ரவர்ய॥" [வி.பு12-12-38]

[அந்தணர் தலைவரே! சோதிகளும் விஷ்ணுவே; உலகங்களும் விஷ்ணுவே; வனங்களும், மலைகளும், திசைகளும், நதிகளும், ஸமுத்ரங்களும் விஷ்ணுவே; நிலையானதாகையால் உள்ளதெனப்படும் சேதனமும், நிலையற்றதாகையால் இல்லதெனப்படும் அசேதனமும் ஆகிய எல்லாம் அவனே.] என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் கோஷிக்கப்பட்டதன்றோ. இப்படிக் கார்யகாரண நிலைகளிலுள்ள எல்லாப் பொருள்களும் தனக்கு ப்ரகாரமாய், தான் ப்ரகாரியாய், தனக்கு ஒரு ப்ரகாரியற்றிருக்கும் ஸர்வேஶ்வரனுகையாலே தானே

http://acharya.org

39. இறையாய் நிலனாகி யெண்டிசையும் தானாய்
மறையாய் மறைப்பொருளாய் வானாய்—பிறைவாய்ந்த
வெள்ளத்தருவி விளங்கொலிநீர் வேங்கடத்தான்
உள்ளத்தினுள்ளே யுளன்.

இறை ஆய்—ஸர்வஸ்வாமியாய். **நிலன் ஆகி**— பூமிக்கு அந்தர்யாமியாய், **எண் திசையும் தான் ஆய்**—எட்டு திக்குக்களிலுமுண்டான எல்லாப்பொருள்களையும் வியாபித்திருப்பவனாய், **மறை ஆய்**—வேதங்களுக்கு ப்ரவர்த்தகனாய். **மறை பொருள் ஆய்**—அந்த வேதங்களின் பொருளாயிருப்பவனாய். **வான் ஆய்**—நித்ய விபூதி நிர்வாஹகனாய். **பிறை வாய்ந்த**—சந்திரமண்டலத்தைக் கிட்டியிருப்பதும். **வெள்ளம் அருவி விளங்கு**—மிக்க ஜலத்தையுடைய அருவிகளினால் விளங்குவதாய். **ஒலி நீர்**—ஒலி செய்யும் நீர்நிலைகளை உடையதான **வேங்கடத்தான்**— திருவேங்கடமலையில் வாழ்பவனான எம்பெருமான். **உள்ளத்தின் உள்ளே உளன்**—என்னெஞ்சினுள்ளே இருக்கின்றான்.

அவ:—இப்படி ஜகதாகாரனாய் நின்ற ஸர்வேச்வரன் திருமலையிலே வந்து ஸந்நிஹிதனாய். பின்பு என் ஹ்ருதயத்தைவிட்டுப் போகிறிலனென்கிறார்.

தனக்கு உபமானமாவதொழியத் தனக்கு ஒரு உபமானமற்றிருக்கிறான் என்கிறார் முதலில் (தானே தனக்குவமன்) இப்படியிருப்பவன் இன்னொருவன் உண்டானவன்றன்றோ இவனுக்கு உபமானம் சொல்லலாவது என்று கருத்து. 38.

39. அவ:—இப்படி உலகனைத்தையும் உருவாகக் கொண்ட ஸர்வேச்வரன் திருமலையிலே வந்து நின்று நமக்கு எளியனாய், என் நெஞ்சைப்பெற்றபின்பு அதைவிட்டுப் போகமாட்டாதவனானான் எனகிறார்.

வ்யா:—(இறையாய்) ஸர்வஸ்வாமியாக அனைவர்க்கும் தலைவனாயிருப்பவன் கிடீர் என் நெஞ்சிலே வந்துசேர்ந்தான்! (நிலனாகி) பூமிக்கு அந்தர்யாமியாகி. பூமிக்கு அந்தர்யாமியாயிருந்ததும் என்னெஞ்சில் வந்து சேர்வதற்கே என்கை. (எண்டிசையும் தானாய்) எட்டுத்திசைகளுக்கும் அந்தர்யாமியாகி. ஒருவனைப்பிடிக்க

http://acharya.org

வ்யா:—(இறையாயித்யாதி) உப₄ய விபூ₄தியுக்தனாய். பூமியும் எட்டுத்திக்குகளும் வேதங்களும் தானிட்டவழக்கு. (மறைப்பொருளாய்) வேத₃ப்ரதிபாத்₃யனாய். (பிறையித்யாதி) சந்த்₃ரபத₃த்திலே கிட்டின வெள்ளத்தையுடைத்தாயிருந்துள்ள

உரை:— ஸர்வஸ்வாமியாய், பூமிக்கந்தர்யாமியாய், எட்டு திக்கிலுண்டான ஸமஸ்தசேதனரையும் தனக்கு ப்ரகாரமாகவுடையனாய். சேதனர்க்கு ஹிதாஹிதஜ்ஞாபகமான வேதங்களுக்கு நிர்வாஹகனாய். பரமாகாஶ ஶப்₃த₃வாச்யமான பரமபதத்தையும் ப்ரகாரமாகவுடையனாய், சந்த்₃ரபத₃த்தைக் கிட்டியிருப்பதாய். மிக்க ஜலத்தையுடைத்தான திருவருவிகளினுடைய விளக்கத்தையுடைத்தாய் த்₄வநியாநின்றுள்ள ஜலஸம்ருத்₃தி₄யோடே கூடியிருப்பதுமான திருமலையை வாஸஸ்த₂ானமாகவுடையனான

ஊரை வளையுமாப்போலே என்னை ஆகர்ஷிப்பதற்காக எட்டுத் திக்கிலுமுள்ள எல்லாப்பொருள்களையும் வியாபித்தான் என்கை. (மறையாய்) வேதங்களாகி. எனக்கு நன்மை தீமைகளைக் காட்டுவதற்காக வேதங்களை முதன்முதலில் படைத்தவனும் அவனேஎன்கை. (மறைப்பொருளாய்) வேதப்பொருளாய் நின்றவனும் இவனேயென்கை. வேதத்தை அளித்ததுடன், அதன் உண்மைபொருளையும் எனக்கு உணர்த்தினான் என்று கருத்து. (வானாய்) 'பரமாகாஶம்' எனப்படும் பரமபதத்திற்கும் நிர்வாஹகனாய். "வீடு திருத்துவான்" [திருவாய் 1-5-10] என்கிறபடியே என்னைத் திருநாட்டில் வரவேற்பதற்காகப் பரமபதத்தையும் அலங்கரிக்கத் தொடங்கினான் என்று கருத்து. எட்டா நிலமான அங்கு சென்று சேருமவரை நான் அனுபவிக்கலாம்படி. திருவேங்கடமலையிலே எளியனாய் நின்றான் என்கிறார் மேலே.—(பிறை வாய்ந்த வெள்ளத்தருவி விளங்கொலி நீர் வேங்கடத்தான்) சந்திரமண்டலம் வரை உயர்ந்திருப்பதாய், நீர் மிகுந்திருக்கும் அருவிகளால் விளங்காநிற்பதாய், ஒலி செய்யும் நீரையுடைய ஸ்வாமிபுஷ்கரிணிபோன்ற பல தடாகங்களை உடையதான திருவேங்கடமலையை இருப்பிடமாக உடையவன். திருமலையிலே நின்றதும் என் நெஞ்சில் புக இடம் பார்ப்பதற்கே என்று கருத்து. இவ்வளவும் செய்தது என்னெஞ்சில் புகுந்து என்னைத் தனக்காக்குவதற்கே என்கிறார்.— (உள்ளத்தின் உள்ளே உளன்)

http://acharya.org

திருமலையிலே நின்று என்னுடைய ஹ்ருதயத்திலே புகுர அவஸரப்ரதீக்ஷனாயிருக்கிறான். 39.

40. உளன்கண்டாய் நன்னெஞ்சே உத்தமனென்றும்
உளன்கண்டாய் உள்ளுவாருள்ளத்(து)-உளன்கண்டாய்
விண்ணொடுங்கக் கோடுயரும் வீங்கருவி
வேங்கடத்தான்
மண்ணொடுங்கத் தானளந்த மன்.

நல் நெஞ்சே—அவனையும் உளனாக்கிய நல்ல மனமே!. விண் ஒடுங்க—மேலுலகங்களெல்லாம் ஒரு மூலையில் ஒதுங்கும் படி. கோடு—சிகரங்கள். உயரும்—உயர்ந்தோங்கி யிருக்கப் பெற்றதும். வீங்கு அருவி— நிறைந்த அருவிகளையுடையது மான, வேங்கடத்தான்— திருமலையில் எழுந்தருளியிருப்ப வனும். மண்—பூமிப் பரப்பெல்லாம். ஒடுங்க—(திருவடியின் ஒரு மூலையிலே) ஒடுங்கிப் போம்படி. தான் அளந்த—தான் அளந்துகொண்டவனுமான. மன்—அரசன், உளன் கண்டாய்—(நம்மை ரக்ஷிப்பதனாலே) ஸத்தை பெற்றிருப்பவன் காண்; உத்தமன்—புருஷோத்தமனான அப்பெருமான். என்றும் உளன் கண்டாய்--எக்காலத்திலும் (நம்மை ரக்ஷிப்பதிலே தீக்ஷை கொண்டு) இருக்கிறான் காண்; உள்ளுவார் உள்ளத்து— நினைப்பவர்களுடைய மனத்திலே. உளன் கண்டாய்—நித்ய வாஸம் செய்பவன் காண்.

ஸர்வேஶ்வரன் திருமலையில் நிலை இங்கே வந்து புகுருகைக்கு அவசரம் பார்த்து நின்ற நிலையென்று தோற்றும்படி என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே நித்யஸந்நிஹிதனாயிரா நின்றான். 39.

என் நெஞ்சினுள்ளே இடைவிடாமல் வாழ்கின்றான். என் நெஞ்சைப் பெற்றபின்பு இறையாய் நிலனாகி நின்றதெல்லாம் அஸத்ஸமம் என்னும்படி என் நெஞ்சிலே உகந்து நிலையாக நிற்கிறான் என்று கருத்து. 39.

http://acharya.org

வ்யா:— (உளன்கண்டாய்) அவனுடைய ஜீவநம் நம்முடைய ஸத்தாஹேது. "इच्छात एव तव विश्वपदार्थसत्ता" (இச்சா₂த ஏவ தவ விஸ்வபதா₃ர்த்த₂ஸத்தா) (நன்னெஞ்சே) எம்பெருமான் நம்முடைய ஸத்தாஹேதுவென்று சொல்லுகைக்குப் பாங்கான நெஞ்சே! (உத்தமனென்றுமுளன் கண்டாய்) நம்முடைய ஸத்தாஹேது அவனென்று நினைத்திராதவன்றும் என்றும் அவனிருக்கும்படியிதுவே.

அவ:— இப்படி ஸர்வாதி₄கனானவன் என் பக்கலிலே வந்து புகுந்தபின்பு. நெஞ்சே! நமக்கினி ஒருகுறைகளுமில்லை கிடாயென்கிறார்.

உரை:— அவனுடைய உண்மைக்கிசைந்து அத்தை ஸப₂லமாக்கின நல்ல நெஞ்சே! நம் பேறு தன் பேறாக விரும்பி ரக்ஷிக்கும் ஸ்வப₄ாவனான ஸர்வேஶ்வரன் நம்மை உஜ்ஜீவிப்பிக்கையிலே உளனாயிருக்குமவன் கிடாய். நாமவனுடைய உண்மைக்கு இசைந்த இன்றோடு இசையாத முன்போடு வாசியற ஸர்வகாலத்திலும் நம்முடைய ரக்ஷணத்திலே உத்₃யுக்தனாய்க்கொண்டு உளனாயிருக்குமவன் கிடாய்.

---

40. அவ:— நெஞ்சே! முன் பாசுரத்திற் கூறியபடி ஸர்வஸ்வாமியாயிருப்பவன் நம்மிடம் வந்து புகுந்தபின்பு நமக்கு என்ன குறை? எனகிறார்.

வ்யா:— (நல் நெஞ்சே!) 'அவன் உளன்' என்றால் 'இல்லை' என்னாமல் உளனென்று இசைந்திருந்து அவனுடைய உண்மையைப் பயனுடையதாக்கிய நல்ல நெஞ்சமே! இவர் நெஞ்சு 'உளன்' என்றால் தான் உளனாமையாலே, அவனையும் உளனாக்கிய நல்ல நெஞ்சே! என்றுமாம். (உளன் கண்டாய்) நம்முடைய பயனையே தனக்குப் பயனாக விரும்பி ரக்ஷிக்கும் இயல்வுடைய ஸர்வேஶ்வரன் நம்மை உய்விப்பதாலே உளனாயிருப்பவன் கிடாய்! "இச்சா₂த ஏவ தவ விஸ்வபதா₃ர்த்த₂ஸத்தா" [ஸ்ரீவைகுண்டஸ்தவம் 36] [உன் விருப்பத்தாலேயே எல்லாப் பொருள்களும் ஸத்தை பெறுகின்றன.] என்னும்படி நம்மையும் உள்ராக்கிக்கொண்டு அவன் உளனாயிருக்கிறான் கிடாய் என்றுமாம். (உத்தமன் என்றும் உளன் கண்டாய்) நாம் அவன் உளன் என்று இசைந்த இன்றோடு, இசையாத அநாதி₃ காலத்தோடு வாசியில்லாமல் எப்போதும் அப்புருஷோத்தமன் நம்முடைய ரக்ஷணத்திலேயே ஊன்றிநின்று உளனாயிருப்பவன் கிடாய்.

http://acharya.org

(உள்ளுவாரித்யாதி) புகுரப்புக்கால் விலக்காதாருடைய ஹ்ருதயத்திலேயுளன். (விண்ணித்யாதி) "உத்தமனென்று

அவன் தானே வந்து புகுருமிடத்தில் விலக்காமற்பொருந்தி அநுஸந்தித்திருக்குமவர்களுடைய ஹ்ருதயத்திலே உளனு யிருக்குமவன் கிடாய். ஆகாஶாதிகளான ஊர்த்வலோகங்

நம்மிடம் கைம்முதல் யாதொன்றும் தேவையில்லையோ? எனில், அவன் அநாதிகாலமாகத்தானே நமது நெஞ்சில் புக இடம் பார்த்திருந்தவன்; இவ்வளவு நாளாக நாம் இடங்கொடுக்காமல் விலக்கிவந்தோம்; இன்றே விலக்காமை பெற்றோம்; அவனும் உட்புகுந்தான்; ஆகையால் உட்புகுர இடம் பார்த்திருக்கும் அவனைப் புகாதே என விலக்காமல், அவனோடு பொருந்தி அநுஸந்திக்க இசைகையே நமக்கு வேண்டியது என்கிறார்.— (உள்ளு வார் உள்ளத்து உளன்கண்டாய்) அவன் தானே வந்து புகப் பார்க்கும்போது 'புகாதே' என விலக்காமல், அவனோடு பொருந்தி அவனை அநுஸந்திக்குமவர்கள் ஹ்ருதயத்திலே புகுந்து தான் ஸத்தை பெற்றிருக்குமவன் கிடாய்! இதுவரையில் உள்ள பாசுரப் பகுதி முதல் திருவந்தாதியின் தொண்ணூற்றென்பதாவது பாசுரத்திலும் அப்படியே உள்ளது. அவ்விடத்தில் நமது வியாக்கியானம் இங்கேயும் பொருந்துமாகையால் அதை அப்படியே கொடுக்கிறோம்.

(உளன் கண்டாய்) பல பாசுரங்களில் பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிப் பெருமைகளையெல்லாம் பிறருக்கு உபதேசித்தவர் இப்பாசுரத்தில் ஈஶ்வரஸத்பாவத்தை நெஞ்சுக்குச் சொல்லுகிறார் என்பது பொருந்தாது. நம்மை ரக்ஷிப்பதால் தன் உண்மை (ஸத்தை-இருப்பு) ஏற்படுகிறது என்று சொல்லலாம்படி நம்முடைய் ரக்ஷணத்திலே ஊன்றியிருக்கிறானன்றோ ஸர்வேச்வரன் என்கிறார். (உளன் கண்டாய்) நம்மை நம்மிடமே காட்டிக்கொடுத்து அழியச் செய்யாமல் ரக்ஷிப்பதற்கு ஸர்வேச்வரன் இருக்கிறனே! பிறரால் நமக்கு வரும் தீங்கைக் காட்டிலும், நம்மால் நமக்கு வரும் தீங்கன்றோ அதிகமாயிருக்கிறது. பிறரைக் கண்டு அஞ்சுவதைவிட நம்மைக்கண்டன்றோ நாம் அஞ்சவேண்டியிருக்கிறது. நம்மிடம் நம்மைக் காட்டிக் கொடுக்காமலிருப்பதற்காகவன்றோ அவனையே உபாயமாகப் பற்றவேண்டியிருக்கிறது. (கண்டாய்) நான் ஒருகால் ஆத்மநாஶத்தை விளைத்துக்கொள்ள முற்பட்டாலும், நம்மைரக்ஷித்து

http://acharya.org

ஸத்தைபெறும் அவனை நீ நினைப்பாயாக என்கிருர். "பித்தத்தாலே மோஹித்துக் கழுத்திலே கயிறிட்டுக்கொண்டேருகில், அறுத்துவிழ விடுகிடாய் என்று அறிவுடையார்க்குச் சொல்லிவைக்குமாப்போலே" என்பர் பெரியவாச்சான்பிள்ளை. 'நீர்மயங்கியபோதிலும் தெளிவாயிருக்கும் சிறப்பு எனக்குண்டோ?' என்று திருவுள்ளத்துக்குக் கருத்தாக, (நன்னெஞ்சே) அவனே நமக்கு ரக்ஷகன் என்னும் அர்த்தத்தை எனக்கும் உபதேசிக்க வல்லமைபெற்றிருக்கிருயன்றோ நீ! 'முந்துற்ற நெஞ்சே' [பெரியதிருவ-1] என்கிறபடியே பகவத்விஷயத்தில் என்னிலும் முற்பட்டு நிற்பாயன்றோ நீ! (நன்னெஞ்சே) 'நம்மை ரக்ஷித்து ஸத்தைபெறுவான் அவன்' என்று கூறினல், இது எப்படிக்கூடும் என்று ஆக்ஷேபிக்காமல், இசைந்து உகக்கும் நன்மையை உடைய நெஞ்சே! என்கிருராகவுமாம். ஸர்வேஸ்வரனை அவன் பிறரை ரக்ஷித்து ஸத்தைபெறுவதென்பது கூடுமோ? எனில்: (உத்தமன்) அவன் புருஷோத்தமனுகையாலே கூடும் என்கிருர். பிறரை ஹிம்ஸிப்பதே யாத்ரையாயிருப்பவன் அத₄மாத₄மன். சுயநலத்திற்காகப் பிறரை ஹிம்ஸிப்பவன் அதமன். சுயநலத்தையும் விட்டுப் பிறரை ரக்ஷிப்பவன் மத்யமன். பிறரை ரக்ஷித்தாலொழிய உயிர்தரிக்கமாட்டாமையாலே என்றும் பிறர்க்கு நன்மையை நினைத்தவண்ணமேயிருப்பவன் உத்தமன். நம்மை ரக்ஷித்துத் தான் உளனுயிருக்கும் தன்மை, நாம் அனுகூலராயிருக்கும் இன்று தானே? எனில்: (என்றும் உளன் கண்டாய்) 'அஸந்நேவ ஸ ப₄வதி அஸத்₃ப்₃ரஹ்மேதி வேத₃ சேத்'' [தை-ஆந-6] என்கிறபடியே ப்ரஹ்ம ஜ்ஞானமில்லாமையாலே நாம் இல்லாதவராயிருந்தவன்றேடு, ''அஸ்திப்₃ரஹ்மேதி சேத்₃வேத₃ ஸந்தமேநம் ததோ விது₃:' [தை-ஆந6] என்கிறபடியே ப்ரஹ்மஜ்ஞாநமிருந்தமையாலே நாம் உளராயிருந்தவன்றேடு வாசியற என்றுமே நம்மை ரக்ஷிக்க உறுதிபூண்டு, அதனாலே உளனுயிருக்குமவன்கிடாய்! இந்நீர்மையுடையவன் எட்டாக் கனியாய், துர்லப₄னுயிருப்பானே? எனில்: (உள்ளத்து உளன் கண்டாய்) நம் நெஞ்சிலேயே அதிஸுலபனுய் எழுந்தருளியிருக்கிருன் கிடாய்! ''அனந்தன்பாலும் கருடன்பாலும் ஐதுநொய்தாக வைத்து என் மனந்தன்னுள்ளே வந்து வைகி'' [பெரியாழ்திரு 5-4-8] ''பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்தென் மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ'' [பெரியாழ்திரு 5-4-9] ''வடதடமும் வைகுந்தமும் மதிள் துவராபதியும் இடவகைகள் இகழ்ந்திட்டு என்பால் இடவகை கொண்டனையே'' [பெரியாழ்திரு5-4-10] என்கிறபடியே பரவ்யூஹவிப₄வார்ச்சாநிலைகளெல்லாம் நம்மைப் பெறுகைக்கு அவன் ஸாதநாநுஷ்டானம் செய்யுமிடங்களாகையாலே

http://acharya.org

முள்ன்கண்டாய்'' என்கிறத்தை உபபாதிக்கிறது. உபரிதந லோகங்களும் சில எல்லேயுண்டென்றிராதே இவை

களடங்க ஓரருகே ஒதுங்கும்படி சிக$_2$ரங்கள் ஓங்கியிரா நிற்பதாய் நாலுபாடும் நிறைந்து துளும்பி வெள்ளமிடுகிற

நம்மைப் பெற்றபின்பு இளங்கோயில்களான அவற்றைக் கைவிட்டு, ''விச்வஸ்யாயதநம் மஹத்'' [தை-நா] ''நெஞ்சமே நீள்நகர்'' [திருவாய் 3-8-2] என்கிறபடியே பெருங்கோயிலான நம் உள்ளத்திலே உகப்போடு புகுந்து நித்யவாஸம்செய்து நித்யஸத்தை பெற்றிருக்கிறுன். இப்படி அவனே உள்ளத்திருத்துவதற்கு நாம் அனுஷ்டித்த ஸாத$_4$நாநுஷ்டானமென்ன? எனில்: (உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்) தன்னே நெஞ்சிலே இருத்த இசைவார் உள்ளத்திலே இனிப்பிடித்துத் தள்ளினுலும் போகேன் என்று வாழ்கிருன்கிடாய்! தான் புகப்புக்கால் 'புகாதே!' என்று ஆணையிட்டுத் தடுக்காதவர்களுடைய நெஞ்சைவிட்டுப்போக அறியான்! இத்தால் ஜீவன்பக்கல் உள்ளது அத்வேஷமும் ஆபி$_4$முக்$_2$யமுமே என்கிறது.

இனி, பாசுரத்தின் பின்னடிகள் இரண்டினுலும், ''உத்தமன் என்றும் உளன் கண்டாய்'' என்பதை விவரிப்பதன்மூலம், நம்மிடமுள்ள விலக்காமையும் அவன் அநாதிகாலமாகச் செய்த முயற்சிகளின் பலனைகையாலே, அதையும் உபாயமாக்கவொண்ணுது என்கிருர். ''வெள்ளத்தின் உள்ளானும், வேங்கடத்துமேயானும்'' என்று முதலாழ்வார் அவனுடைய ஸாத$_4$நாநுஷ்டானத்துக்கு ப்ரமாணம் ஒரு வெள்ளமும் மலேயும் என்றுர். இவர் அதற்கு ப்ரமாணம் மலேயாக உயர்ந்துகிடப்பதோடன்றியில், விண்ணும் மண்ணும் பரவியும் கிடக்கிறது என்கிருர். (விண்ணெடுங்கக் கோடுயரும் வீங்கருவி வேங்கடத்தான்) ஆகாயத்திலுள்ள மேல் உலகங்களனைத்தும் ஒரு மூலேயிலே ஒடுங்கலாம்படி சிகரங்கள் ஓங்கியிருக்கப்பெற்றதாய், நாற்புறமும் நிறைந்து துளும்பி வெள்ளமிடுகிற திருவருவிகளே உடைத்தான திருமலேயை இருப்பிடமாக உடையவனுயிருப்பவன். நான் அநுகூலனுயிராதவன்றும் என்னே வசீகரிப்பதற்காகத் திருமலேயிலே நின்றருளினுன் என்று கருத்து. 'விண்' என்று ஆகாயத்திலுள்ள உலகங்களேச் சொல்லுகிறது. கோடு—என்று சிகரங்கள். 'இந்த மேலுலகங்கள் நமக்கு எல்லேக் கட்டுவதாவது' என்பனபோலே உயர்ந்துள்ளன சிகரங்கள் என்கிருர். (விண்ணெடுங்கக் கோடுயரும்) திருவேங்கடமுடையா.

வேண்டாவென்றுகொண்டு உயராநின்ற-ஆகாசாதி₃லோகங்களெல்லாம் ஒடுங்கும்படிக்கிடாக உயராநின்ற சிகரத்தையுடைத்தாயிருந்துள்ள திருமலையிலே நின்றவன் பரப்பின திருவடிகளிலே பூமிதோற்றுதபடி அளந்துகொண்ட மன்னன்-உடையவன். இந்த்ரன் இழந்தது பெறுகையாலும் மஹாபலியைப்பறித்து வாங்கிக்கொடுக்கையாலும் இவனே உடையவனென்று தோற்றுநின்றது. 40.

41. மன்னு மணிமுடிநீண்டு அண்டம்போ யெண்டிசையும்
துன்னுபொழிலனைத்தும் சூழ்கழலே—மின்னை
உடையாகக் கொண்டு அன்றுலகளந்தான் குன்றம்
குடையாக ஆகாத்த கோ.

திருவருவிகளையுடைத்தான திருமலையையிருப்பிடமாக உடையனவன் பூமிப்பரப்படங்கலும் திருவடிகளுக்குள்ளே அடங்கும்படி தானளந்துகொண்ட ராஜாவாயிருக்கும். 40.

னுடைய பரத்வத்தைக்காட்டுகின்றவைபோலேயுள்ளன திருமலைச் சிகரங்கள். (வீங்கருவிவேங்கடத்தான்) அவனுடைய கருணையைக் காட்டுகின்றவைபோலேயுள்ளன திருமலையருவிகள். (மண்ணெடுங்கத் தானளந்த மன்) பூமி முழுவதும் ஒரு திருவடியிலே மறைந்து ஒடுங்கும்படியாகத் தானே அளந்த அரசன். தன் மண்ணுகையாலே தானே அளந்துகொண்டு, தானே இதற்கு அரசன் என்று காட்டினன். (மன்) இந்திரன் இழந்த உலகை இவன்மூலம் பெறுகையாலும், மஹாபலியிடமிருந்து பறித்து இவன் இந்திரனுக்கு உலகை வாங்கிக்கொடுக்கையாலும், அவர்களெல்லாம் உலகை உடையவர்களல்லரென்றும், இவனே உலகை உடையவனென்றும் தோற்றுகிறது. இங்கு மண்ணை ஓரடியாலே அளந்ததைச்சொன்னது. விண்ணை மற்றோரடியாலே அளந்ததற்கும் உபலக்ஷணம். விண்ணையும், மண்ணையும் அளப்பதுபோன்ற ஆனைத்தொழில்களைச் செய்ததும் நான் அநுகூலனுயிராத தசைகளில் என்னைப் பெறுவதற்காக அவன் செய்தவையே என்று கருத்து. ஆகையால், அரும்பாடுபட்டு நம்மிடம் விலக்காமையையும் விளைத்து, நம் உள்ளத்தில் வந்து அவன் புகுந்தபின்பு நமக்கு என்ன குறை? என்று நெஞ்சோடு சொல்லிக்களிக்கிருர். 40.

http://acharya.org

குன்றம் குடை ஆக—கோவர்த்தன மலையைக் குடையாகக் கொண்டு, ஆ காத்த கோ—பசுக்களைக் காப்பாற்றின ஸ்வாமியானவன், அன்று—முன்பொருகாலத்தில், மன்னு மணிமுடி—ரத்னங்களையுடையதாய், பொருத்தமுள்ளதான கிரீடம், நீண்டு—ஓங்கி வளர்ந்து அண்டம் போய்—அண்டச் சுவரைச் சென்றுகிட்ட, எண் திசையும்—எட்டு திக்குக்களையும், துன்னு பொழில் அனைத்தும்—(ஜீவர்கள்) நெருங்கிக் கிடக்கிற பூமண்டலம் முழுவதும், சூழ்—வியாபிக்க, கழலே—திருவடியேயாம்படி. மின்னை உடை ஆக கொண்டு உலகு அளந்தான்—மின்னலைப் பீதாம்பரமாக அணிந்துகொண்டு உலகங்களை அளந்தான்.

வ்யா:— (மன்னு இத்யாதி) (அண்டம்போயெண்டிசையும் மன்னுமணிமுடி நீண்டு) அண்டத்தையும் எட்டுத்திக்குக்

அவ:— "மண்ணெடுங்கத்தானளந்த" என்று ப்ரஸ்துதமான திருவுலகளந்தருளின திவ்ய சேஷ்டிதத்திலே மீளவும் திருவுள்ளம் சென்று அந்த அபதாநத்தைப் பேசியநுபவிக்கிறார்.

உரை:—மலையைக் குடையாக தரித்துக்கொண்டுநின்று வர்ஷத்திலே அழியப்புக்க பசுக்களை ரக்ஷித்தருளின நிருபாதிக ஸ்வாமியான க்ருஷ்ணன் உபயவிபூதிநாதத்வத்

---

41. அவ:—"மண்ணெடுங்கத் தானளந்த மண்" என்று திருவுலகளந்தருளின ஆனைத்தொழில் ப்ரஸ்துதமானவாறே. அதிலேயே திருவுள்ளம் ஈடுபட்டு. அச்செயலையே விரிவாகப்பேசி அநுபவிக்கிறார். முதலாழ்வார்கள் பரத்வபரமாகவே தம்போலே பரத்வத்திலும், பரத்வத்தோடு தோள்தீண்டியான த்ரிவிக்ரமவ்ருத்தாந்தத்திலும் மிகவும் ஈடுபட்டிருப்பவர்களன்றோ.

வ்யா:—(அண்டம் போய் எண்டிசையும் மன்னும் மணிமுடி நீண்டு) அண்டம் பற அண்டச்சுவரையும் கிழித்துக்கொண்டுபோய், எட்டு திசைகளிலும் வியாபித்தது த்ரிவிக்ரமனுடைய பொருந்திய மணிமுடி. (மன்னும் மணிமுடி) பொருந்திய மணிமுடி. "ஆதி,

http://acharya.org

களையும் ஆதி$_4$ராஜ்யஸூசகமான திருவபி$_4$ஷேகம் வ்யாபிக்கவும். (துன்னித்யாதி) சேதநராலே செறியப்பட்ட பூமியடங்கலும் திருவடிகளேயாகவும். (மின்னையித்யாதி) மேக பதத்துக்கவ்வருகே 'வளர்ந்தருளுகிறபோது மின்னைத்திருப்

துக்குத் தகுதியாய்க்கொண்டு பொருந்தி அழகிய ரத்நங்களாலே சமைக்கப்பட்டிருக்கிற திருவபி$_4$ஷேகமானது முசிவறவளர்ந்து அண்ட$_3$பி$_4$த்தியிலே சென்று கிட்டும்படியாகவும்' எட்டுதிக்குகளையும் ப்ராணிகள் நிறைந்துகிடக்கிற பூமி எல்லாவற்றையும் திருவடிகளே வ்யாபிக்கும்படியாக

ராஜ்யமதி$_4$கம் பு$_1$வநாநாம் ஈஶ தே பிஶுநயந் கில மௌளி:" [வரதராஜஸ்தவம் 25] [ஈசனே! உன் கிரீடமே நீ உலகங்கட்கெல்லாம் தலைவன் என்று காட்டித்தருகிறது.] "கிரீடசூட$_3$ரத்நராஜிராதி$_4$ராஜ்யஜல்பிகா" [ர-ஸ்த 1—91] [திருமுடியிலும், திருமுடிப்பட்டையிலும் அழுத்திய மணிவரிசை நீயே பரம்பொருள் எனக்காட்டித் தருகிறது.] என்றாப்போலே உப$_4$யவிபூ$_4$திநாத$_2$னாயிருப்பவனுக்கே பொருந்திய மணிகள் அழுத்தப்பெற்ற கிரீடம். அன்றிக்கே, "முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ" [திருவாய் 3-1-1] "முகே$_2$ந்து$_3$காந்திருந்முக$_2$ம் தரங்கி$_3$தேவ ரங்கி$_3$ண:" [ர-ஸ்த 1-91] [ரங்கநாதனுடைய முகசந்திரனின் காந்தி மேல் நோக்கி அலையெறிவதுபோல் உள்ளது (முடிமணி வரிசை)] என்றாப்போலே, திருமுகத்தோடு பொருந்தியிருக்கும் மணிமுடி என்றும் கொள்ளலாம். 'எண்டிசையும் நீண்டு' என்று அந்வயமாகையாலே, 'எண்டிசையும் மன்னும்' என்று அந்வயிக்கக்கூடாது. 'எண்டிசையும்' என்பதை இரண்டாமடியோடு கூட்டிப்பொருளுரைப்பர் அப்பிள்ளை. (எண்டிசையும் துன்னுபொழிலனைத்தும் சூழ்கழலே) எட்டு திசைகளையும், சேதனர் நிறைந்துகிடக்கும் பூமி முழுவதையும் ஓர் திருவடியே வியாபிக்கும்படியாகவும். (சூழ் கழலே) 'மண்ணொடுங்க' என்று சென்ற பாசுரத்தில் அருளியபடியே மண் முழுவதும் திருவடிகளிலே மறைந்து, பிரகாசிப்பது வியாபித்த திருவடியேயாயிற்று. துன்னு—(சேதனர்) நெருங்கியிருக்கும்படியான. பொழில்—பூமி. (மின்னை உடையாக்கொண்டு அன்று உலகளந்தான்) மேகமண்டலத்தையும் கடந்து வளருகையாலே, மேக மண்டலத்திலுள்ள மின்னல்கள் இவனுக்குத் திருப்பீதாம்ப$_3$ரம் போலே விளங்கின; இப்படி மணிமுடி அண்டம்போய் நீண்டு,

http://acharya.org

பீதாம்பரமாகக்கொண்டு உலகளந்தான். (குன்றமித்யாதி) த்ரைலோக்யத்தையும் தன்னுடைய திருமேனியிலே மறைத்தவன் ஒருமலையாலே தன்னுடைய திருமேனியை மறைத்துக் கொண்டான். 41.

42\. கோவலனாய் ஆநிரைகள் மேய்த்துக் குழலூதி
மாவலனாய்க் கீண்ட மணிவண்ணன்—மேவி
அரி(எரி)யுருவமாகி இரணியனை தாகம்
தெரியுகிரால் கீண்டான் சினம்.

கோவலன் ஆய்-இடையனாய்ப்பிறந்து, **ஆ நிரைகள்**—பசுக்கூட்டங்களை. **மேய்த்து**-(புல்லுந் தண்ணீருமுள்ளவிடங்களிலே கொண்டுசென்று) மேய்த்தவனாயும், **குழல் ஊதி**-(பசுக்களை ஒன்று சேர்க்கப்) புல்லாங்குழலை ஊதினவனாயும் **மா**—குதிரை வடிவு கொண்டு நலியவந்த கேசி யென்னுமசுரனை **வலன் ஆய் கீண்ட**—வல்லவனாய்க் கொண்டு கிழித்த

வும் மேகபதத்துக்குமவ்வருகே செல்ல வளருகையாலே அங்குண்டான மின்னலைத் திருப்பீதாம்பரமாகக்கொண்டு மஹாபலி உதககம்பண்ணிக் கொடுத்தவன்று லோகத்தை அளந்துகொண்டான். 41.

பொழிலனைத்தும் சூழ்கழலாம்படியாக, மின்னை உடையாகக்கொண்டு அன்றொருநாள் உலகளந்தான். அவன்தான் யாரெனில்: (குன்றம் குடையாக ஆகாத்த கோ) மஹாபலியால் இந்திரனுக்கு ஆபத்து வந்தபோது மாவலியிடமிருந்து உலகளந்து இந்திரனுக்குக் குடியிருப்பைப் பெற்றுக்கொடுத்தவன், அவ்விந்திரனாலேயே பசுக்களுக்கு ஆபத்து வந்தபோது கைக்கெட்டினதொரு குன்றைக் குடையாயெடுத்து இந்திரன் பொழிந்த மழையைத்தடுத்து, மழையாலே அழியவிருந்த பசுக்களைக் காத்த ஸ்வாமியாவான். அநுகூலனான இந்திரனே ப்ரதிகூலனானபோது, அவ்விந்திரனுக்காக மூவுலகையும் தன்னுடைய திருமேனியிலே மறைத்தவன், ஒரு மலையாலே தன்னுடைய திருமேனியை மறைத்துக்கொண்டு, தன்னையண்டின பசுக்களையும் அவ்விந்திரனிடமிருந்து காப்பாற்றினான்! இவனுடைய ஸ்வாமித்வம் இருந்தபடியென்! என்று ஈடுபடுகிறார். 41.

http://acharya.org

வனாயும். மணி வண்ணன்—நீலமணி போன்ற வடிவை யுடையவனாயும். மேவி அரி உருவம் ஆகி— பொருந்திய நரசிங்க வடிவங்கொண்டு, இரணியனது ஆகம்—இரணியாஸுரனுடைய முரட்டுடலை, உகிரால்-நகங்களினால், கீண்டான்-கிழித்தவனாயுமுள்ள பெருமானுடைய, சினம்—சீற்றத்தை. தெரி-(நெஞ்சமே!) தெரிந்துகொள்.

வ்யா:— (கோவலனித்யாதி) ப்₃ராஹ்மணனாய் ஒத்துச் சொல்லப்பெறுமாபோலே இடைஜாதிக்கு உசிதமாகப்பசுக்களை யும் மேய்த்துக் குழலையுமூதி. (மாவலனித்யாதி) அப்பருவம்

அவ:— ஒருநாட்டுக்காக அந்யாபி₄மாநத்தால் வந்த ஆபத்தைப்போக்கி ரக்ஷித்தமைசொன்ன ப்ரஸங்கத்திலே ஒருருக்காக விரோதி₄களைப்போக்கி ரக்ஷித்தபடியைச் சொல்லுகிறார்.

உரை:— பசுமேய்க்கைக்கு யோக்யதையுண்டாம்படி இடையனாய்ப் பிறந்து. ஜாத்யுசிதமாகப் பசுக்கள் திரளைப் புல்லும் தண்ணீருமுள்ள விடந்தேடி வயிறுநிறையமேய்த்து.

---

42. அவ:—தன்னதல்லாத உலகைத் தன்னதாக அபி₄மானித்த மாவலியிடமிருந்து. உலகையே மீட்டு ரக்ஷித்ததை அருளினார் சென்ற பாசுரத்தில். இதில் திருவாய்ப்பாடியாகிற ஓர் ஊருக்கு ஏற்பட்ட விரோதிகளைப் போக்கி ரக்ஷித்ததையும், ஒரு பக்தனுக்குத் தகப்பனே விரோதியானபோது அவ்விரோதியைப்போக்கி அவனொருவனை ரக்ஷித்ததையும் பேசி இன்புறுகிறார். உலகம் முழுவதுமாகிலுமாம், ஓரூராகிலுமாம், ஓராளாகிலுமாம் ரக்ஷிக்கவல்லவன் இவன் ஒருவனே என்றபடி.

வ்யா:—(கோவலனாய் ஆநிரைகள் மேய்த்துக்குழலூதி) உலகை மீட்பதற்கு வாமனனாய் ப்ராஹ்மணப்ரஹ்மசாரியானபோது வேத மோதிக்கொண்டே மாவலியின் யஜ்ஞவாடத்திற்கு நடந்தாற்போலே, திருவாய்ப்பாடியை ரக்ஷிப்பதற்குக் கண்ணனாயவதரித்தபோது பசுமேய்க்கவல்ல இடையனாகவே ஆகி, அச்சாதிக்குரிய செயல்களைச் செய்தான்; பசுக்கள் கூட்டங்களுக்காகப் புல்லும் தண்ணீருமுள்ள இடம் தேடிச்சென்று அவை வயிறு நிறையும்படியாக மேய்த்து. அப்பசுக்களை ஒன்று சேர்ப்பதற்காக ஆயர் செய்யும் குழல் ஊதும் தொழிலையும் குறையறச் செய்தான்.

http://acharya.org

நிரம்பாமையிலே கேசியினுடைய வாயைக்கிழிக்கவல்லனாய். விரோதியைப்போக்குகையாலே ஶ்ரமஹரமான வடிவையுடையவன். (மேவியித்யாதி.) மேவி—நரத்வஸிம்ஹத்வமான இரண்டு வடிவுகொண்டால் பொருந்தாதேயிருக்குமோவென்னில், ஒரு வடிவுபோலே பொருந்தினபடி. அன்றிக்கே, மேவி

திருக்குழலூதி அந்தப்பருவத்தே தான் பிற்காலியாதே நினைத்தது செய்யவல்ல ஸமர்த்தனாய்க்கொண்டு கேசியினுடைய வாயைக் கிழித்தவனாய், விரோதிபோகப்பெற்ற ஹர்ஷத்தாலே, நீலரத்னம்போலே இருண்டு குளிர்ந்த வடிவழகையுடையனாய், இரண்டுவடிவை ஏககாலத்திலே எடுத்துக்கொண்டவளவில் சேராச்சேர்த்தியாயிராதே, சேர் பாலும் கண்டசர்க்கரையும்போலே பொருந்தியிருக்கிற

அங்குமாவலியின் அபிமானமாகிற தடையைப் போக்கினாற்போலே, இங்கும் கேசியாகிற விரோதியைப் போக்கினான் என்கிறார் மேலே,— (வலனாய் மாகீண்ட மணிவண்ணன்) கடும் வேகத்துடன் ஓடிவரும் அசுரக் குதிரையைக்கண்டு பின்வாங்காமல், அவ்விளம்பருவத்திலேயே தான் நினைத்ததை முடிக்கவல்ல ஸாமர்த்யமுடையவனாய்க் கொண்டு கேசியென்னும் அசுரனை அக்குதிரையை வாயைக் கிழித்துப்போட்டு, விரோதி அழியப் பெற்றதால் உண்டான ஆனந்தத்தாலே நீல ரத்னம் போலே இருண்டு குளிர்ந்த வடிவழகை உடையவனானவன். வலன்—வல்லவன். மா—குதிரை.

இனி, உலகிற்கு உதவும்போதும், ஓர் ஊருக்கு உதவும்போதும் கொள்ளாத சீற்றத்தை, ஓரடியானுக்கு உதவும்போது, அவன் திறத்தில் ஒருவன் செய்த அபசாரத்தின் மிகுதியாலே கொண்டதை அநுஸந்தித்து, அச்சினமே நமக்கு உத்தேஶ்யம் என்கிறார்,—(அரியுருவமாகி மேவி) நரசிங்கமாகிப் பொருந்தி. நரனும், சிங்கமும் கலந்திருந்தால் சேராச்சேர்த்தியாயிருக்குமோ?என்னும் ஐயத்திற்கு இடமில்லாமல், குழம்புப்பாலும் கற்கண்டும்போலே ஒன்றோடொன்று பொருந்தியிருக்கிற நரசிங்கவேஷத்தோடு பொருந்தி. அன்றிக்கே, "பகலிலும், சாவில்லை இரவிலும் சாவில்லை; ஆயுதங்களால் சாவில்லை; பூமியிலும் சாவில்லை ஆகாயத்திலும் சாவில்லை; தேவனாலும் மனிதனாலும்,

http://acharya.org

யென்று ஹிரண்யனுடைய வரத்தைக்கிட்டி என்றுமாம். (எரியுருவமாகி) ஒளியுண்டான ரூபத்தையுடையவனாய்ச் சினத்தாலே இரணியனாகத்தைக் கீண்டான். அன்றிக்கே. அரு ளன்று நமக்குத்₃தே₃ஶ்யம்; ஆஶ்ரிதவிரோதி₄கள் பக்கல் அவனுக்குண்டான சினமுத்₃தே₃ஶ்யம். அச்சினத்தைத் தெரி— அநுஸந்தி₄யென்றுமாம். 42.

நரஸிம்ஹவேஷத்தையுடையனாய்க்கொண்டு ஹிரண்யனுடைய முரட்டு உடம்பைத் திருவுகிராலே கிழித்துப் பொகட்டவனுடைய ஆஶ்ரிதவிரோதி₄விஷயமாய்க்கிளர்ந்த பரமப்ராப்யமான சீற்றத்தை. நெஞ்சே! ஆராய்ந்து அநுஸந்தி₄. அன்றிக்கே. மாவலனாய்க்கீண்ட மணிவண்ணன் சினத்தையுடையனாய்க்கொண்டு இரணியனதாகம் தெரியுகிரால் கீண்டானென்னவுமாம். தெரியுகிர்-விஶத₃மாக ப்ரகாஶிக்கிற உகிரென்றபடி. 42.

மிருகங்களாலும் சாவில்லை" என்று இரணியன் பெற்றிருந்த வரத்துக்குத்தக்கபடி தன்னை அமைத்துக்கொண்டு அந்தியம்போதில், அரியுருவாகிப் படியில் வைத்து நகத்தால் கிழித்ததைக் கூறுவதாகவும் கொள்ளலாம். மேவி—(வரத்தோடு) பொருத்தி என்றபடி. 'எரியுருவமாகி' என்று பெரியவாச்சான்பிள்ளை ஆதரித்த பாடம். நெருப்புப்போல் கண் கூசும் ஒளியுடையவனாகி என்று பொருள். (இரணியனதாகம் தெரியுகிரால் சினம் கீண்டான்) இரணியனுடைய முரட்டு உடம்பைக் கூரிய நகத்தாலே, கடுஞ்சினத்தால் கீண்டவன். தெரியுகிர்—கூரிய நகம். தெளிவாகப் பிரகாசிக்கும் நகம் என்றுமாம். அன்றிக்கே, 'நெஞ்சே!' என்னும் சொல்லைக் கூட்டிக்கொண்டு, (இரணியனதாகம் கீண்டான் சினம் தெரி) என்று அந்வயித்து, 'இரணியனுடைய முரட்டுடம்பைக் கிழித்தவனுடைய சினத்தை அநுஸந்திப்பாயாக' என்று பொருள் கொள்ளலாம். அடியானான ப்ரஹ்லாதனிடம் கொண்ட அருளைக் காட்டிலும், அவனுக்கு விரோதியான இரனியனிடம் கொண்ட சினமே நமக்கு முக்கிய உத்₃தே₃ஶ்யம், நெஞ்சே! அதை அநுஸந்தித்து ஆறியிருப்பாயாக. பாகவதாபசார மிகுதியாலே, மாவலியின் பாலும், கேசியின் பாலும் கொள்ளாத சீற்றத்தை இரணியன்பால் கொண்டான். அச்சினமே நமக்குப் புகல்

http://acharya.org

43. சினமா மதகளிற்றின் திண்மருப்பைச் சாய்த்து
புனமேய பூமியதனை—தனமாகப்
பேரகலத் துள்ளொடுக்கும் பேரார மார்வனார்
ஓரகலத் துள்ள துலகு.

சினம் மா மதம்—கோபத்தையுடைத்தாய் பெரியதாய் மதத்தையுடையதான. களிற்றின்—(குவலயாபீடமென்கிற) யானையினுடைய, திண்மருப்பை—திடமான தந்தத்தை சாய்த்து—ஒடித்துத்தள்ளினவனும். புனம் மேய—நல்ல விளைநிலங்களோடு கூடின. பூமி அதனை—பூமியை. தனம் ஆக—நிதியாக நினைத்துக்கொண்டு. பேர் அகலத்துள் ஒடுக்கும்—பரப்பையுடைய திருவயிற்றினுள் அடக்கிக் காத்தவனும். பேர் ஆரம் மார்வனார்—பெரிய ஹாரங்கள் பூண்ட திருமார்பையுடையனுமான எம்பெருமானுடைய. ஓர் அகலத்து—ஸங்கல்பரூபமான ஜ்ஞானத்தின் ஒரு பகுதியில், உலகு உள்ளது—உலகமெல்லாம் நிலைபெற்று உள்ளது.

அவ:—(சினம்) அவன் ஸங்கல்பத்தாலேயன்றோ இந்த லோகங்கிடக்கிறதென்கிறார்.

அவ:— இப்படி ஆஶ்ரிதமாத்ரத்தை நோக்குகிறவளவன்றிக்கே தன் ஸங்கல்பத்தாலே லோகத்தையடங்க நோக்குமென்கிறார்.

என்று கருத்து. "கொண்ட சீற்றமொன்றுண்டுளதறிந்து. உன்னடியனேனும் வந்து அடியிணை அடைந்தேன்" [பெரிய திருமொழி 5-8-3] என்றாரன்றே திருமங்கையாழ்வாரும். 42.

43. அவ:—முன் பாசுரத்தில் அருளியபடியே தன் அடியார்களை ரக்ஷிப்பதோடன்றியில், தன் ஸங்கல்பத்தாலே உலகனைத்தையும் ரக்ஷிப்பவன் இவனே என்கிறார் இப்பாசுரத்தில்.

வ்யா:—(சினமா மதகளிற்றின் திண்மருப்பைச் சாய்த்து) மிகுந்த கோபத்தையும், பெருத்த வடிவையும் உடையதாய், மதமூட்டப்பெற்றதாகையாலே வழியில் கண்டதையெல்லாம் அழித்துக் கொண்டுவரும் குவலயாபீடம் என்னும் கம்ஸனுடைய யானையின்

http://acharya.org

வ்யா:—(சினமித்யாதி) சினத்தையுடைத்தாய்ப் பெருத்து மதித்த குவலயாபீடத்தினுடைய இரண்டு மருப்புக்களேயும் அநாயாஸேந பறித்து. (புனமித்யாதி) சேதநர்க்கு போக்யங்களேயுடைத்தான பூமியை. (தனமித்யாதி) த₄நம் போலே யிருக்கத் திருவயிற்றிலே வைத்துக் காக்கும். (பேராரமார்பனுர்)

உரை:—மிக்க கோபத்தையும் முரட்டுவடிவையுமுடைத்தாய். மத₃முதி₃தமாய்க்கொண்டு முன்னடி தோற்றுதே வருகிற குவலயாபீட₂த்தினுடைய திண்ணிதான கொம்புகளை அநாயாஸேந முறித்து விழவிட்டு. சேதநர்க்கு நல்ல போ₄க₃ங்களை விளைத்துக்கொள்ளுகைக்கு அநுரூபமான ப்ரதே₃ஶங்களோடே கூடின பூமியை சிரியநிதி₄யாக நினைத்துக்கொண்டு பெரியபரப்பையுடைத்தான திருவயிற்றுக்குள்ளே வைத்து நோக்கும் ஸ்வபா₄வனுய், இரு

திண்மைமிக்க தந்தங்களை வாழைத்தண்டை ஒடிப்பதுபோலே அநாயாஸமாக ஒடித்து வீழ்த்தி. (புனம் மேய பூமியதனை தனமாகப் பேரகலத்துள்ளொடுக்கும்) சேதனர்க்கு நல்ல போ₄க₃ங்களை விளைத்துக்கொள்ள உறுப்பான விளைநிலங்களோடு கூடிய பூமியைச் சீர்மைமிக்க நிதியைப் பெட்டியில் பூட்டிவைப்பதுபோலே தன் பெரிய பரப்பையுடைய திருவயிற்றுக்குள் வைத்துப் பாதுகாக்கின்றவனுய். புனம்— விளைநிலம். பேர் அகலம்— பெரிய வயிறு. "ஏழுலகும் உண்டும் இடமுடைத்தால்" என்று திருமங்கைமன்னனுல் அநுஸந்திக்கப்படும் பரப்பையுடைய வயிறு. பிள்ளையாருக்குப் போலே வயிறு பெருத்து மார்பு சிறுத்து விகாரமாயிருக்குமோ? எனில்: (பேர் ஆர மார்பனுர்) வயிற்றின் பரப்புக்குப் பொருந்தியிருக்கும் பெருமையையுடையதாய், ஆரத்தாலே அலங்கரிக்கப் பெற்ற அழகிய திருமார்பை உடையவன். 'பேர்' என்பது மார்புக்கு விஶேஷணமாகக் கொள்ளப்பட்டது. அன்றிக்கே, ஆரத்திற்கு விஶேஷணமாகக் கொண்டு இரண்டாக மடித்துச்சாத்தவேண்டும்படி பெரிதாயிருக்கிற திருவாரத்தாலே அலங்கரிக்கப்பெற்ற திருமார்பையுடையவன் என்றும் கொள்ளலாம். (பேரகலத்துள்ளொடுக்கும் பேரார மார்பனுர்) தன் உடைமையான பூமியைத் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தமையாலுண்டான பூரிப்பாலே திருமார்பு ஆபரணம் பூண்டாற்போலே விளங்கிற்று என்று பெரியவாச்சான்

http://acharya.org

தன்னுடைமையானது ரக்ஷிக்கப்பட்டதென்றத்தாலே ஒருபடி ஆபரணம் பூண்டாற்போலே இருக்கிறபடி. (ஓரகலத்துள்ள துலகு) அம்ஶமான ஸங்கல்பத்துள்ளது லோகம். ஓரப்படுகிற ஸங்கல்பத்துள்ளது என்றுமாம். 43.

மடியிட்டுச் சாத்தவேண்டும்படி பெரிதாயிருக்கிற திருவாரத்தாலே ஒப்பித்திருக்கிற திருமார்வையுடையனவனுடைய. அத்₃விதீயமாய் அபரிச்சி₂ந்நமான ஸங்கல்பரூப ஜ்ஞானத்திலே உண்டாயிருக்கும் ஜகத்து. அன்றிக்கே, ஓரப்படுவதாய் — அநுஸந்தி₄க்கப்படுமதான ஸங்கல்பரூப ஜ்ஞானத்தென்னவுமாம். 43.

பிள்ளை அருளிய பொருள் சுவையுடையது. 'பேரகலம்' என்று விபரீதலக்ஷணையாலே சிறிய வயிற்றைச் சொல்லுகிறதென்றும கொள்வர். (ஓரகலத்துள்ள துலகு) அப்படிப்பட்ட பெருமானுடைய ஒப்பற்றதாய், அளவற்றதான ஸங்கல்பரூபமான ஜ்ஞானத்தாலே உலகம் ஸத்தை பெற்றிருக்கும். 'அகலம்' என்பது ஹ்ருதயத்தைச் சொல்லி, அதிலிருந்து வெளிவரும் ஸங்கல்பரூப ஜ்ஞானத்தைச் சொல்லுகிறது. 'ஓர்' என்றது ஒப்பற்றது என்றபடி. அன்றிக்கே ஓரப்படுகிற அதாவது அநுஸந்திக்கப்படுகிற ஸங்கல்பஜ்ஞாநம் என்றுமாம். அன்றிக்கே, 'ஓர்' என்று ஏகதே₃ஶம் என்னும் பொருளையுடையதாய், அவனுடைய ஸங்கல்பத்தின் ஏகதே₃ஶத்திலே இவ்வுலகம் ஸத்தைப்பெற்று நிலைநிற்கிறது என்றும் கொள்ளலாம்.

"யஸ்யாயுதாயுதாம்ஶாம்ஶே விஶ்வஶக்திரியம் ஸ்தி₂தா ।
பரப்₃ரஹ்மஸ்வரூபஸ்ய ப்ரணமாமஸ்தமவ்யயம் ॥"
[வி. பு 1-9-53]

[பரப்ரஹ்மஸ்வரூபியான எவனுடைய பல்லாயிரத்தில் ஒரு பாகத்தில் உலகமாகிற சக்தி நிலைநிற்கிறதோ, குறைவற்றவனான அவனை வணங்குகிறோம்.]

"மேரோரிவாணுர் யஸ்யைதத் ப்₃ரஹ்மாண்ட₃மகி₂லம் முநே"
[முனிவரே! இந்த ப்ரஹ்மாண்டம் முழுவதும் எவனுக்கு மேருவுக்கு அணுவைப்போலாகிறதோ......]

"விஷ்டப்₄யாஹமித₃ம் க்ருத்ஸ்நம் ஏகாம்ஶேந ஸ்தி₂தோ ஜக₃த்"
[கீதை 10-42]

http://acharya.org

44. உலகமு மூழியு மாழியும் ஒண்கேழ்
அலர்கதிரும் செந்தீயு மாவான்—பலகதிர்கள்
பாரித்த பைம்பொன் முடியா னடியிணைக்கே
பூரித்தென் நெஞ்சே புரி.

என் நெஞ்சே—எனது மனமே! உலகமும்—உலகங்களும். ஊழியும்—ப்ரளயகாலமும். ஆழியும்—கடல்களும். ஒண் கேழ் அலர் கதிரும்—அழகிய நிறத்தையும் மலரும் கிரணங்களையுமுடைய சந்திரஸூர்யர்களும். செம் தீயும்—சிவந்த நிறத்தையுடைத்தான அக்நியும். ஆவான்—ஆகிய இப்பொருள்களெல்லாம் தனக்கு ப்ரகாரமாம்படி நிற்பவனும். பல கதிர்கள் பாரித்த—பல கிரணங்களைப் புறப்பட விடுகின்ற. பை பொன் முடியான்—அழகிய பொன்முடியையுடையவனுமான பெருமானுடைய. அடி இணைக்கே—திருவடியிணைகளுக்கே. பூரித்து புரி—பரிபூரணமாக விருப்பங்கொள்ளு.

வ்யா:— (உலகமுமித்யாதி) லோகமும். எல்லாம் ஸம்ஹ்ருதமாய்க்காலமே ஶேஷித்த காலமும். கடலும். அழகிய

அவ:—நெஞ்சே! உப₄யவிபூ₄தியுக்தனான ஸர்வேஶ்வரன் திருவடிகளை ஆஶ்ரயிக்கப்பார் என்கிறார்.

உரை:—லோகங்களும். காலஶேஷமாம்படி ஸர்வமும் உபஸம்ஹ்ருதமான ஸம்ஹாரகாலமும். கடல்களும். அழகிய

[நான் இவ்வுலகையெல்லாம் ஓர் அம்ஶத்தினால் தரித்துக்கொண்டிருக்கிறேன்.] முதலான ப்ரமாணங்கள் இங்கு அனுஸந்திக்கத் தக்கவை. 43.

44. அவ:—நெஞ்சே! உப₄யவிபூ₄தியையும் உடையவனை ஸர்வேஶ்வரன் திருவடிகளை ஆஶ்ரயிக்கப்பார் என்கிறார்.

வ்யா:—(உலகமும் ஆவான்) எல்லா உலகங்களும் தான் என்னும் சொல்லுக்குள் அடங்கும்படி அவற்றைப் ப்ரகாரமாகக் கொண்டவனாய், அவற்றிற்கு அந்தர்யாமியாயிருப்பவன். (ஊழியும் ஆவான்) ஸ்ருஷ்டி₁த₃ஶையில் இருந்த

http://acharya.org

தாய் அலராநின்றுள்ள ஒளியையுடைத்தான ஆதி₃த்யனும். அக்நியும் தனக்கு ப்ரகாரமாகவுடையவன். இத்தால் ஐகதாகாரதையைச் சொல்லுகிறது. (பலகதிரித்யாதி) பரம பதத்திலே எழுந்தருளியிருக்கும்படி. (பலகதிர்கள்) "दिवि सूर्यसहस्रस्य भवेद्युगपदुत्थिता" (தி₃வி ஸூர்யஸஹஸ்ரஸ்ய ப₄வேத்₃யுக₃பது₃த்தி₂தா) என்னும்படியே நூறுயிரமாதித்யர்களை

நிறத்தையுடைத்தாய் விஸ்த்ருதமாகாநின்றுள்ள கிரணங்களையுடைய சந்த்₃ரஸூர்யர்களும். சிவந்த நிறத்தை யுடைத்தான அக்நியுமாகிற பதார்த்தூங்களை ப்ரகாரமாக வுடையனுய். இவ்வளவன்றிக்கே பரமபதத்திலே அஸங்க்₂ யாதமான கிரணங்களைப் புறப்படவிடாநிற்பதாய். அழகிய

முற்கூறிய எல்லா உலகங்களும் ஸம்ஹரிக்கப்பட்டு, அதாவது ஸூக்ஷ்ம நிலையை அடைவிக்கப்பட்டு காலம் ஒன்றே எஞ்சிநின்ற ப்ரளயகாலத்தையும் ப்ரகாரமாயுடையவனுயிருப்பவன். (ஆழியும் ஆவான்) கடலும் ஆவான். அப்ரளயகாலத்தில் உலகை விழுங்கிக் கொண்டு பெருகிய * நில்லாத பெருவெள்ளமாகிற ப்ரளயநீரையும் தனக்கு ப்ரகாரமாக உடையவன். அன்றிக்கே, உலகமும் என்று சொல்லப்பட்ட உலகில் அடங்கிய பொருள்களில் முக்கியமான சிலவற்றைச் சொல்லத்தொடங்கி, கடல்களையும் ப்ரகாரமாக உடைய வன் என்கிருராகவுமாம். (ஒண் கேழ் அலர்கதிரும் ஆவான்) ஒளிபொருந்திய நிறத்தையுடையவையாய், விரியாநிற்கும் கிரணங்களையுடையவையான சந்திர ஸூர்யர்களையும் தனக்கு ப்ரகாரமாக உடையவனுவான். (செந்தீயும் ஆவான்) சிவந்த அக்னியையும் தனக்கு ப்ரகாரமாக உடையவனுவான். இவ்வளவால் லீலாவிபூ₄தியை உடையவன் என்று சொல்லிற்றுயிற்று. இனி, நித்யவிபூ₄தியையும் உடையவன் என்று கூறி, 'அத்தகையவன் திருவடியிணையிலேயே அன்பு செலுத்து' என்று நெஞ்சுக்கு உபதேசிக்கிருர். (பல கதிர்கள் பாரித்த பைம்பொன் முடியான்) "தி₃வி ஸூர்யஸஹஸ்ரஸ்ய ப₄வேத் யுக₃பது₃த்தி₂தா। யதி₃ பா₄: ஸத்₃ருஶீ ஸா ஸ்யாத்₃பா₄ஸஸ் தஸ்ய மஹாத்மந:॥" [கீதை 11-12] [ஆகாயத்தில் ஆயிரம் சூரியர்கள் ஒரே காலத்தில் தோன்றினுல் எவ்வளவு ஒளியிருக்குமோ அவ்வளவு ஒளி அந்தப் பரமாத்மாவின் ஒளிக்கு ஒப்பாகலாம்.] "கதிராயிரமிரவி கலந்து எரித்தால் ஒத்த நீண்முடியன்" [பெரியாழ்திரு 4-1-1] என்கிறபடியே நூறுயிரம்

http://acharya.org

ஓடவைத்த ஒளியையுடைத்தாய் ஸ்ப்ருஹணீயமான திருவபி₄ஷேகத்தையுடையவனுடைய திருவடிகளிலே. (என் னெஞ்சே பூரித்துப்புரி) ஸ்நேஹித்தாஶ்ரயி. 44.

45. புரிந்து மதவேழம் மாப்பிடியோடூடி
திரிந்து சினத்தால் பொருது—விரிந்தசீர்
வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே மேலொருநாள்
மண்கோட்டுக் கொண்டான் மலை.

பொன்போலே ஸ்ப்ருஹணீயமான திருவபி₄ஷேகத்தையுடையனுய்க்கொண்டு எழுந்தருளியிருக்குமவனுடைய ஒன்றுக்கொன்று ஒப்பான திருவடிகளிலே. எனக்கு ப₄வ்யமான நெஞ்சே! ஹர்ஷப்ரகர்ஷத்தாலே பூர்ணமாய் அபி₄முக₂மாய்க்கொண்டு ஆஶ்ரயி. 44.

ஸூர்யர்களை ஒன்று சேர்ப்பதால் உண்டாகும் ஒளியையுடையதாய், பசும்பொன்போலே ஆசைப்படத்தக்கதான கிரீடத்தை உடையவனாகப் பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவன். "முடிவண்ணம் ஓராழிவெய்யோன்" என்று ஐந்தாம் பாசுரத்தில் ஒரு ஸூர்யனைத் திருமுடிக்கு உபமானமிட்டதில் திருப்தியுருமல், "பலகதிர்கள் பாரித்த பைம்பொன்முடியான்" என்று இங்கு பல ஸூர்யர்களை உபமானமிடுகிருர். 'கதிர்' என்று ஸூர்யனைச் சொல்லுகிறது. அன்றிக்கே, 'கதிர்' என்று கிரணமாய், பல கிரணங்களைப் புறப்பட விடுவதாய், பசும்பொன் போன்றதான கிரீடத்தையுடையவன் என்றும் பொருள்கொள்ளலாம். இத்தால் நித்யவிபூ₄தியை உடையவன் என்று சொல்லிற்ருயிற்று. இப்படி உப₄யவிபூ₄திக்குமாக முடிசூடியிருப்பவனுடைய திருவடியிணையையே ஆஶ்ரயிப்பாய் என்று நெஞ்சுக்கு உபதேசிக்கிருர் பாசுரத்தின் எஞ்சிய பகுதியாலே. (நெஞ்சே! முடியானடியிணைக்கே பூரித்துப் புரி) எனக்குப் பாங்காயிருக்கும் நெஞ்சமே! இப்படி உப₄யவிபூ₄தி நாயகனாகப் பரமபதத்திலே முடிசூடியிருப்பவனுடைய ஒன்றுக்கொன்று ஒப்பான திருவடிகளிலேயே உகப்பின்மிகுதியாலே பூர்ணமாய் ஆநுகூல்யஞ்செய்து ஆஶ்ரயிப்பாய்! (முடியான் அடியிணைக்கே) அவனுடைய முடிமுதலானவை எத்தனை உயர்ந்தவையானாலும் அவற்றில் கண்செலுத்தாமல் உன் ஸ்வரூபத்துக்குச்சேரக் கைக்குழந்தைக்குத் தாய் முலைபோன்ற திருவடிகளையே ஆஶ்ரயிக்கப்பார். 44.

http://acharya.org

மதம் வேழம்—மதங்கொண்ட யானை. மா பிடியோடு—சிறந்த தன்பேடையோடு. புரிந்து—கலவிசெய்து. ஊடி—(அதற்குப்பின்) பிரணய கலஹம்பண்ணி. திரிந்து–(அதனால் பேடையைத் துறந்து) இங்குமங்குந் திரிந்து. சினத்தால் பொருது—கோபத்தினால் (மணிப்பாறைகளில்) மோதி. விரிந்த சீர்—வீரஸ்ரீயை உடைய. வெண் கோடு—வெளுத்த கொம்புகளினின்று. முத்து—முத்துக்களை. உதிர்க்கும்—வெளி விடாநிற்கும். வேங்கடமே—திருமலையே. மேல் ஒருநாள்—முன்னொருநாளில் (வராஹ ரூபியாய்). மண்—பூமியை. கோடு—கோரப்பல்லின் மீது. கொண்டான்—எடுத்துக் கொண்டு வந்த பெருமானுடைய, மலை—திருமலையாம்.

அவ:— (புரிந்து) "பலகதிர்கள் பாரித்தபைம்பொன் முடியான்" என்று பரமபதத்தைக்கலவிருக்கையாக உடையவன் நமக்கு ஸௌலபனுமோ வென்னில். நமக்காகவன்றோ திருமலையிலேவந்து ஸந்நிஹிதனாயிற்றென்கிறார்.

அவ:–இப்படி உபயவிபூதியுக்தனான பெருமையோடே பரமபதத்திலே இருக்கக்கடவ அவன் நமக்கு ஆஸ்ரயிக்கலாம்படி திருமலையிலே வந்து ஸௌலப்யனான் என்கிறார்.

---

45. அவ:—இவ்வண்ணமாக உபயவிபூதிகளையும் உடையவன் என்னும் பெருமையுடன் கூடியவனாய், "பலகதிர்கள் பாரித்த பைம்பொன் முடியான்" என்று பரமபதத்தைப் பொருந்திய இருப்பிடமாகக் கொண்டு முடிசூடியிருப்பவன் மிகத்தாழ்ந்த நமக்கு எளியனாவனோ? எனில்: நமக்காகவன்றோ திருமலையிலே வந்து அடைதற்கெளியவனாய் நிற்கிறான் என்கிறார்.

வ்யா:—(மதவேழம்) திருமலையிலேயுள்ளதொரு மதங்கொண்ட ஆண் யானையின் செயல் வராஹரூபியான பெருமானுடைய செயலை ஒத்திருக்கையாலே இவ்விரண்டும் இப்பாசுரத்தில் சேர்த்து அநுபவிக்கப்படுகின்றன. (மத வேழம் மாப்பிடியோடு புரிந்து) மதங்

http://acharya.org

அவ:—நாவினால் ஓதுகையாவதுதானேதென்ன; ஸகல வேத₃ஸங்க்₃ரஹமான திருமந்த்ரத்தை உச்சரித்துக்கொண்டு வேதா₃ந்தத்திற் சொல்லுகிற மர்யாதை₃யாலே ப₄க்தி மார்க்க₃த்திலே நின்று ஆஶ்ரயியுங்கோள் என்றும் அது மாட்டாதார் த்₃வயத்திற் கட்டளையிலே ஶ்ரிய:பதியானவன் திருநாமத்தைச் சொல்லிஆஶ்ரயியுங்கோள் என்றும் இரண்டு வகையாகஆஶ்ரயணத்தை அதி₄காரானுகு₃ணம் விதி₄க்கிறார்.

உரை:—வகுத்த விஷயத்தை இகழ்ந்து இதரவிஷயத்தில் ப்ரவணராய்த் திரிகிற சபலர்காள்! ஸாங்க₃வேதா₃த்₄யயநம் பண்ணி அதிற்சொல்லுகிற அர்த்த₂ங்களையுமறிந்து அறிந்தபடியே ஸாக்ஷாத்காரரூபமான ப₄க₂வத்₃ப₄க்தியைப் பேற்றுக்கு உபாயமாக அநுஷ்டி₂க்கவல்லிகோளாகில்.

இது பெரியவாச்சான்பிள்ளை நிர்வாஹம். இனி, அப்பிள்ளையுரையின்படி இப்பாசுரத்தின் பொருள் விவரிக்கப்படுகிறது.

39. அவ:—"நாவினால் ஓத்து" என்று சென்ற பாசுரத்திற் சொன்னது இரண்டு வகைப்பட்டதாகும் என்று விவரித்துக் காட்டுகிறார். ஸகலவேத₃ஸங்க்₃ரஹமான திருமந்திரத்தைச் சொல்லிக்கொண்டு, வேதாந்தங்களில் சொல்லுகிற முறையிலே ஸாத₄நப₄க்தியைக்கொண்டு அவனை அடையலாம் என்றும், அந்த ப₄க்தியை அநுஷ்டிக்கமாட்டாதார், த்₃வயத்திற் சொன்னபடியே ஸ்ரீமந்நாராயணனின் பெயரைச் சொல்லி அவனை சரணமடையலாம் என்றும், இரண்டுவிதமான அதிகாரிகளுக்கு அனுகுணமாக நாவினால் பேர் ஓதுவதை இரண்டு விதமாக விவரிக்கிறார்.

வ்யா:—(ஏழைகாள்) அடைதற்குரிய பகவத் விஷயத்தைவிட்டு சப்தாதி விஷயங்களில் மண்டி நிற்கும் அறிவுகேடர்களே! (ஓத்து அதனை வல்லீரேல்) அங்கங்களோடு கூடிய வேதங்களை அத்₄யயனம் செய்து, அதிற்சொல்லுகிற அர்த்த₂ங்களையும் அறிந்து அதில் பரக்கச் சொல்லப்பட்டிருக்கிறதாய், பரமபுருஷனை இடைவிடாமல் நேரே காண்பதாகிற ஸாத₄னப₄க்தியை அவனை அடைய உபாயமாக அநுஷ்டி₂க்க வல்லீராகில். 'வல்லீரேல்' என்னும் பதம் வேதத்தின் அத்₄யயனத்தை மாத்திரமல்லாமல், அதன் அர்த்த₂ ஜ்ஞானத்தையும், அவ்வர்த்தத்தை அநுஷ்டிப்பதையும் குறிக்கிறது. அர்த்த₂ ஜ்ஞானமும், அநுஷ்டா₂னமும் பிறந்தாலன்றோ வேத₃த்₄யயனம் பயனுடையதாய், நிறைவுபெறுகிறது.

http://acharya.org

வ.எண்: 2160 நாள்: 27.10.09

பொருது. (விரிந்தசீரித்யாதி) பொருகையாலே வீரஸ்ரீயையுடைத்தான வெள்ளைக் கோட்டிலே உண்டான முத்தையுதிரா நின்ற திருமலை. (மேலித்யாதி) பண்டொருநாள் பூமியை ஸ்ரீ வராஹரூபியாய் எயிற்றிலே கொண்டவனுடைய மலை. திருமலையில் ஆனைகளுக்குச் சேருமிறே ஸ்ரீவராஹ ரூபமான வடிவு. 45.

புத்$_{3}$தி$_{4}$பண்ணிப் பெரியசீற்றத்தையுடைத்தாய்க்கொண்டு அத்தோடே பொருது, அத்தாலே விஸத்ருதையான வீரஸ்ரீயை யுடைத்தாய், வெளுத்த கொம்புகளினின்றும் முத்துக்களைச் சொரியாநிற்கும் வேங்கடமே முன்னொருநாளிலே ஸ்ரீவராஹ ரூபியாய்க்கொண்டு பூமியைத் தன் திருவெயிற்றிலே எடுத்து வைத்துக்கொண்டவனுடைய திருமலை. 45.

பாசுரத்திலில்லாத ப்ரதிக$_{3}$ஜத்தை வருவித்துக்கொண்டு, 'புரிந்து' 'ஊடி' என்னும் பதங்களை முன் பின்னாகக் கூட்டிப் பொருள் கொள்ளவேண்டியிருக்கும் அப்பிள்ளை நிர்வாஹத்தைக்காட்டிலும், பாசுரத்தில் உள்ளபடியே அந்வயித்துப் பொருள் கொள்ளும் பெரியவாச்சான்பிள்ளையின் நிர்வாஹம் சிறப்புற்றது.

(விரிந்த சீர் வெண்கோட்டு முத்துதிர்க்கும்) இப்படிப் போர் செய்கையாலே வெளிப்பட்ட வீரஸ்ரீயை உடைய வெளுத்த தந்தத்தினின்றும் முத்துக்களைச் சொரியாநிற்கின்ற. ஆனைத்தந்தத்தில் முத்து உண்டாகையாலே, பாறையோடு முட்டியவுடன தந்தத்திலிருந்து முத்து சொரிகின்றது என்று கருத்து. (வேங்கடமே) இத்தகைய காட்சியை உடைய திருவேங்கடமலையே. (மேல் ஒருநாள்) முன்பு ஒரு காலத்திலே வராஹாவதாரம் எடுத்தபோது. (மண் கோட்டுக் கொண்டான மலை) பூமியைத் தன் தந்தத்திலே குத்தியெடுத்து வைத்துக்கொண்டவனுடைய மலையாகும். யானை பாறைகளிலே தந்தத்தாலே குத்துவது பேருருவத்தையுடைய வராஹப்பெருமான் பூமியைக் குத்தியெடுத்ததை நினைவுறுத்துவதாயிராநின்றது என்று கருத்து. (மண்கோட்டுக்கொண்டான்மலை) திருமலையில் ஸ்ரீநிவாஸன் அவதரிப்பதற்கு முன்னமே அது வராஹப் பெருமாள் கோயில்கொண்டு எழுந்தருளியிருந்த, இடமென்பது ப்ரஸித்தமன்றோ. அதை உணர்த்துகிறார். இப்படி நமக்காகத் திருமலையிலே எளியனாய் எழுந்தருளியிருக்கும்போது நாம் கரைய வேண்டியதில்லை என்று கருத்து. 45.

http://acharya.org

46. மலைமுகடு மேல்வைத்து வாசுகியைச் சுற்றி
தலைமுகடு தானொருகை பற்றி—அலைமுகட்
டண்டம்போய் நீர்தெறிப்ப அன்றுகடல் கடைந்தான்
பிண்டமாய் நின்ற பிரான்.

பிண்டம் ஆய் நின்ற பிரான்—(உலகுக்கு) உபாத$_3$ான காரணமாக நின்ற எம்பெருமான், அன்று—முன்பொரு காலத்தில். முகடு மலை—சிகரத்தையுடைத்தான மந்தர மலையை. மேல் வைத்து—(கூர்மரூபியான தன்னுடைய முதுகின்மேலே) வைத்து. வாசுகியை சுற்றி—(அதிலே) வாஸுகிநாகத்தை(க் கடைகயிறாக)ச்சுற்றி. தலை முகடு—அதன் தலையான சிகரத்தை. தான் ஒரு கை பற்றி—தான் ஒரு கையாலே பற்றிக்கொண்டு. அலை முகட்டு நீர்—அலையின் மேல் உள்ள திவலைகள். அண்டம் போய் தெறிப்ப—அண்டச்சுவரின் மேற் சென்று தெறிக்கும்படியாக. கடல் கடைந்தான்—கடலைக்கடைந்தான்.

வ்யா— (மலைமுகடுமேல்வைத்து) ஓங்கியிருந்துள்ள மலையைத் தன்முதுகின்மேல் வைத்து. (வாசுகியைச் சுற்றி)

அவ:— திருமலையிலே வந்து ஸந்நிஹிதனானவன் ப்ரயோஜனாந்தரபரர்க்கும் அபேக்ஷிதஸம்வித$_4$ாநம் பண்ணுமவன இவனென்கிறார்.

உரை:—உயர்ந்த சிகரத்தையுடைத்தான மந்தரபர்வதத்தைக் கீழே ஆத$_4$ாரகூர்மமாயிருக்கிற தன் மேலே வைத்து.

---

46. அவ:—இப்படித் திருமலையிலே வந்து எழுந்தருளியிருப்பவன், ஒரு பயனைப்பெற்று அகலநினைப்பார்க்கும், தன் உடம்பு நோவக் காரியம் செய்து அப்பயனை அளிப்பவன் இவர் என்கிறார்

வ்யா:—(மலைமுகடு மேல் வைத்து) முகடுமலை மேல் வைத்து—உயர்ந்த சிகரத்தையுடைய மந்தரமலையை, திருப்பாற்கடலின் கீழே அம்மலைக்கு ஆத$_4$ாரகூர்மமாயுள்ள தன் மேலே, மத்தாக வைத்து. (வாசுகியைச் சுற்றி) வாஸுகியாகிற பாம்பை அதிலே

http://acharya.org

அதிலே வாசுகியைச்சுற்றி. (தலைமுகடு தானொருகை பற்றி) கீழ் கடைகிறது குலையாமல் ஆமையாய்த் தாங்கி. மேலே வைத்த சிகரம் அடிக்கிளர்ந்து போகாதபடி ஒருகையாலே பற்றி. (அலைமுகட்டித்யாதி) இத்திரண்ட திவலைபோய்த் தெறிப்ப. அலைமேல் நீர் அண்டபித்தியில் போய்த்தெறிப்ப.

வாஸுகியாகிற பாம்பை அதின் நடுவே கடைகயிறாகச்சுற்றி. அது கொந்தளியாதபடியாக அதன் தலையான சிகரத்தைத் தான் ஒருகையைக்கொண்டு அமுக்கி. கடைகிற வேகத்தாலே அலைகளில் சிறுதிவலைகளானவை அண்டத்தினுடைய உச்சியிலே சென்று ஜலமானது தெறிக்கும்படியாக இந்த்ராதிகள் திருவடிகளிலே வந்து விழுந்தவன்று மஹத்தத்வமான கடலைக் குளப்படிபோலே கலக்கிக் கடைந்தருளினான்.

கடைகயிறாகச் சுற்றி. (தலைமுகடு தான் ஒருகை பற்றி) மத்தாகிற மந்தரமலை கீழே அமிழ்ந்துவிடாமல் ஆமையாய்த் தாங்கினாற்போலே, கடைகின்றபோது அம்மந்தரமலை கொந்தளித்துத் தலைகீழாக ஆகாதபடி, அதினுடைய தலையான சிகரத்தைத் தான் ஒரு கையாலே அமுக்கி. (அலை முகட்டு அண்டம்போய் நீர் தெறிப்ப) அலை முகட்டு நீர் அண்டம் போய்த் தெறிப்ப என்று அந்வயம். இப்படிக்கடைகையாலே திருப்பாற்கடலின் அலைகளின் மேலே திரண்ட நீர்த்திவலை அண்டச் சுவரிலே போய்த்தெறிக்கும்படியாக. (அன்று) ''எல்லாச் செல்வத்தையுமிழந்தோம்; நீயே பெற்றுத்தர வேணும்'' என்று இந்திரன் முதலான தேவர்கள் திருவடிகளிலே விழுந்த அன்று. (கடல் கடைந்தான்) பெரிய தத்துவமான கடலை, ஓர் குளம்படியைப்போலே கலக்கிக் கடைந்தருளினான். இப்படி உடம்பு நோவ தேவர்களுக்காகக் காரியம் செய்தவன்தான் ஓர் வழிப்போக்கனோ? என்னில்: (பிண்டமாய் நின்ற பிரான்) மண்குடம் மண்பானை முதலானவற்றுக்கு உபாதாநகாரணமாக மண்கட்டியாகிற பிண்டம் உள்ளதுபோல், ஸ்தூலமாக நாம் காணும் எல்லாவுலகுக்கும் உபாதாந காரணமாய், அவையனைத்தும் நாமரூபப்பிரிவற்று ஸூக்ஷ்மநிலையில் தன்னோடு ஒன்றியிருக்கும்படி ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டனாய் நின்ற உபகாரகன்கிடீர் இக் காரியம் செய்தவன்! இங்கு உபாதானமான பிண்டத்தைச்சொன்னது

http://acharya.org

(அன்றித்யாதி) இதுக்குபாத3ாநகாரணமானவன். "एको ह वै नारायण आसीत्" (ஏகோ ஹவை நாராயண ஆஸீத்) 46.

க4டஶராவாதி3களுக்குக் காரணமான ம்ருத்பிண்டம்போலே "एकमेव" (ஏகமேவ) என்னும்படி பிண்ட3மாய் ஸகலகார்யங்களும் தன்னோடே ஒன்றி நாமரூபவிப4ாக3ாநர்ஹஸூக்ஷ்ம சித3சித்3விஶிஷ்டனாய்க்கொண்டு நிகி2ல ஜக3து3பாத3ாந காரணபூ4தனாய் நின்ற உபகாரகன்கிடீர். 46.

மூவகைக்காரணத்துக்கும் உபலக்ஷணம். "ஸதே3வ ஸோம்யேத3மக்3ர ஆஸீதே3கமேவ அத்3விதீயம்" [சாந்தோக்யம் 6-2-1] [குழந்தாய்! இவ்வுலகனைத்தும் முதலில் 'ஸத்' எனப்படும் ப்ரஹ்மமாகவே இருந்தது; ஒன்றாகவேயிருந்தது; இரண்டற்றதாயிருந்தது.] "ஏகோ ஹவை நாராயண ஆஸீத் நப்3ரஹ்மா நேஶாந: நேமே த்3யாவாப்ருதி2வீ" [மஹோபனிஷத்] [நாராயணன் ஒருவனேயிருந்தான்; பிரமன், சிவன், இவ்வுலகங்கள் ஆகிய எதுவுமில்லை] "யதா2 ஸோம்ய ஏகேந ம்ருத்பிண்டே3ந ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத்" [சாந் 6-1-4] [குழந்தாய்! எப்படி ஒரு மண்பிண்டத்தை அறிந்தால் மண்ணாலானது அனைத்தும் அறியப்பட்டதாகிறதோ (அப்படியே உபாத3ானகாரணமான ப்3ரஹ்மத்தை அறிந்தால் அதன் கார்யமான அனைத்தும் அறியப்பட்டதாகிறது)] முதலான ப்ரமாணங்களில் நாராயணனே பிண்டத்தைப்போலே உபாத்3ானமாகவும், குயவனைப் போலே நிமித்தமாகவும், த3ண்ட3சக்ரங்களைப்போலே ஸஹகாரியாகவும், ஆக மூவகைக்காரணமாகவும் ஆகிறான் என்று உத்கோஷிக்கப்பட்டதன்றோ. இப்படி ஸகலஜக3த்காரணமாயிருந்தும், ப்ரயோஜநாந்தரபரர்க்கும் உடம்பு நோவக் கார்யம் செய்பவனாகையாலே. அநந்யப்ரயோஜனரான நம் காரியத்தைத் தன் காரியமாகக் கொண்டு செய்வான் என்று கருத்து. இவ்வாழ்வாருடைய சீடரான திருமழிசையாழ்வார் தம் நான்முகன் திருவந்தாதியில் பின்வரும் (49-ம்) பாசுரத்தில் இப்பாசுரத்தைப் பெரும்பாலும் பின்பற்றியிருப்பது காணத்தக்கது.

மலையாமை மேல் வைத்து வாசுகியைச் சுற்றித்
தலையாமை தான் ஒருகை பற்றி—அலையாமல்
பீறக்கடைந்த பெருமான் திருநாமம்
கூறுவதே யாவர்க்கும் கூற்று. [நான்-திருவ49] 46.

http://acharya.org

47. நின்ற பெருமானே நீரேற்று உலகெல்லாம்
சென்ற பெருமானே செங்கண்ணா—அன்று
துரகவாய்கீண்ட துழாய் முடியாய் நங்கள்
நரகவாய் கீண்டாயும் நீ.

நீர் ஏற்று நின்ற பெருமானே—(மாவலியிடம்) தானநீர் வாங்கிக்கொண்டு நின்ற பெருமானே! உலகு எல்லாம் சென்ற பெருமானே—எல்லா உலகங்களையும் அளந்த பெருமானே! செம் கண்ணா—செந்தாமரைக் கண்ணனே! அன்று—முன்பொரு காலத்தில். துரகம்—குதிரைவடிவு கொண்டு துன்புறுத்த வந்த கேசியென்னும் அசுரனுடைய, வாய்—வாயை. கீண்ட—கிழித்தொழித்தவனாய். துழாய் முடியாய்—திருத்துழாயணிந்த திருமுடியையுடையவனே! நங்கள்—எங்களுடைய. நரகம் வாய்—(ஸம்ஸார) நரக மார்க்கத்தை. கீண்டாயும் நீ—அழித்தவனும் நீயேயன்றோ?

வ்யா:—(நின்ற பெருமானே நீரேற்று) மஹாபலிபக்கலிலே நீரேற்று ஶேஷித்வம் தோற்றும்படி நின்றவனே! (உலகித்யாதி)

அவ:—தேவர்களுடைய அபேக்ஷிதம் செய்தவனே கிடீர் நம் விரோதிகளைப்போக்கி அடிமை கொள்ளுவான் என்கிறார்.

உரை:—மஹாபலி பக்கலிலே சென்று உதககஜலத்துக்குக் கையேற்றுக்கொண்டு ஶேஷித்வம் தோற்ற நின்றருளின

---

47. அவ:-தேவர்களுக்கு அநிஷ்டங்களைப்போக்கி இஷ்டங்களை அளித்ததுபோலே, நமக்கும் அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டங்களை அளிப்பவன் நீயே என்று முன்னிலைப்படுத்திக் கூறுகிறார்.

வ்யா:—(நீரேற்று நின்ற பெருமானே) நாலு கைகளாலும் நாலு புருஷார்த்தங்களையும் கொடுத்துப் பழக்கப்பட்ட அமை புரிந்த நெடுந்தடக்கைகளை உடைய பெருமானான நீ, மாவலியிடம் சென்று தானநீருக்குக் கையேற்றுக்கொண்டு நின்றாயன்றோ! (நின்ற பெருமானே) ஒருவனிடம் தானம் வாங்கும்போது கூனிக் குறுகி நின்று தானம் வாங்குவது உலக வழக்கம். உன் உடைமையை தானம் என்னும் வியாஜத்தாலே பெறப்போகிறவனாகையாலே,

http://acharya.org

லோகத்தை யெல்லாமளந்து உடையவனென்று தோற்றும்படி நின்றவனே! (செங்கண்ணு) ஸ்நேஹந்தோற்றும்படி நின்றவனே! (அன்றித்யாதி) வைத்த வளையம் வாடாமல் கேசி வாயைக்கிழித்தவனே! (ஙங்களித்யாதி) ஒருகேசிவாயைக் கிழித்தது ஆஸ்சர்யமோ எங்கள் நரகத்தின் வாயைக் கிழித்தவுனக்கு? 47.

வனாய். அவன் உதகம் பண்ணின அநந்தரம் ஸகலலோகங்களிலும் சென்று அளந்துகொண்ட ஸர்வஸ்மாத்பரனாய். இந்த்ரன் கார்யம் தலைக்கட்டப்பெற்ற ப்ரீதிப்ரகர்ஷத்தாலே சிவந்த திருக்கண்களையுடையனாய். ஜகத்து அஸ்தமிதமாகப் புக்கவன்று குதிரைவடிவு கொண்டு வந்த கேசியினுடைய வாயை கிழித்துப்போகட்டவனாய். அத்தசையிலும் திருத்துழாயாலே அலங்க்ருதமான திருவபிஷேகத்தையுடையனாய்க் கொண்டு அவ்வொப்பனைக்குறி அழியாதே நின்றவனே!

தானம் வாங்கும்போதும் உலகம் அனைத்தும் உன்னுடைமை என்று தோற்றவன்றோ நின்றாய். (நீரேற்று நின்ற பெருமானே) தன்னுடைமையை மற்றொருவன் தன்னதென்று அபிமானிக்க, அவனிடம் நீரேற்று அதைப் பெற்றபிறகே தரையில் காலூன்றிப் பெறுததுபெற்ற பெருமானாய் நின்றுன் என்றுமாம். (நீரேற்று உலகெல்லாம் சென்ற பெருமானே) தான நீரைக் கையில் ஏற்ற அடுத்த கணமே எல்லாவுலகங்களிலும் வளர்ந்து அனைத்துலகையும் அளந்து, அதனாலேயே அனைத்துலகுக்கும் ஸ்வாமி நீயே என்பது விளங்க நின்றவனே! (செங்கண்ணு) இந்திரன் காரியத்தை முடித்த உகப்பாலும், இழந்த உடைமையைப் பெற்ற உகப்பாலும், அதைத் திருவடியாலே தடவிக் கொடுத்த உகப்பாலும் சிவந்த திருக்கண்களை உடையவனே! (அன்று) குதிரையுருக் கொண்டு வந்த கேசியென்னும் அசுரனாலே உலகமே அழியப் புகுந்த அன்று. (துரகவாய் கீண்ட) அக்குதிரையின் வாயிலே கையை விட்டு அதைக்கிழித்துத் தன் உடைமையான உலகிற்கு வந்த ஆபத்தை நீக்கினன் என்று கருத்து. (துழாய் முடியாய்) பெரும்பலங்கொண்ட அவ்வசுரனின் வாயைக் கிழிக்கும்போதும், திருத்துழாயாலே அலங்கரிக்கப்பட்ட கிரீடத்தை உடையவனாய், சூடார்முடிமேல் புனைந்த அத்தண்ணந்துழாய் வளையம், அந்நிலையிலும் குறியழியாமலும் வாடாமலுமிருக்கப் பெற்றவனே!

http://acharya.org

48. நீயன்றே நீரேற்று உலகமடி யளந்தாய்
நீயன்றே நின்று நிரைமேய்த்தாய்—நீயன்றே
மாவா யுரம்பிளந்து மாமருதி னூடுபோய்
தேவாசுரம் பொருதாய் செற்று.

நீர் ஏற்று—(மாவலியிடம்) தானநீர் வாங்கி. உலகம்—உலகங்களை, அடி அளந்தாய் நீ அன்றே—திருவடியால் அளந்தவன் நீயன்றோ? நின்று—ரக்ஷிப்பதில் நிலைத்து நின்று. நிரை—பசுக்கூட்டங்களை. மேய்த்தாய் நீ அன்றே—மேய்த்தவனும் நீயன்றோ? மா—குதிரைவடிவுகொண்டுவந்த கேசியென்னும் அசுரனுடைய. வாய் உரம்—வாயின் வலிமையை. பிளந்து-ஒழித்து. மா மருதின் ஊடு போய்-பெரிய இரட்டை மருத மரங்களிடையே தவழ்ந்து அவற்றை முறித்துத் தள்ளி. தேவாசுரம்—தேவாஸுரச் சண்டையிலே. செற்று—(அசுரர்களை) அழியச்செய்து. பொருதாய் நீ அன்றே—போர் செய்தவனும் நீயன்றோ.

இப்படி விரோதிநிரஸன சீலனாயிருக்கிற நீயேயாயிருக்கும் அநந்ய ப்ரயோஜநரான எங்களுடைய ஸம்ஸாரமாகிற நரகத்தினுடைய வாயைக் கிழித்துப் பொகட்டாயும். 47.

(நங்கள் நரகவாய் கீண்டாயும் நீ: இப்படி உலகிற்கு உண்டான விரோதியைப் போக்கினாற்போலே, உன்னையே பயனாக்கொண்ட எங்களுக்கு உன்னைப்பெறத் தடையான நரகமாயிருக்கும் இந்த ஸம்ஸாரத்தின் வாயைக் கிழித்துப்போட்டவனும்நீயே. இந்த ஸம்ஸார வழியில்நாங்கள் செல்லமுடியாதபடி செய்தாய் என்றபடி. வேறு எவராலும் அழிக்கவொண்ணாத இந்த ஸம்ஸார வெந்நரகையும் அழித்த உனக்கு ஒரு கேசியின் வாயைக் கிழித்தது ஓராஸ்சர்யமல்ல என்று கருத்து. இங்கு நரகவாய் கீண்டதாகிற அநிஷ்ட நிவ்ருத்தியைச் சொன்னது, அடிமைகொள்ளுகையாகிற இஷ்டப்ராப்திக்கும் உபலக்ஷணம். தேவர்களுக்கும், ஆய்ப்பாடி மக்களுக்கும் அநிஷ்ட நிவ்ருத்தியையும், இஷ்டப்ராப்தியையும் செய்ததுபோலே நமக்கும் செய்வான் என்பது பாசுரத்தின் திரண்டபொருள். 47.

http://acharya.org

வ்யா:— (நீயன்றேயித்யாதி) உன்னுடைமைக்கு மஹாபலிபக்கலிலே நீரேற்று அத்தைத் திருவடிகளாலே அளந்தாய். (நீயன்றேயித்யாதி) க்ருஷ்ணனுயவதரித்துப் பசு மேய்த்தாய். (நீயன்றேயித்யாதி) கேசிவாயைப்பிளந்து பெரிய

அவ:-நீர் சொல்லுகிறவையெல்லாம் நாம் அறிகிறிலோமே என்ன. பின்னையிவையெல்லாம் செய்தார் ஆர்? என்கிருர்.

உரை:— மஹாபலிபக்கலிலே அர்த்தியாய்ச்சென்று நீரேற்று. ஜகத்தையடையத் திருவடிகளாலே அளந்து கொண்டாய் நீயன்றே? க்ருஷ்ணனுய் வந்து ரக்ஷணத்திலே ஒருப்பட்டுநின்று. கையும் கோலுமாய்க்கொண்டு பசுக்களை வயிறு நிறையும்படி மேய்த்தாய் நீயன்றே? உன்னை விழுங்குவதாகவந்த கேசியினுடைய வாய்வலிகுலையும்படி வயிற்றைக்கிழித்துப் போகட்டு. பெரிய மருதுகளின் நடுவே.

---

48. அவ:—திருவுலகளந்த செயல் முதலான செயல்களைச் செய்ததாகச் சென்ற பாசுரத்தில் ஆழ்வார் அருளியவுடன், (தூணை ஆட்டி ஆட்டி ஆழப்புதைப்பதாகிற) ஸ்தூணாநிகநநந்யாயத்தாலே, இவருடைய கருத்தை உறுதிப்படுத்துவதற்காக, எம்பெருமான் 'நீர் சொல்லுகிறவையெல்லாம் நாம் அறியோமே!' என்ன, 'பிரானே! அப்படியானல் இவற்றையும் இன்னமும் பல செயல்களையும் செய்தவர் யார்?' என்கிருர் இப்பாசுரத்தில்.

வ்யா:—(நீரேற்று உலகம் அடியளந்தாய் நீயன்றே) மாவலியிடம் யாசகனுகிச்சென்று தான நீரைக் கையில் ஏந்தி, உன் உடைமையான உலகத்தைத் தன்னுடையதாக அபிமானித்த அவனிடமிருந்து தானமாகப்பெற்று, அதைத் திருவடிகளாலே அளந்துகொண்டவன் நீயன்றோ? (நின்று நிரை மேய்த்தாய் நீயன்றே) கண்ணனுய் அவதரித்துக் கன்றுகளையும் பசுக்களையும் ரக்ஷிப்பதிலே நிலைத்து நின்று, கையும் கோலும் கொண்டு பசுக்கூட்டங்களை வயிறு நிறையும்படி மேய்த்தவன் நீயன்றே. (மாவாய் உரம் பிளந்து) உன்னை விழுங்கி ஆய்ப்பாடியைத் தூளாக்கக் குதிரையுருக்கொண்டு வந்த கேசியின் வாய்வலிமைகுலையும்படி வாயைக்கிழித்துப்போட்டு. (மாமருதின ஊடுபோய்) பொய்ம்மாய அசுரர்களால் ஆவேசிக்கப்பட்ட பெரிய இரட்டை மருதமரங்களின்

http://acharya.org

மருதினிடையே போய். (தேவாசுரமித்யாதி) ஜ்ஞாநஹீநமான அசேதநங்களைப் போக்கினதுவேயோ? சேதநரான விரோதிகளையும் போக்கிற்றில்லையோ? 48.

49. செற்றதுவுஞ் சேரா விரணியனைச் சென்றேற்றுப்
பெற்றதுவும் மாநிலம் பின்னைக்காய்—முற்றல்
முரியேற்றின் முன்னின்று மொய்ம்பொழித்தாய் மூரிச்
சுரியேறு சங்கினாய்! சூழ்ந்து.

பின்னைக்காய்—நப்பின்னைப் பிராட்டிக்காக, **முற்றல்**—வலிமையையுடையதாய். **முரி**-(இங்குமங்கும்) ஓடும். **ஏற்றின்**-(ஏழு) எருதுகளினுடைய. **முன் நின்று**—எதிரில் (அஞ்சாதே) நின்று. **சூழ்ந்து**—(அவற்றைக் கொல்லும் வகையை) ஆராய்ந்து, **மொய்ம்பு ஒழித்தாய்**—(அவற்றின்) பலத்தை ஒழித்தவனே! **மூரி**—பெரிதாயும். **சுரி ஏறு**—(உள்ளே) சுழித்தலையுடைத்தாயுமிருக்கிற. **சங்கினாய்**—சங்கைத் திருக்கையிலேந்தியுள்ளவனே! **சேரா இரணியனை**—உன்னைச் சேர்ந்து வாழமாட்டாத ஹிரண்யாஸுரனை; **செற்றதுவும்** (நீயன்றே)-கைகூசாமல் முடித்துப் போட்டதும் நீயன்றோ. **சென்று**—(மஹாபலிபக்கலில்) சென்று. **மா நிலம்**—பெரிய பூமியை. **ஏற்று**—யாசித்து. **பெற்றதுவும்** (நீயன்றே)-பெற்றுக் கொண்டதும் நீயன்றோ.

அவை வேர் பறிந்து விழும்படி தவழ்ந்துபோய். தேவாஸுர ஸங்க்ராமத்திலே அஸுரவர்க்கத்தை அழியச்செய்து யுத்தம் பண்ணினாய் நீயன்றோ? 48.

இடையே அவை வேரோடு விழும்படி உரலை இழுத்துக்கொண்டு சென்று. இப்படி அறிவற்ற விரோதிகளைப் போக்கின அளவோ? அறிவுள்ள விரோதிகளையும் போக்கினாய் நீயேயன்றோ என்கிறார் மேலே.—(தேவாசுரம் செற்றுப் பொருதாய் நீயன்றே) தேவாசுரச் சண்டையிலே துஷ்டர்களான அசுரர்களை அழித்துச் சண்டை செய்தாய் நீயேயன்றோ? இவற்றையெல்லாம் நீ செய்யாவிடில் யார்தான் செய்தார் என்பதை நீயே அருளிச் செய்யவேணும் என்று கருத்து. 48

http://acharya.org

வ்யா:— (செற்றதுவுமித்யாதி) ஆஶ்ரிதரோடு சேராத ஹிரண்யனைக் கொன்றது. அவனிழவுக்காகவென்றுமாம். (சென்றித்யாதி) மஹாபலிபக்கலிலே நீரேற்றுப்பெற்றது பூமி. (பின்னைக்காயித்யாதி) நப்பின்னைப் பிராட்டிக்காகத் திண்ணிய

அவ:— இன்னமிவ்வளவோ? ஆஶ்ரிதார்த்தமாகப் பண்ணும் வ்யாபாரங்கள் அநேகமன்றோவென்கிறார்.

உரை:— நப்பின்னைப் பிராட்டியைப் பெறுகைக்காக மிடுக்குடைத்தாய்க்கொண்டு ஸஞ்சரியாநின்றுள்ள ருஷபங்களின் முன்னே பயப்படாதே உறைத்துநின்று. கொல்லும் விரகுவிசாரித்து அவற்றின் மிடுக்கைப் போக்கினவனாய். இடமுடைத்தாய். சுரியையுமுடைத்தான ஸ்ரீபாஞ்சஜன்யத்தை திவ்யாயுதமாக உடையனுமானவனே! இப்படியிருக்கிற நீ கைகூசாமல் முடித்துப்பொகட்டதும் உன்னுடன் பொருந்தாதோமென்று இருக்கும் துஷ்ப்ரக்ருதியான ஹிரண்யனை. மஹாபலிபக்கலிலே சென்று நீரேற்று

---

49. அவ:—இவ்வளவுதானோ நீ செய்தவை? அடியார்க்காக நீ செய்த செயல்கள் பலவன்றோ என்கிறார்.

வ்யா:—(செற்றதுவும் சேரா இரணியனை) அடியானான ப்ரஹ்லாதனோடு பொருந்தாத துஷ்டனான இரணியனையேயன்றோ கைகூசாமல் அழித்தாய் நீ. தன்னோடு பொருந்தாத அவனுடைய இழவு (துர்தசை) பொறுக்கமாட்டாமல் அவனை அழித்தான் என்றும் கொள்ளலாம். (சென்று ஏற்றுப் பெற்றதுவும் மாநிலம்) மாவலியிடம் சென்று தானநீர் ஏற்று. பெருப்பேறாக நீ பெற்றதும் உன்னுடையதான பெருநிலமன்றோ. முதலாழ்வார்கள் திருவுலகளந்த செயலிலே மண்டியிருப்பார்களாகையாலே தொடர்ந்து மூன்று பாசுரங்களில் இச்செயலை அநுஸந்திக்கிறார். (பின்னைக்காய் முற்றல் முரியேற்றின் முன் நின்று சூழ்ந்து மொய்ம்பழித்தாய்) நப்பின்னைப் பிராட்டியைப் பெறுகைக்காக, பலத்தையுடைய்தாய், இங்குமங்கும் ஓடுவதான ஏழு எருதுகளின் முன்னே பயப்படாமல் உறைப்புடன் நின்று. 'எவ்விடத்தில் நின்று எப்படிப் பாய்ந்தால் இவற்றை அழிக்கலாம்' என்று ஆராய்ந்து. அதன்படி செயல்

http://acharya.org

தாய். உலாவாநின்ற ஏற்றினுடைய மிடுக்கையழித்தாய். (சூழ்ந்து) இடம்பார்த்துநின்று. (பூரிச்சுரி யித்யாதி) கையிலே ஶ்ரீபாஞ்சஜந்யத்தையுடையவனே! 49.

50. சூழ்ந்த துழாயலங்கல் சோதி மணிமுடிமால்
தாழ்ந்த வருவித் தடைவரைவாய்—ஆழ்ந்த
மணிநீர்ச் சுனைவளர்ந்த மாமுதலை கொன்றான்
அணிநீல வண்ணத் தவன்.

சூழ்ந்த—திருமேனியெங்கும் சாத்தப்பெற்றுள்ள. **துழாய் அலங்கல்**—திருத்துழாய் மாலையை உடையவனாய். **சோதி**—ஒளி பெற்ற. **மணி முடி**—ரத்தினமயமான கிரீடத்தை

அலப்₄யலாப₄மாகப் பெற்றதுவும் உன்னதான மஹாப்ருதி₂வியை. பூரியென்றது ஸஞ்சரிக்கவென்றபடி. 'பூரிச் சுரியேறு சங்கினாய் என்றவிடத்தில் 'பூரி' என்று குனிவாய். அத்தாலே புடைபெருத்து இருக்கையை நினைக்கிறது. பூரி என்று கடலாய், கடலைப் பிறப்பிடமாகவுடைய ஸ்ரீபாஞ்சஜன்யமென்னவுமாம். 49.

புரிந்து அவ்வெருதுகளின் பலத்தை அழித்தவன் நீயன்றோ. முற்றல்—திண்மை. பூரி—ஸஞ்சரித்தல். (பூரிச்சுரியேறு சங்கினாய்) தேவாசுரம் செற்றுப் பொருதபோது, இடமுடையதாய், சுரியாகிற சுழித்தலையும் உடையதான சங்கத்தைக் கையில் தரித்தவன் நீயே யன்றோ? சென்ற பாசுரத்திற்கு ஶேஷமாகவேயிருப்பதால் 'நீயன்றே' என்பதை இங்கும் கூட்டிப் பொருள் கொள்ளவேணும். சங்கின் பெரு முழக்கத்தாலேயே அசுரர்களை அரையுயிராக்கினான் என்று கருத்து. 'பூரி' என்றது வளைவாய், அதனாலே பெருமுழக்கத்திற் குறுப்பாக அடிப்பாகம் பெருத்து இடமுடையதாயிருக்கையை நினைக்கிறது. 'பூரி' என்று பூரி நீராகிற கடலைச் சொல்லி, கடலைப் பிறப்பிடமாகவுடைய சங்காகிற ஸ்ரீபாஞ்சஜந்யம் என்றும் பொருள் கொள்ளலாம். இவ்வண்ணமாக, அடியானை ப்ரஹ்லாதனுக்காக இரணியனை அழித்தும், இந்திரனுக்காக பூமியை யாசித்துப்பெற்றும், பின்னைக்காக ஏழு எருதுகளை அழித்தும், தேவர்களுக்காகச் சங்கேந்தியும் நீ செய்த செயல்கள் பலவன்றோ என்று அருளிச் செய்தாராயிற்று. 49.

http://acharya.org

உடையவனாய், அணி நீலம் வண்ணத்தவன்—அழகிய நீல நிறத்தையுடையனாயிருக்கிற. மால்—ஸர்வேஶ்வரன். தாழ்ந்த அருவி தடவரை வாய்—பூமியளவும் தாழ்ந்து பெருகுகின்ற அருவிகளையுடைய பெரிய மலையின் நடுவிலுள்ள. ஆழ்ந்த மணி நீர் சுனை—ஆழமாய் அழகிய நீரையுடைத்தான பொய்கையிலே. வளர்ந்த—(பயமற்று) வளர்ந்து கொண்டிருந்த. மா முதலை—பெரிய முதலையை. கொன்றான்—முடித்தொழித்தான்.

வ்யா:— (சூழ்ந்தவித்யாதி) ஆகமுதலியாக விட்ட திருத்துழாய்மாலையையும் ஆதி₄ராஜ்யஸூசகமான மணிமுடியையுமுடையவன். (தாழ்ந்தவித்யாதி) தாழ்ந்த அருவிகளையுடைத்தா

அவ:— ஆஶ்ரிதரிலே ஒருவனான ஸ்ரீ கஜேந்த்₃ராழ்வான் விரோதி₄யைப் போக்கி அவனைப் பக்ஷபதித்து ரக்ஷித்த படியை அருளிச்செய்கிறார்.

உரை:— வளையச்சாத்தின திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதமாய், மிக்க தேஜஸ்ஸையுடைத்தான ரத்னங்களோடே கூடின திருவபி₄ஷேகத்தையுடைய ஸர்வாதி₄கனாய், கண்டபோதே ஸகலஶ்ரமங்களும் போம்படி அழகிய

50. அவ:—இப்படி ஆஶ்ரிதரக்ஷணம் ப்ரஸ்துமானவாறே, அடியார்களில் ஒருவனை ஸ்ரீகஜேந்திராழ்வானின விரோதியைப்போக்கி, அவனைப் பக்ஷபாதத்தோடு ரக்ஷித்தபடியை அருளிச்செய்கிறார்.

வ்யா:—(சூழ்ந்த துழாயலங்கல் மால்) திருமேனி அலங்காரங்களுக்கெல்லாம் முதல் அலங்காரமாயிருக்கும்படி திருமேனியைச் சூழ்ந்திருக்கும் திருத்துழாய் மாலையை உடைய திருமால். (சோதி மணிமுடிமால்) 'இவனே பரம்பொருள்' என்பதை வெளிப்படுத்தும் மிகுந்த தேஜஸ்ஸையுடைய ரத்னங்களோடுகூடிய கிரீடத்தையுடைய திருமால். மால்—பெரியவன்.

"ஆதி₄ராஜ்யமதி₄கம் பு₄வநாநாம்
ஈஶ தே பிஶுநயந் கில மௌளி:" [வரதராஜஸ்தவம்]

[ஈசனே! உன்கிரீடம் உலகங்களுக்கெல்லாம் சக்ரவர்த்தி நீயே எனக்காட்டித் தருகிறது.] என்று ஆழ்வானும்,

http://acharya.org

யிருந்துள்ளதடவரையிலே. ஆழ்ந்து. நிர்மலமான நீரை யுடைத்தான சுனையிலே வளர்ந்த பெரியமுதலையை. நீர்ப்புழு வென்று பாராதே சினத்தோடே கொன்றான். (அணி நீல வண்ணத்தவன்) ஆஶ்ரிதவிரோதியான முதலை போயிற் றென்று ஸம்ரமஹரமான வடிவையுடையவன். 50.

நீலநிறத்தையுடையனுமான அந்த ஸர்வேஶ்வரன். பூமி யளவும்வரத் தாழ்ந்த அருவிகளையும். தாழ்வரைகளையு முடைத்தான மலையிடத்து உண்டான. ஆழமாய் அழகிய நீரை உடைத்தான மடுவிலே மநுஷ்யர் முகம் காணாமல் வளர்ந்த பெரிய முதலையை, ஒரு நீர்ப்புழுவென்று பாராதே. ஸ்ரீகஜேந்த்ராழ்வான் பக்கல் வாத்ஸல்யத்தாலே, தன் சினம் தீர முடித்துப் பொகட்டான். 50.

"கிரீடசூடரத்நராஜி-
ராதிராஜ்யஜல்பிகா" [ஸ்ரீரங்கராஜஸ்தவம்]

[கிரீடத்தில் உள்ள மணிகளின் வரிசை இவனே சக்ரவர்த்தி யெனக்காட்டித்தருகிறது] என்று பட்டரும் அருளிச்செய்தன ரன்றோ. (சூழ்ந்த......மால்). திருத்துழாய் மாலையும், சோதி மணிமுடியும் இவனே அனைவரிலும் பெரியவன் என்று காட்டித் தருகின்றன என்று கருத்து. இது பெரியவாச்சான்பிள்ளை நிர்வாஹம். சூழ்ந்த துழாயலங்கலைச் சோதிமணிமுடிக்கு விஶேஷண மாகக் கொண்டார் அப்பிள்ளை. (சூழ்ந்த துழாயலங்கல் சோதி மணிமுடிமால்) வளையமாகச் சாத்தின திருத்துழாய் மாலையாலே அலங்கரிக்கப் பெற்றதாய், மிக்க தேஜஸ்ஸை உடையதான ரத்தினங்களோடே கூடிய கிரீடத்தை உடைய பெரியவன். (அணி நீல வண்ணத்தவன்) கண்டபோதே எல்லாக் களைப்புகளும் ஆறும் படியான அழகிய நீலநிறத்தை உடையவன். இவ்வடிவழகைக்காண ஆசைப்பட்ட கஜேந்திரனுக்கு முன்தோன்றி, அவனுடைய விரோதி யையும் கொன்றான் என்கிறார் பாசுரத்தின் எஞ்சிய பகுதியாலே.— (தாழ்ந்த அருவித்தடவரை வாய்) பூமியளவும் வரத்தாழ்ந்த அருவி களையும், தாழ்வரைகளையும் உடைய மலைக்கு நடுவே. தடம்— தாழ்வரை; அன்றிக்கே, தடவரை—பெரியமலை என்றும் கொள்ள லாம். (ஆழ்ந்த மணிநீர்ச்சுனை) அத்தகைய மலைக்கு நடுவே. ஆழமுள்ளதாய், மணிபோல் தெளிந்து அழகியதான நீரையுடைய

http://acharya.org

51. அவனே யருவரையால் ஆநிரைகள் காத்தான்
அவனே யணிமருதம் சாய்த்தான்—அவனே
கலங்காப் பெருநகரம் காட்டுவான் கண்டீர்
இலங்கா புரமெரித்தா னெய்து.

அரு வரையால்—ஒருவரால் அசைக்கவும் முடியாத தான கோவர்த்தன மலையினால். ஆ நிரைகள்—பசுக் கூட்டங்களை. காத்தான்—ரக்ஷித்தருளினவன். அவனே கண்டீர்—அப்பெருமானே கிடீர்!. அணி மருதம்—நெருங்கி நின்றுகொண்டிருந்த இரட்டை மருதமரங்களை. சாய்த் தான்—முறித்துத் தள்ளினவனும். அவனே கண்டீர்—அப்பெருமானே கிடீர்! எய்து—அம்புகளைப் பிரயோகித்து. இலங்காபுரம்—இலங்கைப் பட்டணத்தை. எரித்தான்—எரியவிட்டவனை. அவனே—அப்பெருமானே. கலங்கா பெருநகரம்—ஒருவகைக் கலக்கமுமில்லாத பரமபதத்தை, காட்டுவான் கண்டீர்—காட்டித்தருவான் கிடீர்!

அவ:—இப்படி ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆபந்நிவாரணம் பண்ணினவன் கிடீர் நமக்கெல்லாம் உபாயபூதனுவான் என்கிருர்.

தடாகத்திலே. (வளர்ந்த மாமுதலே) ஆனையையும் விழுங்கும் பலமுடையதாய் வளர்ந்திருக்கும் பெரிய முதலையை. இப்படி மலைக்கு நடுவிலே ஆழமான சுனையில், மனிதர் முகம்காணுமல் பயமற்று வளர்ந்திருக்கையாலே மிக்க பலத்தையுடையதாயுள்ளது என்று கருத்து. (கொன்ருன்) இது தனக்கு ஒரு நீர்ப்புழுவுக்கு ஸமானம் என்று நினையாமல், அடியானை கஜேந்திரனுக்குச் செய்த அபசாரத்தையே பார்த்துப் பெருஞ்சினத்தோடே கொன்ருன். (அணி நீல வண்ணத்தவன்) அடியானுடைய விரோதி போயிற்றென்று திருமேனி நிறம்பெற்ருன் என்றும் கொள்ளலாம். 50.

51. அவ:— இவ்வண்ணமாக ஸ்ரீகஜேந்திராழ்வானுடைய ஆபத்தைப்போக்கின அவனே அடியார் அனைவர்க்கும் அவ்வப்போது வரும் ஆபத்துக்களைப் போக்கி, மிகச்சிறந்த புருஷார்த்தமான பரமபதத்தை அளிப்பவன் என்கிருர்.

http://acharya.org

வ்யா:— (அவனேயித்யாதி$_3$) "வர்ஷத்தாலே நோவுபட்ட பசுக்கள் தம்முடைய ரக்ஷணத்துக்குத் தாம் ப்ரவர்த்தித்த துண்டோ? அவனேயன்றோ? என்று ஸஹகாரி நைரபேக்ஷ்யத்தைச் சொல்லுகிறது. (அவனேயணியித்யாதி$_3$) நிரபேக்ஷ

உரை:— ஒருவரால் சலிப்பிக்க அரிதான கோ$_3$வர்த்த$_4$ந பர்வதத்தாலே. வர்ஷத்திலே அகப்பட்டு அழியப்புக்க பசுக்களை ஒரு நோவுவாராமல் குறைவற ரக்ஷித்தருளித் தான் ஸஹாயாந்தர நிரபேக்ஷமாக ரக்ஷிக்கவல்ல ஶக்திமானானவன் அவனே கிடீர். தன்னிலே இடைவெளியறச்சேர்ந்து நின்ற யமளார்ஜுனங்களை யஶோதா$_3$தி$_3$கள் ஸஹகரியாதிருக்கத் தள்ளிவிழவிட்டான் அவன் தானே கிடீர். பிராட்டியைப் பெறுகைக்காகத் திருச்சரங்களை ப்ரேரித்துவிட்டு. ப்$_3$ரஹ்மாதி$_3$களுக்கும் கணிசிக்கவொண்ணாத லங்காபுரத்தை, அவர்கள் ஏகதே$_5$ஶமும் ஸஹகரியாதிருக்க. த$_3$க்$_3$த$_4$மாக்கி விழவிட்டான் அவன தானே கிடீர். அப்படியே. ஒருவர்

வ்யா:—(அருவரையால்ஆநிரைகள் காத்தான் அவனே கண்டீர்) எவராலும் அசைக்க அரிதான கோ$_3$வர்த்த$_4$ந மலையாலே, இந்திரன் பெய்த கல் மழையிலே அகப்பட்டு அழியவிருந்த பசுக்களை நோவுபடாதபடி ரக்ஷித்தருளினவன் அவனே கிடீர்! (அவனே) ரக்ஷிக்கும்போது வேறொரு துணையை எதிர்பாராத ஸர்வஶக்தியையுடையவன் என்று ஏகாரம் காட்டுகிறது. (கண்டீர்) நோவுபட்ட பசுக்கள் தம்மைத் தாமே ரக்ஷித்துக்கொண்டிருந்தாலன்றோ உங்களை நீங்கள் ரக்ஷித்துக்கொள்ளலாவது என்று அறிவுடையார்க்கு உணர்த்துகின்றார். (அணிமருதம் சாய்த்தான் அவனே கண்டீர்) ஒன்றுக்கொன்று இடைவெளியில்லாமல் அணித்தாய் நின்ற இரட்டை மருதமரங்களை யசோதை முதலானோர் துணையின்றியே தள்ளிவிழவிட்டவன் அவனே கிடீர்! (எய்து இலங்காபுரம் எரித்தான் அவனே) பிராட்டியைப் பெறுகைக்காக வில்லாலே அம்புகளைப் பொழிந்து. பிரமன் முதலான தேவர்களாலும் அசைக்கமுடியாத இலங்கை நகரை, அவர்களுடைய துணை சிறிதுமின்றி எரித்து அழித்தவனான் அவனே. (கலங்காப் பெருநகரம் காட்டுவான் கண்டீர்) இலங்கையிலுள்ள அரக்கர் போலே, ஒருவன வஸ்திரத்தைப் பிடுங்கி ஏழு பேர் உடுத்துக்

http://acharya.org

மாக மருதைச் சாய்த்தானுமவனே. (அவனே கலங்கா வித்யாதி₃) பரமபதம் அவனே காட்டக் காணுமத்தனே. ஸ்வயத்நத்தால் காண்பார்க்குக் காணப்போகாது. (கண்டீரித் யாதி₃) லங்கையை அழித்துப் பிராட்டியைப் பெறுகைக்கு யத்நம் பண்ணினுனும் தானே. 51.

கூறை ஏழுவர் உடுக்கிற ஸம்ஸாரத்திலுள்ள கலக்கம் ஒன்றுமின்றிக்கேயிருக்கிற பெரிய ராஜத₄ானியான பரம பதத்தை "நீ கண்டுகொள்" என்கிறபடியே அகிஞ்சனரான நமக்குக் காட்டித்தருவானும் நிரபேக்ஷாபாயபூ₄தனுன அவனே கிடீர். அறிவில்லாத பசுக்களோடு அறிவில் தலை நின்ற பிராட்டியோடு ஒருவாசியில்லை. அறிவுக்கு ப்ரயோஜநம். "तस्य सदृशं भवेत्" (தத்தஸ்ய ஸத்₃ருஶம் ப₄வேத்) என்றிருக்கை; அறியாமைக்கு ப்ரயோஜநம்— பண்ணுகிற ரக்ஷணத்தை விலக்காமை என்றபடி. 51.

கொள்ளுகிற ஆஸுரப்ரக்ருதிகள் நிறைந்த இவ்வுலகிலுள்ள கலக்கங்கள் ஒன்றுமில்லாமலிருக்கும் பெரியநகரமான பரமபதத்தை, "நீ கண்டுகொள்" [திருவாய் 3-9-9] என்கிறபடியே, கைம்முதலற்ற நமக்குக் காட்டித்தருபவனும் துணையை எதிர்பாராத அவனே கிடீர்! அறிவில்லாத பசுக்களோடு அறிவில் தலைசிறந்த பிராட்டியோடு ஒருவாசியில்லை தங்களைத் தாமே ரக்ஷித்துக்கொள்ளமாட்டாமைக்கு. "தத்தஸ்ய ஸத்₃ருஶம் ப₄வேத்" [ரா-ஸு 39-30] [என்னை ரக்ஷிப்பது எம்பெருமானுக்கே உரியது] என்றிருப்பதே பிராட்டி போன்ற அறிவாளிகள் அறிவு படைத்த பயனுகும்; பசுக்களைப் போன்ற அறியாதாருடைய அறியாமைக்குப் பயன் ஸர்வேஶ்வரன் பண்ணுகிற ரக்ஷணத்தை விலக்காதொழிகையே என்று கருத்து. (அவனே காட்டுவான்) அவனே காட்டக்கண்டால் பரமபதத்தைக் காணலாமேயொழிய, தம் முயற்சியாலே எவராலும் காணமுடியாது என்றபடி. அவனே என்று மறுபடியும் மறுபடியும் சொல்லுகையாலே, அநிஷ்டநிவ்ருத்தியோடு இஷ்டப்ராப்தியோடு வாசியில்லாமல், எல்லாம் அவனாலாவதேயொழிய இவனாலாவது ஒன்றுமில்லை என்று உணர்த்தப்படுகிறது. 51.

http://acharya.org

52. எய்தான் மராமர மேழுமிராமனாய்
எய்தா னம்மான் மறியை ஏந்திழைக்காய்—எய்ததுவும்
தென்னிலங்கைக் கோன்வீழச் சென்று குறளுருவாய்
முன்னிலம் கைக்கொண்டான் முயன்று.

இராமன் ஆய்—ஸ்ரீராமனாகத் திருவவதரித்து. மராமரம் ஏழும் — ஏழு ஆச்சாமரங்களையும். எய்தான் — அம்பு செலுத்தித் துளைத்தான்: ஏந்து இழைக்கு ஆய்—தரிக்கப் பட்ட ஆபரணங்களையுடைய பிராட்டிக்காக. அ மான் மறியை—அப்படிப்பட்ட (மாரீச மாய) மான் குட்டியைக் குறித்து. எய்தான்—(விளையாட்டாக) அம்பெய்தான்; எய்ததுவும்—அம்புகளை (நன்கு) செலுத்தினதும். தென் இலங்கை கோன் வீழ—தென்னிலங்கைக்கு அரசனான இராவணன் முடியும்படியாகவாம்; முன்—முன்பொரு காலத்திலே. குறள் உரு ஆய்—வாமனரூபியாய். சென்று—மாவலியிடத்திற் சென்று. முயன்று—(வடிவழகு காட்டுதல். மழலைச்சொற்களைச் சொல்லுதல், உலகளந்தல் முதலிய) முயற்சிகளைச் செய்து. நிலம் கைக்கொண்டான்-பூமியைக் கைப்பற்றினான்.

வ்யா:— (எய்தானித்யாதி₂) ராமனாய் ஆஶ்ரிதருக்காக மராமரம் ஏழையுமெய்தான். (எய்தான் அம்மானித்யாதி) மான்

அவ:— கீழ் ப்ரஸ்துதமான ராமவ்ருத்தாந்தந்தன்னிலே திரியவுமாழங்காற்பட்டு அத்தைப் பேசுகிறார்.

உரை:—சக்ரவர்த்தித் திருமகனாய் வந்து அவதரித்தருளி. மஹாராஜரை விஶ்வஸிப்பிக்கைக்காக மராமரங்கள் ஏழை

---

52. அவ:—சென்ற பாசுரத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ம்ருத ஸஞ்ஜீவநமான ராமசேஷ்டிதத்திலே ஈடுபட்டு, மறுபடியும் அதை விரிவாகப்பேசி, அவனுடைய உபாயபாவத்தையேவலியுறுத்துகிறார்.

வ்யா:—(இராமனாய் மராமரம் ஏழும் எய்தான்) ஸர்வலோக பிதாவாயிருப்பவன், தன் பிள்ளையொருவனுக்குப்புத்திரனாக ஆசைப் பட்டு, சக்கரவர்த்தித் திருமகனாகப் பிறந்து, நீர்மைக்குணம் வெளிப் படும்படி குரங்குகளோடு கலந்து, சுக்கிரீவனை நம்ப வைப்பதற்

http://acharya.org

குட்டியென்று பாராதே. பிராட்டி சொன்னாளென்று எய்தான். (எய்ததித்யாதி.) எய்ததுவும் ராவணனைக் கொல்லுகைக்காக.

யும் பட்டுருவ எய்துவிட்டான். த்ரிக்கப்பட்ட ஆப4ரணங் களையுடைய பிராட்டிக்காக. அவ்வாப4ரணச் சேர்த்தி யழகிலே ஆழங்காற்பட்டு மேல்விளைவதறியாமல். அந்த மாயாம்ருக3ம் புரண்டுவிழும்படியாக எய்து பொகட்டான். அவள் சிறையிருப்பு மாற்றுகைக்காகத் தெற்குத்திக்கி லுண்டான லங்கைக்கு நிர்வாஹகனை ராவணன் குட்டிச் சுவர்போலே உருண்டுவிழும்படியாக எய்ததும். முன்பொரு காலத்திலே ஸ்ரீவாமனனாய்க்கொண்டு மஹாபலிபக்கலிலே

காக, மராமரங்கள் ஏழும் ஓரம்பாலே துளைக்கப்படும்படி எய்து விட்டான். (ஏந்திழைக்காய் அம்மான் மறியை எய்தான்) "நின் அன்பின் வழிநின்று" [பெரியாழ் 3-10-7] என்கிறபடி ஸர்வாப4ரண பூ4ஷிதையான சீதாபிராட்டியிடம் அன்பினால் தூண்டப்பட்டு, "ஓர் மான் குட்டியிடம் ராமபா3ணத்தையா செலுத்துவது" என்று ஆலோசிக்காமல் அம்பெய்தான். மறியை—குட்டியை. இது பெரிய வாச்சான்பிள்ளையின் நிர்வாஹம். 'மறிய' [புரண்டு விழ] என்றும் பாடங்கொண்டு, "பிராட்டியின் ஆபரணச் சேர்த்தியழகிலே ஆழங்காற்பட்டு, மேல் விளைவதறியாத ப்ராக்ருதன செய்வது போலே, அந்த மாயமான் புரண்டுவிழும்படியாக அம்பெய்து விட்டான்" என்று கருத்தருளிச்செய்வர் அப்பிள்ளை. (ஏந்திழைக் காய் எய்ததுவும் தென்னிலங்கைக் கோன்வீழ) அப்பிராட்டியின் சிறையிருப்பைத் தவிர்ப்பதற்காக, தெற்குத்திக்கிலுள்ள (அல்லது அழகிய) இலங்கையின் அரசனை இராவணன் குட்டிச்சுவர்போலே சாய்ந்து விழும்படியாக அம்பெய்தான். 'பிராட்டிக்காக' என்னும் போது, மானகுட்டியோடு, இராவணனோடு வாசிபாராமல் அம்பை எய்வதே! என்று ஈடுபடுகிறார். 'ஏந்திழைக்கா' என்னும் பதம் நடுவிலிருந்துகொண்டு முன்னும் பின்னும் அந்வயிக்கிறது. இப்படி ராமாவதாரத்தில் அந்தரங்கை3யான பிராட்டிக்குச் செய்த உபகாரம் மாத்திரமோ? அதற்கும் முன் திரிவிக்கிரமாவதாரத்தில் சேதனர் அனைவர்க்குமாகச் செய்தவை அளவிடவொண்ணாதவையன்றோ என்கிறார் மேலே,—(முன் குறளுருவாய்ச் சென்று முயன்று நிலம் கைக்கொண்டான்) முன்னொரு காலத்திலே ஸ்ரீ வாமனனாக அவதரித்து மஹாபலியின் யாகபூமிக்குச்சென்று, தன் வடிவழகைக்

http://acharya.org

(சென்றிதயாதி₃) குறளுருவாய்ச்சென்று மூன்று லோகத்தை அடங்கலும் கைக்கொண்டான். 52.

53. முயன்று தொழுநெஞ்சே மூரிநீர் வேலை
இயன்றமரத் தாலிலையின் மேலால்—பயின்றங்கோர்
மண்ணலங்கொள் வெள்ளத்து மாயக் குழவியாய்
தண்ணலங்கல் மாலையான் தாள்.

மூரி நீர் வேலை—அலையும் நீரையுடைத்தான ஸமுத்ரத்திலே. இயன்ற—பொருந்தியுள்ள. ஆலமரத்து இலையின் மேலால்—ஆலமரத்தின் இலைமீது. பயின்று—நெடுங்காலம் சாய்ந்திருந்து. அங்கு—அங்கே. மண்—பூமியினுடைய. நலம்—நன்மையை. கொள்—அபஹரித்த. வெள்ளத்து—பிரளய வெள்ளத்திலே. ஓர் மாயம் குழவி ஆய்—ஆஶ்சர்யமான ஒரு குழந்தையாய். தண் அலங்கல் மாலையான்—குளிர்ந்து அசைகின்ற மாலையையுடையவனான எம்பெருமானுடைய. தாள்—திருவடிகளை. நெஞ்சே—நெஞ்சமே! முயன்று தொழு—முயற்சிகொண்டு வணங்கு.

சென்று வடிவுறகைக் காட்டுவது. முக்₃த₄ஜல்பிதங்களைப் பண்ணுவதாய்க்கொண்டு மிகவும் உத்₃யோகி₃த்து பூ₄மியை வாங்கிக்கொண்டான். இத்தொரு செயல்களிருக்கும்படியே என்று வித்₃த₄ராய் அநுப₄விக்கிறார். ''அம் மான் மறியை'' என்று பாடமானபோது. அந்த மான் குட்டியை எய்தான் என்றாகக்கடவது. 52.

காட்டுவது, மழலைப் பேச்சுக்களைப் பேசுவது, சிறியவடிவைப் பெரிய வடிவாக்குவது, உலகங்களை அளப்பது முதலான பெரு முயற்சிகளைச் செய்து, தன்னுடையதான பூமியைத் தான் கைப்பற்றிக் கொண்டான். உடையவன் உடைமையை ரக்ஷிப்பதற்காக இவ்வண்ணமாகச்செய்த செயல்களுக்கு ஓரளவுண்டோ என்று ஈடுபட்டு அனுபவிக்கிறார். இப்பாசுரத்தால் இயற்கையான உபாயமான எம்பெருமான் சேதனலாபத்துக்காகச் செய்யும் பெரு முயற்சிகள் பேசப்பட்டன. 52.

http://acharya.org

அவ:—(முயன்று) துர்க்கடங்களைக் கடிப்பிக்க வல்லவன்; அவனை ஆஶ்ரயியென்கிறார்.

வ்யா:— (முயன்று தொழு நெஞ்சே) யத்நம் பண்ணி ஆஶ்ரயிக்கப்பார். (மூரிநீரித்யாதி) உலாவாநின்ற நீரை யுடைத்தான கடலிலே உண்டான மரத்தினுடைய *பல்லவமா

அவ:— ப்ரஸ்துதனான ஸ்ரீவாமனனோடு போலியான வடதளஶாயியை ஆஶ்ரயி என்று தன் திருவுள்ளத்தைத் தூண்டுகிறார்.

உரை:— ஸஞ்சரியாநின்றுள்ள நீரையுடைத்தான ஸமுத்ரத்திலே பொருந்தியிருக்கிற ஆலமரத்தினுடைய பவனாயிருப்பதோரிலை மேலே சிரகாலம் சாய்ந்தருளி. அங்கே பூமியினுடைய. சேதனர்க்கு போக்யாதிகளாய் விநியோகப்படுகிற ஸாராம்ஶத்தை க்ரஸியாநின்றுள்ள ப்ரள

---

53. அவ:— ''நம்மைப்பெறுகைக்கு முற்கூறிய பெரு முயற்சிகளோடு நில்லாமல், மற்றும் செயற்கரிய செயல்களையும் அவன் செய்வானான பின்பு, அவனை ஸ்வயம் ப்ரயோஜனமாக அநுபவிப்பதற்கு உன்னாலான முயற்சிகளையெல்லாம் நீ செய்யவேண்டாவோ'' என்று தன் நெஞ்சுக்கு உபதேசிக்கிறார்.

வ்யா:—(நெஞ்சே முயன்றுதொழு) எனக்கு வசப்பட்ட நெஞ்சே! நமக்காக அநாதி காலமாகப் பற்பல முயற்சிகளையும் செய்துவரும் அவன் திருவடிகளிலே நீயும் உன்னாலான முயற்சிகளைச் செய்து ஆஶ்ரயிக்கப்பார்ப்பாயாக. அவன் செய்த செயற்கரிய முயற்சியொன்றைச் சொல்லுகிறார் மேலே,—(மூரிநீர்வேலை. இயன்ற மரத்தாலிலையின் மேலால்) அலையெறியும் நீரை உடையதான கடலிலே பொருந்தியிருக்கும் ஆலமரத்தினுடைய அன்றே தளிர்த்த இலையின் மேலே. (பயின்று) நெடுங்காலம் சயனித்திருந்து. (அங்கு)

''பாலன் தனதுருவாய் ஏழுலகுண்டு ஆலிலையின்
மேலன்று நீ வளர்ந்த மெய்யென்பர்—ஆலன்று
வேலை நீர் உள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலை சூழ் குன்றெடுத்தாய் சொல்லு'' [முதல் திருவ-69]

---

* (பா) பவனான

http://acharya.org

யிருப்பதொரு ஆலிலைமேலே பயின்று சேதநர்க்கு பே4ாகே3ாப கரண பே4ாக3ஸ்த2ாந பே4ாக்3யமான பூ4மியையழியாநின்ற வெள்ளத்திலே ஆஶ்சர்யமான பிள்ளையானவன். (தண்ணலங்கலித்யாதி3) ஆலிலையின்மேலே கண்வளர்ந்தருளுகிறபோது பொகட்ட மாலையுந்தானுமாய்க் கிடந்தபடி. அவனுடைய திருவடிகளை முயன்று தொழு நெஞ்சே. 53.

54\. தாளால் சகட முதைத்துப் பகடுந்தி
கீளா மருதிடைபோய்க் கேழலாய்—மீளாது
மண்ணகலம் கீண்டங்கோர் மாதுகந்த மார்வற்கு
பெண்ணகலம் காதல் பெரிது.

யத்திலே, அக4டிதக4டநா ஸாமர்த்2யமாகிற ஆஶ்சர்ய சேஷ்டிதத்தையுடைய முக்3த4ஸ்மிதவானவனை, ஶ்ரம ஹரமாய் அசைந்துவராநின்றுள்ள திருமாலையாலே அலங்க்ருதனானவன் திருவடிகளை. நெஞ்சே! 'வரில் பொகடேன் கெடில் தேடேன்' என்றிருக்கையன்றிக்கே உத்ஸாஹித்துக்கொண்டு ஆஶ்ரயிக்கப்பார். அலங்கல்— அசைவு. 53.

என்று அறிவாளிகள் ஆஶ்சர்யப்படும் அவ்விடத்திலே. (மண் நலங்கொள் வெள்ளத்து) ஜீவர்களுக்கு போக்யமாகவும், போக உபகரணமாகவும், போகஸ்தானமாகவும் இருக்கும் சிறப்புகளை உடைய பூமியின் அச்சிறப்புகளையெல்லாம் அழிக்கின்ற ப்ரளய வெள்ளத்திலே. (ஓர் மாயக்குழவியாய்) தன் உடைமையான பூமி, வெள்ளத்தினால் அப்படி அழிக்கப்படாமல், சிறியதான தன் வயிற்றிலே பெரிதான பூமி முழுவதையும் வைத்து ரக்ஷித்த அக4டிதக4டநா ஸாமர்த்2யத்தை உடைய ஆஶ்சர்யமான பச்சைக்குழந்தையாய். (தண்ணலங்கல் மாலையான்) அந்த நிலையிலும் குளிர்ந்து அசையாநிற்கும் மாலையாலே அலங்கரிக்கப்பெற்றவனுடைய. (தாள் முயன்று தொழு நெஞ்சே) நமக்காக இப்படிச் செயற்கரிய முயற்சியைச் செய்தவனுடைய திருவடிகளை, "வந்தால் வரட்டும், போனால் போகட்டும்" என்று அலட்சியமாயிராமல், பெரிய உத்ஸாஹத்துடன் நீ ஆஶ்ரயிக்கவேண்டாவோ நெஞ்சே என்று கீழோடே அந்வயம். அலங்கல் மாலை—அசையும் மாலை. 53.

சகடம் — சகடாஸுரனை. **தாளால்** — திருவடியாலே. **உதைத்து**— உதைத்தொழித்தவனும். **பகடு**— (குவலயா பீடமென்கிற) யானையை. **உந்தி**—உதைத்துத் தள்ளின வனும். **கீளா**—பிளவில்லாத. **மருது இடை போய்**—மருத மரங்களின் நடுவே தவழ்ந்து சென்று. **கேழல் ஆய்** — வராஹரூபியாய்க்கொண்டு. **மீளாது**—தயங்கித் திரும்பாமல் சென்று. **அகலம் மண் கீண்டு**—அகன்ற பூமியை (அண்டச் சுவரில் நின்றும்) ஒட்டுவிடுவித்தெடுத்தவனும். **ஓர் மாது உகந்த மார்வற்கு**—ஒப்பற்ற பெரியபிராட்டியார் விரும்பி யிருக்கின்ற திருமார்பையுடையவனுமுள்ள எம்பெருமா னுக்கு. **பெண் அகலம்**—பூமிப்பிராட்டியினுடைய திருமேனி யிலே. **காதல்**-ஆசையானது. **பெரிது**-கரை புரண்டிருப்பது.

வ்யா:—(தாளால் சகடமுதைத்து)திருவடிகளாலே ஶகடா ஸுரநிரஸநம்பண்ணி. (பகடுந்தி) குவலயாபீடத்தைத்தள்ளி.

அவ:—வடதளஶாயிவ்ருத்தாந்தத்தோடொக்கச்சொல்ல லாமான க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தை அநுபவிக்கிறார்.

உரை:— அஸுராவிஷ்டமாய் மேல்விழுகிற ஶகடத்தை முலைவரவு தாழ்த்துச்சீறி நிமிர்த்த திருவடிகளாலே உதைத்துவிழவிட்டு "புகுவாய் நின்ற போதகம்" என்னும் படி வழியிலே நின்று நலியப்புக்க குவலயாபீடத்தைத் திருக்கையாலே உருண்டுவிழும்படி தள்ளிப்பொகட்டு.

---

54. அவ:—வடதளஶாயியான ஆலிலைக்கண்ணனின் அற்புதச் செயலை அனுஸந்தித்தவுடன், அதைப்போலே பல செயல்களைச் செய்த கண்ணனின் அருஞ்செயல்களை அனுபவிக்கிறார்.

வ்யா:—(தாளால் சகடமுதைத்து) அஸுராவேஶத்துடன் தன் மேல் விழுகின்ற சகடத்தை (வண்டியை), யசோதையின் முலைப் பால் குடிக்கும் நேரம் கடந்தமையினாலே கோபங்கொண்டு நிமிர்ந்த திருவடிகளாலே உதைத்து அழித்து. (பகடு உந்தி) "புகுவாய் நின்ற போதகம்" [பெரியதிரு6-5-6] என்னும்படி கம்ஸனுடைய வில்விழவுகாணக் கண்ணன் வந்தபோது உட்புகும் வாசலிலே தன்னை அழிக்கவந்த குவலயாபீடமென்னும் யானையைத் தன் திருக்கையாலே உருண்டு விழும்படி தள்ளி. பகடு—யானை

http://acharya.org

(கீளாமருதிடை போய்) இரண்டாய் அருகே நின்ற மருதூடே போய். (கீளா) பிளவாமருதிடைபோயென்றுமாம். (கேழலாயித்யாதி$_{3}$) ஸ்ரீவராஹரூபியாய் மீளாதபடிக்கீடாக பூமியைக்

இடைவெளியறப் பொருந்திநின்ற மருதுகளின் நடுவே அவை அடியற்று விழும்படி தவழ்ந்துகொண்டுபோய், ஶ்ரிய:பதியான தன் பெருமை பாராதே வராஹவேஷத்தை யுடையனாய்க்கொண்டு. வடிவை அழியமாறினவளவிலே மீளுகையின்றிக்கே அந்த ப்ரளயத்திலே முழுகி அண்டபி$_{4}$த்தியிலே ஒட்டிக்கிடக்கிற அத்$_{3}$விதீயமாய்ப் பரப்பை யுடைத்தான பூமியை இடந்தெடுத்துக் கொண்டேறி * நாரீணாமுத்தமையான பெரியபிராட்டியார் "இறையுமகலகில்லேன்" என்று விரும்பும்படியான திருமார்வையுடையவனுக்கு ஸ்ரீபூமிப்பிராட்டியுடைய அபரிச்சி$_{2}$ன்னபோ$_{4}$க்$_{3}$யமான திருமேனியிலே ப்ரேமம் *கரைபுரண்டிருந்தது.

(கீளாமருதிடை போய்) இடைவெள்ளியில்லாமல் ஒன்றோடொன்று சேர்ந்துநின்ற இரட்டை மருதமரங்களின நடுவே அவை வேரோடு விழும்படி கட்டிய உரலோடு தவழ்ந்துகொண்டுபோய்; கிழித்துக் கொண்டு மருதுகளிடையே போய்—எனறும் பொருள் கொள்ளலாம். (கேழலாய் மீளாது மண்ணகலம் கீண்டு) திருவுக்கும் திருவாகிய தன்பெருமை பாராமல் மாசுடம்பில் நீர் வாரா மானமிலாப் பன்றியுருக்கொண்டு. அவ்வுருவுக்குத்தக்கசெயலைச் செய்யத் தயங்கி மீளாமல், அந்தப் பிரளய நீரிலே மூழ்கி அண்டச்சுவரிலே ஒட்டிக்கிட்க்கும் ஒப்பற்ற பரப்பையுடைய பூமியை தந்தத்தாலே குத்தி எடுத்துக்கொண்டு மேல் ஏறி. (ஓர் மாது உகந்த மார்வற்கு) 'நாரீணாம் உத்தமா வதூ$_{4}$:" [பெண்களுக்குள் ஒப்பற்றவள்]என்கிறபடியே ஒப்பற்ற பெரிய பிராட்டியார் "இறையும் அகலகில்லேன்" [திருவாய் 6-10-10] என்று விரும்பும்படியான திருமார்பையுடையவனுக்கு. ஒப்பற்ற பூமிப்பிராட்டியை அணைத்துக்கொண்ட திருமார்பை உடையவனுக்கு என்றுமாம். (பெண்ணலம் காதல் பெரிது) ஸ்ரீபூமிப்பிராட்டியுடைய அளவற்ற இனிமையுள்ள திருமேனியிலே அன்பு கரை புரண்டிருந்தது. அதனாலேயன்றோ அவளுடைய சரீரமான பூமியைத் தன் பெருமைக்குப் பொருந்தாத வடிவு கொண்டு எடுத்தான் என்கை.

http://acharya.org

கீண்டு ஸ்ரீபூமிப்பிராட்டியை உகந்த மார்பற்கு. (பெண்ணகலங் காதல் பெரிது) பிராட்டிபக்கலிலே ஸ்நேஹம் பெரிது. 54.

பகடு—யானை. கிளாமருதிடைபோய்—கிழித்துக்கொண்டு மருதுகளின் நடுவேபோய் என்னவுமாம். காதல்பெரிது—அவள் பக்கல் ப்ரேமத்தின் கு₄ணத்தாலேயிறே அவள் அபி₄மானித்த பூமியை எடுத்ததென்கை. 54.

"கிடந்து இருந்து நின்று அளந்து கேழலாய்க்கீழ்ப்புக்கு
இடந்திடும் தன்னுள் கரக்கும் உமிழும்
தடம்பெருந்தோளாரத் தழுவும் பாரென்னும்
மடந்தையை மால் செய்கின்ற மால் ஆர்காண்பாரே"
[திருவாய் 2-8-7]

என்று இவளிடம் பலவாறாக ஈடுபடும்படியான மிகப்பெரிய காதலையுடையவன் என்றுமாம். அகலம்—திருமேனி. பெண்ணகலம்—பெண்ணிடம் என்றும் கொள்ளலாம். இங்கு "கேழலாய் மண்ணகலம் கீண்டு" என்றவிடத்தில் சொல்லப்பட்ட பூமிப் பிராட்டியைக் குறிக்கிறது. அன்றிக்கே "மாது உகந்த" என்று சொல்லப்பட்ட புருஷகாரபூ₄தையான பெரியபிராட்டியாரைக் குறிக்கிறது என்றுமாம். அப்பெரியபிராட்டியார் இவனை உகந்திருப்பது போலே இவனும் அவளிடம் பெருங்காதல் கொண்டிருப்பான் என்றபடி.

"அஸ்யா தே₃வ்யா மநஸ்தஸ்மிந் தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டி₂தம்"
[ரா-ஸு 15-52]

[இந்த தேவியின் மனம் அப்பெருமானிடமும், அவனுடைய மனம் இத்தேவியிடமும் நிலைநிற்கின்றது.] முதலான ப்ரமாணங்களை அநுஸந்திப்பது. (மாது உகந்த மார்வற்குப் பெண்ணகலம் காதல் பெரிது) அவளுடையது உகப்பு; இவனுடையது பெருங் காதல் என்றுமாம். "ஊர்த்₄வம் மாஸாந்ந ஜீவேயம்" [ரா-ஸு 38-67] பெருமானைப் பிரிந்து ஒரு மாதத்திற்கு மேல் உயிர்வாழமாட்டேன் என்று அவளும்,

"சிரம் ஜீவதி வைதே₃ஹீ யதி₃ மாஸம் த₄ரிஷ்யதி |
ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம் ||" [ரா-ஸு 66-10

55. பெரிய வரைமார்வில் பேராரம் பூண்டு
கரிய முகிலிடை மின்போல—திரியுங்கால்
பாணொடுங்க வண்டறையும் பங்கயமே மற்றவன்றன்
நீணெடுங்கண் காட்டும் நிறம்.

பெரிய வரை மார்வில்—பெரிய மலைபோன்ற திருமார்பிலே, பேர் ஆரம் பூண்டு—பெரிய ஹாரத்தை அணிந்துகொண்டு. திரியுங்கால்—உலாவினால். கரிய முகிலிடை மின் போலே—கார்மேகத்திலே மின்னல்மின்னினாற் போன்றிருக்கும்; மற்று—அன்றியும்; அவன் தன்—அப்பெருமானுடைய. நீள் நெடு கண்—நீண்ட பரந்த திருக்கண்களினுடைய. நிறம்—நிறத்தை. பாண் ஒடுங்க வண்டு அறையும் பங்கயமே காட்டும்—பாட்டென்று பேர்பெற்றவையெல்லாம் ஒடுங்கும்படியாக (மிகவினிமையாக) வண்டுகள் இருந்து பாடப்பெற்ற தாமரைப்பூவே காட்டித்தரும்.

வ்யா:—(பெரியவரைமார்வில்) ஆரத்தால் பரிச்சேத்திக்கப் போகாத மார்பில். (பேராரம்பூண்டு) மடித்துப்பூணவேண்டும்

அவ:— இப்படி ஸ்ரீ பூமிப்பிராட்டிபக்கல் பெரும்பிச்சனவனுடைய அழகையநுபவிக்கிறார்.

உரை:— ஹாரத்தால் பரிச்சேதிக்கவொண்ணாதபடி பெரிய மலைபோலே பரந்திருக்கிற திருமார்விலே இருமடி

[விதேஹ ராஜகுமாரி ஒரு மாதம் தரித்திருப்பாளாகில் நீண்ட நாள் வாழ்பவளேயாவாள். அவளைப் பிரிந்து யான் ஒரு கணமும் வாழமாட்டேன்] என்று இவனும் கூறியதிலிருந்து அவளுடையதைக் காட்டிலும் இவனுடைய காதல் பெரிதெனவிளங்குகிறதல்லவோ. இப்படிச் சொன்ன பெருமாள் மேலும் வாழ்ந்துகொண்டுதானே இருந்தார்; இது சொன்ன வார்த்தைக்குப் பொருந்துமோ? எனில்: அவளைப் பெறுகைக்காக, உயிரிருந்தும் நடைபிணம் போலே வாழ்ந்துகொண்டிருந்தாராகையாலே குறையில்லை. 54.

55. அவ:— இப்படிப் பிராட்டிமாரிடம் பெருங்காதல் கொண்டவனுடைய அழகை அநுபவிக்கிறார்.

வ்யா:— (பெரிய வரை மார்வில்) ஹாரத்தாலே அளவுபடுத்த முடியாதபடி பெரிய மலைபோலே பரந்திருக்கும் திருமார்பிலே.

http://acharya.org

பெரியஹாரத்தைப்பூண்டு. (கரியமுகிலிடைமின்போல) மார்புக்கும்ஆரத்துக்கும் த்ருஷ்டாந்தம்.மேகத்திலேமின்னினாற்போலே ஸ்யாமமான திருமார்பிலே ஹாரங்கிடந்தபடி. (தெரியுங்கால்) அநுஸந்திக்கும்போது "திரியுங்கால்" என்று பாடமுமாம். (பாணொடுங்கவித்யாதி) பாண்சாதியாக ஒடுங்கும்படி பாடா

யிட்டுச் சாத்தவேண்டும்படி பெருத்திருக்கிற திருவாரத்தைச் சாத்தி மநோஹரமாம்படி ஸஞ்சரிக்கப்புக்கால் காளமேகத்திலே மின்கொடி பரந்தாற்போலே அத்யந்தாநுபாவ்யமாய். அதுக்குமேலே அவனுடைய மிக்க அழகையுடைத்தான திருக்கண்களினுடைய நிறத்தைப் பாட்டென்று பேர்பெற்றவையடங்கலும் லஜ்ஜித்து ஒடுங்கும்

(பேராரம் பூண்டு) இரண்டாக மடித்துச் சாத்தவேண்டும்படி நீண்டிருக்கும் ஹாரத்தைச் சாத்திக்கொண்டு. (கரிய முகிலிடைமின் போல) நீருண்ட கார்மேகத்திலே மின்னற்கொடி பரந்து சென்றாற்போலே, கறுத்த திருமேனியிலே வெளுத்த ஹாரம் கிடந்தது என்று கருத்து. (தெரியுங்கால்) இத்தகைய ஆபரண ஶோபையுடைய இவனுடைய அவயவஶோபையை அநுஸந்திக்கப் பார்த்தால்; இவனுடைய கண்ணழகே நம் நெஞ்சைக் கொள்ளை கொள்கின்றது என்கிறார் மேலே. (தெரியுங்கால்) என்பதைப் பாசுரத்தின் முதலிற்கொண்டு, 'இவனுடைய அழகை அநுஸந்திக்கப் பார்த்தால், ஆபரணஶோபையும், அவயவஶோபையும் இவ்வண்ணமிராநின்றன' என்றும் பொருள் கொள்ளலாம். (திரியுங்கால்) என்றும் பாடமுண்டு. பெரிய வரை மார்பில் பேராரம் பூண்டு அடியார் நெஞ்சை இழுப்பதற்காகத் திரிந்தானாகில், கரிய முகிலினிடையே மின்னல் பரந்து செல்வதுபோலே மிகவும் அநுபவிக்கத்தக்கதாயிருக்கும் என்று பொருள். (மற்று) அவனுடைய அவயவ சோபையையும் அநுஸந்திக்கப்புக்கால். (அவன்றன் நீணெடுங்கண் நிறம்) அவனுடைய கரியவாகிப்புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய கண்களின் நிறமே நம் நெஞ்சைக் கொள்ளை கொள்கின்றதாய், மற்ற அவயவங்களிலே செல்லவிடுகிறதில்லை என்று கருத்து. அந்நிறந்தான் எப்படியிருக்கிறது எனில்; (பாண் ஒடுங்க வண்டு அறையும் பங்கயமே காட்டும்) பாட்டுப்பாடுவதையே தொழிலாகக்கொண்ட பாணர் சாதி முழுவதுமே லஜ்ஜைகொண்டு ஒடுங்கும்படி அத்தனை

நின்ற வண்டையுடைத்தான பங்கயமே. (மற்றவனித்யாதி) அவனுடைய பரிச்சேத்திக்கப்போகாத கண்ணினுடைய நிறத்தைக்காட்டா நின்றது. 55.

56. நிறம் வெளிது செய்து பசிது கரிதென்று
இறையுருவம் யாமறியோ மெண்ணில்—நிறைவுடைய
நாமங்கை தானும் நலம்புகழ வல்லளே
பூமங்கை கேள்வன் பொலிவு.

இறை—ஸர்வேஶ்வரனுடைய. உருவம்—திவ்யமங்கள விக்ரஹமானது. நிறம்—நிறத்தால். வெளிது—வெளுத்திருக்குமோ. (அல்லது) செய்து-சிவந்திருக்குமோ. (அல்லது) பசிது—பசுமையாயிருக்குமோ. (அல்லது) கரிது—கறுத்திருக்குமோ. என்று—எவ்வண்ணமாயிருக்குமென்று. எண்ணில்—ஆராயுமிடத்தில். யாம் அறியோம்—நாம் அறியமாட்டோம்: (இது நிற்க:). நிறைவு உடைய—ஜ்ஞான சக்திகளில் பூர்த்தியை உடையவளான நா மங்கை தானும்—ஸரஸ்வதி தேவியும். பூ மங்கை கேள்வன்—தாமரைப்

படிக்கிடாக வண்டுகளானவை ஷட்பதியாநின்றுள்ள தாமரைப்பூவே காட்டாநிற்கும். "தெரியுங்கால்" என்று பாடமாகில் 'அவ்வழகை அநுஸந்திக்கும்போது' என்று பொருளாகக் கடவது. 55.

இனிமையாக வண்டுகள் ரீங்காரம் செய்யும் தாமரையே அவனுடைய திருக்கண்களின் நிறத்தைக் காட்டும். பாண்—ப்ாணர். அலறிக்கே, பாண் என்று பாட்டாய், பாட்டென்று பேர்பெற்றவையெல்லாம் எதிர்நிற்கமாட்டாமல் ஒடுங்கும்படி வண்டுகள் ரீங்காரம் செய்யும் தாமரை என்றும் பொருள்கொள்ளலாம். ஆக, ' நீலதோயத$_3$ மத்$_1$யஸ்த$_2$ா வித்$_3$யுல்லேகே$_3$வ ப$_4$ாஸ்வரா' [தை-நா] [நீலமுண்ட மின்னன்ன மேனிப் பெருமான்] என்றும் "தஸ்ய யதா$_2$ கப்பாஸம் புண்ட$_3$ரீகமேவமக்ஷிணீ" [சாந் 1-7] [அப்பெருமானுக்கு ஸூர்யனால் மலர்ந்த தாமரை போன்ற இருகண்கள் உள] என்றும் வேதங்கள் ஈடுபட்ட பரணபோரபையிலும், திருக்கண்ண ழகிலும் இவரும் ஆழங்காற்பட்டு இப்பாசுரம் அருளிச்செய்தாராயிற்று. 55.

பூவில் வாழும் பெரிய பிராட்டிக்குக் கணவனான எம்பெருமானுடைய. பொலிவு—நிறத்தை. நலம் புகழ வல்லளே— நன்றாகப் புகழ சக்தியுடையவளோ? (அல்லள்).

அவ: —(நிறம்) என்னுடைய ஸ்வாமியினுடைய ரூபத்தை இன்னபடியிருக்குமென்று சொல்லப்போகாது. ப்ரயோஜகத்தைச் சொல்லுமித்தனை யென்கிறார்.

வ்யா: —(நிறமித்யாதி) இறையினுடைய வடிவானது வெளுப்பு, சிவப்பு, பசுமை, கறுப்பு, என்றெண்ணில் நாமறி

அவ:— இவனுடைய அழகை அநுபவித்துக் குமிழ் நீருண்ணுமித்தனையொழிய நம்மால் அளவிட்டுப் பேசவொண்ணாது கிடீரென்கிறார்.

உரை:— ஸர்வஸ்வாமியான ஸர்வேஶ்வரனுடைய திவ்யமங்கள விக்ரஹமானது, நிறத்தால் வெளுத்திருக்கும், சிவந்திருக்கும், பச்செசன்றிருக்கும், கறுத்திருக்குமென்று ஆராயுமிடத்தில் ஏகதேஶமும் அறியமாட்டுகிறிலோம்.

56. அவ:—இவனுடைய அழகுக்கடலிலே அமிழ்ந்து ஆழ்ந்து போமித்தனையல்லது, நம்மால் அதை அளவிட்டுப் பேசமுடியாது; இதற்குக் காரணம் அவ்வழகு திருவுக்கும் திருவாகிய செல்வனின் அழகாயிருப்பதேயாகும் என்கிறார்.

வ்யா:-(இறை உருவம்) ஸர்வஸ்வாமியான ஸர்வேஶ்வரனுடைய திவ்யமங்கள விக்ரஹமானது. விக்ரஹமில்லை என்பாருடைய மிடற்றைப் பிடித்தாற்போலே பேசுகிறார். (நிறம் வெளிது செய்து பசிது கரிதென்று எண்ணில் யாமறியோம்) நிறத்தால் வெளுத்திருக்குமோ, சிவந்திருக்குமோ, பசுமையாயிருக்குமோ, கறுத்திருக்குமோ என்று ஆராய்ந்தால், அதில் ஒரு சிறிதும் யாம் அறியவல்லோமாகிறோமல்லோம். "நீலதோயத₃மத்₄யஸ்தா₂ வித்₃யுல்லேகே₂வ பா₄ஸ்வரா" [தை-நா] [நீலமேகமுட்கொண்ட மின்னற்கொடிபோல் பிரகாசிப்பது] "ஆதி₃த்யவர்ணம்" [பு. ஸூ] [சூரியன்போலே ஒளிவிடுவது] "தஸ்ய ஹைதஸ்ய புருஷஸ்ய ரூபம் யதா₂ மாஹாரஜநம் வாஸ:, யதா₂ பாண்டு₃வாவிகம், யதே₂ந்த்₃ரகோ₃பே, யதா₂க்₃நயர்ச்சிர் யதா₂ புண்ட₃ரீகம் யதா₂ ஸக்ருத்₃வித்₃யுத்தம்" [ப்₃ருஹ 4-3]

http://acharya.org

யோம். (நிறையித்யாதி) நாமேமாட்டாதோமானால் மதிப்புடையளான ஸரஸ்வதி அங்குத்தைக்குத் தரமாகப் புகழ

இது கிடக்க; எல்லாருமவனைப் பேசுமிடத்தில் தன்னைப் பற்றவேண்டும்படியுமாய் தான் உள்ளபடி அறிந்து பேசுகைக்கீடான ஜ்ஞாநஸக்த்யாதி3 பூர்த்தியையுடையளான ஸரஸ்வதியானவளும் புஷ்பநிவாஸிநியான பெரியபிராட்டி

[அப்படிப்பட்ட இந்தப் புருஷனுடைய உருவமானது. பொன்னுடை போலேயும்,' வெள்ளைக்கம்பளம்போலேயும், இந்திரகோபப் புழுவைப்போலேயும், அக்நியின் ஒளியைப்போலேயும், தாமரையிலையைப்போலேயும், ஒன்றாக மின்னும் மின்னலைப்போலேயும் நிறமுள்ளது.] "வித்3யுத: புருஷாத்" [தை–நா] [மின்னல்போன்ற உருவையுடைய புருஷனிடமிருந்து] "புருஷம் க்ருஷ்ணபிங்க3ளம்" [தை-நா] [கறுப்பும் மஞ்சளும் கலந்த உருவமுடைய புருஷனை] "ஹிரண்மய புருஷ:" [சாந்] [பொன்மயமான புருஷன்] என்று வேதங்களும் இவனுடைய உருவத்திற்குப் பல நிறங்களோடு கூடிய பல பொருள்களை உவமையாக இட்டதன் மூலம் இவனுடைய திருமேனியின் நிறத்தை இன்னபடியென்று அறியமுடியாது என்றனவன்றே. திருமேனியின் நிறம் கார்மேக வண்ணமேயாயினும், பிராட்டி, பீதாம்பரம், ஶங்க2சக்ரங்கள், திருவாப4ரணங்கள் முதலானவற்றின் சேர்த்தியாலே பல நிறங்கொண்டதாய் வர்ணிக்க இயலாத அழகையுடையதாகின்றதன்றே திருமேனி. "எண்ணில்" என்பதை மேலேயும் அந்வயிக்கலாம். (எண்ணில்) ஆராயப்புகுந்தால் (நிறைவுடைய நாமங்கைதானும் நலம் புகழவல்லளே) நாம் அறியமாட்டோம் என்பது ஒருபுறமிருக்க. எல்லாரும் அவனைப் புகழ நினைக்கும்போது அதற்குத்தக்க வாக்3வைப4வத்தை வேண்டித் தன்னைப்பற்றவேண்டும்படியிருப்பவளாய், தான் அவனை உள்ளபடி அறிந்து பேசவல்ல அறிவு, சக்தி முதலான நிறைவுகளையுடைய வாக்3தே3வியும் அவனுடைய ஸ்வரூபரூபகு3ணவிபூ4திகளின் பெருமையை அப்பெருமைக்குத்தக்கபடி நன்றாகப் புகழ வல்லவளோ? (நிறைவுடைய) என்றதற்கு 'என்னைக் காட்டிலும் நிறைவுடைய' என்று பொருள் கொண்டால், இவ்விடத்தில் 'நாமங்கை' என்னும் பதம் ஹயக்3ரீவ பத்நியான வாக்3தே3வியைக் குறிக்கக்கடவது. ப்3ரஹ்ம பத்நியான ஸரஸ்வதியைக் குறிப்பதாகக்கொண்டால், "அவனருளாலே காட்டக்கண்ட நாமே அவனுடைய பெருமையை அறியாதபோது, தன்னுடைய ஜ்ஞாநாதிபூர்த்தியைக்கொண்டு அவனை அறியப்

வல்லளோ? (பூமங்கைகேள்வன் பொலிவு) புகழப்போகாமை யென்னென்னில்: ஶ்ரிய:பதியுடைய ஸம்ருத்₃தி₄யைச் சிலவரால் பேசப்போமோ? 56.

57. பொலிந்திருண்ட கார்வானில் மின்னேபோல் தோன்றி
மலிந்து திருவிருந்த மார்வன் - பொலிந்த
கருடன் மேலகொண்ட கரியான் கழலே
தெருடன்மேல் கண்டாய் தெளி.

திரு—பிராட்டியானவள். பொலிந்து இருண்ட கார்—செறிந்து இருளையுடைத்தான கார் காலத்திலுண்டான. வானில்—மேகத்தில். மின்னே போல் தோன்றி—மின்னல் போல் பிரகாசித்து. மலிந்து இருந்த மார்வன்— பெருமையுடன் வாழப்பெற்ற திருமார்பையுடையனுய். பொலிந்த கருடன் மேல் கொண்ட—விளங்குகின்ற கருடனை மேலிருந்து கொண்டு நடத்தாநிற்கும். கரியான்—கருநிறப் பெருமானுடைய. கழலே — திருவடிகளே. தெருள்தன் மேல்—ஜ்ஞாநத்திற்கு மேற்பட்டதான பக்திக்கு விஷயமென்று, தெளி கண்டாய்—(நெஞ்சே!) தெளிந்திரு.

யார்க்கு வல்லபூனவனுடைய ஸ்வரூபரூபகு₃ணாதி₃களாலுண்டான ஸம்ருத்₃தி₄யை அங்குத்தைக்குத் தகுதியாம்படி நன்ருகப் புகழவல்லளோ? ஶ்ரிய:பதியினுடைய ஸம்ருத்₃தி₄யைச் சிலராலே சொல்லலாயிருந்ததோவென்றபடி. 56.

பார்க்கும் ஸரஸ்வதியானவள் அவனை நன்ருகப் புகழவல்லவளோ?'' என்று கருத்து. இப்படி எவராலும் அளவிடமுடியாமலிருப்பதற்குக் காரணமென்ன? எனில்: (பூமங்கைகேள்வன் பொலிவு) தாமரைப்பூவில் வாழும் பெரியபிராட்டியாருடைய நாத₂னுடைய ஸ்வரூபரூபகு₃ணாதி₃களால் வந்த பெருமையனன்ரோ அது. ஐஶ்வர்யங்களுக்கெல்லாம் அதி₄தே₃வதையான அவளுக்கும் தலைவனுயிருப்பவனுடைய பெருமையை எவராலும் அளவிட்டுப் பேச முடியாது என்று கருத்து. '' அப்ரமேயம் ஹி தத்தேஜ: யஸ்ய ஸா ஜநகாத்மஜா '' [ரா-ஆ 37-18] [ஜனகராஜன் திருமகளைத் தன்னுடைமையாகக் கொண்டவனின் பொலிவு அளவிடவொண்ணாதன்ரோ] என்று மாரீசனும் அறுதியிட்டானல்ரோ. 56.

http://acharya.org

அவ:—(பொலிந்து) கருடவாஹநனுடைய திருவடிகளை ஆஶ்ரயி யென்கிறது.

வ்யா:—(பொலிந்தித்யாதி) ஸம்ருத்$_3$த$_4$மாயிருண்ட கார் காலத்திலே மேகத்தின் மின்போலே தோற்றித் தண்ணீர் தண்ணீரென்றுரைசைப்படாநின்ற பெரியபிராட்டியாருகந்த திரு

அவ:— ஏவம்வித$_4$மான வைப$_4$வத்தையுடையவனை அநுஸந்தி$_4$க்கும்துவே நமக்கும் உத்கர்ஷஹேதுவென்கிறார்.

உரை:— செறிந்த இருளையுடைத்தான கார்காலத்தில் மேகத்திலேயுண்டான மின்போலே ப்ரகாஶித்துப் பெரிய பிராட்டியாரானவள் ஸ்வரூபரூபகு$_3$ணவி$_4$களால் வந்த வைப$_4$வத்தையுடையளாய்க்கொண்டு எழுந்தருளியிருக்கிற திருமார்வையுடையனாய், அதுக்குமேலே மிக்கவைப$_4$வத்தை

---

57. அவ:—இப்படிப்பட்ட பெருமையை உடையவனை அநுஸந்தி$_4$த்து, அவன் திருவடிகளை ஆஶ்ரயிப்பதே நமக்கும் சிறப்பு என்று நெஞ்சை நோக்கி உபதே$_3$ஶிக்கிறார்.

வ்யா:— (பொலிந்திருண்ட கார் வானில் மின்னே போல் தோன்றி) செறிந்து, இருளையுடைய கார்கால மேகத்தின் நடுவே ஒளிவிடும் மின்னல்போல் தோன்றி; இது 'திரு'வோடு அந்வயிக்கிறது. 'பொலிந்திருண்ட கார்மேகம் திருமார்வுக்கும், அதில் மின்னல் பிராட்டிக்கும் உவமை. இச்சேர்த்தியை "நீலதோயத$_3$மத்$_4$யஸ்தா$_3$ வித்$_3$யுல்லேகே$_2$வ பா$_4$ஸ்வரா" [தை-நா] "நீலமுண்ட மின்னன்ன மேனிப் பெருமான்" [திருவிருத்தம் 29] என்று மறைகள் முழங்கினவன்றோ. (திரு மலிந்து இருந்த மார்பன்) பெரிய பிராட்டியார் ஸ்வரூபரூபகு$_3$ணவிபூ$_4$திகளால் மற்றுள்ளாரைக் காட்டிலும் பெருமையுடையளாய் எழுந்தருளியிருந்த திருமார்வையுடையவன். பிராட்டியினுடைய ஸ்வரூபம் ப$_4$க$_3$வத்ஸ்வரூப நிரூபகத்வத்தால் உண்டான விபு$_4$த்வத்தையுடைத்தாயிருக்கையாலே ஜீவஸ்வரூபவிலக்ஷணமாய், இனிமையிலே விஞ்சியிருக்கையாலே பரமாத்ம ஸ்வரூபவிலக்ஷணமாயிருக்கும். அவளுடைய ரூபமும், குணமும் பரமாத்மாவான அவனுடையவற்றைக்காட்டிலுங்கூடப்

http://acharya.org

மார்பையுடையவன். (பொலிந்தித்யாதி) மஹாமேருவிலே ஒரு அஞ்ஜநகிரியிருந்தாற்போலே ஸம்ருத்தத்வனை பெரிய திருவடி மேலே இருந்தவனுடைய திருவடிகளிலேயுண்டான.

யுடையனைக்கொண்டு மேருவின்மேலே ஓரஞ்ஜனகிரியிருந்தாற்போலே பொற்கென்றிருக்கிற நிறத்தையுடைத்தாய். பெரியதிருவடியை மேற்கொண்டு நடத்தாநின்றுள்ள கறுத்த நிறத்தையுடைய ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளே கிடாய் உத்கர்ஷஹேதுவாக அநுஸந்திக்கப்படும் ஸ்வபாவமெல்லாவற்றிலும் மேலான உத்கர்ஷம். நெஞ்சே! நீ இத்தை நன்றாக புத்திபண்ணு. ஶேஷபூதனுக்கு ஸ்வரூபாநுகுணமான உத்கர்ஷம் ஶேஷிதிருவடிகளை அறிகையிறே. "பொலிந்த கருடன்" என்று பாடமானபோது

பெருமையில் விஞ்சியிருக்கும் என்பது ஸர்வஶாஸ்த்ர ப்ரஸித்தம். "ஶேஷித்வே பரம: புமாந்" [ஸ்ரீகுண 22] என்று உபயவிபூதியையுடைய அவனும் தன்னை இவளுக்கு விபூதிபூதனாக அபிமானிக்கையாலே இவளுடைய விபூதிவைபவமும் மற்றுள்ளாருடையதைக் காட்டிலும் விஞ்சியிருக்கும். இவற்றைத் திருவுள்ளம்பற்றி 'மலிந்து இருந்த' [பெருமையுடையவளாய் இருந்த] என்கிறார். (இருந்த மார்பன்) இப்படிப்பட்ட பெருமையையுடைய பெரியபிராட்டியாரும், "அகலகில்லேன் இறையும்" [திருவாய் 6-10-10] என்று ஆரைக்ஷணம் பிரியவும் மாட்டாதவளாய், பெருந்தாஹமெடுத்தவன் தண்ணீரை ஆசைப்படுவதுபோலே ஆசையுடன் நித்யவாஸம் செய்யும் திருமார்வையுடையவன். (பொலிந்த கருடன் மேற்கொண்ட கரியான்) வேதஸ்வரூபனுமிருக்கை. "தாஸ: ஸகா வாஹநம் ஆஸநம் த்வஜ: யஸ்தே விதாநம் வ்யஜநம்" [ஸ்தோ-ர-41] [அடியானாகவும், நண்பனாகவும், வாஹனமாகவும், ஆஸநமாகவும், கொடியாகவும், மேற்கட்டியாகவும், விசிறியாகவும் அடிமைசெய்யும் கருடன்] என்கிறபடியே பலவிதமாக அடிமை செய்கை முதலான பெருமைகளை உடையவனாய், செம்பொற்குன்றுபோன்ற திருமேனிப்பொலிவையும் உடையவனான கருடனாலே மேற்கொள்ளப்பட்ட கருநிறத்திருமேனியை உடையவன். (பொலிந்து கருடன் மேற்கொண்ட கரியான) மஹாமேருவின்மேலே, மைவரை இருந்தாற்போலே பெரிய திருவடியின் மேலே பெருமைதோற்ற எழுந்தருளியிருக்கும்

http://acharya.org

(தெருட்னித்யாதி) ஜ்ஞாநவிபாகையான ப$_4$க்தியை எல்லாவற்றுக்கும் மேலாகக் கொண்டு அநுஸந்தி. ஓலக்கவார்த்தையென்றிராதேகொள். 57.

ஸம்ருத்$_3$த$_4$ஞன திருவடி என்று பொருளாகக்கடவது. (தெருடன்மேல் கண்டாய்) தெருடல்—தெருடப்படுமது. அநுஸந்தி$_4$க்கப்படுமவற்றில் இதுவே கிடாய் மேலானதென்றபடி. அன்றிக்கே, தெருளென்று—ஜ்ஞானமாய். ஜ்ஞானத்தில் மேலாயிருக்கிற ப$_4$க்தியைச் சொல்லுகிறதாய். ஜ்ஞானவிபாகரூபையான ப$_4$க்தியாலே கரியான் கழலைக் கண்டநுபவிக்கப்பெற்றாயே என்றுமாம். "முயன்று தொழு நெஞ்சே! என்கிற பாட்டிற்சொன்ன நெஞ்சே இங்கும் முன்னிலை. 57.

கரியவன் என்றும் பொருள்கொள்ளலாம். மேற்கொண்ட—மேலிருந்த மேற்கொண்டு நடத்துகிற என்றுமாம். (கரியான் கழலே தெருள்தன்மேல் கண்டாய்) கரிய திருமேனிப்பெருமானுடைய திருவடிகளே ஞானத்தின் பக்குவநிலையான பக்திக்கு விஷயமாவது கிடாய்; தெருள்—ஞானம்: அதற்கு மேலிருப்பது அதன் முற்றிய நிலையான பக்தி. கரியான் கழலே பக்தியென்றது பக்திக்கு விஷயமாவது என்றபடி. ஸாமாநாதி$_4$கரண்யம் விஷயவிஷயி பா$_4$வத்தால் ஏற்படுவது. அன்றிக்கே, கரியான் கழலை பக்தியாலே கண்டு அநுபவிக்கப்பெற்றாய் என்றுமாம். அன்றிக்கே, (கரியான் கழல் தெருளே) கரியானுடைய திருவடிகளிலே உண்டான பக்தியையே; (தன்மேல் கண்டாய்) நம்முடைய செல்வங்களுக்கெல்லாம் மேலான செல்வங்கிடாய் என்றுமாம். இந்த நிர்வாஹத்தில் "ஸேமுஷீ ப$_4$க்திரூபா" [ஸ்ரீபாஷ்யமங்களம்] என்று எம்பெருமானார் அருளியபடியே ஜ்ஞாநவிசேஷமான பக்தியையே 'தெருள்'.என்னும் பதம் குறிக்கிறது. அன்றிக்கே, கரியானுடைய திருவடிகளையே சிறப்புடன் அநுஸந்திக்கத்தக்கவைகளுள் தலைசிறந்தது என்று அறிவாய் என்றுமாம். தெருடல் — தெருடப்படுமது. அநுஸந்திக்கப்படுவது. (நெஞ்சே! தெளி) நெஞ்சே! இதைப் பெருஞ்சபையில் பலருக்குச் சொல்லப்படும் வார்த்தையென்று நினையாமல், உனக்காகவே சொல்லப்படும் வார்த்தையென்று அறிவாயாக. 'முயன்று தொழு நெஞ்சே!' [53] என்ற பாட்டிலிருந்து 'நெஞ்சே!' என்னும் பதத்தை இங்கும் கூட்டிக்கொள்ளவேண்டும். 57

http://acharya.org

58. தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்த மந்தி
அளிந்த கடுவனையே நோக்கி—விளங்கிய
வெண்மதியம் தாவென்னும் வேங்கடமே மேலொருநாள்
மண்மதியில் கொண்டுகந்தான் வாழ்வு.

தெளிந்த—தெளிவுடையதாயிருக்கிற, சிலாதலத்தின் மேல் இருந்த மந்தி—ஸ்படிகப் பாறையின் மீது இருக்கும் பெண் குரங்கானது. அளிந்த கடுவனை நோக்கி—அன்புள்ள ஆண் குரங்கை நோக்கி. விளங்கிய வெண் மதியம் தா என்னும் வேங்கடம்—'பிரகாசிக்கின்ற வெளுத்த சந்திரனை(ப் பிடித்துக்) கொடு' என்று சொல்லும்படியிருக்கிற திரு வேங்கடம். மேல் ஒருநாள்—முன்னொரு காலத்தில். மண்—பூமியை. மதியின்—தனது புத்தி சாதுரியத்தினால். கொண்டு—(மாவலியிடத்தில்) பெற்றுக்கொண்டு. உகந்தான்—திருவுள்ள முவந்த ஸர்வேஶ்வரன், வாழ்வு—வாழுமிடம்.

அவ:—(தெளிந்த) "अस्मिन् मया सार्धम्" (அஸ்மிந் மயா ஸார்த்₄ம்) என்று பிராட்டி செய்த செயலைத் திருமலையில் திர்யக்குக்களும் அநுவர்த்தியா நின்றதென்கிறார்.

வ்யா:—(தெளிந்தவித்யாதி) ஸ்ப₂டிகப்பாறையிலேயிருந்த பெண்குரங்கு. (அளிந்தவித்யாதி) தன்பக்கலிலே ஸ்நேஹித்த

அவ:— இப்படிப்பட்ட ஐஶ்வர்யத்தையுடையவன் கண்ணாலே காணலாம்படி திருமலையிலேவந்து நின்றானென்கிறார்.

உரை:— ஸ்ப₂டிகமான ஶிலாதலத்திலே தன் வேண்டப்பாடு தோற்றவிருந்த பெண் குரங்கானது. நம்மை ஏவிக்

58. அவ:—இப்படிப்பட்ட செல்வத்தை உடையவன். கண்ணாலே காணலாம்படி திருமலையிலே வந்து நின்றான் என்கிறார்.

வ்யா:—(தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்த மந்தி) தெளிவையுடையதான ஸ்படிகக்கற்பாறையின் மேலிருந்த பெண்குரங்கு. (இருந்த) கடுவனையும் நியமிக்கவல்ல பெருமைதோற்ற வீற்றிருந்த.

http://acharya.org

ஆண்குரங்கை நோக்கி. (விளங்கியவித்யாதி) ஊடினால் ஒருகூ4டகர் பொருந்தவிடவேண்டாதே தானே சந்த்ரனுடைய மேற்புறமாகையாலே களங்கமற்று உஜ்ஜ்வலமாயிருந்துள்ள சந்த்ரமண்டலத்தைத் தாவென்னாநின்றது. இழிந்துவாங்க வேண்டுங்காணும் திருமலையினுடைய உயர்த்தி. (மேலித்யாதி)

கார்யம் கொள்வது எப்போதோவென்று அவஸரப்ரதீக்ஷமாய், ஸ்நேஹமே ஒருவடிவு கொண்டாற்போலேயிருக்கிற ஆண்குரங்கை. ப்ரணய ரோஷம்மாறி ஸாத3ரமாகக் குளிரப் பார்த்து, பார்க்கைக்குக் கண்ணாடி கொண்டுவந்து தாவென்பாரைப்போலே மேற்புறமாகையாலே களங்கமற்று ஒளிவிடுகிற பூர்ணசந்த்3ரமண்டலத்தைத்தாவென்று சொல்லும்படி இருக்கிற திருவேங்கடமே பண்டொரு

(சிலாதலத்தின்...மந்தி) "அஸ்மிந் மயா ஸார்த்த4ம் உத3ாரசீலா, சிலாதலே பூர்வமுபோபவிஷ்டா" [ரா-சு63-12] [உத3ார சீலையான ஸீதை இந்தக்கற்பாறையிலே என்னோடுகூட வீற்றிருந்தாள்] என்று கோதாவரீதீரத்தில் பெருமாளும் பிராட்டியுமிருந்தாற்போலே திருமலையில் திர்யக்குகளான இவையிருக்கிறபடி. (அளிந்த கடுவனையே நோக்கி) 'நம்மை இவன் ஏவிக்கார்யம் கொள்வது எப்போதோ?' என்று ஸமயத்தை நோக்கி நிற்பதாய், அன்பே ஒரு வடிவுகொண்டாற்போலிருக்கும் ஆண்குரங்கை, நிலாவொளியாலேஊடல் தீர்ந்து அன்புடன் குளிரப்பார்த்து. (விளங்கிய வெண்மதியம் தா என்னும் வேங்கடமே) முகம் பார்ப்பதற்குக் காதலனைக் கண்ணாடி கேட்கும் காதலியைப்போலே, சந்திரனின் களங்கமற்ற மேற்புறமாகையாலே வெளுத்து விளங்காநிற்கும் சந்திரனை 'எடுத்துத் தா' என்று கேளாநிற்கும் வேங்கடமே, திருமலையின் உயர்த்தியை நோக்கும்போது சந்திரனும் கீழேயிருப்பதாய், களங்கமுள்ள சந்திரனின் கீழ்ப்பகுதி கண்ணுக்கு இலக்காகாமல், களங்கமற்ற மேற்பகுதியே குரங்கின் கண்ணுக்கு இலக்காகிறது என்று 'விளங்கிய வெண்' என்னும் விசேஷணங்களாலே உணர்த்துகிறார். மேலிருந்த மந்தி கீழேயிருக்கும் சந்திரனாகிற கண்ணாடியை எடுத்துத் தா என்கிறது. இது பரமபதத்திலிருக்கும் புருஷகாரபூ4தையான பிராட்டி. த4வளஸ்வரூபமான சந்திரன்போலே சுத்தமான ப3த்3த4 ஜீவாத்மாவைக் கைதூக்கிவிடும்படி எம்பெருமானைக் கேட்பதுபோலே இராநின்றது என்று கருத்து. (வேங்கடமே) மந்தியோடுகூடிய கடுவன்

http://acharya.org

பண்டொருநாள் பூ₄மியை மதியாலேகொண்டு அலப்₄யலாப₄ம் பெற்றாய் உகந்தவனுடைய ஐஶ்வர்யம். 58.

59 வாழும் வகையறிந்தேன் மைபோல் நெடுவரைவாய்
தாழு மருவிபோல் தார்கிடப்ப—சூழும்
திருமா மணிவண்ணன் செங்கண்மால் எங்கள்
பெருமா னடிசேரப் பெற்று.

மை போல் நெடு வரை வாய்—*மைபோன்று இருண்டு பெரிதான மலையிடத்திலே.* **தாழும்**—*இருபக்கமும் தாழப் பாய்கின்ற.* **அருவி போல்**—*அருவிபோலே.* **தார் கிடப்ப**—*மாலை சாத்தப்பட்டிருக்க (அதிலே ஈடுபட்டு).* **சூழும்**—*ஒருகணமும் விட்டுப்பிரியாமல் வளைத்துக் கொண்டிருக்கிற.* **திரு**—*பிராட்டியையுடையவனும்.* **மா மணி வண்ணன்**—*நீலமணிபோன்ற நிறத்தையுடையவனும்.* **செம் கண் மால்**—

காலத்திலே பூமியைத் தன் பு₃த்₃தி₄யோக₃த்தாலே மஹாபலியிருப்புக்குப் பொருந்தும்படி அர்த்தி₂த்து வாங்கிக் கொண்டு அலப்₄யலாப₄ம் பெற்றாற்போலே உகந்த ஸர்வேஶ்வரன் தனக்கு ஸர்வஸம்பத்துமாக நினைத்திருக்கும் தேஶம். 58.

சிலாதலத்திலிருப்பதுபோலே அலர்மேல் மங்கையுறைமார்பன் திருமலையிலே இருக்கிறபடி. (மேல் ஒருநாள் மதியில் மண் கொண்டு கந்தான் வாழ்வு) முன் ஒரு காலத்தில், "மதியினால் குறள்மாணாய் உலகிரந்த கள்வற்கு" [திருவாய்1-4-3] என்கிறபடியே தன் புத்தி சாதுர்யத்தினாலே யாசகனாகி, தேவேந்திரனுக்காக இந்த பூமியை மாவலியிடம் மூவடி மண் வேண்டிப்பெற்றுப் பெருப் பேறு பெற்றாற்போலே உகந்த ஸர்வேஶ்வரன் தனக்கு எல்லாச் செல்வமுமாக நினைத்திருக்கும் இடம். தேவேந்திரனுக்காக இப்பாடுபட்டவன் திருமலையில் மந்திக்குச் சந்திரனைத்தரும் கடுவனைப்போலே புருஷகாரபூ₄தையான பிராட்டிக்காக ஜீவர்களை அவசியம் கைதூக்கி விடுவான் என்று கருத்து. ஆக, திருமலையில் ஒரு இயற்கைக் காட்சியை வருணிப்பதுபோல் காணும் இப்பாட்டு, திருமலையப்பனின் ப்ரேமபாரதந்த்ரியத்தையும், பிராட்டியின் புருஷகாரக்ருத்யம் என்றும் பழுதுபடாது என்பதையும் காட்டித்தருகிறது. 58.

http://acharya.org

சிவந்த திருக்கண்களையுடைய பெரியோனுமான. எங்கள் பெருமான்—எம்பெருமானுடைய. அடி—திருவடிகளை. சேர பெற்று—அணுகப்பெற்றதனால். வாழும் வகை அறிந்தேன்—உய்யும்வழி தெரிந்தவனானேன்.

வ்யா:—(வாழும் வகையறிந்தேன்) ஸர்வேஶ்வரனைப்பற்றி ஆத்மாவுக்கு வகுத்த ஸம்பத்தென்று வ்யுத்பத்திபண்ணினேன். (மைபோலித்யாதி) அஞ்ஜநகிரியிலே பாயாநின்ற அருவிபோல்

அவ:—"கரியான் கழலே தெருடன் மேற்கண்டாய்" என்று திருவுள்ளத்தைக்குறித்து அநுபவிக்கச்சொல்லி, திருவடிகளைத்தாம் கிட்டி அநுபவித்தபடியை அருளிச்செய்கிறார்.

உரை:—அஞ்ஜனம்போலே இருண்ட நிறத்தையுடைத்தான பெரியமலையிடத்திலே இரண்டருகும் தாழ விழுந்து பாயாநின்ற அருவிபோலே திருத்தோள்களில் சாத்தின

---

59. அவ:—இத்தகைய புருஷகாரபூதையோடு கூடிய உபாயபூதனை எம்பெருமானுடைய திருவடிகளை அடைகையாகிய வாழும் வகையை அறிந்தேன் என்கிறார்.

வ்யா:—(எங்கள் பெருமான் அடிசேரப்பெற்று வாழும் வகையறிந்தேன்) எங்களுடைய ஸ்வாமியின் திருவடிகளைப்பற்றி, அதுவே வாழும் வகை என அறிந்துகொண்டேன். இப்படி உபாயமாகில் ஆரோக்யோபாயமான கஷாயங்களைப்போலே கசப்பாயிருக்குமோ? எனில், பாலே மருந்தானாற்போலே மிக இனியதாயிருக்கும் என்கிறார் மேலே.—(மைபோல் நெடுவரைவாய் தாழும் அருவிபோல் தார் கிடப்ப) அஞ்ஜனமெ (மை) போலே இருண்ட நிறத்தை உடைய பெரியமலையின் சிகரத்தில் நின்றும், இருபுறமும் தாழ்ந்து விழுந்து பாயாநிற்கும் அருவிபோலே திருத்தோளில் சாத்தின திருமாலை மிக அழகுடன் ஒளிவிடாநிற்க.

"உபௌ யதி வ்யோம்நி ப்ருதக் பதேதாம்
ஆகாஶகங்காபயஸ: ப்ரவாஹௌ।
தேநோபமீயேத தமாலநீலம்
ஆமுக்தமுக்தாலதம் அஸ்ய வக்ஷ:॥" [சிசுபாலவதம்-1]

http://acharya.org

திருமார்பிலே சாத்தின தோள்மாலை கிடப்ப. (சூழுந்திருமா மணிவண்ணன்) அதிலே ஆசைப்பட்டாநின்ற பெரியபிராட்டியாரையுடையனாய். ஶ்ரமஹரமான வடிவையுடையவன். (செங்கண்மால்) ஈஶ்வரத்வத்தை ஸூசிப்பியாநின்ற கண்களை உடையவன். (எங்களித்யாதி) போ₄க்₃யபூ₄தனாய் என்னையுடையவனாய்வகுத்தவனுடைய திருவடிகளைக் கிட்டப்பெற்று. "बुद्धिनाशात् प्रणश्यति" (பு₃த்₃தி₄நாஶாத் ப்ரணஶ்யதி) என்று ஶப்₃த₃ாதி₃களைப்பற்றாதே வாழும் ப்ரகாரமறிந்தேன். 59.

திருமாலையானது அநுப₄ாவ்யமாய்க்கிடந்து ப்ரகாஶிக்க. இவ்வொப்பனையழகைக்கண்டு "இறையுமகலகில்லேன்" என்று சூழ்ந்துபோந்து அங்கே நித்யவாஸம்பண்ணுகிற பெரியபிராட்டியாரையுடையனாய். பெருவிலையனான நீலரத்னம்போலே ஶ்ரமஹரமான திருமேனியையுடையனுமாய், இவ்வைஶ்வர்ய ஸூசகமான சிவந்த திருக்கண்களையுடைய ஸர்வாதி₄கனாய் ஆஶ்ரிதரான எங்களுக்கு வகுத்த ஶேஷியுமான ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளைக் கிட்டப்பெற்று ஸ்வரூபாநுரூபமாக வாழும் ப்ரகாரத்தைஅறிந்தேன். 59.

[நீலவானில் இரண்டு ஆகாஶகங்கைகள் பெருக்கெடுத்ததுபோலே யிராநின்றது முத்துமாலையோடுகூடிய நீலவண்ணக்கண்ணனின் மார்பு] என்று மாக₄கவி பாடியதும் இங்கு குறிக்கொள்ளத்தக்கது. (சூழும் திருமாமணிவண்ணன்) தோளும், தோள்மாலையுமான இவ்வழகிலே ஆழங்காற்பட்டு. "அகலகில்லேன் இறையும்" [திருவாய் 6-10-10] என்று வளைத்துக்கொண்டு, அத்திருமார்பிலேயே நித்யவாஸம் செய்யும் பிராட்டியை உடையவனாய், விலைமதிப்பற்ற நீலரத்னம் போன்று கண்டார் களைப்பை ஆற்றும் நிறமுடைய திருமேனியை உடையவன். (செங்கண்மால்) இச்செல்வத்தையெல்லாம் காட்டித்தரும் திருக்கண்களையுடைய ஸர்வேஶ்வரன். இப்படிப் பெரியவனாகில் அணுகத்தகாதவனாகவும் கிட்ட அரியவனாயுமிருப்பானோ?எனில்: (எங்கள் பெருமான்) அடியாரான எங்களுக்கு அடையத்தக்க தலைவனாய், திருமலையிலே எளியனாய் நிற்கும் ஸ்வாமியினுடைய. (அடிசேரப் பெற்று வாழும் வகையறிந்தேன்) என்று அந்வயம். "த்₄யாயதோ விஷயாந் பும்ஸ:...பு₃த்₃தி₄நாஶாத் ப்ரணஶ்யதி" [கீதை2-63] என்று கீதையில் சொன்னபடியே ஶப்₃த₃ாதி₃ விஷயங்களைப்பற்றித் தாழ்ச்சியடையாமல், இவ்விஷயத்தைப்பற்றி வாழும் வகையறிந்தேன். ௬0

60. பெற்றம பிணைமருதம் பேய்முலை மாச்சகடம்
முற்றக்காத தூடும்பா யுண்டுதைத்து—கற்றுக்
குணிலை விளங்கனிக்குக் கொண்டெறிந்தான் வெற்றிப்
பணிலம் வாய் வைத்துகந்தான் பண்டு.

பெற்றம்—பசுக்களை, முற்ற காத்து—ஒன்று தப்பாமல் ரக்ஷித்தவனையும். பிணை மருதம் ஊடு போய்—பிணைந்திருந்த (இரட்டை) மருத மரங்களினிடையே சென்றவனையும். பேய் முலை உண்டு—பூதனையின் முலையை உண்டவனையும். மா சகடம் உதைத்து—பெரிய சகடத்தை உதைத் தொழித்தவனையும், கற்று குணிலை கொண்டு—கன்றாகிய எறிதடியைக்கொண்டு. விளங்கனிக்கு எறிந்தான்—விளாம் பழத்தின்மீது எறிந்தவனையுமுள்ள எம்பெருமான். பண்டு—முன் ஒரு காலத்தில். வெற்றி பணிலம்—ஜயத்தை இயல்வாயுடைய சங்கை. வாய் வைத்து—வாயிலே வைத்து ஊதி. உகந்தான்—மகிழ்ந்தான்.

அவ:—(பெற்றம்) ப்ரதிப₃ந்த₄கங்கள் போனாலன்றோ வாழும்படியாவதென்னில்; அவன் தானே ப்ரதிப₃ந்த₄கங்களைப் போக்குமென்கிறது.

அவ:—உமக்கு வாழ்விலே அந்வயமாகில், அதுக்கு ப்ரதிப₃ந்த₄கமானவை செய்தது என்? என்ன. அதுபோக்குகை அவனுக்கு பு₄ரமாய் விட்டது என்கிறார்.

---

60. அவ:—நீர் வாழும் வகை அறிந்தீராகில். அவ்வாழ்வுக்குத் தடையானவை என்னாயிற்று? எனில்: தடைகளைப் போக்குவதையே இயல்வாகவுடைய அவனுக்கே அது பொறுப்பாயிற்று என்கிறார்.

வ்யா:—(பெற்றம்...உதைத்து) "அரவமடல் வேழம்" [முதல் திருவ54] என்ற பாசுரம்போலே இவ்விரண்டடிகளும் நிரனிறை யணி (யதா₂ஸங்க்₂யாலங்காரம்) ஆகையாலே. "பெற்றம் முற்றக் காத்து, பிணைமருதம் ஊடுபோய், பேய்முலை உண்டு, மாச்சகடம் உதைத்து" என்று கூட்டிப் பொருள்கொள்ளவேண்டும். (பெற்றம்

http://acharya.org

(பெற்றமித்யாதி₃) இது நிரல்நிறை. கன்றாகிய எறிகருவியைக்கொண்டு விளங்கனிக்குக் கொண்டெறிந்தவன். வெற்றியை விளைப்பதான ஸ்ரீபாஞ்சஜந்யத்தை வாயிலே வைத்து உகந்தவன். பண்டுண்டான ப்ரதிப₃ந்த₄கங்களையெல்லாம் போக்கும். 60.

உரை:—பசுக்களை ஒன்றொழியாமல் ரக்ஷித்து, ஒன்றோடொன்று பிணைந்து நிர்விவரமாய் நின்ற மருதுகளை ஊடறுத்துக்கொண்டுபோய் விழவிட்டு. பூதனையுடைய முலையை அவள் பிணமாய் விழும்படி உண்டு. ப₄யாவஹமான பெரிய சகடத்தை முறிந்து விழும்படி உதைத்துப் பொகட்டு கன்றாகிய எறிகருவியைக்கொண்டு விளாவினுடைய பழத்துக்கு எறிந்து இரண்டையும் முடித்துப் பொகட்டவன்—முன்பொரு நாளிலே. விஜயத்தை உண்டாக்குமதான ஸ்ரீபாஞ்சஜன்யத்தை ப்ரதிபக்ஷம் நஶிக்கும்படி திருப்பவளத்திலே மடுத்தூதி, விரோதி₄போகப் பெற்றோமென்று உகந்தருளினவன் கிடீர். 60.

(முற்றக்காத்து) பசுக்களை ஒன்றொழியாமல் ரக்ஷித்து. இந்திரனுடைய சிலாவர்ஷம் முதலான பற்பல பேராபத்துக்களில் ஒன்றுக்கு ஒரு சிறிதும் நோவுவாராதபடி பசுக்களைப் பரிபூர்ணமாக ரக்ஷித்து. (பிணைமருதம் ஊடு போய்) ஒன்றோடொன்று பிணைந்து இடைவெளியற்றிருந்த இரட்டை மருதமரங்களை ஊடறுத்துக்கொண்டுபோய் விழவிட்டுப் பொய்ம்மாய மருதான அசுரரை அழித்து. (பேய்முலை உண்டு) தன்னை அழிக்க விஷந்தடவிய முலையோடு வந்த பூதனையின் முலையை அவள் பிணமாய் விழும்படி அவளுடைய உயிரோடு உண்டு (மாச்சகடம் உதைத்து) பயங்கரமான பெரிய சகடத்தைத் தாயே பிள்ளைக்கு ரக்ஷகமாய் வைத்துப்போன த₃ஶையில், அஸுராவேஶம்கொண்ட அதுவே அவனை நலியவர, முலை வரவு தாழ்த்துச் சீறி உதைத்த உதையிலே அச்சகடாஸுரன் கட்டுக்குலைந்து விழும்படி உதைத்து. (கற்றுக்குணிலை விளங்கனிக்குக் கொண்டெறிந்தான்) இரு அஸுரர்கள் தன்னை நலிவதற்காக ஒருவன் கன்றாகவும் மற்றொருவன் விளாம்பழமாகவும் இருந்துகொண்டு தீங்கிழைக்கத் தருணம் பார்த்திருக்க, கன்றை எறிதடியாகக்கொண்டு விளாம்பழத்தின்மேல்

http://acharya.org

61\. பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவாற்குக் கோயில்போல்—வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன்றன் விண்ணகர்.

வைகுந்தம்—பரமபதத்தை. கொணடு—இருப்பிடமாகக் கொண்டு. அங்கு—அவ்விடத்திலே. உறைவாற்கு—நித்ய வாஸம்பண்ணும் எம்பெருமானுக்கு. பால் கடல்—திருப் பாற்கடலும். வேங்கடம்—திருமலையும். வண்டு வளம் கிளரும் நீள் சோலை—வண்டுகளின் கூட்டம் மிக்கிருக்கிற பரந்த சோலைகளையுடைத்தாய். வண்—அழகியதாய். பூ—இனியதான. கடிகை—திருக்கடிகைக் குன்றும். இள குமரன் தன் விண்ணகர்—இளமையோடு கூடிய யௌவநமுடைய அவன் தன்னதென்று அபிமானிக்கும் திருவிண்ணகரும். (ஆகிய இத்திருப்பதிகளெல்லாம்) பண்டு எல்லாம்—என்னை விஷயீகரிப்பதற்கு முன்பெல்லாம். கோயில் போல்—கோயில் களாக இருந்தன போலும். [இப்போதோவென்னில். என்னெஞ்சமொன்றே அவனுக்குக் கோயிலாயிருக்கிறது என்று கருத்து.]

அடித்து இரண்டையும் அழியச்செய்தவன். (பண்டு) அஸுர ராக்ஷஸர்களோடு போர்புரியும்போது என்னவுமாம். பாரத யுத்த காலத்தில் என்னவுமாம்.(வெற்றிப்பணிலம் வாய்வைத்து உகந்தான்) எதிரிகளை ஜயிப்பதையே இயல்வாகக்கொண்ட படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியத்தை, எதிரிகள் அழியும்படி வாயிலே வைத்து ஊதி, 'எதிரிகள் அழியப்பெற்றோம்' என்று உகந்தருளின வனன்றோ. இவ்வண்ணமாக, விரோதி நிரஸனத்தையே இயல் வாகக்கொண்டவனுகையாலே, என்னுடைய தடைகளை நீக்குவது அவனுக்கே பொறுப்பு என்று கருத்து. 60.

61\. அவ:—என் தடைகளைப் போக்குவதோடல்லாமல், என் நெஞ்சிலே புகுவதற்காகப் பரமபதத்திலிருந்துதிருப்பாற்கடலுக்கும், திருமலை முதலான திருப்பதிகளுக்கும் எழுந்தருளி நெடுங்காலமாக நித்யவாஸம் செய்கின்றான் என்கிறார்.

http://acharya.org

அவ:--(பண்டெல்லாமித்யாதி₂)ப்ரதிபூ₂ந்த₂கங்களைப்போக்கு மளவேயோ? பரமபதத்தைக்கலவிருக்கையாக உடையவன் ஸம்ஸாரததிலே உகந்தருளின திருப்பதிகளைத் தனக்கிருப்பிட மாகக் கொள்ளுகிறதுஆஶ்ரிதார்த்த₂மாகவன்றோ வென்கிறார்.

வ்யா:—(வேங்கடம் பாற்கடல் வைகுந்தம் கொண்டங் குறைவார்க்கு) "திருமால்வைகுந்தமே தண்திருவேங்கடமே" என்று பரமபதத்தோபாதியாகத் திருமலையைச் சொல்லுகிறது. வைகுந்தங்கோயிலாகக்கொண்டு அங்குறைவார்க்கு வேங்கடம். பாற்கடல். வண்டுவளங்கிளரும் நீள்சோலை வண்பூங்

அவ:—ப்ரதிப₃ந்த₄கங்களைப் போக்குகிறவளவன்றிக்கே, பரமபதத்தைக் கலவிருக்கையாக உடையவன் இங்கே ஆஶ்ரிதார்த்த₂மாக வந்து திருப்பதிகளிலே ஸந்நிஹிதனானான் என்கிறார்.

உரை:—ஸ்ரீவைகுண்ட₂த்தைத் தனக்கு அபி₄மதவாஸஸ்த₂ானமாகக்கொண்டு. அங்கே ஆதரித்து நித்யவாஸம் பண்ணுகிற வைப₄வத்தையுடையவர்க்கு. திருப்பாற்கடலும் திருமலையும். வண்டுகளினுடைய திரள் மிக்கு வாராநின்றுள்ள பரப்பையுடைய சோலையையுடைத்தாய் அழகியதாய். போ₄க்₃யமான திருக்கடிகையும். நித்யயௌவன ஸ்வபா₄வனானவன் தன்னது என்று ஆதரித்து வர்த்திக்கிற

வ்யா:—(வைகுந்தம் கொண்டு அங்கு உறைவாற்கு) ஸ்ரீவைகுண்டத்தைத் தனக்கு இனிய வாஸஸ்த₂ானமாகக்கொண்டு அங்கே உகப்புடன் நித்யவாஸம் பண்ணுகிற பெருமையை உடையவனுக்கு. (பாற்கடல் வேங்கடம்) வ்யூஹஸ்த₂ானமான திருப்பாற்கடலும், அங்கிருந்து வந்து நின்ற திருமலையும். (வைகுந்தம் பாற்கடல் வேங்கடம்) "திருப்பாற்கடலே என்தலையே திருமால் வைகுந்தமே தண் திருவேங்கடமே" [திருவாய்10-7-8] என்று ஆழ்வாரைப்போலே பர வ்யூஹங்களோடு திருமலையைச் சேர்த்துச் சொல்லுகிறார். (வண்டு வளங்கிளரும் நீள்சோலை வண் பூங்கடிகை) வண்டுகளுடைய கூட்டம் மிகுந்துள்ள பரந்த சோலைகளை உடையதாய், அழகியதாய், இனியதான திருக்கடிகையும். (இளங்குமரன் தன்

http://acharya.org

கடிகை. விண்ணகரான இவை இளங்குமரனை தனக்கு இப்போது கோயில்போல். 61.

62\. விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்
மண்ணகம் மாமாட வேளுக்கை - மண்ணகத்த
தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி
தன் குடங்கை நீரேற்றான் தாழ்வு.

இவ்விவை திவ்யதேசங்கள் என்னை விஷயீகரிப்பதற்கு முன்னெல்லாம் உகப்புடனே எழுந்தருளியிருக்கிற கோயில்கள்போலே இருந்தன; என்னை அங்கீகரித்தபின்பு அவ்வவ தேசங்களைக் காட்டிலும் என்னுடைய ஹ்ருதயமே அவனுக்கு வாஸஸ்தானமாய்விட்டது என்று கருத்து. 61.

விண்ணகர்) "யுவாகுமார:" [ரிக்வேதம்] என்கிறபடியே என்றும் இளகிப் பதித்த யௌவனத்தை இயல்வாக உடையவனுடைய திருவிண்ணகரும். 'விண்ணகர்' என்று திருவிண்ணகராகிய திவ்யதேசத்தைக் குறிப்பதாகப் பெரியவாச்சான்பிள்ளையின் நிர்வாஹம். 'தன் விண்ணகர்' என்று எம்பெருமான் தன்னுடையதாக ஆதரிக்கும் முற்கூறிய திவ்யதேசங்களைச் சொல்லுவதாக அப்பிள்ளை நிர்வாஹம். (பண்டெல்லாம் கோயில் போல்) என நெஞ்சை அடைவதற்கு முன்னெல்லாம் முற்கூறிய திவ்யதேசங்கள் உகப்புடன எழுந்தருளியிருக்கும் கோயில்களாயிருந்தன. என் நெஞ்சை அடைந்தபின்பு அந்த திவ்யதேசங்களைக் காட்டிலும் என் நெஞ்சமே அவனுக்கு உகந்து வாழும் இடமாய்விட்டது என்று கருத்து.

'நிற்பதும் ஓர் வெற்பகத்(து) இருப்பும் விண் கிடப்பதும்
நற்பெருந் திரைக்கடலுள் நானிலாத முன்னெலாம
அற்புதன் அனந்தசயனன் ஆதிபூதன் மாதவன்
நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் என்னெஞ்சுளே. [65]

எனனும் திருச்சந்தவிருத்தப் பாசுரம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. 61.

விண்ணகரம்—திருவிண்ணகரம். வெஃகா—திருவெஃகா. விரி திரை நீர் வேங்கடம்—விரிந்து அலையெறிகிற நீர்வளம் பொருந்திய திருமலை. மண் நகரம்—பூமியில் இதுவே நகரம் எனத்தக்க. மா மாடம் வேளுக்கை—பெரிய மாடங்களையுடைத்தான திருவேளுக்கை. மண் அகத்த தென் குடந்தை—பூமிக்கு நடுநாயகமான அழகிய திருக்குடந்தை. தேன் ஆர் திரு அரங்கம்—தேன் வெள்ள மிடுகிற (சோலைகள் சூழ்ந்த) திருவரங்கமாநகர். தென் கோட்டி—தென திருக்கோட்டியூர். (ஆகிய இத்திருப்பதிகள்) தன் குடங்கை—தனது உள்ளங்கையாலே. நீர் ஏற்றான்—(மாவலிபக்கல்) தானநீர் பெற்ற பெருமான். தாழ்வு—நீர்மையுடன் தங்குமிடங்களாம்.

அவ:—(விண்ணகரம்) கேவலம் ஸம்ஸாரத்திலே நின்ற மாத்ரமோ? பரமபதத்திலிருப்பு மனிச்சுக்காய். தாழ்ச்சியோடே கூட இருப்பது உகந்தருளின தேஶத்திலேயன்றோ என்கிறார்.

வ்யா:—(விண்ணகரமித்யாதி₃) விண்ணகரம். வெஃகா. விரிதிரைநீர் வேங்கடம். திருமலையென்றால ஒரு விஶேஷண

அவ:—ஆஶ்ரித ரக்ஷணத்துக்கு ஏகாந்தஸ்த₂லங்களென்று உகந்தருளின நிலங்களைச் சால விரும்பியிருக்கும் என்கிறார்.

உரை:—திருவிண்ணகரமும். திருவெஃகாவும். விஸ்தீர்ணமாய் அலையெறிகிற ஜலஸம்ருத்₃தி₄யையுடைத்தான

62. அவ:—தம் நெஞ்சை அடைந்தபின்பும், மற்றும் பல அடியார்களை ரக்ஷிப்பதற்கு உறுப்பாக, திவ்யதேசங்களை மிகவும் விரும்பியிருக்கிறான் என்கிறார்.

வ்யா:—(விண்ணகரம்) ஒப்பிலியப்பன் ஸந்நிதி என்று வழங்கப்படும் திருவிண்ணகர். (வெஃகா) யதோ₂க்தகாரி ஸந்நிதி என்று வழங்கப்படும் காஞ்சியிலுள்ள திருவெஃகா. (விரிதிரை நீர் வேங்கடம்) விரிந்து அலையெறிகிற நீர் வளம் பொருந்திய திருமலை.

http://acharya.org

ரஹிதமாகச் சொல்லமாட்டார். (மண்ணகரமித்யாதி3) போ4க்3யதை குறைவற்ற கோயில். (தன் குடங்கையித்யாதி3) மஹாபலிபக்கலிலே தன்னுடைமை பெறுகைக்கு அர்த்தி2த்வம் தோற்றும்படி அர்த்தி2யாய் நின்றாற்போலே. உகந்தருளின தே3சங்களிலே தாழ்வு தோற்றும்படி நின்றான். 62.

திருமலையும். பூ4மியிலேயுண்டாய். வைகுந்தமாநகர்போலே அவனுக்கு போ4க3ஸ்தா2னமான தி3வ்யநக3ரமாய். பெரிய மாடங்களை யுடைத்தான திருவேளுக்கையும். பூ4மியிலே உண்டான அழகிய திருக்குடந்தையும், தேன்வெள்ளமிடுகிற திருச்சோலையையுடைத்தான திருவரங்கப் பெருநகரும். தெற்குத்திக்கிலே உண்டான திருக்கோட்டியூருமாகிற இவ்விவ திருப்பதிகள் தன்னுடைய சிருங்கித்த திருக்கையிலே நீரேற்றுத் தன் உடைமை பெறுகைக்கு அர்த்தி2யானவன். இந்த ஆத்மாக்களைப் பெறுகைக்கு அர்த்தி2யாய்க் கொண்டு அவதாரங்கள்போலே தீர்த்த4ம் ப்ரஸாதியாதே எப்போதும் உதவும்படி கால்தாழ்ந்து வர்த்திக்கிற தே3சங்களாயிருக்கும். 62.

திருமலையில் ஈடுபாட்டாலே 'விரிதிரை நீர்' என்று விசேஷணமிடுகிறார். பின்னுள்ள திருப்பதிகளுக்கும் இது பொருந்தும். (மண்ணகரம் மா மாட வேளுக்கை) 'மண்ணில் இதுபோல நகர் இல்லை' இம்மண்ணிலே வைகுந்தமாநகர்போல் அவனுக்கு இனிய நகர்" என அனைவரும் கொண்டாடும்படியாய். பெரிய மாடங்களை உடையதாய். ஆளரி (நரசிங்கன்) எழுந்தருளியிருக்கும் கச்சித் திருவேளுக்கை. (மண்ணகத்த தென் குடந்தை) பூமிக்கு நடுநாயகமாயுள்ள அழகிய திருக்குடந்தை. (தேனார் திருவரங்கம்) தேன் வெள்ளமிடுகிற சோலைகளை உடைய திருவரங்கப்பெருநகரம். (தென் கோட்டி) தெற்கு திக்கிலே உள்ள அல்லது அழகிய திருக்கோட்டியூர். இத்திருப்பதிகளுக்கு உள்ள ஏற்றத்தைக் கடைசி அடியிலே அருளுகிறார்.—(தன குடங்கை நீரேற்றான் தாழ்வு) தன்னுடைய குவிக்கப்பட்ட திருக்கையிலே மாவலியிடம் நீரேற்று. தன் உடைமையைப் பெறுகைக்குத்தான யாசகனானவன். இந்த ஆத்மாக்களைப் பெறுகைக்கு யாசகனாய்க்கொண்டு. விப4வாவதாரங்கள்போலே

http://acharya.org

63. தாழ்சடையும் நீண்முடியு மொண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து.

தாழ் சடையும்—*தாழக் கட்டின ஜடையும்,* **நீள் முடியும்**—*நீண்ட திருமுடியும்,* **ஒண் மழுவும்**—*அழகிய மழு வென்னும் ஆயுதமும்,* **சக்கரமும்**—*திருவாழிப்படையும்,* **சூழ் அரவும்**—*சுற்றிலும் அணிந்துள்ள நாகாபரணமும்,* **பொன் நாணும்**—*பொன்னரைநாணுமாய்க்கொண்டு,* **இரண்டு உருவும்**—*ஒன்றுக்கொன்று சேராச் சேர்த்தியாயிருக்கிற (சங்கரநாராயணர்களின்) இரண்டு வடிவும்,* **சூழும் திரண்டு அருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு**—*நாற்புறமும் திரள் திரளாக அருவிகள் பெருகப்பெற்ற திருமலைமேலுள்ள அப்பனுக்கு,* **ஒன்று ஆய் இசைந்து தோன்றும்**—*ஒரு வடிவமாய்ப் பொருந்தி விளங்காநின்றது;* **ஆல்**—*ஆச்சரியம்!.*

ஒரு காலத்தில் முடிவடையாமல், எப்போதும் உதவும்படி ஸௌலப்₄யம் ஸௌஶீல்யம் முதலான நீர்மைக்குணங்களை வெளிப் படுத்திக்கொண்டு வாழ்கிற திவ்யதேசங்களாயிருக்கும். "தன் குடங்கை நீரேற்றான் தாழ்வு" என்றது, மாவலியிடம் யாசகனாகப்போகும் போது காட்டிய ஸௌலப்₄யம், ஸௌஶீல்யம் முதலான நீர்மைக் குணங்களெல்லாம் இத்திருப்பதிகளிலும் தோற்றும் என்கைக்காக. இக்கருத்தினாலேயே விப₄வாவதாரங்களை ஒருகாலத்திலே பெருக் கெடுத்து ஓடும் காட்டாறுகளாகவும், அர்ச்சாவதாரங்களை அவற்றிலே தேங்கின மடுக்களாகவும் சொல்லுவது. ஆக, இவ் விரண்டு பாட்டுக்களாலும் பரத்வமே பிரகாசிக்கும் பரமபதத்திற் காட்டிலும், சேதனரை உய்விக்கைக்காகத் தாழ்ச்சியோடேகூட எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளே மிகவும் உத்₃தே₃ஶ்யம் என்றாராயிற்று. 62.

63. அவ:—திரிவிக்கிரமாவதாரத்திலுள்ள நீர்மைக்குணங்கள் திருப்பதிகளிலே தோற்றும் என்றார் சென்ற பாசுரத்தில். சங்கர நாராயணாவதாரம் என்னும் விப₄வாவதாரத்திலே காட்டிய ஸௌஶீல்யத்தைத் திருமலையில் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறான் என்கிறார் இப்பாசுரத்தில்.

http://acharya.org

அவ:— (தாழ்சடையும்) ஸித்₃த₄மான வேஷத்தையும் ஸாத₄கமான வேஷத்தையும் ஒக்க தரிப்பதே! இதொரு ஶீலவத்தையே! என்கிறார்.

அவ:— இத்தேசங்களிலே வந்து ஸந்நிஹிதனானவன் ஶீலாதிக₄னாயிருக்குமவன்கிடீர்! என்கிறார்.

வ்யா:— "ப₃ஹுதா₄ விஜாயதே" [பு. ஸூ] "ப₃ஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி" [கீதை] என்கிறபடியே எம்பெருமான் எடுத்த பலவகைப் பிறப்புக்களில், நரங்கலந்த சிங்கம்போலே அரன் கலந்த அரியுருவாய்த் தோன்றிய சங்கர நாராயணாவதாரம் என்ப தொன்றும் சாஸ்திரங்களில் பேசப்படுகிறது. அரனுடைய உருவமும் தன் உருவமேயென்றும், ஆயினும் அது அப்ரதா₄நமாயிருப்பது என்றும் காட்டுவதற்காக ப்ரதா₄நமான வலப்புறம் முழுவதும் ஸர்வேஶ்வரனான அரியின் லக்ஷணங்களோடும், அப்ரதா₄நமான இடப்புறம் முழுவதும் அவனைக்குறித்துத் தவம் புரியும் அரனுக்குரிய லக்ஷணங்களோடும் ஆவிர்ப₄வித்த அவதாரமே சங்கரநாராயணாவதாரம் என்பதாகும். இப்படி ஸித்₃த₄ ரூபத்தையும், ஸாத₄கரூபத்தையும் ஒருருவில் காட்டியதுபோலே, "மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்திசெய்ய நின்றான்" [அமலனாதி 3] என்றாற்போலே, வானரங்களுக்கும் வானவர்களுக்கும் ஒக்க முகங்கொடுக்கும் நீர்மையைக் காட்டிக்கொண்டு திருமலையில் எழுந்தருளியிருக்கிறான் என்கிறார் இப்பாசுரத்தில். இப்பாசுரத்தைக் கண்டு, திருவேங்கடமுடையானுக்கு சங்கரநாராயணரூபம் உண்டோ எனச் சிலர் ஐயமுறுவர். திருவேங்கடமுடையானின் திருமேனியில் நீண்முடியும், சக்கரமும், பொன்னாணும் உள்ளனவேயொழிய, தாழ்சடையும், ஒண்மழுவும், சூழரவும் இல்லை. சென்ற பாசுரத்தில் பல திவ்யதேசங்களை எடுத்து, இவையெல்லாம் தண் குடங்கை நீரேற்றவனான திரிவிக்கிரமன் தாழநிற்குமிடங்கள் என்று கூறியதால் அந்த திவ்யதேசங்களில் பகவான் திரிவிக்கிரம ரூபியாயிருக்கிறான் என்று ஏற்படாது; திரிவிக்கிரமாவதாரத்திற் காட்டிய நீர்மைக்குணத்தை அத்திவ்யதேசங்கள் அனைத்திலும் காட்டிக்கொண்டிருக்கிறான் என்றே ஏற்படும். அதுபோலவே "திருமலைமேல் எந்தைக்கு சங்கரநாராயணரூபம் பொருந்தியிருக்கிறது" என்றதனால், சங்கரநாராயணாவதாரத்தில் காட்டிய

http://acharya.org

வ்யா:— (தாழ்சடையித்யாதி) சூழத்திரண்டருவி பாயா நின்ற திருமலைமேலே நிற்கிற என்னுடைய ஸ்வாமிக்கு.

உரை:— ஸாத4கத்வஸூசகமாம்படி தாழக்கட்டின ஜடையும், ஆதி4ராஜ்யஸூசகமான ஓக்கத்தையுடைத்தான திருவபி4ஷேகமும், கொலைக்குப் பரிகரமான அழகிய மழுவும், ரக்ஷணத்துக்குப் பரிகரமான * அருளார் திருச்சக்கரமும், ப4யாவஹமாம்படி இடையிலே சூழப்பட்ட

ஸௌசீல்யம் திருவேங்கடமுடையானுக்கும் உள்ளது என்றே பொருள்படும். ஆகையால், இப்பாசுரத்தைக்கொண்டு சிவவிஷ்ணு ஸாம்யவாதம் செய்யவும் சிறிதும் இடமில்லை. "மாமலரான் வார்சடையான் என்று இவர்கட்கு எண்ணத்தான் ஆமோ இமை" [97] என்ற பாசுரத்தில் பிரமன் உருத்திரன் முதலானோர்க்குத் திருமாலைச் சற்றேனும் நெஞ்சால் நினைக்கவும் இயலாது என்று முழங்கியிருக்கும இவ்வாழ்வார் 'அரியும் அரனும் ஒன்று' எனனும் அப3த்3த4க்கொள்கையை ஆதரிக்கச் சிறிதும் இடமில்லை என்பதை நடுநிலையாளர்கள் குறிக்கொள்வார்களாக. இனி, பாசுரப்பொருளைக் காண்போம். (தாழ்சடையும் நீண்முடியும்) 'இவன் மற்றொருவனைக் குறித்துத் தவம் புரிபவன்' என்று காட்டித்தரும் சிவனுடைய தாழக்கட்டின ஜடையை இடப்புறத்திலும், 'ஆதி4ராஜ்யமதி4கம் பு4வநாநாம் ஈஶ தே பிஶுநயந் கில மௌளி:" [வரதராஜஸ்தவம் 25] [எல்லாவுலகிற்கும் சக்கரவர்த்தி நீயே என்பதை உன் கிரீடம் கோட்சொல்லா நிற்கிறது] என்கிறபடியே ஸர்வலோக ஏகசக்ராதி4பதி இவனே எனக்காட்டித்தரும் ஹரியின் உயர்ந்த கிரீடத்தை வலப்புறத்திலும் உடையவனாயிருக்கிறான் சங்கரநாராயணமூர்த்தி. (ஒண் மழுவும் சக்கரமும்) தன் பிள்ளையென்றும், ஸஹோத3ரனை மஹர்ஷியென்றும் பாராதே பிள்ளையாரைக் கழுத்தை வெட்டவும், பிருகுமஹர்ஷியின் கழுத்தைக் குறித்து ஓங்கவும் உபயோகிக்கப்பட்ட காணக்கண்கூசும், சிவனுடைய மழுவாயுதத்தை இடப்புறத்திலும், ஆஸுரஸ்வபா4வர்களையே தலையறுப்பதாய், நல்லோர்களை ரக்ஷிப்பதையே இயல்வாக உடையதான அரியினுடைய * அருளார் திருச்சக்கரத்தை வலப்புறத்திலும் உடையவனாயிருக்கிறான் சங்கரநாராயணமூர்த்தி.

* திருவிருத்தம் 33.

http://acharya.org

(இரண்டுருவும் ஒன்றாயிசைந்து) ஒன்று ஸாதகமாய், ஸர்ப்பமும், ஸ்வர்ணமயமான அரைநாண்படி திருவரையிலே சாத்தின பொன்னரை நாணுமாய்க்கொண்டு ஒன்றுக்கொன்று சேராச்சேர்த்தியாயிருக்கிற இரண்டுவடிவும்— நாலுபாடும் சூழ்ந்துவிழாநின்ற திரண்ட அருவிகள் வந்து

'ஒண்மழுவும் சக்கரமும்' என்று ஹரிஹரஸ்வரூபத்தை உடைய பாதியில் சக்கரமிருப்பதாகக் கூறுகையாலே சங்கர நாராயணமூர்த்தியின் ப்ரதாநபாகமான வலதுபாகமும் சக்கரமேந்திய ஹரியின் வலது பாகமே என விளங்குகிறது. இது பாகம் ஹரியின் பாகமாயிருந்ததாகில் சங்கத்தைத்தான் இங்கு கூறியிருக்கவேண்டும். சிவனடியார்களிற்சேர்ந்த காரைக்காலம்மையும், "ஒருபால் உலகளந்த மாயவனும் மற்றை ஒருபால் உமையவளாம்" என்னும் பாடலில், அர்த்தநாரீஸ்வரனின் இடப்பாகத்தை உமையினுடையதாகவும், மற்றைப் பக்கமான வலப்பாகத்தை உலகளந்த மாயவனுடையதாகவும் கூறியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. "அர்த்தம் தாநவவைரிணோ கிரிஜயாப்யர்த்தம் ஹரஸ்யாஹ்ருதம்" [அரனுடைய உடலில் பாதி அஸுரசத்ருவான விஷ்ணுவினாலும், மற்றைப்பாதி பர்வதராஜகுமாரியாலும் எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது.] என்று சிவபக்த வடமொழிக் கவியும் இப்படியே சொன்னான். "வலத்தனன் திரிபுரம் எரித்தவன்" [திருவாய் 1 3 9] முதலானவிடங்களில் ஆழ்வார்கள் எம்பெருமான் ஒரு காலத்தில் சிவனுக்குத் தன் திருமேனியின் வலப்புறத்தில் ஒரு மூலையில் இடங்கொடுத்த நீர்மையைப் பேசுகையால் விரோதமில்லை. (சூழரவும் பொன்னாணும்) காண்பவர் பயப்படும்படி பாம்பை உடலெங்கும் சுற்றிக்கொண்டிருக்கும் பாம்பாட்டியைப்போலே, அரனின் இடையிலே சூழ்ந்துகொண்டிருக்கும் பாம்பை இடப்புறத்திலும், 'ஸர்வேஸ்வரன் இவனே' என்று காட்டுவதாய், ஹரியின் திருவரையில் சாத்தப்பெற்றிருக்கும் பொன்னரைநாணை வலப்புறத்திலும் உடையவனாயிருக்கிறான் சங்கர நாராயணமூர்த்தி. (தோன்றுமால்) இப்படி ஸாதகமாகவும், ஸித்தமாகவும் ஒன்றுக்கொன்று சேராச்சேர்த்தியாயிருக்கும் இவ்விரண்டுருவங்களும் சங்கரநாராயணனுக்கு ஒருருவிலேயே தோன்றும்; இது ஆச்சரியமன்றோ! இனி, இவ்வடிவம் சைவர்கள் கூறுவதுபோல் சிவனுடையதன்று, ப்ரதாநபாகத்தில் காணப்படும் திருமாலுடையதே என்கிறார் அடுத்தபடியாக,—'(சூழும்

http://acharya.org

ஒன்று ஸித்$_3$த$_4$மானால் சேராச்சேர்த்தியாயிருக்குமோவென்னில்; இரண்டுருவுமிசைந்து ஒன்றாயிருக்கும்–பொருந்தியிருக்கும்.63.

64\. இசைந்த வரவமும் வெற்பும் கடலும்
பசைந்தங் கமுது படுப்ப—அசைந்து
கடைந்த வருத்தமோ கச்சி வெஃகாவில்
கிடந்திருந்து நின்றதுவு மங்கு.

குதியாநிற்கிற திருமலைமேலே நித்யவாஸம் பண்ணுநின்றுள்ள என் ஸ்வாமியானவனுக்குத் தன் திருமேனிக்கும் இதுக்கும் ஒரு வாசி தோற்றாதபடி பொருந்தி ஒரு கோவையாய்க்கொண்டு தோற்றாநின்றது. கெட்டேன்! இதொரு ஶீலாதிஶயமிருக்கும்படியே! என்று ஆஶ்சர்யப்படுகிறார். 63.

திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு) நாற்புறமும் சூழ்ந்துகொண்டு திரண்டு அருவிகள்வந்து கீழே குதியாநிற்கும் திருமலைமேலே நித்யவாஸம் செய்யும் திருமாலான திருவேங்கடவனே இப்படி ஒருகாலத்தில் சங்கரநாராயணமூர்த்தியாக அவதரித்தான்: இப்போதும் அந்நீர்மை தோற்ற வானரங்களுக்கும். வானவர்களுக்கும் ஒக்கமுகங்கொடுத்து நிற்கிறான் என்று கருத்து. சிவன் அவதாரங்கள் எடுப்பதில்லையென்பதையும், திருமாலே பலபடியான அவதாரங்களை எடுப்பவன் என்பதையும், சங்கரநாராயணமூர்த்தியின் வலப்புறம் சக்கரம் தாங்கிய திருமாலுடையதாயிருப்பதையும் காண்போர்க்கு இவ்வவதாரம் திருமாலுடையதேயொழிய சிவனுடையதல்ல என விளங்கும். இனி, நரங்கலந்த சிங்கம்போலே இப்படி ஒன்றுக்கொன்று சேராச்சேர்த்தியான சங்கரநாராயணரூபங்கள் இம்மூர்த்திக்கு மிகவும் பொருந்தியிருக்கும்படியைக்கண்டு ஆச்சர்யப்படுகிறார் பாசுரத்தின் கடைசி அடியாலே,— (இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து) ஸர்வேஶ்வர சிந்ஹமுடைய வலப்புறத்துக்கும், பி$_4$க்ஷா சிந்ஹமுடைய இடப்புறத்துக்கும் ஒரு வேறுபாடு தோற்றாதபடி, இரண்டு உருவும் ஒரு கோவையாகப் பொருந்தித் தோற்றாநின்றது. ஐயோ! இப்படியும் ஒரு நீர்மையிருப்பதே! என்று ஆஶ்சர்யப்படுகிறார். தோன்றுமால்' என்ற பதத்தில் 'ஆல்' என்பது ஆச்சரியத்தைக் காட்டுவது. ஆக, சங்கரநாராயணாவதாரத்தின் ஸௌஶீல்யம். திருமலையெம்பெருமானிடம் விளங்காநிற்கிறது என்றாயிற்று. 65,

இசைந்த—கடைகயிறாகக் கொள்வதற்குத் தகுதியுடைய. அரவமும்—வாஸுகிநாகமும். (இசைந்த)—மத்தாக நாட்டுவதற்குத் தகுதியுடைய. வெற்பும்—மந்தரபர்வதமும். (இசைந்த)—தாழியாக்குவதற்குத் தகுதியுடைய. கடலும்—கடலும் (ஆகிய இம்மூன்றையும்). பசைந்து—ஒன்றோடொன்று ஸம்பந்தப்படுத்தி. அங்கு — அந்தக் கடலிலே. அமுது—அம்ருதமானது. படுப்ப—உண்டாம்படி. அசைந்து—அலைச்சல்பட்டு. கடைந்த வருத்தமோ—கடைந்ததனாலுண்டான ஆயாஸத்தினாலோ. கச்சி—காஞ்சிபுரத்திலுள்ள. வெஃகாவில்—திருவெஃகாவில். கிடந்து—சயனித்துக் கொண்டும். அங்கு—அக்காஞ்சிபுரத்தில் (திருப்பாடகத்தில்). இருந்து—வீற்றிருந்தும் (திருவூரகத்தில்). நின்றதுவும்—நின்று கொண்டும் இருப்பது?

வ்யா:— (இசைந்தவித்யாதி) கடலிலே ஒருமலையை நட்டு. ஒருபாம்பைச்சுற்றிக் கடையாநின்றால் சேராச்சேர்த்தியாயிருக்குமோவென்றால்.— (இசைந்த) தன்னில் பொருந்தி

அவ:— ப்ரயோஜநாந்தரபரர்க்கும் உடம்புநோவக் கடல்கடைந்து அபேக்ஷித ஸம்விதாநம் பண்ணுமவன் ஸ்வபாவத்தை அநுஸந்தித்து அவனுக்குப் பரிகிறார்.

உரை:—கடைகயிறாகக் கொள்ளுகைக்குத் தகுதியான வாஸுகியும். மத்தாக நாட்டுகைக்குத் தகுதியான மந்தர

64. அவ:— சங்கரநாராயணரூபத்தின் நீர்மையை அநுபவித்தார் கீழ்ப்பாசுரத்தில்: க்ஷுத்ரபலனை விரும்பிய தேவர்களுக்கும் உடம்புநோவக் கடல்கடைந்து, அவர்கள் விரும்பியது கொடுத்தவனின் நீர்மையை அநுஸந்தித்து அவனுக்குப் பரிகிறார்.

வ்யா:— கடலிலே ஒரு மலையை மத்தாக நாட்டி, ஒரு பாம்பைக் கடைகயிறாகச் சுற்றிக் கடைவதெனில் சேராச்சேர்த்தியாயிருக்குமோ? எனில்: இல்லையில்லை: ஒவ்வொன்றும் மிகப் பொருந்தியிருந்தது என்கிறார் முதலடியிலே; 'இசைந்த' என்ற பதம் முதலடியில் மேலுள்ள மூன்று பதங்களோடும் அந்வயிக்கிறது; (இசைந்த அரவமும்) கடைகயிறாகக் கொள்வதற்குத் தகுதியுடைய வாஸுகி எனும் பாம்பும். (இசைந்த ....ற்பும்) மத்தாக நாட்டு

http://acharya.org

யிருந்தபடி. (பசைந்தங்கமுது படுப்ப) அதிலே அம்ருதம் படும்படிக்கு ஈடாகப் பசைகொடுத்து. (அசைந்தித்யாதி) உலாவிக் கடைந்த வருந்தமோ? (கச்சியித்யாதி) திருக்கச்சியிலும். திருவெஃகாவிலும் கிடப்பது இருப்பது நிற்பதாகிறது தனியே கடலைக் கடைந்தத்தாலே திருமேனியிலே பிறந்த ஆயாஸமோ? 64.

பர்வதமும். தாழியாக்குகைக்குத் தகுதியான கடலுமான இம்மூன்றையுங்கொண்டு. நீர் கோதாம்படி கலக்கி. அந்தக் கடலிலே அம்ருதத்தை உண்டாக்குகைக்காக அலைச்சற்பட்டுக் கடைந்த ஆயாஸமோ.— திருக்கச்சியிலே வெஃகாவிலே கண்வளர்ந்து. அந்தத் திருக்கச்சி தன்னிலே திருப்பாடகத்திலே எழுந்தருளியிருந்து. திருவூரகத்திலே எழுந்தருளிநின்றதுவும்? கடல் கடைந்த இளைப்பாலே நிற்பது இருப்பது கிடப்பதாய்க்கொண்டு இங்ஙனே நோவுபடுகிறானாகாதே! என்று வயிறெரிகிறார். 64.

வதற்குத் தகுதியுடைய மந்தரமென்னும் மலையும். (இசைந்த கடலும்) தாழியாக்குவதற்குத் தகுதியுடைய கடலுமாகிற இம்மூன்றினையும் கொண்டு. (அமுது படுப்பப் பசைந்து) இப்படிக் கடைவதாலே அமுதம் உண்டாம்படி பக்குவம் செய்து. நீர் கோதாம்படியும், அதிலிருந்து ஸாரமான அமுதம் வெளிப்படும்படியும் கலக்கி என்றுமாம். (அசைந்து கடைந்த வருத்தமோ) "ஆயிரம் தோளால் அலைகடல் கடைந்தான்" [பெரிய திருமொழி 5-7-4] என்கிறபடியே ஆயிரங்கைகளாலே முன்னும் பின்னுமாக அசைந்து கடல்கடைந்த ஆயாஸத்தினாலோ கச்சிவெஃகாவில் கிடப்பதும், இருப்பதும், நிற்பதுமாகிற செயல்களைச் செய்கிறது? என்று மேலோடு அந்வயிக்கிறது. (கச்சி வெஃகாவில்) திருக்கச்சியிலும், திருவெஃகாவிலும். (வெஃகாவில் கிடந்து) கச்சித்திருவெஃகாவில் சயனித்திருப்பதையும், (கச்சி அங்கு இருந்து) அத்திருக்கச்சியின் திருப்பாடகத்திலே வீற்றிருப்பதையும், (கச்சி அங்கு நின்றதுவும்) அத்திருக்கச்சியில் திருவூரகத்திலே நிற்பதையும் செய்தது அலைச்சல்பட்டுக் கடல்கடைந்த ஆயாஸம் தீருவதற்காகவோ? மிகுந்த அலைச்சல்பட்டவர்கள் அவ்வலைச்சல்தீரச் சிறிதுநேரம் படுப்பதும், சிறிதுநேரம் இருப்பதும், சிறிதுநேரம் நிற்பதும் செய்வதுபோலே

http://acharya.org

65 அங்கற் கிடரின்றி யந்திப் பொழுதத்து
மங்க விரணியன தாகத்தை—பொங்கி
அரியுருவமாய்ப் பிளந்த வம்மா னவனே
கரியுருவம் கொம்பொசித்தான் காய்ந்து.

அங்கற்கு-பிள்ளையான ப்ரஹ்லாதனுக்கு. இடர் இன்றி-ஒரு துன்பமும் வராதபடி. அந்தி பொழுதத்து—மாலை நேரத்தில். இரணியனது—ஹிரண்யனுடைய. ஆகத்தை—மார்பை. மங்க—அழிந்துபோம்படியாக, அரி உருவம் ஆய் பொங்கி—நரஸிம்ஹரூபியாய்க் கிளர்ந்து. பிளந்த—கிழித்தொழித்த. அம்மான் அவனே—அப்பெருமானே; காய்ந்து—சீறி. கரி உருவம்—கருத்த உருவத்தையுடைத்தாயிருந்த ஆனையான குவலயாபீடத்தினுடைய. கொம்பு—தந்தத்தை. ஒசித்தான்—ஒடித்துப்போட்டான்.

எம்பெருமானும் கடல்கடைந்த அலைச்சல்தீரத் திருக்கச்சியிலே கிடந்திருந்து நிற்கிறான்போலும் என்று தம்முடைய பரிவாலே வயிறு பிடிக்கிறார்.

''தாளால் உலகமளந்த அசைவேகொல்
வாளா கிடந்தருளும் வாய்திறவான்—நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணியான்
ஐந்தலைவாய் நாகத்தணை'' [நான்-திருவ 35]

''நடந்தகால்கள் நொந்தவோ நடுங்க ஞாலம் ஏனமாய்
இடந்தமெய் குலுங்கவோ விலங்குமால்வரைச்சுரம்
கடந்த கால் பரந்த காவிரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு?'' [திருச்சந்த-61]

''கொடியார் மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும்
மடியாதின்னே நீ துயில்மேவி மகிழ்ந்ததுதான்
அடியார் அல்லல் தவிர்த்த அசைவோ அன்றேல் இப்
படிதான் நீண்டு தாவிய அசைவோ பணியாயே''
[திருவாய் 8-3-5]

என்று எம்பெருமானுக்குப் பரிந்து வயிறுபிடிப்பது ஆழ்வார்கள் அனைவர்க்கும் இயல்வன்றோ. 64

http://acharya.org

வ்யா:-(அங்கற்கிடரின்றியித்யாதி)பிள்ளையுடையவிடாய்தீர. "அங்கக்கிடரின்றி"என்று பாடமாகில்,அவ்விடத்தில் விடாய்தீர.

அவ:— அப்ருதமத2நம் பண்ணின ஆயாஸமாத்ர மன்றிக்கே. அல்லாத அவதாரங்களிலும் அலசுதலுக்கு அடியான அவன் செயல்களை அநுஸந்திக்கிறார்.

உரை:— சிறுபிள்ளையான ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானுக்கு ஒரு து3:க்க2ம் வாராதபடி. அஸுரர்க்கு

---

65. அவ:— அமுதங்கடைந்த அலைச்சல் ஒன்றேயோ? அடியார்க்காக மற்றும் பல அவதாரங்களிலும் அவன்பட்ட ஆயாஸங்கள் பலவன்றோ என்கிறார் இப்பாசுரத்தில்.

வ்யா:—(அங்கற்கிடரின்றி) "அங்கா3த3ங்கா3த் ஸம்ப4வஸி— ஆத்மா வை புத்ரநாமாஸி" [ஒவ்வோரங்கத்திலிருந்தும் உண்டாகிறாய்; புத்திரன் என்னும் பெயருடைய நானேயாகிறாய்.] என்ற ஶ்ருதியின்படியே அங்கத்திலிருந்துண்டானவனாகையாலே அங்க3ஜனான பிள்ளையை அங்கன் என்கிறது; கடைக்குறை. இரணியனுடைய பிள்ளைக்கு இடரின்றி என்றபடி. இரணியனுக்கு அங்க3ஜனாயிருந்தும், அவ்விரணியன் இப்பிரஹ்லாதனுக்கு இடரிழைத்தான். அப்போது அவ்விடரைத் தவிர்த்தவன் நிருபாதி4க பிதாவான இவனேயென்கை. அன்றிக்கே. அங்கன் என்றது நரசிங்கனின் பிள்ளை என்றுமாம். பிரஹ்லாத3ன் மஹாஜ்ஞானியாகையாலே தன்னை நாராயணனுக்கே புத்ரனாக அநுஸந்தித்திருப்பானாகையாலே அங்கற்கிடரின்றி இரணியனது ஆகத்தைப் பிளந்தான்,' என்கிறார்: தன் பிள்ளைக்கு இடர்வாராதபடி இரணியனுடலைக் கிழித்தான் நரசிங்கன் என்றபடி. அன்றிக்கே, திருநாமஞ் சொன்னதுவே காரணமாக வயிற்றிற்பிறந்தவனை இரணியன் கைவிடுகையாலே, திருநாமஞ்சொன்ன அவனைத்தன் பிள்ளையாக எண்ணி, ஆழ்வார் 'அங்கன்' என்கிறாராகவுமாம். "பிள்ளையைச் சீறி" [பெரியதிருமொழி 2-3-8] என்றாரன்றோ திருமங்கையாழ்வாரும். அன்றிக்கே, 'அங்கு மகற்கு' என்றது குறைந்து அங்கற்கு என்று கிடக்கிறதாகவுமாம். 'அங்கர்க்கு' என்று பாடமானாலும், 'அங்கற்கு' என்றே கொள்ளவேணும். "ஸர்வக3த்வாத3நந்தஸ்ய ஸ ஏவாஹமவஸ்தி2த:" [வி-பு 1-19-85] [அநந்தன் ஸர்வவ்யாபியாயிருப்பதாலே. நான் அவனாகவேயிருக்கிறேன்] என்று தன்னை அனந்தனுக்கு அங்கமாக ப்ரஹ்லாதன் அநுஸந்திக்கையாலே. அவனை 'அங்கன்' என்பதாகவும் கொள்ளலாம். 'அங்கக்கிடர்' என்று பாடமானபோது 'அங்கக்கு— அவ்விடத்தில், இடர்—துன்பம்' என்று பிரித்துப் பொருள்கொள்வது.

http://acharya.org

(அந்திப்பொழுதத்து) அஸுரர்க்கு ப$_3$லம் வர்த்தி$_4$க்கும் காலத்திலே. (மங்கவிரணியனதாகத்தை) ஹிரண்யனுடைய ஹ்ருத$_3$யமானது மங்கிப்போம்படிக்கீடாக.(பொங்கியித்யாதி$_3$) "பிறையெயிற்றன்றடலரியாய்ப் பெருகினானே" என்னும்படி. (அவனேயித்யாதி$_3$) அவனே குவலயாபீட$_3$த்தினுடைய கொம்பை ஒசித்தான். (காய்ந்து) சீற்றமில்லாதவன் சீறி. 65.

ப$_3$லம் வர்த்தி$_4$க்கும்படியான ஸந்த்$_4$யாகாலத்திலே ஆஸுர ப்ரக்ருதியான ஹிரண்யனுடைய வரப$_3$லாதி$_4$களாலே பூண் கட்டின மார்வை உருத்தெரியாதபடி அழிந்துபோம்படியாகப் பெரியகிளர்த்தியை உடையனாய்க்கொண்டு நரஸிம்ஹ ரூபியாய் இடந்து பொகட்ட ஸர்வேஸ்வரனான அவனே, சீறிக்கொண்டு குவலயாபீட$_3$த்தினுடைய கொம்பை அநாயாஸேந முறித்துப் பொகட்டவன். அங்கரென்றது அங்கனென்றபடியாய் பிள்ளையென்றபடி. அன்றிக்கே.

(அந்திப்பொழுதத்து) அஸுரருக்கு ப$_3$லம் வளரக்கூடிய மாலை வேளையிலே அஸுரப்பையலோடு போரிடுவதே! என்று வயிறு பிடிக்கிறார். (இரணியனது ஆகத்தை) அஸுரப்பையலான இரணியனுடைய வரப$_3$லம் முதலானவற்றாலே பூண்கட்டின மார்பை. ஆகம்—மார்பு; ஹ்ருத$_3$யம் என்றுமாம். சிந்தையினால் இகழ்ந்தவனுகையாலே நெஞ்சிருக்கும் ஹ்ருத$_3$யத்தையும் பிளந்தான்.(மங்க) நரசிங்கத்தைக் கண்ட காட்சியிலே உருத்தெரியாமல் அழிந்துபோம்படி. (அரியுருவாய்ப்பொங்கிப் பிளந்த) நரசிங்கரூபியாகிப் பெருகிப் பிளந்த. "பிறையெயிற்று அன்று அடலரியாய்ப் பெருகினானே"; [பெரிய திரு2-5-8] என்கிறபடியே பாகவதாபசாரம் பொறுத சீற்றத்தாலே, விரல் நுனியாலே கிழித்தெறியவேண்டிய அவனைக்கொல்லப் பெருகு வெடுத்தான். "ஈஶ்வரன் அவதரித்துப்பண்ணின ஆனைத் தொழில்கள் எல்லாம் பாகவதாபசாரம் பொறாமை என்று ஜீயர் அருளிச்செய்வர்" என்ற ஸ்ரீவசநபூ$_4$ஷண ஸ்ரீஸூக்தி இங்கு அநுஸந்தி$_4$க்கத்தக்கது.(அம்மான் அவனே) இவ்வருஞ்செயலைச் செய்ததன் மூலம் ஸர்வஸ்வாமி தானே என்பது தோற்ற நின்ற அவனே. (அம்மான்) ப்ரஹ்லாதனுக்குச் செய்த உதவியைத் தமக்குச் செய்ததாக நினைத்து ஸ்வாமி' என்கிறாராகவுமாம். (காய்ந்து). சீற்ற

http://acharya.org

66 காய்ந்திருளை மாற்றிக் கதிரிலகு மாமணிகள்
ஏய்ந்த பணக்கதிர்மேல் வெவ்வுயிர்ப்ப—வாய்ந்த
மதுகைடபரும் வயிறுருகிமாண்டார்
அதுகேடவர்க் கிறுதி யாங்கு.

காய்ந்து—சீறி. இருளை மாற்றி—இருளைப் போக்கி. கதிர் இலகு—ஒளிவிடாநின்றுள்ள. மா மணிகள்—சிறந்த ரத்னங்கள். ஏய்ந்த—பொருந்தியிருக்கிற. பணம்—(திருவனந்தாழ்வானின்) படங்களினுடைய. கதிர் மேல்—ஒளிக்கு மேலே (எம்பெருமான்). வெவ்வுயிர்ப்ப—பெருமூச்சுவிட. வாய்ந்த—கிட்டின. மதுகைடபரும்—மதுகைடபர்கள். வயிறு உருகி மாண்டார்-குடலழுகி முடிந்து போனார்கள்; அவர்க்கு-அந்த மதுகைடபர்களுக்கு. ஆங்கு—அவ்விடத்தில், அது கேடு இறுதி—அப்படிக் கிட்டியதே தாழ்வுக்கும் அழிவுக்கும் காரணமாயிற்று.

“सर्वगत्वादनन्तस्य स एवाहमवस्थितः” (ஸர்வக₃த்வாத₃நந்தஸ்ய ஸ ஏவா ஹமவஸ்த்தி₂த:) என்கிறபடியே எம்பெருமானுக்குத் தன்னை அங்க₃மாக அநுஸந்தி₄த்திருக்குமவன் என்னவுமாம். அங்ஙனுமன்றிக்கே. அங்கு—அவ்விடத்து. என்று பிரித்து. மகற்கென்கிறத்தைத் தலைக்குறைத்தலாய்க் கிடக்கிற தென்னவுமாம். ஹிரண்யனுடைய மகனுக்கு இடரில்லாதபடி என்று பொருளாகக் கடவது. “அங்கக்கிடர்” என்று பாடமானபோது அவ்விடத்து இடரில்லாதபடி என்று பொருளாகக்கடவது. 65.

மில்லாதவன். கம்ஸன் செய்த பாகவதாபசாரத்தாலே சீறி. அவன் மேலுள்ள சீற்றத்தை அவனுடைய பரிகரமான ஆனையின் மீதும் காட்டினான். (கரியுருவம் கொம்பு ஒசித்தான்) காருருவமுடைய குவலயாபீட₃ம் என்னும் ஆனையின் கொம்பை ஒடித்தான். அன்றிக்கே, கரி என்னும் வடசொல் துதிக்கையையுடைய யானையைக் குறிப்பதாய், அவ்வுருவத்தை ஏறிட்டுக்கொண்டு பொருத அஸுரனின் த₃ந்தத்தை முறித்துப்போட்டு. அவனை அழித்தான என்றும் கொள்ளலாம். ஆக, அடியார்களுக்காக அவன் செய்த ஆனைத்தொழில்கள் சிலவற்றை அருளிச்செய்தாராயிற்று. 65

http://acharya.org

அவ:— (காய்ந்து) உணர்த்தி உண்டானபோது விரோதி$_4$ நிரஸநம்பண்ணிது ஓரேற்றமோ அவதா$_4$நமின்றிக்கே யிருக்கச்செய்தே விரோதிகளை முடிக்கவல்லவனுக்கு?என்கிறார்.

வ்யா:— (காய்ந்திருளைமாற்றி) சீறி இருளைப்போக்கி. (கதிரிலகித்யாதி$_3$) ஒளிவிடாநின்றுள்ள மணிகள் சேர்ந்த ப$_3$ணத்திலுண்டான தேஜஸ்ஸின்மேலே நெடுமூச்சு விட. (வாய்ந்தவித்யாதி$_3$) கிட்டின மது$_4$கைடப$_4$ர்கள் வயிறுருகி

அவ:—தானொரு வடிவுகொண்டு வந்து விரோதி$_4$யைப் போக்கினானென்கிற இது ஓர் ஏற்றமோ, கண்வளர்ந் தருளுகிறவிடத்தே வந்து கிட்டின விரோதிகளை முடிக்க வல்லவனுக்கு? என்கிறார்.

உரை— ஸஹாவஸ்தா$_2$நமில்லாதமாத்ரமன்றிக்கே சீறிக் கொண்டு இருளைப் போக்கிக் கிரணங்கள் ஒளிவிடாநின் றுள்ள பெருவிலையனை ரத்னங்கள் சேர்ந்திருக்கிற தன் னுடைய ப$_4$ணங்களின் ஒளிக்குமேலே, திருவனந்தாழ்வான் அநுப$_4$வஜநிதஹர்ஷப்ரகர்ஷத்துக்குப்போக்குவிட்டு வெவ்வி தாக உச்ச்$_2$வாஸநிஸ்வாஸங்களைப்பண்ண. இவ்வளவிலே

---

66. அவ:—தான் ஓர் வடிவு கொண்டுவந்து விழித்திருக்கும் போது விரோதிகளை அழித்தான் என்கிற இது ஓர் சிறப்போ—கவன மில்லாமல் கண்வளர்ந்தருளுமிடத்திற்கு வந்த பகைவரை மூச்சாலே முடிக்கவல்லவனுக்கு? என்கிறார்.

வ்யா:—(காய்ந்து இருளை மாற்றி) சிறிய ஒளியாயிருந்தால், இருளோடு சேர்ந்துமிருக்கும்; பேரொளியாகையாலே இருளோடு சேர்ந்திருக்கமாட்டாமையேயன்றிக்கே, இருளைச் சீறிக்கொண்டு அழிக்கும் கிரணங்கள் என்றபடி. (கதிர் இலகு மாமணிகள் ஏய்ந்த பணக் கதிர்மேல்) அத்தகைய கிரணங்கள் ஒளிவிடாநிற்கும் பெருமதிப்புள்ள ரத்தினங்கள் பொருந்தியிருக்கிற திருவனந்தாழ் வானின் படத்தின் ஒளிக்கற்றைக்குமேலே. (வெவ்வுயிர்ப்ப) எம் பெருமான் பெருமூச்சுவிட (வாய்ந்த மதுகைடபரும் வயிறுருகி மாண்டார்) இந்த சமயத்தில் எதிரிகளாகக்கிட்டிய மதுவும் கைட

http://acharya.org

முடிந்தார்கள். (அதுகேடித்யாதி$_3$) "என்றுமென் பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்கள் அங்ஙனமாவர்களே". 66.

விரோதி$_4$த்து வந்து கிட்டின மது$_4$கைடப$_4$ர்களும் குடலழுகி முடிந்து விட்டார்கள். அநுகூலர்க்கு வாழவும் ஜீவிக்கவுமான அந்தக் கண்வளர்ந்தருளுகிற ஸ்த$_2$லத்திலே ப்ரதிகூலித்து வந்து கிட்டினவர்களுக்கு அந்தக்கிட்டினவதுவே வாழ்வுக்கு ப்ரதிகோடியான கேடும். ஸத்தையோடே ஜீவிக்கைக்கு ப்ரதிகோடியான விநாஶமுமாய் விட்டது. 66.

ப$_4$னும் குடலழுகி இறந்துவிட்டார்கள். "பிஷ்டது$_3$ஷ்ட மது$_4$கைடப$_4$கௌ" என்று கூரத்தாழ்வான் ஸுந்த$_3$ரபா$_3$ஹுஸ்தவத்திலும், "மத$_3$மிவ மது$_4$கைடப$_4$ஸ்ய...கிமுபமிமீமஹி ரங்க$_3$குஞ்ஜரோர்வோ:" என்று பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலும் மது$_4$கைடப$_4$ர்கள் எம்பெருமானுடைய தொடையிலே இறுக்கிக் கொல்லப்பட்டதாகவன்றோ கூறியிருக்கிறார்கள்? எனில்: பெருமூச்சாலேயே குடலழுகிவிட்டவர்களைத் தொடையால் இறுக்கிக்கொன்றான் என்று கொண்டால் விரோதமில்லை. இப்படி எம்பெருமானுடைய பெருமூச்சாலேயே இவர்கள் மாண்டார்கள் என்று கொண்டால்தான் மது$_4$ஸூத$_3$நன், கைடபா$_4$ரி என்னும் திருநாமங்களுக்கு மிகப்பொருந்தியிருக்கும். அப்படியன்றிக்கே, சக்கரத்தால் தலைகொண்டாலும் இவனே தலையறுத்ததாகச் சொல்லுவதுபோலே. திருவனந்தாழ்வானுடைய விஷப் பெருமூச்சாலே அவர்களை அழித்தான் என்றும் கூறுவர். தன் பணங்களின் ஒளிக்குமேலே. திருவனந்தாழ்வான் எம்பெருமானை அனுபவித்ததனால் உண்டான ஆனந்தத்துக்குப் போக்குவிடாகப் பெருமூச்சுவிட, அப்போது ப்ரதிகூலராக வந்தடைந்த மது$_4$கைடப$_4$ர் குடலழுகி மாண்டார்கள் என்றபடி. திருமெய்யத்தில்' இதைக் காணலாம். (அது ஆங்கு அவர்க்குக் கேடு இறுதி) அநுகூலர் ஸத்தை பெறவும் வாழவுமிடமான அந்த ஸ்த$_2$லத்திலே, ப்ரதிகூலித்து வந்த அவர்களுக்கு அப்படிக்கிட்டின அதுவே வாழ்வுக்கு எதிர்த்தட்டான கேடும், ஸத்தை பெறுகைக்கு எதிர்த்தட்டான அழிவுமாகிவிட்டது. ஆக, ஒளியிருக்குமிடத்தில் இருளழிவதுபோலே, இவனிருக்குமிடத்தை அணுகினலே எதிரிகள் அழிந்துபடுபவர் என்றதாயிற்று. "என்றும் என் பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்கள் அங்ஙனம் ஆவர்களே" [பெரியாழ்திரு 3-3-7] என்ற பெரியாழ்வாரைப்போலே நிர்ப்ப$_4$ரராகிறார். 66.

http://acharya.org

67. ஆங்குமலரும் குவியுமாலுந்திவாய்
ஓங்கு கமலத்திெனுண்போது — ஆங்கைத்
திகிரிசுடரென்றும் வெண்சங்கம் வானில்
பகருமதி யென்றும் பார்த்து.

மால்—ஸர்வேஸ்வரனுடைய. உந்தி வாய்—திருநாபி யிலே. ஓங்கு—உயரவளர்ந்த. ஒண் கமலத்தின் போது— அழகிய தாமரைப் பூவானது. கை—அவனுடைய வலத் திருக்கையில். ஆம்—உள்ள. திகிரி—திருவாழியை. சுடர் என்றும்—ஸூர்யனென்றும், (கை ஆம்)—இடத்திருக்கையி லுள்ள. வெண் சங்கம்—வெளுத்த சங்கை. வானில் பகரும் மதி என்றும்—ஆகாசத்தில் ஒளிவிடுகிற சந்திர னென்றும், பார்த்து—நினைத்துக்கொண்டு. ஆங்கு—ஒரே காலத்திலே. மலரும் குவியும்—மலர்வதும் மூடிக்கொள் வதுமாயிராநின்றது.

அவ:— (ஆங்கு) ஹிரண்யனும் மது₁கைட₄பர்களும் முடிந்தபின்பு கண்வளரும்போதை அழகை அநுபவிக்கிறார்.

வ்யா:—(உந்திவாயித்யாதி₂) திருநாபிகமலத்திலே ஓங்கி யிருந்துள்ள அழகியதான தாமரைப்பூ. (ஆங்கையித்யாதி₂)

அவ:— அங்குக் கண்வளர்ந்தருளுகிறவனுடைய திரு நாபீ₄கமலமானது கையுமாழ்வார்களுமான சேர்த்தியைக் கண்டு அலருவது மொட்டிப்பதாகிறபடியை அநுப₄விக்கிறார்.

உரை:— திருநாபீ₄கமலத்திலே உண்டாய். உயர வளர்ந்த தாமரையினுடைய செவ்விகுன்றாத அழகிய

---

67. அவ:— ஹிரண்யனும், மது₄கைடப₄ர்களும் அழிந்த பின்பு திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளும்போதுள்ள அழகை அநுப₄விக்கிறார்.

வ்யா:— (உந்தி வாய் ஓங்கு கமலத்தின் ஒண்போது) "அஜஸ்ய நாபௌ₄ள அத்₄யேகமர்ப்பிதம்" [பிறப்பற்றவனின் திருநாபியில் ஓர் கமலம் உள்ளது] " ஸ ப்ரஜாபதிரேக: புஷ்கரபர்ணே ஸமப₄வத் "

http://acharya.org

கையில் திருவாழியை ஆதித்யனென்றும். (வெண்சங்க மித்யாதி) ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஆகாசத்திலே விளங்கா நின்றுள்ள சந்த்ரனென்றும்பார்த்து—அநுஸந்தித்து. (ஆங்கு மலருங்குவியுமால்) இரண்டு காலத்திலே பிறக்கக்கடவ அவ் விரண்டவஸ்தைதயானது யுகபத் உண்டாகாநின்றது. 67.

பூவானது. அவனுடைய வலத்திருக்கையில் உண்டான திருவாழியை ஆதித்யனென்றும். மற்றைத் திருக்கையில் ஏந்தின வெளுத்த நிறத்தையுடைத்தான ஸ்ரீபாஞ்சஜன் யத்தை ஆகாசத்திலே வர்த்திக்கிற ஒளியையுடைய சந்த்ர

[அப்பிரமன் ஒருவனே தாமரையிதழில் பிறந்தான்] என்று வேதம் ஓதியபடியே பிரமனையும் தாங்கும் பெருமையை உடையதாய் ஓங்கும் ஸர்வேச்வரனுடைய திருநாபியில் உள்ள தாமரையின் ஒளி மிகுந்த புஷ்பம். (ஆங்கு மலரும் குவியுமால்) ஒரே காலத்தில் மலர்வதையும், குவிவதையும் செய்யாநிற்கிறது. (ஆல்) உலகில் மற்ற தாமரைகள் ஒரு காலத்தில் குவியும்; மற்றொரு காலத்தில் மலரும்; இதுவோ ஒரே காலத்தில் குவிவதையும், மலர்வதையும். மாறிமாறிச் செய்கிறதே! இதென்ன ஆச்சர்யம் என்கிறார். அன்றிக்கே, "மால் உந்திவாய்...போது ஆங்கு மலரும் குவியும்" என்று அந்வயித்தும் பொருள் கொள்ளலாம். "ஸர்வேச்வர னுடைய உந்தியிலுள்ள தாமரை ஒரே காலத்தில் மலர்வதையும் குவிவதையும் செய்கிறது" என்று பொருள். இப்படிப் பொருள் கொள்ளும்போது ஆச்சர்யம் ஸப்தஸித்தமல்லாமல் அர்த்த ஸித்தமாகிறது. இவ்வாச்சர்யத்திற்குக் காரணத்தை விளக்கு கிறார் பின்னடிகளாலே—(ஆங்கைத்திகிரி சுடர் என்றும்) கை ஆம் திகிரி சுடர் என்று பார்த்து மலரும் என்று அந்வயிக்கவேணும்; உலகில் தாமரை ஸூர்யனைக் கண்டதும் மலரும்; இத்தாமரையோ வெனில் எம்பெருமானுடைய வலத்திருக்கையில் உள்ள கோடி ஸூர்ய ப்ரகாசமான ஸுதர்சநத்தை ஸூர்யனென நினைத்து மலரும். (வெண் சங்கம் வானில் பகரும் மதி என்றும் பார்த்து) உலகில் தாமரை சந்திரனைக் கண்டதும் குவியும்; இத்தாமரையோ வெனில் "சந்திரமண்டலம் போல் தாமோதரன் கையில்" [நாச்-திரு 1] கிறபடியே, எம்பெருமானுடைய இடத்திருக்கையில் உள்ள வானில் விளங்கும் சந்திரனைப்போன்ற வெண் சங்கத்தைச் சந்திரன் என நினைத்துக் குவியும்; இப்படி ஒரே காலத்தில்

68. பார்த்த கடுவன் சுனைநீர் நிழற்கண்டு
பேர்த்தோர் கடுவனெனப் பேர்ந்து—கார்த்த
களங்கனிக்குக் கைநீட்டும் வேங்கடமே மேனாள்
விளங்கனிக்குக் கன்றெறிந்தான் வெற்பு.

சுனை நீர்—திருமலைச் சுனையின் நீரிலே. **பார்த்த**—கவிந்து பார்த்த. **கடுவன்**—ஆண் குரங்கானது. **நிழல் கண்டு**—நீரினுள்ளே ப்ரதிபலிக்கிற தன் நிழலைக்கண்டு. **பேர்த்து ஓர் கடுவன் என**—(தனக்கு எதிரியான) வேறொரு குரங்கு இருப்பதாக மயங்கி **பேர்ந்து**—பயத்தாலே அவ்விடம் விட்டு அடியிடத் தொடங்கி (மறுபடியும் சாபல்யத்தாலே). **கார்த்த களங்கனிக்கு கை நீட்டும்**—கரிய களாப்பழத்தைப் பறித்துத்தாவென்று கை நீட்டப்பெற்ற. **வேங்கடமே**—திருவேங்கடந்தான். **மேல் நாள்**—முன்பொரு காலத்தில், **விள கனிக்கு**—(அஸுரராவேசங்கொண்ட) விளாம்பழங்கள் உதிர்வதற்காக. **கன்று எறிந்தான்**—வத்ஸாஸுரனை (எறிதடியாகக் கொண்டு) வீசியெறிந்த பெருமானுடைய. **வெற்பு**—திருமலை.

னென்றும் உத்ப்ரேக்ஷித்துக்கொண்டு அக்காலத்திலே அலர்வது மொட்டிப்பதாகாநிற்கும்; இதோர் ஆஸ்சர்யமிருக்கும்படியே! என்று அநுபவிக்கிறார். "மாலுந்தி வாய்" என்றபோது ஸர்வேஸ்வரனுடைய திருநாபியில் என்றாகக் கடவது. ஆங்கு—அந்தப்பொழுதில். ஏககாலத்திலென்றபடி. வானிலே வர்த்திக்கிற ப்ரஸித்தனான சந்த்ரனென்னவுமாம். 67.

எம்பெருமானுடைய இருதிருக்கைகளிலும் ஶங்கசக்ரங்கள் சந்திர ஸூர்யர்களைப்போலே விளங்குகையால், உந்தித்தாமரையும் ஒரே காலத்தில் குவிவதையும் மலர்வதையும் செய்யும் ஆஸ்சர்யம் காணப்படுகிறது என்று கருத்து. வானில் பகரும்—வானில் ஒளிவிடும் என்கை; அன்றிக்கே, பகரும் என்றது பகரப்படும் (சொல்லப்படும்) என்றதாய் 'ப்ரஸித்திபெற்ற' என்றும் பொருள் கொள்ளலாம். ஆக, எம்பெருமான கண்வளரும்போதுள்ள அழகை அநுபவித்தாராயிற்று. 67.

http://acharya.org

வ்யா:— (பார்த்தவித்யாதி$_3$) சுனைநீரிலே கடுவனானது தன்னுடைய நிழலைக்கண்டு. (பேர்த்தோரித்யாதி$_3$) வேறே தனக்கெதிரியான கடுவனென்று பெயர்ந்து. (கார்த்தவித்யாதி$_3$) பின்னையும் தன்னுடைய சாபலத்தாலே அருகில் களாப்பழத்தை அறுத்துத்தாவென்று கைநீட்டாநிற்கும்

அவ:— இப்படிப்பட்டவனுடைய அழகை அநுப$_4$விக்கைக்குத் திருப்பாற்கடலேறப் போகவேண்டா, திருமலையிலே அநுப$_4$விக்கலாங்கிடீர்—என்கிறார்.

உரை:— கரையில் களாவிலேநின்று சுனையின் நீரைப் பார்த்த கடுவனானது. நீருக்குள்ளே தன் நிழலைக்கண்டு. இது நம்முடைய நிழலென்று பு$_3$த்$_3$தி$_4$பண்ணமாட்டாதே. தனக்கு எதிரியான வேறேயொரு கடுவனென்று ப்ரதிபத்தி பண்ணி. தன் கையின் சிவப்புக்குப் பகைத்தொடையான கறுத்தநிறத்தையுடைத்தான களாவின் பழத்துக்கு—தான் நிற்கிற களாவின் நிழலென்று அறியாதே. வேறொன்றாகக் கருதி அதின் பழமும் பெறவேணுமென்னும் சாபலத்தாலே, அத்தை அறுத்துத்தா என்று கைநீட்டாநிற்கும்

68. அவ:— இப்படிப்பட்டவனுடைய அழகை அநுப$_4$விக்கத் திருப்பாற்கடலுக்குச் செல்லவேண்டா; திருமலையிலேயே அநுப$_4$விக்கலாமே என்று பல பாசுரங்களில், திருமலையின் அழகையும், திருமலையப்பனின் அழகையும் அநுபவிக்கத் தொடங்குகிறார்.

வ்யா:— (பார்த்த கடுவன்) கரையில் களாமரத்தின் மேலே நின்று கீழேயுள்ள சுனையின் நீரைப்பார்த்த ஆண்குரங்கானது. "கார்த்த களங்கனிக்கு" என்று மேலே வருகையாலே களாமரத்தின் மேலே நின்று பார்த்தது எனக்கொள்வது. (சுனை நீர் நிழற்கண்டு) அச்சுனையின நீரிலே தன் நிழலையே கண்டு. (பேர்த்து ஓர் கடுவன் என) 'இது தன் நிழலே' என்று அறியாமல், 'தனக்கு எதிரியான வேறொரு ஆண்குரங்கு' என்று நினைத்து. (பேர்ந்து) அதனிடம் பயந்து ஓடத்தொடங்கி. (கார்த்த களங்கனிக்குக் கைநீட்டும்) சஞ்சலபுத்தியையும் சாபல்யத்தையும் உடையதாகையாலே, மறுபடியும் நின்று, தன் கையின் சிவப்புக்கு மாறுபட்ட கறுத்த நிறமுடைய களங்கனியின் நிழலை நீரிலே கண்டு, அது தான் நிற்கிற களாவின் பழத்தின் நிழலே என்றறியாமல் மற்றொரு மரத்தின் பழம் என்றெண்ணி அதையும் அக்குரங்கினிடமிருந்து பெற வேணும் என்று, 'அதனை அறுத்துத்தா' என்னும் கருத்து தோன்ற அக்களங்கனிக்கு அக்குரங்கினிடம் கைநீட்டுகிற.

http://acharya.org

திருமலை; (மேனுளித்யாதி) பண்டு கன்றைக்கொண்டு விளங் கனிக்கெறிந்தவனுடைய மலை. 68.

69. வெற்பென்று வேங்கடம் பாடும் வியன்துழாய்க்
கற்பென்று சூடும் கருங்குழல்மேல்—மற்பொன்ற
நீண்டதோள் மால்கிடந்த நீள்கடல் நீராடுவான்
பூண்டநா ளெல்லாம் புகும்.

வேங்கடமே. பண்டொருநாளிலே விளாவின் பழத்துக்குக் கன்று எறிந்தவன் வர்த்திக்கிற திருமலை. இதினுடைய மௌக்₃த்₄யம்போலேயாய்த்து அவனுடைய மௌக்₃த்₄யமிருக்கும்படி. 68.

சாபலத்தையும், மௌக்₃த்₄யத்தையும் (அறிவின்மையையும்) காட்டும் இக்குரங்கின் செயல் நடந்தது எங்கேயெனில், அது போன்ற செயலைச் செய்தவன் வாழும் திருமலையிலே என்கிறார் பாசுரத்தின் எஞ்சிய பகுதியாலே.— (வேங்கடமே மேல் நாள் விளங்கனிக்குக் கன்றெறிந்தான் வெற்பு) திருவேங்கடமே முன்னொரு நாள் விளாவின் பழத்தைப் பெறுவதற்காகக் கன்றை எறிந்தவன் வாழும் திருமலை. விளாம்பழங்களைப் பெறவேண்டும் என்னும் சாபலத்தாலே கன்றை எறிதடியாக எறிந்த அவனுடைய மௌக்₃த்₄யச் செயல்போலேயிரா நின்றது விளங்கனிக்குக் கைநீட்டும் இக்குரங்கின் செயல் என்று கருத்து. க்ருஷ்ணாவதாரத்தில் சிறுபிள்ளைத்தனமாக இவன் செய்யும் செயல்களெல்லாம் அஸுர நிரஸனத்திலே முடிந்தன என்பது இதிஹாஸபுராண ப்ரஸித்₃த₄ம்; விளங்கனியைப் பெறவிரும்பிக் கன்றை எறிந்ததால் கன்றாய் வந்த வத்ஸாஸுரனும், விளவாய்நின்ற கபித்த₂ாஸுரனும் ஒரு சேர முடிந்துபோயினரன்றோ. கைக்குழந்தையாய்த் தொட்டிலில் கிடக்கும்போது, தாய்முலை வரவு தாழ்த்துச் சீறி உதைத்த சிறு குழந்தைத்தனத்தால், இவனை முடிப்பதற்கு அருகில் வண்டியிலே ஆவேஶித்து நின்ற ஶகடாஸுரன் முடிந்ததும் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. இவ்வண்ணமாகத் திருமலையிலேயுள்ள திர்யக்கு (விலங்கு)களின் செயல்கள்கூட அவனுடைய அழகிய சேஷ்டிதங்களுக்கு ஸ்மாரகமாய்நின்று நம்மை ஆழங்காற்படுத்துகின்றன என்று கருத்து. 68.

http://acharya.org

வெற்பு என்று—(என் மகளானவள்) ஏதேனும் ஒரு மலையைப்பற்றிப் பேச்சு வந்தாலும். வேங்கடம்—திருமலையைப் பற்றி. பாடும்—பாடுகின்றாள்; கற்பு என்று—பாதிவ்ரத்யத்துக்குத் தகுந்திருப்பதென்று. வியன் துழாய்—வியக்கத்தக்க திருத்துழாயை. கரு குழல் மேல்—(தனது) கரிய கூந்தலில். சூடும்—அணிந்து கொள்ளுகிறாள்; மல்—மல்லர்கள். பொன்ற—அழியும்படியாக. நீண்ட தோள்—நீண்ட திருத்தோள்களையுடைய. மால்—ஸர்வேஶ்வரன். கிடந்த—பள்ளிகொண்டிருக்கப்பெற்ற. நீள் கடல்—பரந்த திருப்பாற்கடலிலே. நீராடுவான்—தீர்த்தமாடுவதற்காக. பூண்ட நாள் எல்லாம்—விடிந்த விடிவுகள் தோறும். புகும்—புறப்படுகின்றாள்.

அவ:—(வெற்பென்று) ஆழ்வாரான அவஸ்தை போய் ஒரு பிராட்டி அவஸ்தையை பஜித்து அவளுடைய தஶையைத் தாயார் சொல்லுகிறாள்.

அவ:—இப்படிப்பட்ட திருவேங்கடமுடையானுடைய மௌக்த்யத்தை அநுபவித்துத்தாமான தன்மையழிந்து, ஒரு பிராட்டி தஶையை ப்ராப்தராய், அவளுடைய உக்தி வ்ருத்திகளைத் திருத்தாயாராக அநுவதித்துக்கொண்டு பேசுகிறார்.

---

69. அவ:— இப்படிப்பட்ட திருவேங்கடமுடையானுடைய அளவில் பிள்ளைமைச் செயல்களை அநுபவித்துத் தாமான தன்மை அழிந்து ஒரு நாயகியின் நிலையை அடைந்தவராய், அவளுடைய பேச்சையும் செயல்களையும் அவள் திருத்தாயார் பாசுரத்தாலே பேசுகிறார். முதலாழ்வார்கள் பாசுரங்களிலே இதுவொன்றே தாமான தன்மை அழிந்து பேசும் பேச்சு "கங்குலும் பகலும்" [திருவாய் 7-2] "திவளும் வெண்மதிபோல்" [பெரியதிரு 2-7] முதலான பிற்பட்ட ஆழ்வார்களின் திருத்தாயார் பாசுரங்களுக்கெல்லாம் வழிகாட்டியாயிருப்பது இப்பாசுரம்.

வ்யா:— (வெற்பென்று வேங்கடம் பாடும்) என் பெண்பிள்ளை ஏதேனும் ஒருமலையைப்பற்றி ப்ரஸக்தாநுப்ரஸக்தமாகப்

http://acharya.org

வ்யா:—(வெற்பித்யாதி) லோகயாத்ரையும் இவளுக்கு ப₄க₃வத்₃விஷயத்திலே; திருமலையொழிய வேறொரு மலையுமறியாள். (கருங்குழல்மேல் வியன்துழாய் கற்பென்று சூடும்) காட்டுப்பூச்சூடாள். "தொடுத்த துழாய்மலர் சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம்" என்கிறபடியே. விஸ்மயமான திருத்துழாயல்லது குழலில் வையாள். "கற்பு" என்று பாதி

உரை—ஏதேனுமொரு மலையைச் சொல்லப்புக்காளாகில். திருமலையை ப்ரீதிப்ரேரிதையாய்ப் பேசாநிற்கும்; ஏதேனுமொரு பூவைச் சூட நினைத்தாளாகில், விஸ்மயமான திருத்துழாய் குலமரியாதைக்குச் சேருவதொன்று என்று. "தொடுத்த துழாய் மலர் சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம்" என்கிறபடியே இருண்ட குழலின் மேலே ஸாத₃ரமாகச் சூடாநிற்கும்.

பேச்சு ஏற்பட்டாலும், அன்பினால் தூண்டப்பட்டுத் திருமலையையே பாடாநின்றாள். வேறு மலையை அறியாதவளாயிருந்தாள். "பெருமான் மலையோ திருவேங்கடம்" [திருவிருத்தம் 60] என்ற பராங்குசநாயகியைப்போலே. (கருங்குழல்மேல், கற்பென்று வியன் துழாய் சூடும்) ஏதேனும் ஒரு பூவைச் சூட நினைத்தாளாகிலும், "தொடுத்த துழாய்மலர்சூடிக் களைந்தன சூடுமித்தொண்டர்களோம்" [திருப்பல்லாண்டு 9] என்கிறபடியே நம் தொண்டக் குலவரம்புக்கும், நம் பாதிவ்ரத்யத்திற்கும் பொருந்துவது வியக்கத்தக்க இத்திருத்துழாயே என்று, அதையே தன் கறுத்த திருக்குழலின்மேலே ஆர்வத்துடன் சூட்டிக்கொள்ளுகிறாள். "தெய்வத் தண்ணந்துழாய்த் தாராயினும், தழையாயினும், தண்கொம்பதாயினும், கீழ் வேராயினும், நின்ற மண்ணாயினும் கொண்டு வீசுமினே" [திருவிருத்தம் 53] என்று பேசப்பட்ட பராங்குசநாயகியைப் போலே, திருத்துழாயையொழிய வேறொரு மணமிகு பூவைச் சூடமாட்டாளிவள். கற்பு—குலவரம்பு. இதைவிட, 'கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும், கொண்டானையல்லால் அறியாக்குலமகளின் பதிவிரதைத்தன்மையே கற்பு எனப்படுவதாகக் கொள்வது சுவைமிக்கது. இனி, விடியற்காலையில் நீராட நினைக்கும்போதெல்லாம், அவன் கிடந்த திருப்பாற்கடலிலேயே நீராட நினைக்கிறாள் என்கிறார் எஞ்சிய பகுதியாலே,— (மற்பொன்ற

http://acharya.org

வ்ரத்யம். (மற்பொன்றவித்யாதி) விரோதி₄நிரஸநத்துக்காக வளர்ந்த தோளையுடையனும். வ்யாமுக்₃த₄னானவன் கிடந்த நீள்கடலிலே விடிந்த நாளெல்லாம் புகாநின்றாள். திருப்பாற் கடலொழிய வேறொன்றில் குளித்தால் விடாய் கெடாதென்றிரா நின்றாள். இப்ரகரணத்தில் கீழும் மேலும் அந்யாபதே₃ஶ

மல்லவர்க்க₃ம் பொடிபடும்படி வளர்ந்த திருத்தோள்களை யுடைய ஸர்வேஶ்வரன் கண்வளர்ந்தருளின பரந்த திருப் பாற்கடலிலே நீராடுகைக்காக விடிந்த விடிவுகள்தோறும் புகாநிற்கும். வேறொரு மலையின் பேர் சொல்லுதல், நாறு பூச்சூடுதல், வெறொரு நீர்நிலைகளில் குளித்தல் செய்யாள். பாடுகை—சூடுகை முதலான லோகயாத்ரை யடங்கலும் இவளுக்கு ப₄க₃வத்₃ விஷயத்திலேயாயிருக்கிறபடி. மால் கிடந்த—வ்யாமுக்₃த₄னானவன் பள்ளிகொண்டருளின என் னவுமாம். இங்ஙனன்றிக்கே, கீழும் மேலும் அந்யாபதே₃ஶ

நீண்டதோள் மால் கிடந்த நீள் கடல் நீராடுவான்—பூண்டநாள் எல்லாம் புகும்) "மல்லாண்ட திண்டோள்" [திருப்பல்லாண்டு 1] என்கிறபடியே மல்லர்திரள் அழியும்படியாக நீண்ட திருத்தோள் களையுடைய திருமால் பள்ளிகொண்டருளிய பரந்த திருப்பாற் கடலிலே நீராடுகைக்காக, விடிந்த விடிவுகள்தோறும் புறப்படா நிற்கிறாள். திருப்பாற்கடலொழிய வேறொன்றில் நீராடினால் தாபம் ஆறாதென்றிருக்கிறாள். பாடுகை, சூடுகை, நீராடுகை முதலான லோகயாத்திரை முழுவதும் இவளுக்கு ப₄க₃வத்₃ விஷயத்திலே யாயிருக்கிறபடி. (பூண்ட நாள் எல்லாம் புகும்) "கு₄ஷ்யதே யஸ்ய நக₃ரே ரங்க₃யாத்ரா தி₃நே தி₃நே" [எவருடைய நகரத்தில் தினந்தோறும் ரங்கயாத்ராகோ₄ஷம் முழங்குகிறதோ]. என்று குலசேகரர் தினந்தோறும் திருவரங்கம் செல்லப் பாரிக்குமா போலே, இவள் விடிவுதோறும் திருப்பாற்கடல் செல்லப் பாரிக் கிறாள் போலும்! மால்—ஸர்வேஶ்வரன் என்றும், அடியாரிடம் மயங்கி நிற்பவன் என்றும் இருவகையாகப் பொருள்கொள்ளலாம். "பூண்டநாளெல்லாம்—ஸூர்யனுடைய தேரிலே குதிரை பூட்டின நாளெல்லாம் என்றபடியாய், 'விடிந்த விடிவுகள்தோறும்' என்று பொருள்பட்டது" என்பது தீபிகையுரை. இத்திருவந்தாதியில் வேறெங்கும் தாமான தன்மையொழிந்து பேசும் பாசுரமில்லாமலிருக்க,

http://acharya.org

மின்றிக்கேயிருக்க. இப்பாட்டொன்றும் இப்படி கொள்ளுகிற தென்னென்று நிர்வஹிப்பர்கள்:— 'அம்மலை இம்மலை என்று ஒன்றைச் சொல்லக்கடவிகோளிறே; ஆனபின்பு, திருமலையைப்பாடுங்கோள். (வியன் துழாயித்யாதி) ஒரு பூவைச் சூடக் கடவிகோளிறே; ஆனபின்பு, வகுத்தவன் உகக்கும் திருத்துழாயைச் சூடுங்கோள். (மற்பொன்றவித்யாதி) ப்ராதஸ்ஸ்நாநம் பண்ணக்கடவிகோளிறே; ஆனபின்பு. விரோதி,

மற்றிருக்க. இதொன்றும் இப்படி கொள்கிறதென்னென்று ப்ரோபதேசமாக நிர்வஹிப்பர்கள்; அப்போது, அம்மலை இம்மலை என்று ஏதேனுமொரு மலையைச் சொல்லப் பார்த்தீர்களாகில், திருமலையைப் பாடுங்கோள்; ஏதேனுமொரு பூச்சூட நினைத்தீர்களாகில், திருத்துழாயைச் சூடுங்கோள். ஏதேனுமொரு நீர்நிலைகளிலே புக்கு ப்ராத:ஸ்நாநம்

இப்பாசுரம் ஒன்று மாத்திரம் இப்படியிருப்பது விரூபமாயிருக்கிறதென்று கருதி, நம் பூர்வாசார்யர்களிலும் சிலர் இதைப் பரோபதேசபரமாக நிர்வஹிப்பர்களாம். அப்பொருளை இனி விவரிப்போம்.

அவ:— இப்படி பகவத்விஷயத்தைத் தாமனுபவித்தவர், இன்கனி தனியருந்தலாகாதென்னும் நியாயத்தாலே, உலகத்தாரையும் அதை அநுபவிக்கக் கூப்பிடுகிறார்.

வ்யா:— (வெற்பென்று வேங்கடம் பாடும்) உலகத்தீரே! 'கொச்சிமலை, குடகுமலை, கொல்லிமலை' என்றாற்போலே ஏதேனும் ஒரு மலையைப் பாடுவீர்களன்றோ! அப்படிப் பயனில்லாமல் ஒரு மலையைப் பாடாமல், பெரும்பயன் பெறலாம்படி திருமலையைப் பாடுங்கள்; (வியன் துழாய் கற்பென்று சூடும் கருங்குழல்மேல்) ஏதேனும் ஒரு பூவைச்சூட நினைப்பீர்களன்றோ; அப்போது 'இதுவே நம் ஸ்வரூபத்துக்குத்தக்கது' என்று வகுத்த ஸ்வாமியான அவன் உகக்கும் திருத்துழாயைக் கருங்குழலிலே சூடுங்கள். கண்ட பூவைச் சூடினால் ஒரு பயனுமில்லை; இதைச் சூடினால் ஸ்வரூபம் நிறம்பெறும். (மற்பொன்ற...புகும்) ஏதேனும் ஒரு நீர்நிலையிலே புகுந்து ப்ராத:ஸ்நானம் பண்ணவேண்டும் என்றிருந்தீர்களாகில், விரோதிநிரஸநத்தை இயல்வாகக் கொண்ட

நிரஸநஸீலனானவன் கிடந்த திருப்பாற்கடலிலே முழுகுங்கோள். 69.

70. புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து அருவி
உகுமதத்தால் கால்கழுவிக் கையால்—மிகுமதத்தேன்
விண்டமலர் கொண்டு விறல் வேங்கடவனையே
கண்டு வணங்கும் களிறு.

களிறு—(திருமலையிலுள்ள) யானையானது. புகு மதத்தால் வாய் பூசி—மத்தகத்தில்நின்றும், கன்னங்களில்நின்றும் வாயிலே புகுகின்ற மதஜலத்தாலே வாய்கொப்பளித்து, ஆசமனம் பண்ணி, கீழ் தாழ்ந்து அருவி உகுமதத்தால்—மேலிருந்து கீழ்வரையில் அருவிபோலே வந்து பெருகுகிற மத₃ஜலத்தாலே, கால் கழுவி—கால்களை சுத்தி செய்து கொண்டு. கையால்—துதிக்கையாலே, மிகு மதம் தேன்—மிகுந்த மதத்தை விளைக்கக்கூடிய தேனையுடையதும், விண்ட — மலர்ந்ததுமான, மலர்கொண்டு — புஷ்பத்தைக் கொண்டு. விறல் வேங்கடவனையே-பெருமிடுக்கனான திருமலையப்பனையே கண்டு வணங்கும்-ஸேவித்து வணங்குகின்றது.

பண்ணப்பார்த்தீர்களாகில், அவன் சாய்ந்தருளின கடலிலே நாடோறும் அவகா₃ஹிக்கப்பாருங்கோளென்று பொருளாகக் கடவது. கற்பென்று பாதிவ்ரத்யதர்மமென்றுமாம். 69.

வன் பள்ளிகொண்ட திருப்பாற்கடலிலே நீராடப்பாருங்கள். கிட்டவொண்ணாத திருப்பாற்கடலிலே நீராடச்சொல்லி ஆழ்வார் உபதேஶிப்பரோ? எனில், 'திருப்பாற்கடல்' என்றது ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄முள்ள நீர்நிலைகளுக்கு உபலக்ஷணமாய், பகவத்ஸம்பந்தமுள்ள நீர்நிலைகளிலே நீராடுங்கள் என்று கொள்வது. இவ்வருமையையும், 'பாடும்' 'சூடும்' 'புகும்' என்னும் வினைமுற்றுக்களை முன்னிலையாகக் கொள்ளவேண்டிய அருமையையும் நோக்கும்போது, தாய்ப் பாசுரமாகக்கொள்ளும் நிர்வாஹமே சிறந்ததெனவிளங்கும். 69.

http://acharya.org

அவ:—(புகுமதத்தால்) அநுகூலருடைய தே₃ஹயாத்ரை யெல்லாம் தன் ஸமாஶ்ரயணத்துக்கு உடலாகக் கொள்ளு மவனுடைய திருமலை என்கிறது.

வ்யா:—(புகுமதத்தாலித்யாதி) வாயிலே புகுகிற மத₃ ஜலத்தாலே வாய்கழுவி. (கீழித்யாதி) கீழே தாழ்ந்த அருவி போல உகாநின்ற மத₃ஜலத்தாலே கால்கழுவி. (கையித்

அவ— ஆகில், அவனை ஆஶ்ரயிக்கும்போது சிறிது யோக்₃யதை ஸம்பாதி₃க்க வேண்டாவோ? என்ன. 'அது வேண்டா. திர்யக்குக்களும் ஆஶ்ரயிக்கலாம்படி யிருப்பா னொருவன் என்கிறார்.

உரை—மஸ்தகஸ்த₂லம். க₃ண்ட₃ஸ்த₂லம் இவற்றினின் றும் பாய்ந்து வாயிலே புகுகிற மத₂ஜலத்தாலே வாய் கொப்பளித்து ஆசமனம்பண்ணி கீழே தாழ்ந்து அருவிகள் போலே வந்து விழுகிற மத ஜலத்காலே காலைக்கழுவி.

---

70. அவ:— முன் பாசுரத்திற் சொன்னபடி அவனை ஆஶ்ர யிப்பதாகில், அதற்குச் சில தகுதிகள் வேண்டாவோ? என்ன, "விலங்குகளும் தன்னை ஆஶ்ரயிக்கலாம்படியிருப்பவனாய், அவற்றி னுடைய தே₃ஹயாத்ரையெல்லாம் தன் ஸமாஶ்ரயணத்துக்கு உறுப் பாகக் கொள்ளுமவனாகையாலே தகுதி வேண்டா" என்கிறார்.

வ்யா:— (களிறு) திருமலையில் உள்ளதொரு விலங்கான யானையானது. (புகுமதத்தால் வாய்பூசி) மத்தகம், கன்னம் இவற்றினின்றும் பாய்ந்து, வாயிலே புகுகிற மத்₃ஜலத்தாலே வாய் கொப்பளித்து, ஆசமனம்பண்ணி. இதன் வாயில் தன்னடையே புகுந்து புறப்படுகிற மதநீரை, கொப்பளிக்கும் நீராகவும், ஆசம நீயமாகவும் கொள்கிறான் அவன் என்று கருத்து. (கீழ் தாழ்ந்து அருவி உகு மதத்தால் கால்கழுவி) தலையிலிருந்து கீழே இறங்கி, அருவிகள் போலே காலில் வந்து விழுகிற மதநீராலே கால்கழுவி. தன்னடையே காலில் விழுவதைப் பாத்₃யமாக அவன் கொள்கிறான் என்று கருத்து. ஆக, பரமபுருஷனை ஸேவிக்குமுன் கால்கழுவி, வாய்கொப்பளித்து, ஆசமனம் செய்துவரவேண்டும் என்னும் நியமம் இவ்விலங்கிற்குக் கோல்விழு[illegible]டாலே ஸித்₃தி₄த்து

http://acharya.org

யாதி) கையாலே மிக்க மதுவையுடைத்தாய், அலராநின்ற பூவைக்கொண்டு களிறானது விறல்வேங்கடவனையே கண்டு வணங்கும். விறல்வேங்கடவனென்று—திருமலையில் திர்யக்குக் களும் தன்னை வணங்கும்படி ஜ்ஞாநத்தைக்கொடுக்கவல்ல ஶக்தியையுடையவனென்கிறது. ஜ்ஞாநகார்யமான ஸமாஶ்ரயணத்தை தேஶவாஸத்தாலே பண்ணிவைக்கும். 70.

71. களிறு முகில்குத்தக் கையெடுத் தோடி
ஒளிறு மறுப்பொசிகை யாளி—பிளிறி
விழ, கொன்று நின்றதிரும் வேங்கடமே மேலுள்
சூழக்கன்று கொண்டெறிந்தான் குன்று.

துதிக்கையாலே மிக்க மதத்தைப் பண்ணக்கடவ தேனை யுடைத்தாய் அப்போதலர்ந்த செவ்விப்பூக்களைப் பொய்கை களிலே புக்குப் பறித்துக்கொண்டு ஶாஸ்த்ரவஶ்யமல்லாத திர்யக்குக்களுக்கும் ஸ்வவிஷயத்தில் ஜ்ஞாநப்ரேமங்களை விளைக்கவல்ல பெருமிடுக்கனை திருவேங்கடமேயவெந்தை யைக் கண்டு தலையார வணங்கி ஆஶ்ரயியாநிற்கும் அங்குண் டான ஆனையானது. மதமென்று கந்தமாய், மிக்க கந்தத் தையும் தேனையுமுடைய செவ்விப்பூக்களைக் கொண்டென் னவுமாம். 70.

விடுகிறது என்றபடி. (கையால் மிகுமதத்தேன் விண்ட மலர் கொண்டு) துதிக்கையாலே, மிக்க மதத்தை விளைக்கும் தேனை உடையதாய், அப்போதலர்ந்ததான செவ்விமலர்களைப் பொய்கை களிலே புகுந்து பறித்துக்கொண்டு; அன்றிக்கே, மதம் என்றது மணமாய், மிக்க மணத்தையும், தேனையுமுடைய செவ்விப்பூக்களைக் கொண்டு என்றும் பொருள் கொள்ளலாம். (விறல் வேங்கட வனையே) ஶாஸ்த்ர விதிநிஷேதங்களுக்கு வசப்படாத அறிவற்ற விலங்குகளுக்கும் தன் விஷயத்தில் அறிவையும் அன்பையும் விளைக்கவல்ல மஹாபலத்தையுடைய திருவேங்கடத்தானையே. (கண்டு வணங்கும்) கண்டு, தலையார வணங்கி ஆஶ்ரயிக்கின்றது. ஆக, ஜ்ஞானத்தினால் உண்டாகக் கூடிய ஆஶ்ரயணத்தை தேஶ வாஸத்தைக் கொண்டே எம்பெருமான் விலங்குகட்கும் விளைக் கிருனையாலே, இவனை ஆஶ்ரயிப்பதற்குத் தகுதிவேண்டுமோ என்று அஞ்சவேண்டா என்ருராயிற்று. 70.

http://acharya.org

களிறு—யானையானது. கை எடுத்து ஓடி—தனது துதிக் கையை எடுத்துக்கொண்டு வேகமாயோடி. முகில்—(மத யானைபோலெழுந்த) மேகங்களை. குத்த—(எதிரி யானை யென்று நினைத்துக்) குத்த. யாளி—இதைக்கண்ட யாளி யானது. ஒளிறு மருப்பு—அந்த யானையினுடைய ஒளி வீசும் கொம்பை. ஒசி—முறிக்கிற. ஒல்க—துதிக்கையை உடைத்தாய்க்கொண்டு. பிளிறி விழ கொன்று—அந்த யானை) வாய்விட்டலறிக்கொண்டு விழும்படி (அதனைக்) கொன்று. நின்று அதிரும்—அங்கேயே நின்றுகொண்டு பெருமுழக்கம் செய்யப்பெற்ற. வேங்கடமே-திருவேங்கடமே. மேல் நாள்—முன்பொருகாலத்தில். குழ கன்று கொண்டு—இளங்கன்றை (எறிதடியாகக்) கொண்டு. எறிந்தான்—(விளங்கனிமீது) எறிந்த பிரானுடைய குன்று-திருமலையாம்.

வ்யா:—(களிறித்யாதி) கையையெடுத்துக்கொண்டோடிக் களிறானது முகிலைக்குத்த. (ஒளிறித்யாதி) ஆனையினுடைய

அவ:—வ்ரோதி₄ நிரஸநஸ்வபா₄வனானவன் நின்றருளின திருமலை வ்ருத்தாந்தத்தை அநுப₄வித்து இனியராகிறார்.

உரை:— ஆனையானது தன் துதிக்கையை எடுத்துக் கொண்டு பெரிய வேக₃த்தோடே சென்று * மதயானை போலெழுந்த மாமுகிலை ப்ரதிக₃ஜமென்று பு₃த்₃தி₄பண்ணிக்

---

71. அவ:—விரோதி₄ நிரஸனத்தையே இயல்வாகக் கொண்ட வன் வாழும் திருமலையில் விலங்குகளும் அவ்வியல்வையே கொண்டி ருக்கின்றன என்று அநுப₄விக்கிறார்.

வ்யா:—(களிறு கையெடுத்து ஓடி முகில் குத்த) யானையானது. "மத யானை போல் எழுந்த மாமுகில்காள்" [நாச்-திரு8-9] என்றும். " கரியமாமுகிற் படலங்கள் கிடந்தவை முழங்கிடக் களிறென்று" [பெரிய திருமொழி1-2-10] என்றும் கூறுகிறபடியே மங்குல் தோய் சென்னி வடவேங்கடமலையிலே முழங்கிவரும் கரிய மேகத்தைத் தனக்கு எதிரியான மற்றொரு யானை என நினைத்து. தனது துதிக்கையைத் தூக்கிக்கொண்டு ஓடிச்சென்று குத்த. "கையெடுத்

http://acharya.org

வெண்மருப்பை முறியாநின்ற யாளி. கையெடுத்தோடியென்று யாளிக்காகச் சொல்லவுமாம். (பிளிறியித்யாதி) ஆனையானது பிளிறிக்கொண்டு விழும்படிக்கீடாகக் கொன்று சினத்தாலே நின்றதிராநின்ற திருமலை. (மேனாளித்யாதி) ஸஹஜமத்ருக்களை முடித்து விரோதி₄ போகப்பெற்றதென்று உகந்து நிற்குமவனுடைய திருமலையிறே. 'திருமலையில் பின்னை ஒன்றுக் கொன்று ப₃ாத₄கமாகுமோ?'என்னில். அக்₃நீஷோமீய ஹிம்ஸையோபாதியிறே அவற்றுக்கும். 71.

குத்த. இத்தைக் கண்ட யாளியானது—அந்த யானையினுடைய. வெளுத்த நிறத்தையுடைத்தான கொம்பை அநாயாஸேந முறியாநின்ற கையையுடைத்தாய்க்கொண்டு. அது—வாய்விட்டு அலறிக்கொண்டு முறிந்துவிழும்படி கொன்றுபோகட்டு, பின்னையும் சீற்றம் மாறாதபடியாலே இவ்விடந்தன்னிலே நின்று க்ஷுத்₃ரம்ருக₃ங்கள் மண்ணுண்ணும்படி க₃ர்ஜியாநிற்கும் வேங்கடமே முன்பொரு நாளிலே குழக்கன்றைக்கொண்டு விளங்கனி எறிந்தவனுடைய திருமலை. 71.

தோடி'' என்பதை மேலேயும் கூட்டிப் பொருள்கொள்ளலாம். (கையெடுத்து ஓடி ஒளிறு மருப்பு ஓசி கை யாளி) 'இந்த யானைக்கு இத்தனை மதமா' என்று சீறி, தன் துதிக்கையைத் தூக்கிக்கொண்டு ஓடி, அந்த யானையின் ஒளிவீசும் வெளுத்த தந்தத்தை வாழைத் தண்டை ஒடிப்பதுபோலே எளிதில் ஒடித்த துதிக்கையை உடைய யாளியானது. (பிளிறி விழக் கொன்று) கொம்பை ஒடித்ததுடன் நில்லாமல், அந்த யானை வாய்விட்டு அலறிக்கொண்டு சரிந்து விழும்படி அதைக்கொன்று. (நின்று அதிரும் வேங்கடமே) இதன் பின்னும் சீற்றம் தணியாமையாலே, அவ்விடத்திலேயே நின்று. மற்ற காட்டு மிருகங்களெல்லாம் இவ்வொலியைக் கேட்டு மயங்கி மண்ணில் விழும்படியாகப் பெருமுழக்கம் செய்யப்பெற்ற திருமலையே. (மேல் நாள் குழக்கன்று கொண்டெறிந்தான் குன்று) முன்பொருநாள் இளங்கன்றை எறிதடியாகக் கொண்டு விளங்கனி மீது எறிந்து கன்றாகவும், விளவாகவும் வந்த அசுரர் இருவரையும் அழித்தவன் வாழும் மலையாகும். தனக்கு இயல்வான எதிரிகளை

http://acharya.org

பெரிய வ்யா:-(ஓருருவனல்லை) "नित्यो नित्यानां" (நித்யோ நித்யாநாம்) என்கிறபடியே ஸர்வவிஸஜாதீயம் என்கிறதன்று உனக்கு வடிவு. (ஒளிஉருவம் நின்னுருவம்) "भक्तानां त्वं प्रकाशसे"

உரை: — உன் படி பார்த்தால், என்றும் ஒருபடிப்பட ஸ்வதந்த்ரமாயிருப்பதொரு ஸ்வரூபத்தை உடையையல்லை. "भक्तानां त्वं प्रकाशसे" (பக்தாநாம் த்வம் ப்ரகாஶஸே) என்கிற படியே உன்னை ஆஶ்ரிதரிட்ட வழக்காக்கி, அத்தாலே புகர்

வ்யா:— (ஓர் உருவனல்லை) உன் தன்மையைப் பார்த்தால், என்றும் ஒன்றுபோலேயிருக்கும் ஸ்வாதந்த்ரியமாகிற ஸ்வரூப நிருபகதர்மத்தை உடையவனல்லை. (ஓர் உருவன் அல்லை) ஒரு படிப்பட்டிருக்கும் ஸ்வரூபத்தை—ஸ்வரூபநிருபகதர்மத்தை-உடையவன் அல்லை. இங்கு ப்ரகரணானுகுணமாக ஸ்வாதந்த்ரியமே அந்த ஸ்வரூபமாகிறது. அன்றிக்கே, (ஓர் உருவன்) "நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந்" [கட 2-5-13] [நித்யரான பல சேதநர்களுக்கிடையே நித்யனான எந்த ஒரு சேதனன் இஷ்டங்களை அளித்துக் கொண்டிருக்கிறானோ] என்கிறபடியே, மற்ற எல்லாச் சேதனர்களைக் காட்டிலும் மேற்பட்டிருக்கும் ஒப்பற்ற ஒரே சேதனன் என்னும் பெருமை உன்னுடைய ஸ்வரூபநிருபகதர்மமன்று என்கிறதாகவுமாம். 'அப்படியாகில் என்னுடைய ஸ்வரூப நிருபகதர்மம் எது?' என்று எம்பெருமான் திருவுள்ளமாக, ஆஶ்ரிதபாரதந்த்ரியமே அது என்கிறார்.—(ஒளியுருவம் நின்னுருவம்) "ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம்| ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாஶஸே||" [ஜிதந்தே] [உன்னுடைய ஸ்வரூபம், திருமேனி, ஆயுதங்கள், இருப்பிடம் ஆகியவை உனக்காக ஏற்பட்டவையல்ல. அப்படியிருந்தபோதிலும் பெருமையுடையவனாகவும் இருக்கிறாய்; பக்தர்களுக்குப் பரதந்த்ரனாயிருந்துகொண்டே நீ பிரகாஶிக்கிறாய்] என்கிறபடியே உன்னை நீயே உன் ஸங்கல்பத்தாலே அடியாரிட்ட வழக்காக்கி, அதனாலே புகர்பெற்றுப் பிரகாஶிப்பவனாயிருக்கையே உனக்கு நிலையாயிருக்கும் ஸ்வரூபநிருபகதர்மம். ஸ்வாதந்த்ரியம், ஆஶ்ரிதபாரதந்த்ரியம் என்னும் இரண்டுமே அவனுக்கு ஸ்வரூப நிருபகதர்மமாயிருந்தபோதிலும், கிருபை தலையெடுக்கும்போது ஸ்வாதந்த்ரியம் தலைசாயுமாகையாலும், ஆஶ்ரிதபாரதந்த்ரியம்

http://acharya.org

வ்யா:— (குன்றித்யாதி) திருமலைக்குக் - கீழிழியில் குடிப் பழியாம் குறவருடைய பெண்கள். (கோல்வளைக் கையித்யாதி) குறவருடைய பெண்கள்கோல்வளையையுடைத்தான கையாலே சென்று விளையாடுகிற கழலானது போய். உஜ்ஜ்வலமான

உரை:—*இருப்பதியினின்று இழிகை குடிப்பழி என்று நினைத்துத் திருமலையொன்றையுமே உடையராய்க்கொண்டு வேங்கடத்தைப் பதியாக வாழக்கடவராய். ஸ்வேச்சையிலே சென்று விளையாடும் குறப்பெண்களுடைய தர்ஶநீயமான வளையை உடைத்தான கையானது, பசுமையாலும் சுற்றுடைமையாலும் ஒழுகுநீட்சியாலும் அழகிய மூங்கில் களைவென்று. அதுக்குமேலே உஜ்ஜ்வலனான சந்த்ரனை*

வ்யா:—(குன்று ஒன்றினாய குறமகளிர்) திருமலையினின்று கீழே இறங்குவதைத் தம் குடிக்குப் பழியாகக்கொண்டு திருமலையொன்றையுமே உடையவர்களாய் * வேங்கடத்தைப் பதியாக வாழக் கடவர்களான குறத்திகள். (சென்று விளையாடும் குறமகளிர்) மலையின்சிகரங்களிலேஇஷ்டப்படி சென்று விளையாடும் குறத்திகள். இவர்கள் சென்று விளையாடும் மலைச்சிகரங்களின் உயரத்தின் மிகுதியைக் காட்டுகிறார் மேலே,—(கோல்வளைக்கைத் தீங்கழை) அழகிய வளைகளை அணிந்த கைகளாலே ஊஞ்சலாடுகைக்காக வளைக்கப்பட்ட அழகிய மூங்கில்கள். கோல்—கோலம்; அழகு. (போய்) வளைவு நீங்கியபின் சந்திரமண்டலத்தளவும் சென்று. (வென்று) கிரஹண காலத்தில் சந்திரனைப் பிடிக்கவந்த ராஹுவைக் குத்தி வெற்றி கொண்டு. (விளங்கு மதிகோள் விடுக்கும் வேங்கடமே) பிரகாசியாநிற்கும் பூர்ண சந்திரனை கிரஹணத்தினின்று விடுவிக்கப்பெற்ற திருமலையே. இவ்வுயர்வுநவிற்சி(அதிஶயோக்தி)யாலே திருமலைச் சிகரங்களின் ஓக்கமும், அதில் வளர்ந்திருக்கும் மூங்கில்களின் உயர்த்தியும் உணர்த்தப்பட்டன. இது பெரியவாச்சான் பிள்ளையும் அப்பிள்ளையும் கடைசியாக உணர்த்திய பொருள். அப்பிள்ளை வேறு பலபடியாகக் கொண்ட பொருள்கள். இனி விவரிக்கப் படுகின்றன: (குன்றொன்றினாய சென்று விளையாடும் குறமகளிர்) பொருள் முன்போலவே. இனி, அவர்களுடைய வளைக்கையின் சிறப்பு பேசப்படுகிறது. (கோல் வளைக்கை) அழகிய வளையணிந்த கைகள். (தீங்கழை வென்று) பசுமையாலும், கணுக்களின்றியே

http://acharya.org

சந்த்₃ரனை ராஹுவானது க்₃ரஹிக்கவொண்ணுதென்று வென்று சந்த்₃ரனுக்கு அந்த வ்யஸநத்தைப்போக்கும் திருமலை பாமபத₃த்தில் தன்னோடொக்க (த்₃வி?)த்₃வாத₃ஶவார்ஷிக

க்₃ரஸிக்க ஒருப்படுகிற ராஹுவால் வந்த அவன் வ்யஸநத்தைப் போக்கும் திருமலையே—ஸர்வோத்தமராய், நிரந்தராநுப₄வத்தாலே நித்யயௌவந ஸ்வபா₄வரான நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியானவன் விரும்பி வர்த்திக்கும் ஸ்த₂ாநம். விளையாடும் குறமகளிர் கோல்வளைக்கையானது சென்று நல்ல மூங்கிற்செறிவைநீக்கிக் கிரணங்களை உடைய சந்த்₃ரன் இங்குப் புகுரப்பெறுமையாலுண்டான இடரை நீக்கும்—என்றுமாம். அன்றிக்கே, அவர்கள் வளையின் ஒளி சந்த்₃ரனொளி புகுரப்பெறாத மூங்கிலிருளை அறுத்து வெளி

உருண்டு நீண்டிருப்பதாலும் அழகிய மூங்கில்களை வென்று. (போய்) அதற்கும் மேலே சென்று. (விளங்கு மதி கோள் விடுக்கும் வேங்கடமே) விளங்காநிற்கும் பூர்ண சந்திரனைப் பிடிக்க வந்த ராஹுவைத் தம் ஒளியாலும், வளையொலியாலும் விரட்டி, சந்திரனைகிரஹணத்தினின்று விடுவிக்கப்பெற்றதிருமலையே. இவ்வுயர்வு நவிற்சியால் குறமகளிருடைய வளைக்கையின் சிறப்பு பேசப்பட்டது. இனி, உயர்வு நவிற்சியல்லாததொரு பொருள்: (குன்றூன்றிய விளையாடும் குறமகளிர் கோல்வளைக்கை) பொருள் முன்போல். (சென்று) மூங்கிற் புதரிருக்குமிடம் சென்று. (தீங்கழை போய் வென்று) சந்திரகிரணம் உட்புகமுடியாதபடி மூடிக் கொண்டிருக்கும் நல்ல மூங்கிலின் செறிவைநீக்கி. (விளங்கு மதி கோள் விடுக்கும் வேங்கடமே) கிரணங்களால் பிரகாசிக்கும் சந்திரன அக்கிரணங்களால் திருமலையில் புகப்பெறுமையால் உண்டான துன்பத்தை நீக்கும். இத்தால் திருமலையில் வளரும் மூங்கிற் புதர்களின் செறிவைக் கூறுவதனமூலம் திருமலையின நில வளம் உணர்த்தப்பட்டது மற்றுமொரு உயர்வு நவிற்சிப்பொருள்: (குன்றூன்றிய—விளையாடும்—குறமகளிர் கோல் வளைக்கை) பொருள் முன்போல். (தீங்கழை போய் வென்று) சந்திரனுடைய கிரணமும் நுழையப் பெறாத அழகிய மூங்கிற் புதரையும் தம் வளையின் ஒளியாலே இருளறுத்து வெட்ட வெளிச்சமாக்கி வெற்றி கொண்டு. (சென்று) அப்புதரை ஊடறுத்துக்கொண்டு சந்திர

ரான நித்யஸூரிகளுக்கு ஶேஷியானவனிடம். "தீங்கழை" என்று இவர்கள் ஊஞ்சலாடுகைக்குப் பிடித்து விளையாடும் மூங்கிலாகவுமாம். 72.

யாக்கிச் சந்த்ரன். மறுவையும் போக்கும்—என்றுமாம். அங்ஙனுமன்றிக்கே. குறமகளிர் கோல்வளைக்கையாலே ஊஞ்சலாடுகைக்காக வளைத்துவிட்ட மூங்கிலானது போய் விளங்குமதி கோள்விடுக்கும்—என்றுமாம். 72.

மண்டலத்தளவும் சென்று. (விளங்கு மதி கோள் விடுக்கும் வேங்கடமே) நன்கு புலப்படும்—சந்திரனின் மறுவாகிற களங்கத்தையும் தம் ஒளியாலே போக்கப்பெற்ற திருமலையே. இவ்வுயர்வு நவிற்சியால் குறமகளிருடைய கைவளையொளிச் சிறப்பு பேசப்பட்டது. இவ்வளவும், அப்பிள்ளை விவரித்த பொருள்கள். இனி, பெரியவாச்சான்பிள்ளை "தீங்கழை" என்று...மூங்கிலாகவுமாம்—என்று இரண்டாம் பொருளில் "தீங்கழை" என்பதைப் பாடபேதமாகக் காட்டுகையாலே, முதற்பொருளில் அவர்க்குத் தீங்கழை என்று பாடமன்று; "தீங்கழல்" என்பதே அவர் கொண்ட முதல் பாடமாகக் கடவது. தீங்கழலுக்கு 'விளையாடும்' என்று விஶேஷணமிட்டிருப்பதும் இப்பொருளிலேயே பொருந்தும். [இதை அறியாமல் "தீங்களை" என்று இரண்டாம் பாடங்கொண்டு, தீங்கழை மூங்கில் என்னுதல் பிழை" என்றெழுதினர் அரும்பதவுரைகாரர்] இனி, பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம்பற்றிய இம் முதற்பொருளின்படி பொருளை விவரிப்போம். (குற மகளிர் கோல்வளைக்கை சென்று விளையாடும் தீங்கழல்) குறவருடைய பெண்கள் கோல்வளையையுடைய தம் கைகளாலே சென்று விளையாடுகிற அழகிய கழற்கொடியானது; கழல்–கழற்கொடி. பெண்கள் கழல்களை உயரவெறித்து விளையாடுவது வழக்கமன்றோ; அது சந்திரமண்டலத்தளவும் சென்றது என்கிறார் மேலே.—(போய்) சந்திரமண்டலத்தளவும் சென்று. (வென்று) ராஹுவின்மீது அடித்து அவனை வென்று. (விளங்கு மதி கோள் விடுக்கும் வேங்கடமே) பூர்ணசந்திரனின் கிரஹணத்துன்பத்தைப் போக்கப்பெற்ற திருமலையே. உயர்வு நவிற்சியான இப்பொருளிலும் திருமலையின் உயர்த்தியும், அங்குள்ள குறப்பெண்களின் வலிமையும் உணர்த்தப்படுகிறது. 'இவ்வளவு உயரமான இடத்தில் எழுந்தருளியிருப்பவன் தான் யார்' எனில்: (மேலை இளங்குமரர் கோமானிடம்) எல்லாவுலகிற்கும் மேலான

http://acharya.org

73. இடம்வலமேழ் பூண்ட இரவித் தேரோட்டி
வடமுக வேங்கடத்து மன்னும்—குடநயந்த
கூத்தனாய் நின்றான் குரைகழலே கூறுவதே
நாத்தனா லுள்ள நலம்.

இடம் வலம்–இடப்புறமும், வலப்புறமும். ஏழ் பூண்ட–ஏழு குதிரைகளைப் பூண்ட. இரவி தேர்—ஸூர்யனுடைய தேரை. ஓட்டி—(அந்தர்யாமியாயிருந்துகொண்டு) நடத்துகிறவனும். வட முகம் வேங்கடத்து மன்னும்—வடதிசையில் உள்ள வேங்கடத்தில் நித்யவாஸம் பண்ணுமவனும். குடம் நயத்த கூத்தன் ஆய் நின்றான்—ஆசையோடு குடக்கூத்தாடின கண்ணபிரானாய் அவதரித்தவனுமான பெருமானுடைய. குரை கழல் கூறுவதே—ஆபரண ஒலி பொருந்திய திருவடிகளைத் துதிப்பதே. நா தன்னால் உள்ள நலம்—நாவினால் கொள்ளக்கூடிய பயன்.

அவ:— திருமலையிலே நின்றருளின மநோஹாரி சேஷ்டிதங்களையுடையனானவன் திருவடிகளை ஏத்துகையே நாவால் கொள்ளும் ப்ரயோஜநம் என்கிறார்.

பரமபதத்தில் எப்போதும் எம்பெருமானை அனுபவிப்பதால் அவனைப்போலே இருபத்துநான்கு வயஸ்ஸு நிறைந்தவர்களாகவேயிருக்கும் நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியானவன் வாழும் இடமன்றோ இது; இது இத்தனை உயரமாயிருப்பதில் வியப்பில்லை என்று கருத்து. மேலை—எல்லாவுலகிற்கும் மேலான பரமபதத்திலே என்றபடி; அன்றிக்கே, ஜீவர்கள் அனைவரிலும் மேம்பட்ட இளங்குமரர் என்று நித்யஸூரிகளுக்கு விசேஷணமாகவுமாம். ஆக, அயர்வறும் அமரர்களதிபதியைத் திருமலையிலே கண்டு களிக்கலாம் என்றாராயிற்று. 72.

73. அவ:—திருமலையிலே நின்றருளியவனாய், நெஞ்சையீர்க்கும் செயல்களையுடையவனான பெருமானுடைய திருவடிகளைத் துதிக்கையே நாப்படைத்த பயனாகும் என்கிறார்.

வ்யா:— (இடம் வலம் ஏழ் பூண்ட இரவித்தேர் ஓட்டி) இடப்புறத்திலும், வலப்புறத்திலுமாக ஏழு குதிரைகள் பூட்டப்பெற்ற

http://acharya.org

வ்யா:— (இடமித்யாதி) இடத்திலும் வலத்திலுமாக ஏழு குதிரை பூண்ட ஆதித்யனுடைய தேரை ஓட்டி; ஏழ் பூண்ட ஆதித்ய ரதத்தை மஹா மேருவுக்கு வலமே இடமாக-மார்க்கமாக ஓட்டி என்றுமாம். இரவியினுடைய தேரை பாரத ஸமரத்திலே நடத்தி என்றுமாம்.

உரை:-மேருவுக்கு இடமாயும் வலமாயும் ஸஞ்சரிக்கக்கடவதாய், ஏழு நாமத்தை உடைத்தாயிருப்பதாய், ஏழுகுதிரை பூண்ட ஆதித்யரதத்தை தகந்தர்யாமியாய்கொண்டுஓட்டி,

---

ஸூர்ய ரதத்தை (ஸூர்யனுக்கு அந்தர்யாமியாயிருந்து கொண்டு) ஓட்டி. (இடம் வலம் ஏழ்) மேருவுக்கு இடப்புறத்திலும் வலப்புறத்திலும் ஸஞ்சரிக்கும் ஏழு நாமத்தையுடைய ஏழு குதிரைகள் என்றுமாம். (ஏழ் பூண்ட இரவித்தேர் இடம் வலம் ஓட்டி) என்று அந்வயிக்கவுமாம. "ஸப்த யுஞ்ஜந்தி ரதமேகசக்ரம்" [ஒரு சக்கரத்தையுடைய தேரை ஏழு குதிரைகள் இழுக்கின்றன] என்று வேதத்திலும்.

"ஹயாஶ்ச ஸப்த சந்தாம்ஸி
தேஷாம் நாமாநி மே ஶ்ருணு।
காயத்ரீ ச ப்ருஹத்யுஷ்ணிக்
ஜகதீ த்ரிஷ்டுபேவ ச ||
அநுஷ்டுப் பங்க்திரித்யுக்தா:
சந்தாம்ஸி ஹரயோ ரவே: ||"

[ஸூர்ய ரதத்தின் ஏழு குதிரைகள் ஏழு சந்தஸ்ஸுக்களேயாகும்; அவற்றின் பெயர்களைக் கூறுகிறேன் கேளாய்:— (1) காயத்ரீ, (2)ப்ருஹதீ. (3)உஷ்ணிக், (4)ஜகதீ, (5)த்ரிஷ்டுப், (6)அநுஷ்டுப், (7) பங்க்தி என்று கூறப்படும் ஏழு சந்தஸ்ஸுகளே ஸூர்யனின் ஏழு குதிரைகளாகும்.] என்று உபப்ரும்ஹணங்களிலும், "காரார் புரவி ஏழ் பூண்ட தனியாழித் தேரார் நிறைக்கதிரோன்" என்று சிறிய திருமடலிலும் கூறப்பட்டது இங்கு அநுஸந்திக்கத்தக்கது. அர்ஜுனனிடமிருந்த இரவித்தேரை மஹாபாரத யுத்தத்திலே கண்ணனாயிருந்து நடத்தியதைக் கூறுவதாகவும் கொள்ளலாம். (ஓட்டி) நடத்தி; வினையெச்சம்; தேரோட்டி என்று தேரை ஓட்டியவன் என்று பெயர்ச் சொல்லாகவுமாம்.

http://acharya.org

(வடமுகவித்யாதி) வடக்கில் தி$_3$க்கிலே உண்டான திருமலையிலே நித்யவாஸம் பண்ணுகிற, (குடநயந்தவித்யாதி) குடமாடி நின்றவனுடைய ஆப$_4$ரணவொலியையுடைத்தான திருவடிகளைக்கூறுகை நாவால் படைக்கும் ஸம்பத்து. குடக்கூத்தாடின இளைப்பாறத் திருமலையிலே வந்து நின்றான் போலே. 73.

74. நலமே வலிதுகொலோ நஞ்சூட்டு வன்பேய்
நிலமே புரண்டுபோய் வீழ — சலமேதான்
வெங்கொங்கை யுண்டானை மீட்டாய்ச்சி யூட்டுவான்
தன்கொங்கை வாய்வைத்தாள் சார்ந்து.

வடக்குதி$_3$க்கில் ப்ரதா$_4$நமாயிருந்துள்ள திருமலையிலே நித்யவாஸம் பண்ணாநின்றானுமாய் அத்யபி நிவிஷ்டனாய்க் கொண்டு குடமெடுத்தாடுகிற மனோஹாரிசேஷ்டிதத்தை உடையனாய் நின்றவனுடைய ஆப$_4$ரணத்$_4$வனியை உடைத்தான திருவடிகளை ஏத்துகையே நாவால் கொள்ளும் ப்ரயோஜனம். 73.

ஏழ்பூண்ட இரவித்தேரை மஹாமேருவுக்கு வலமே இடமாக — வழியாக ஓட்டி என்றும் பொருள் கொள்ளலாம். இடம் — வழி. (வடமுகவேங்கடத்து மன்னும்) வடக்கு திக்கிற்கு முக்$_2$யஸ்தா$_2$நமாயிருக்கும் திருவேங்கடமலையிலே நித்யவாஸம் செய்கின்ற. முக$_2$ ஶப்$_3$த$_3$ம் 'முக்$_2$யம்' என்னும் பொருளை உடையது (குடம் நயந்த கூத்தனாய் நின்றான்) மிக விருப்பத்துடன் குடத்தைத் தலையில் எடுத்தேறவிட்டுக்கொண்டு கூத்தாடுகின்ற நெஞ்சை ஈர்க்கும் செயலை உடையவனாய் நின்றவனுடைய. (நின்றான்) கண்ணனாயிருந்து குடக்கூத்தாடிய களைப்புத்தீர திருமலையிலே வந்து நின்றான் போலும்! (குறைகழலே கூறுவதே நாத்தன்னால் உள்ள நலம்) ஆப$_4$ரணவொலியையுடைய திருவடிகளைத் துதிப்பதே நாப்படைத்த நற்பயனாகும். 73.

சலமே—வஞ்சனையாகவே, நஞ்சு—விஷத்தை. ஊட்டு—உண்பிக்க வந்த. வன்பேய்—கொடிய பூதனையானவள். நிலமே—பூமியிலே. புரண்டு போய் வீழ—(பிணமாய்) போய் சரிந்து விழும்படியாக. தான் சலமே—தானும் வஞ்சனையாகவே. வெம் கொங்கை—(அவளது) வெம்மைமிக்க முலையை. உண்டானை—அமுது செய்த கண்ணபிரானை. ஆய்ச்சி—யசோதையானவள். மீட்டு—(அப் பூதனையிடத்தில் நின்றும்) மீட்டு. ஊட்டுவான்—(தனது முலைப்பாலை) உண்பிப்பதற்காக. சார்ந்து—அணுகிச் சென்று. தன் கொங்கை—தனது முலையை. வாய் வைத்தாள்—அவனது வாயிலே உண்ணக் கொடுத்தாள்; நலமே வலிதுகொல்—இந்தப் பரிவு மிகவும் வலிது போலும்!

வ்யா:—(நலமே வலிது கொல்) ஸ்த்ரீத்வப்ரயுக்தமான அச்சத்திற்காட்டில் ஸ்நேஹமே வலிதாகாதே! (சலமே தான் நஞ்சூட்டு வன்பேய்) தாய்வேஷத்தைக்கொண்டு நஞ்சூட்டுவதாக வந்த வலிய பேயானது. (நிலமே புரண்டு போய் வீழ)

அவ:— அவன் பக்கல் ஸ்நேஹமுடையாரில் யசோதைப் பிராட்டிகளை பரிவரில்லை கிடீர்! என்கிறார்.

உரை:— பேய்வடிவை மறைத்துத் தாய்வடிவுகொண்டு வருகையாகிற க்ருத்ரிமத்தாலே விஷத்தை புஜிப்பிப்பதாக ஒருப்பட்ட கடினசித்தையான பூதனையானவள் பூமியிலே பிணமாய் மறிந்துபோய் விழும்படியாக் வெவ்விய

74 அவ:— அவனிடம் அன்புடையவர்களில் யசோதைப் பிராட்டியைப்போலே பரிவுடையாரில்லை என்கிறார்.

வ்யா:— (சலமேதான் நஞ்சூட்டு வன்பேய்) பேய்வடிவை மறைத்துத் தாய்வடிவுகொண்டு வருகையாகிற வஞ்சனையாலே விஷத்தை முலைப்பாலில் கலந்து கண்ணனுக்கு ஊட்டுவதற்கு முயன்ற வலிய நெஞ்சத்தை உடைய பூதனையானவள். (நிலமே புரண்டுபோய் வீழ) கண்ணனை நிலத்தில் வீழ்த்த வேண்டுமென

http://acharya.org

நிலத்திலே புரண்டு விழும்படிக்கீடாக. (வெங்கொங்கை யித்யாதி) விஷமுலையுண்டதுக்குப் பரிஹாரமாக அம்ருதத்தை யுடைத்தான தன் கொங்கையைக்கால்நடை தந்து சென்று

முலையை அமுதுசெய்தவனை அவள் பக்கலினின்றும் மீட்டு. யசோதைப் பிராட்டியானவள் விஷத்துக்கு ப்ரத்யௌஷத₄மான அம்ருதத்தை பு₄ஜிப்பிப்பதாக—கேட்ட இடத்திலே மோஹித்து விழாதே அவ்வளவும் கால்நடைதந்து சென்று கிட்டித் தன்னுடைய முலையை அவன் திருப்பவளத்திலே

வந்தவள், பிணமாக அந்த நிலத்திலேயே தான் புரண்டுவிழும் படியாக. (வெங்கொங்கை உண்டானை) விஷங்கலந்ததாகையாலே வெம்மைமிக்க முலையை உண்டவனை. (சலமே தான் உண்டானை) என்றும் கூட்டிப்பொருள் கொள்ளலாம்; அவள் பேயாயிருந்தும் தாய்வடிவுகொண்டு வந்தாற்போலே, இவனும் வேற்றுமுலையென வெறுக்காதவனாய், தாய்முலைபோலே பா₄வித்துப் பரமபோ₄க்₃யமாக "விடப்பால் அமுதா அமுது செய்திட்ட மாயன்" [திருவாய் 1-5-9] "பெற்றதாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலையூடு உயிரை வற்ற வாங்கி உண்டவாயான்" [பெரியதிரு 1-3-1] என்கிறபடியே முலைப்பாலோடு அவளுடைய உயிரையும் வஞ்சித்து உண்டான் என்றபடி. "பொய்யர்க்கே பொய்யனாகும் புட்கொடியுடைய கோமான்" [திருமாலை 15] என்றாரன்றோ தொண்டரடிப் பொடிகள். (மீட்டு) அவளுடைய பிடியிலிருந்து மீட்டு. மிகவும் பயந்த இடைச்சியான யசோதை ப₄யங்கரவுருவை யுடைய பூதனையின் உடம்பில் அவளுடைய பிடியில் சிக்கி யிருந்த கண்ணனை விடுவிக்கவல்ல வலிமையுடையவளாவதே! என்று ஆச்சர்யப்படுகிறார். (ஊட்டுவான் தன் கொங்கை வாய் வைத்தாள்) விஷமுலை உண்டதுக்குப் பரிஹாரமாக மருந்தும் அமுதமுமான தன் முலைப்பாலை ஊட்டுவதற்காகக் கண்ணனுடைய விஷப்பாலுண்ட வாயிலே தன் முலையை வைத்தாள். இப்பிள்ளையால் முலையுண்ணப்பட்ட பேய் பிணமாகப் புரண்டு விழுந்திருப் பதைப் பார்த்தபின்னும் அஞ்சாதே தாய் முலைகொடுப்பதே! என்று ஆச்சர்யப்படுகிறார். (சார்ந்து) கேட்ட இடத்திலே மயங்கி விழவேண்டியிருக்க அப்பேய்ப் பிணமிருக்குமிடம் வரையில் நடந்து செல்லவல்லவளாவதே! அதுக்குமேல் அப்பேயைக் கண்ட பின்பும், அவள் பிணமாய்க் கிடப்பதைப் பார்த்த பின்பும் அவன்

http://acharya.org

அவன் வாயிலே வைத்தாள். (நலமே வலிதுகொல்) அச்சமும் ஸ்நேஹமுங்கூடினால் ஸ்நேஹமே வலிதாகாதே! 74.

75. சார்ந்தகடு தேய்ப்பத் தடாவியகோட் டுச்சிவாய்
ஊர்ந்தியங்கும் வெண்மதியி னொண்முயலை—சேர்ந்து
சினவேங்கை பார்க்கும் திருமலையே ஆயன்
புனவேங்கை நாறும் பொருப்பு.

கொடுத்தாள். ஆனபின்பு, 'நம்மையிழக்கவிரில் செய்வதென் என்று பயப்பட்டு மீளுகைக்கு உடலான அறிவிற் காட்டிலும் தன்னைப்பேணாதே அவனைப் பேணுகைக்கு உறுப்பான ப்ரேமமே வலிதாகாதே! ஒருத்தியுடைய ஸ்நேஹமிருக்கும்படியே! என்று வித்தகராகிறார். 74.

பிடிப்பிலிருந்து இவனை விடுவித்துத் தான் முலைகொடுக்கவும் வல்லவளாவதே! என்று ஆஸ்சர்யப்படுகிறார்.

"என்றொருவர் மெய்யென்பர்? ஏழுலகுண்டு ஆலிலையில்
முன் ஒருவனாய முகில்வண்ணா!—நின்னுருகிப்
பேய்த்தாய் முலைதந்தாள் பேர்ந்திலளால்! பேரமர்க்கண்
ஆய்த்தாய் முலைதந்தவாறு!"

என்று பொய்கையாழ்வாரும் இப்பரிவிலே ஆச்சரியப்பட்டாரன்றோ; இப்படி பயப்படாதே பரிவு காட்டியவள்தான் யாரென்னில்: (ஆய்ச்சி) இடைக்குலத்திலே பெண்ணாய்ப் பிறந்து பயத்தையே இயல்வாகக்கொண்ட ஒருத்தியன்றோ இச்செயலைச் செய்தாள்! என்கிறார். (நலமே வலிதுகொல்) பெண்மைக்குரிய பயத்தைக்காட்டிலும், தாய்க்குரிய பரிவே வலிமை மிக்கதுபோலும்! நம் உயிர் போய்விட்டால் என் செய்வது' என்று பயப்பட்டு மீளச் செய்யும் அறிவைக்காட்டிலும், தன்னை நோக்காமல் குழந்தையையே நோக்கச் செய்யும் அன்பே வலிதுபோலும்! என்று ஆஸ்சர்யப்படுகிறார். 'என்றொருவர் மெய்யென்பர்?' என்று பொய்கையாழ்வார் அருளியபடியே யசோதைக்கே உரியதான் நம்பமுடியாததான் ஆஸ்சர்யமன்றோ அவளுக்குக் கண்ணனிடமுள்ள இப்பரிவு. 74.

http://acharya.org

தடாவிய—பரப்பையுடைத்தான. கோடு—மலைச் சிகரங்களினுடைய, உச்சி வாய் —உச்சியிலே. அகடு தேய்ப்ப—கீழ்வயிறு உராயும்படியாக. சார்ந்து—அணுகி. ஊர்ந்து இயங்கும்—மெல்ல [illegible]. வெண் மதியின்—வெளுத்த சந்திரனின் [illegible] முயலை—அழகிய முயலை. சினம் வேங்கை [illegible] வேங்கைப் புலி யான்து. சேர்ந்து—அணுகி. பார்க்கும்—(அதைப் பிடித்துக் கொள்ளவும் [illegible]) எப்போதும் பார்த்தபடியே [illegible]. திருமலையே—திருமலைதான். ஆயன்—கண்ணன் [illegible], புனம் வேங்கை நாறும்—தன்னிலத்தில் [illegible] வேங்கை மரங்கள் மணம் கமழப் [illegible]. [illegible]—மலை.

வ்யா:—(சார்ந்த [illegible] கோட்டுச்சிவாய் சார்ந்து அகடு தேய்ப்ப) பரந்த [illegible] கிட்டிக் கீழ்வயிறு தேய்ப்ப (ஊர்ந்தியங்கும் வெண்மதியின் வெளுத்த முயலை) போக்கும்

அவ:— [illegible] ஸ்வபாவனான கிருஷ்ணன் [illegible] திருமலை விருத்தாந்தத்தைத் அநுபவிக்கிறார்.

உரை:— [illegible] பக்கங்களினுடைய உச்சியிலே [illegible] கீழ்ப்படியாக்கிட்டி அங் குத்தை [illegible] மெள்ள ஸஞ்சரிக்கக்கடவது. [illegible] வேங்கையாலே சாணியில்

75. அவ: [illegible] இவ்வாக உடை [illegible] திருமலையின் சிறப்பை அநுபவிக்கிறார்.

வ்யா: (தட [illegible] கோட்டுச்சிவாய் சார்ந்து அகடுதேய்ப்ப) பரப்பை [illegible] உச்சியிட்டத்திலே அணுகித் தன் அடிவயிறு [illegible]. (ஊர்ந்து இயங்கும் வெண்மதி யின்) [illegible] இனிமையிலே ஈடுபட்டு மெள்ள மெள்ள [illegible] அடிவயிறு தேய்கையாலே [illegible] ஒளிபெற்று வெளுத்த சந்திர

http://acharya.org

தையாலே மெள்ள ஸஞ்சரியாநின்ற மிகஉரத்திலே தேய்கை யாலே ஒளியையுடைத்தான சந்த்ரன்பக்கல் முயலை (சேர்ந்தித் யாதி) கிட்டிச் சினத்தாலே புலி படப்பார்க்கும் திருமலை. (ஆயனித்யாதி) இடையர்க்குக்காட்டில் மரங்களுடைய நாற்றம் சால ப்ரியமிறே. 75.

இட்டாற்போலே ஒளியையுடையனாயிருக்கிற சந்த்ரன் பக்கலுண்டான அழகிய முயலை. கோபத்தையுடைத்தான வேங்கைப் புலியானது கிட்டித் தனக்கு ஆமிஷமான முயலாகக் கருதி, பிடித்துக்கொள்ளுதல் விட்டுப் போதல் செய்யமாட்டாமல் எப்போதும் பார்த்தபடியே நிற்கும் திருமலையே—க்ருஷ்ணன் என்னதென்று அபிமானிக்த ஸ்தலமாய். ஜாத்யுசிதமான தன்னிலத்தில் வேங்கைகள் நிரந்தரமாகப் பரிமளிக்கும் பர்வதம். 75.

னிடம் உள்ள. இத்தால் திருமலைச்சிகரத்தின் உயர்த்தியும், இனிமை யும் உணர்த்தப்பட்டதாயிற்று. அதிசயோக்தி (உயர்வு நவிற்சி) என்னும் அலங்காரம். (வெண்மதியின் ஒண் முயலைச் சேர்ந்து) முற்கூறிய சந்திரனிலிருக்கும் ஒளிபொருந்திய முயலை அணுகி: முயல் வடிவிலிருக்கும் களங்கத்தை நெருங்கி, அதை முயலென்றே மயங்கி என்றபடி. (சின வேங்கை பார்க்கும் திருமலையே) கோபத்தை உடைய வேங்கைப் புலி தனக்கு முயல் மாம்ஸம் கிடைத்தது என்று நாக்கில் ஜலம் சொட்டப் பார்க்கும். (பார்க்கும்) உண்மை முயலல்லாமையாலும், எட்டமுடியாமையாலும் பிடித்துப்போக முடியாது. மாம்ஸத்திலுள்ள ஆசையினாலே விட்டுப்போகவும் இயலாது; ஆகையாலே அந்த முயலைப் பார்த்தபடியே நிற்கிறது. (சின வேங்கை பார்க்கும்) பார்த்த பார்வையிலேயே அம்முயல் பட்டுப்போகும்படியாகப் பார்க்கும் என்றும் கொள்ளலாம். (திருமலையே ஆயன் புனவேங்கை நாறும் பொருப்பு) இத்தகைய செயல் நிகழும் திருமலையே—முற்கூறிய பூதநாஸம்ஹாரகனை கிருஷ்ணனாலே தன்னுடையது என்று அபிமானிக்கப் பெற்றதாய், தன் நிலத்தில் வேங்கை மரங்கள் எப்போதும் மணம் வீசும் மலை யாகும். காடுவாழ்சாதியான இடையர்க்குக்காட்டில் மரங்களுடைய மணம் மிகவும் இனிதாயிருக்குமாகையாலே, கண்ணன் இவ்விடத் திலே திருமலையப்பனாக நித்யவாஸம் செய்கிறான் என்று கருத்து. 75.

http://acharya.org

76. பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும் நீர்வேண்டா—விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர்தூய்க் கை
அஃகாவே தீவினைக ளாய்ந்து. [தொழுதால்

நீர்—(ஒ உலகத்தவர்களே!) நீங்கள், பொருப்பு இடையே—மலைகளின் நடுவே. நின்றும்—நின்று கொண்டும், புனல்—நீர்நிலைகளிலே, குளித்தும்—முழுகிக்கொண்டும், ஐந்து நெருப்பு இடையே—பஞ்சாக்₃நி நடுவிலே, நிற்கவும்—நின்றுகொண்டும் தவஞ்செய்ய. வேண்டா—வேண்டியதில்லை; விருப்பு உடைய—(எல்லாராலும்) விரும்பத்தக்கதாயிருக்கின்ற. வெஃகா—திருவெஃகாவில், சேர்ந்தானை—வந்து கண் வளர்ந்தருளும் பெருமானை. மெய்—ஒரு பயன் கருதாமல். மலர் தூய் கை தொழுதால்—புஷ்பங்களைப் பணிமாறி வணங்கப் பெற்றால். தீ வினைகள்—பாவங்களெல்லாம், ஆய்ந்து—(நமக்கு இங்கு இடமில்லை என்று) ஆராய்ந்து, அறிந்து, அஃகாவே—சுருங்கிப்போகமாட்டாவோ? (அகன்றோடிப் போய்விடுமென்கை)

அவ:—(பொருப்பிடை) ஸர்வேச்'வரன் ஸம்ஸாரத்திலே புகுந்து தன்னுடம்பைப் பேணாதே நம்கார்யம் செய்யாநின்றான். நீங்கள் உடம்பை ஒறுக்கவேண்டா—என்கிறார்.

அவ:—உடம்பை ஒறுத்து து₃ஷ்கரமான ஸாத₄னங்களை அனுஷ்டி₂த்து து₃:க்க₂ப்படவேண்டா; *வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தை ஆச்'ரயிக்க ஸகல து₃:க்க₂ங்களும் தன்னடையே விட்டுப்போம் என்கிறார்.

76. அவ:—ஸர்வேச்'வரன் தன் உடம்பைப் பேணாமல் நம் கார்யம் செய்வதற்காக ஸம்ஸாரத்திலே புகுந்து கண்ணனாக அவதரித்ததோடு திருப்தியடையாமல் பல பல இடங்களில் அர்ச்சாவதாரமாகக் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கிறான். அப்படியிருக்கும்போது அவனை உபாயமாகப்பற்றி ஸுக₂மாக வாழாமல் நீங்கள் உடலை வாட்டிக் கடுந்தவம் புரியவேண்டா என்கிறார்.

http://acharya.org

வ்யா:— (பொருப்பித்யாதி) பனிநாள் மலைகளில். பொய்கைகளிலே புக்குக் குளித்து. (ஐந்தித்யாதி) கோடை நாள் பஞ்சாக்நி மத்யஸ்தராய் நிற்கவும் வேண்டா.

உரை:— பனிகாலத்தில் மலைகளின் நடுவே நின்றும், குளிர்காலத்தில் பொய்கைகளிலே புக்கு நீரிலே முழுகிக் கிடந்தும், உஷ்ணகாலத்தில் பஞ்சாக்₃நி நடுவே நின்று வெந்து விழுந்தும் இப்படி க்ரூரமான ஸாதநங்களை அநுஷ்டித்து நீங்கள் து:க்க₂ப்படவேண்டா;

வ்யா:— (பொருப்பிடையே நின்றும்) பனிகாலத்தில் மலைகளின் நடுவே நின்றும; மலைச் சிகரங்களெல்லாம் பனிமூடியிருக்கும் பனிகாலத்தில் அவற்றினிடையே நின்று தவம் செய்வது மிகவும் கடி₂னமன்றோ. (புனல் குளித்தும்) குளிர்காலத்தில் குளங்களின் உட்புகுந்து நீரிலே முழுகிக் கிடந்தும்; குளிர்மிக்க மழைகாலத்திலே குளிர்ந்த நீரினில் நின்று தவம்செய்வது மிகவும் கடி₂னமன்றோ. (ஐந்து நெருப்பிடையே நிற்கவும்), கோடை காலத்தில் தன்னைச்சுற்றி நாற்புறமும் நாலு தீயை மூட்டிக்கொண்டு, மேலே ஸூர்யனாகிற பெருநெருப்பு காயும்போது தவம் செய்வதாகிற பஞ்சாக்னி மத்தியில் நிற்கவும். ஐந்து நெருப்புகளிடையே, வெந்து விழும் இது மிகவும் கடி₂னம் என்பது சொல்லாமலே விளங்கும். இப்படி மூன்று காலங்களில் மூவகைத்தவம் என்று, அப்பிள்ளை நிர்வாஹம். பொருப்பிடையே நிற்பதும், புனல் குளிப்பதும் பனிகாலத்தில் என்பது பெரியவாச்சான்பிள்ளை நிர்வாஹம். ஆசார்யஹ்ருத₃ய (சூ. 99) வியாக்கியானத்தில், "உஷ்ண காலங்களில் பர்வதாக்₃ரத்திலும், பஞ்சாக்₃நிமத்₄யத்திலும் நின்றும், ஶீதகாலங்களில் அருக்கயமான தடாகத்திலே மூழ்கிக்கிடந்தும்" என்று மாமுனிகள் பொருப்பிடையே நிற்பதும், ஐந்து நெருப்பிடையே நிற்பதும் உஷ்ணகாலத்தில் எனக்கொண்டு நிர்வஹித்தார். (நீர் வேண்டா) நீங்கள் இப்படி 'ஊன் வாட வாட உயிர்காவலிட்டு உடலிற்பிரியாப் புலன் ஐந்தும் நொந்து தாம் வாட வாடத் தவம் செய்யவேண்டா' என்கிறார். நீங்கள் விரும்பும் பலனை எளிதில்பெற வழி இருக்கும்போது இப்படி எதற்காகக் கஷ்டப்பட வேண்டும்? என்று கருத்து.

http://acharya.org

(விருப்பித்யாதி) விரும்பப்படுவதான திருவெஃகாவிலே சேர்ந்தவனை. (மெய்ம்மலரித்யாதி) அநந்யப்ரயோஜநனாய் புஷ்பாத்$_3$யுபகரணங்களைக்கொண்டு ஆய்ந்து-அநுஸந்தித்துக்

அவனோடு அல்லாதாரோடு வாசியற ஸர்வரும் ஒருமிடமு விரும்பும்படியான திருவெஃகாவிலே—தன்னைப்பேணுதே நம்மை ரக்ஷிக்கைக்காக வந்து கண்வளர்ந்தருளினவனை ப்ரயோஜநாந்தரபரதையாகிற பொய் கல்சாதே. அநந்ய ப்ரயோஜனராய்க்கொண்டு பூக்களை அக்ரமமாகப் பணிமாறி கையாலே அஞ்ஜலிப$_3$ந்த$_4$த்தைப்பண்ணி ஆஶ்ரயித்தால். து$_3$ஷ்

அவ்வழிதான் யாது என்ன. அருளிச்செய்கிறார் மேலே,—(விருப்புடைய வெஃகாவே சேர்ந்தானை) 'தன்னைக் கொள்வாருமுண்டோ?' என்று எதிர்பார்த்துப் பெருவிருப்பத்தைச் செய்து, திருவெஃகாவிலே தன்னைப் பேணுமல் நம்மை ரக்ஷிக்கத் தானே வந்து சேர்ந்திருப்பவனை. உம்மையும் அவனையும் சேரவைக்கும் புருஷகாரபூ$_4$தரான அடியார்களால் பெருவிருப்பத்தைச் செய்யப்படும் திருவெஃகா என்று புருஷகாரஸத்$_3$பா$_4$வத்தை அநுஸந்திக்கிறுராகவுமாம். ரஸிகர்களென்று பேர் பெற்றவர்கள் அனைவராலும் விரும்பப்படும் வெஃகா என்று தி$_3$வ்யதே$_3$ஶத்தின் இனிமையை அநுஸந்திக்கிறுராகவுமாம். ஆக, நீங்கள் அநுஷ்டிக்கும் ஸாத$_4$நாந்தரங்களைப்போலே கடி$_2$னமாகவும், விரஸமாகவுமிராமல், இது எளியதாகவும் ஸரஸமாகவுமிருக்கும் என்று கருத்து. இவன் விஷயத்திலும் ஏதாவது மெய்வருத்திக் கைசெய்யவேண்டாவோ? எனில்: ப்ராப்தஶேஷியான இவன் விஷயத்தில் ஸ்வரூபப்ராப்தமாய், மிகவினிதாய், மிக எளிதாய்ருக்கும் புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பிக்கை போதும் என்கிறுர்.—(மெய்ம்மலர் தூய்கை தொழுதால்), மற்ற பலன்களில் பற்று:வைக்கையாகிற பொய் கலவாது, அவனையே பரமப்ராப்யமாகக் கொள்ளுகையாகிற மெய்ம்மையோடே கைக்குக் கிடைத்த மலர்களை முறைகெடப் பணிமாறி ஓர் அஞ்ஜலி செய்தால், (மெய்) உங்களைப்போலே ஶரீரஶ்ரமப்பட வேண்டா: பா$_4$வஶுத்$_3$தி$_4$யிருந்தால் போதும். மென்மலர் என்று பாட$_2$மாகில் பறிக்க மிக எளிது என்று காட்டுகிறது. (மலர்) "பத்ரம் புஷ்பம்" "புரிவதுவும் புகை பூவே" [திருவாய் 1-6-1] என்கிறபடியே கைக்கெட்டினதொரு மலர் போதும். (தூய்) சடங்குமுறை யெதுவும்

http://acharya.org

கைதொழுதால். அசேதநமான கொடிய பாபங்கள்தான் தன்னையாஶ்ரயிக்க நிற்கவற்றோ? தீவினைகள் தானே ஆராய்ந்து நமக்கு நிலமன்றென்று போகாவோவென்றுமாம். "வ்ருஷ்டிப்ரதீ-க்ஷாஶ்ஶாலய:" (வ்ருஷ்டிப்ரதீக்ஷாஶ்ஶாலய:) என்னும் ந்யாயத்தாலே "சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள்பாய்ந்தனவே" என்கிறபடியே. 76.

கர்மங்களடங்கலும் நமக்கு இவ்விடம் ஆஶ்ரயமன்று என்று அநுஸந்தி$_4$த்துத் தானே விட்டுப் போகாவோ? "சும்மெனாதே கைவிட்டோடி" என்னுமாபோலே சேதநஸமாதி$_4$யாலே சொல்லுகிறது. அன்றியே, மெய்ம்மலர் தூவி, ஆய்ந்து அவன் குணங்களை அநுஸந்தித்துக் கைதொழுதால் தீவினைகள் அஃகாவே என்னவுமாம். "மென்மலர்" என்று பாடமாகில் ம்ருது$_3$வான மலரை என்றுகிறது. 76.

வேண்டா, முறைகெட இடலாம். (கைதொழுதால்) 'எங்கள் கையில் ஒன்றுமில்லை' என்று காட்டும் அஞ்ஜலியைப் பண்ணினால் போதும். (ஆய்ந்து கைதொழுதால்) அவன் குணங்களை ஆராய்ந்து அஞ்ஜலியைச் செய்தால்: அவனுடைய ஸௌலப்$_4$ய ஸௌஶீல்ய வாத்ஸல்ய ஸ்வாமித்வங்களை ஆராய்ந்தால் 'இதுவும் மிகை' எனத்தோற்றும் அஞ்ஜலியைச் செய்தால். இவ்வெளிய செயலைச் செய்வதன் மூலம் பெறும் பலன் மிகப்பெரிது என்கிறார் மேலே.—(அஃகாவே தீவினைகள் ஆய்ந்து) நாம் அநாதி$_3$காலமாகச் செய்து வந்த பாபங்கள் அனைத்தும், 'இனி மடியொடுக்கி நிற்பதிலும் அடியெடுப்பதே அழகு' என்று ஆராய்ந்து, "நம்மன்போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே" [பெரியாழ்திரு 5-4-3] என்கிறபடியே தாமே விட்டுப் போகாவோ? 'ஆய்ந்து' என்பதை கீழும் மேலும் அந்வயிக்கலாம். (ஆய்ந்து அஃகாவே) ஆராய்ந்து பார்ப்பதற்குப் பாபங்களுக்கு அறிவுண்டோ? எனில்: "வ்ருஷ்டிப்ரதீக்ஷா: ஶாலய:" [பயிர்நெல் மழையை எதிர்பார்த்து நிற்கிறது] என்னுமாபோலே, சேதநஸமாதி$_4$யாலே—(பாபங்களைச் சேதனராகக் கற்பித்துச்)—சொல்லுகிறது. ப$_4$க$_3$வந்நிக்$_3$ரஹரூபமான பாபங்கள் 'அவன் பொறுத்தேன்' என்னத் தீரும் என்று கருத்து. ஆக, ப்ராப்தஶேஷி விஷயத்தில் ஸ்வரூப ப்ராப்தமான எளிய செயலைச் செய்து அரிய பலனைப்

http://acharya.org

77. ஆய்ந்த வருமறையோன் நான்முகத்தோன் நன்குறங்கில்
வாய்ந்த குழவியாய் வாளரக்கன்—ஏய்ந்த
முடிப்போது மூன்றேழென் றெண்ணினான் ஆர்ந்த
அடிப்போது நங்கட் கரண்.

ஆய்ந்த—ஆராய்ந்து கற்கப்பட்ட. அருமறையோன்—அருமையான வேதங்களையுடையவனான. நான்முகத்தோன்—சதுர்முக₂ ப்₃ரஹ்மாவினுடைய. நன் குறங்கில்—அழகிய மடியிலே. வாய்ந்த—நேர்பட்ட. குழவி ஆய்—இளங் குழந்தையாயிருந்துகொண்டு. வாள் அரக்கன்—ஆயுத₄ முடைய இராவணனுடைய. ஏய்ந்த—(அறுப்புண்ணத்) தகுதிபெற்ற. போது முடி—மாலைகட்டிய தலைகளை. மூன்று ஏழ் என்று எண்ணினான்—மூன்றும் ஏழும் பத்து என்று (தனது திருவடியாலே) எண்ணிக் காட்டினவனுடைய. அடி போது — திருவடித்தாமரைகள். நங்கட்கு — நமக்கு. ஆர்ந்த அரண்—குறையற்ற உபாயம்.

அவ:— (ஆய்ந்தவருமறையோன்) கீழ் ஸர்வேஶ்வரனை ஆஶ்ரயிக்கவே உங்கள் பாபங்களெல்லாம் போமென்றது.

அவ:— பேரளவுடையரான ப்₄ரஹ்மாதி₃களும் விளைவதறியாமல் தங்களுக்கு ஆபத்தை விளைத்துக்கொள்ளத்

பெறலாயிருக்க, செயற்கரிய காரியங்களைச் செய்யவேண்டா என்றாராயிற்று. 76

77. அவ:—ஸர்வேஶ்வரனை ஆஶ்ரயிக்கவே, அவனுடைய நிக்₃ரஹரூபமான பாபமெல்லாம் தன்னடையே விட்டுப்போம் என்றார் சென்ற பாசுரத்தில். இப்பாசுரத்தில்— அதி₄கமான ஜ்ஞாநஶக்திகளையுடைய பிரமன் முதலானோரும் மேல் விளைவதறியாமல் தங்களுக்குத் தாங்களே ஆபத்தை விளைத்துக்கொள்ளத் தொடங்கினால், தான் முன்னின்று அவ்வாபத்தைப் போக்கி அவர்களையும் ரக்ஷிக்கவல்ல ஸர்வேஶ்வரனே நமக்குத் தஞ்சமாவான் என்கிறார். இப்பாட்டில் அநுஸந்திக்கப்படும் இதிஹாஸம் "ஆமேயமரர்க்கறிய" [முதல்-திருவ 45] "கொண்டு குடங்கால்மேல்"

http://acharya.org

இதில் அளவுடையரான ப்₃ரஹ்மாதி₃களுக்கு வழிகேடாகப் புக்கால் பரிஹரிப்பான் அவன் என்கிறது.

வ்யா:— (ஆய்ந்தவித்யாதி) ஸர்வேஶ்வரனாலே ஓது விக்கப்பட்டு வேத₃ார்த்த₂நிருபணம் பண்ணவல்ல ப்₃ரஹ்மாவி னுடைய குறங்கிலே. ஸ்வாப₄ாவிகமான ஶேஷித்வமில்லாமை

தேடினால். ஏற்கவே அவ்வாபத்தைப் போக்கி அவர்களை ரக்ஷிக்கக்கடவ ஸர்வேஶ்வரன் திருவடிகளே நமக்கு ரக்ஷகம்—என்கிறார்.

உரை— அர்த்த₂ஸஹிதமாக ஆராய்ந்து அதி₄கரிக்கப் பட்ட பெறுதற்கரிய வேத₃த்தைத் தனக்கு நிரூபகமாக வுடையனான சதுர்முக₂னுடைய அழகிய மடியிலே நேர்.

[நான்-திருவ44] என்னும் பாசுரங்களிலும் அநுஸந்திக்கப்பட்டது. முன்பு இராவணன் தன் பத்து தலைகளையும் மறைத்துக்கொண்டு நான்முகனிடம் சென்று வரம் வேண்டிக்கொள்ளும் காலத்தில் எம்பெருமான் ஒரு சிறு குழந்தை வடிவாகி அவன் மடியிலே கிடந்து, 'இவன பத்துத் தலைகளையுடைய ராக்ஷஸன், ஏமாந்து போய் இவனுக்குக் கண்டகண்ட வரங்களைக்கொடுத்துவிட வேண்டா' என்று உணர்த்துவதற்காக ராவணனுடைய பத்து தலைகளையும் தன் திருவடியாலே எண்ணிக்காட்டினான் என்பது இப்பாசுரங்களில் தெரிவிக்கப்படும் வரலாறாகும்.

வ்யா:— (ஆய்ந்த அருமறையோன்) "யோ ப்₃ரஹ்மாணம் வித₃த₄ாதி பூர்வம் யோ வை வேத₃ாம்ஶ்ச ப்ரஹிணோதி 'தஸ்மை" [ஶ்வே 6-18] [எவனொருவன் பிரமனை முன் படைத்து அவனுக்கு வேதங்களை உபதே₃ஶிக்கிறானோ] என்கிறபடியே நேரே ஸர்வேஶ்வரனிடமிருந்தே வேதம் ஓதுவிக்கப்பெற்று, அதன் பொருளையும் உணரவல்லவனாய். (நான்முகத்தோன்) அந்த நாலு வேதங்களையும் ஒரே காலத்தில் உச்சரிக்கலாம்படி நாலு முகங் களையும் உடையவனான பிரமனுடைய. இவ்விரண்டு பெயர்களாலும், இவன் பரம்பொருளிடமிருந்து உபதே₃ஶம் பெற்று ஶரீராதீ₄ன மான தொழில்களை உடைய ஒரு ஜீவனே என உணர்த்தப்படு கிறது. (நன குறங்கில்) ஸர்வேஶ்வரன் வந்து குழந்தையாய்க் கிடக்கையாலே அழகுபெற்ற மடியில். 'குறங்கு' என்பது துடைக்குட்

http://acharya.org

யாலே புதுக்கும்பிடைக் கண்டு இறுமாந்து தங்கள் அநர்த்தமும் அறியாதே ராவணனுக்குத் தேடிற்றெல்லாம் கொடுக்கப்புக, இவனாலே நோவுபட்டாலும் நம்முடைய பாடேயிறே இவர்கள் 'வந்து விழுவது'என்று பார்த்து. (வாய்ந்த குழவியாய்) அழகிய பிள்ளையாய். (வாளரக்கன்) ஸாயுதனான ராக்ஷஸனுடைய. (ஏய்ந்தவித்யாதி) ராக்ஷஸனுடைய தலைகளை மௌக்த்யத்

பட்ட முக்தபாவாய்க்கொண்டு. ஸாயுதனான ராவண னுடைய அறுப்புண்கைக்குத் தகுதியான மாலைகட்டின

பேராயினும், இங்கு லக்ஷணையாலே மடியைக் குறிக்கும். (வாய்ந்த குழவியாய்) தானே வந்து ஆவிர்பவித்த சிறு குழந்தையாய். பிரமனாலே ஸ்ருஷ்டிக்கப்படாமல், அவனுடைய அநர்த்தத்தைப் போக்கத்தானே வந்து தோன்றிய குழந்தை இது என்று கருத்து. அழகு வாய்ந்த குழந்தையாய் என்றும் பொருள் கொள்ளலாம். அப்படி என்ன அநர்த்தம் அவனுக்கு வந்தது எனில்: வஞ்சகனான ராவணன் இப்பிரமனிடம் வரம் பெறுவதற்காகத் தான் பத்துத் தலை ராக்ஷஸன் என்பதை மறைத்துக்கொண்டு இப்பிரமனை வணங்கி நின்றான்; இப்பிரமனும் இயல்வாகவே ஸேஷித்வமில்லாதவனாகையாலே, புதுப்பணக்காரனை வந்தடைந்த செல்வம் போலே தன்னை வந்தடைந்த இப்புதுக்கும்பீட்டைக் கண்டு கர்வங்கொண்டு, இவ்வரங்களைக் கொடுத்தால் நமக்கு வரப்போகிற அநர்த்தங்கள் என்னவென்று ஆராயாமல், ராவணன் கேட்ட வரங்களையெல்லாம் கொடுக்கத் தொடங்கினவளவிலே, 'ஐயோ! இப்பிரமன் என்ன காரியம் செய்கின்றான். தன் கையாலேயே தன் கண்ணைக் குத்திக்கொள்வது போன்ற காரியமன்றோ இது, இப்படி வரத்தைக் கொடுத்துவிட்டுப் பின்னால் துன்புற நேரும் போது, அதைப் போக்கிக்கொள்ள நம் காலில்தானே விழப் போகிறான்; இப்போதே இவனை எச்சரிக்கை செய்வோம்' என்னும் திருவுள்ளத்துடன் ஒரு அழகிய குழந்தையாய் ஆவிர்பவித்தான் என்று கண்டுகொள்வது. இப்படித்தோன்றி அவன் செய்த காரியம் யாது? எனில்: (வாளரக்கன் ஏய்ந்த முடிப்போது மூன்றேழென்று எண்ணினான்) சங்கரன் கொடுத்த வாளையுடைய ராக்ஷஸனான இவனுடைய தலைகள் பத்து என்று திருவடியாலே எண்ணிக்காட்டினான். "பூமேய மாதவத்தோன் தாள்பணிந்த வாளரக்கன் நீண்முடியைப் பாதம் அத்தால் எண்ணினான்" [முதல்

http://acharya.org

தாலே மூன்றேழென்றெண்ணினவனுடைய அபேக்ஷிதத்தைச செய்யவற்றாய் போ$_4$க்$_3$யமான திருவடிகள் நமக்கு ரக்ஷை. 77.

தலைகளைத் தன் மௌக்$_3$த்$_4$யம் தோற்ற மூன்றுமேழுமென்று அறுப்புண்கைக்கு யோக்$_3$யமென்னுமிடம் தோற்றத் திருவடிகளாலே எண்ணிக்காட்டி ப்$_3$ரஹ்மாவை ரக்ஷித்தவனுடைய போ$_4$க்$_3$யதையால் பரிபூர்ணமான திருவடிகளாகிற செவ்விப்பூக்கள், அகிஞ்சனராய் அநந்யப்ரயோஜனரான நமக்கு ரக்ஷை. 77.

திருவ45] என்றும், "கொண்டு குடங்கால்மேல் வைத்த குழவியாய், தண்ட வரக்கன் தலை தாளால் பண்டெண்ணிப்போம் குமரன்" என்றும் மற்றையாழ்வார்கள் அருளிச்செய்கையாலும். இவரும் மேலே 'எண்ணினான் அடிப்போது' என்கையாலும் திருவடிகளாலே எண்ணிக்காட்டினான் என்று இங்கும் பொருள்கொள்ளவேணும். (வாளரக்கன்) 'இவன் சங்கரன் கொடுத்த வரலை உடையவனாயிருக்கிறான் பார்!' என்று அதையும் சுட்டிக்காட்டினான்போலும்! (ஏய்ந்த முடிப்போது) அலங்க்ருத்ய ஶிரஸ்சே$_2$த$_3$ந்யாயத்தாலே அறுப்புண்கைக்குத் தகுதியாக மாலை கட்டி அலங்கரிக்கப்பெற்ற தலை. ஏய்ந்த— தகுதியான, முடிப்போது— போதுமுடி— மாலைகட்டின தலை. (ஆடு முதலாளவற்றைத் தலையறுப்பதற்குமுன் அவற்றுக்கு மாலைபோட்டு அதன்பின் அவற்றைத் தலையறுப்பது அலங்க்ருத்ய ஶிரஸ்சே$_2$த$_3$மாகும்) (மூன்றேழென்றெண்ணினான்) இவன் தன் மற்ற தலைகளை மறைத்துவந்தானாயினும், 'மூன்றும் ஏழும் பத்து' என்று பள்ளிப்பாடம் படிக்கும் பிள்ளையைப்போலே 'இதோ பார் இவனுடைய பத்து தலைகளையும்' என்று எண்ணிக்காட்டிப் பிரமனை எச்சரிக்கை செய்தான். (ஆர்ந்த அடிப்போது நங்கட்கு அரண்) இப்படிச் செய்தவனுடைய நிறைவுடைய திருவடித்தாமரை நமக்குத் தஞ்சமாகும். ஆர்ந்த—பிரமனை எச்சரிக்கை செய்து, மனிதர்கள் தவிர்ந்த மற்றவர்களால் சாவில்லை என்று அவன் கேட்ட வரத்தை இசையச் செய்து, மனிதனாகத்தான் அவதரித்து இவனை அழிக்க இடம் பெற்று இவ்வண்ணமாக எண்ணினதை முடிக்கவல்ல நிறைவைச் சொல்லுகிறது. அடிப்போது—போது என்று புஷ்பமாக உருவகப்படுத்துவதன்மூலம் திருவடியின் இனிமையைக் காட்டுகிறது. 'ஆர்ந்த அடிப்போது' என்று இனிமையின் நிறைவைக் காட்டுவதாகப் பொருள்கொண்டார் அப்பிள்ளை. ஆக, அதி$_4$க

78. அரணும் நமக்கென்று மாழி வலவன்
முரனாள் வலம்சுழிந்த மொய்ம்பன்—சரணமேல்
ஏதுகதி யேதுநிலை யேதுபிறப் பென்னாதே
ஓதுகதி மாயனையே யோர்த்து.

ஆழி — திருவாழியாழ்வானை. வலவன் — வலத்திருக்கையிலுடையவனும். முரன்—முராஸுரனுடைய நாள்—ஆயுளாலுண்டான. வலம்—வலிமையையும். சுழிந்த—போக்கின. மொய்ம்பன்—மிடுக்கையுடையவனுமான பெருமான். சரண் ஆம் ஏல்—ரக்ஷகனாக அமையும் பக்ஷத்தில், கதி ஏது நிலை ஏது பிறப்பு ஏது என்னாதே—(நம்முடைய) ஞானமென்ன!, ஒழுக்கமென்ன!, ஜன்மமென்ன! என்று (இவற்றின் தாழ்வுகளைப் பார்த்து) இகழாமல். நமக்கு என்றும் அரண் ஆம்—நமக்கு எல்லாக் காலத்திலும் ரக்ஷகனாகவேயிருப்பன்; மாயனையே—(ஓ நெஞ்சமே!.) ஆஸ்சரியமான குணசேஷ்டிதங்களையுடையவனான அப்பெருமானையே, கதி—உபாயமாக. ஓர்த்து—உறுதிபூண்டு ஓது—அவன் திருநாமங்களை ஓதுவாயாக.

அவ:— (அரணும்) அவன் ஸர்வரக்ஷகனாகிலும் நம்முடைய ஜ்ஞாநவ்ருத்த ஜந்மங்களினுடைய கொற்றைபார்க்க வேண்டாவோவென்ன; வேண்டாவென்கிறது.

அவ:— அவன் நமக்கு ஶரணமிடத்தில் நம்முடைய வித்₃யாவ்ருத்தங்களின் பொல்லாங்கைப்பார்த்து உபேக்ஷியாதே ரக்ஷகனும். ஆனபின்பு அவனுடைய திருநாமங்களைச் சொல் என்கிறார்.

மான ஜ்ஞாநஶக்திகளையுடைய ப்₃ரஹ்மாதி₃களையும் ரக்ஷிப்பவனே நமக்குத் தஞ்சம் என்றாராயிற்று. 77.

78. அவ:—அவன் நமக்கு உபாயமாம்போது நம்முடைய பிறவி ஒழுக்கம், அறிவு ஆகியவற்றின் தாழ்வைப் பார்த்து இகழாமல் நம்மை ரக்ஷிக்கிறான். அப்படிப்பட்ட அவனுடைய திருநாமங்களைச் சொல்லு—என்று தம் நெஞ்சுக்கு உபதேஶிக்கிறார்.

http://acharya.org

வ்யா:— (அரணுமித்யாதி) ஸர்வஶக்தி நமக்கு ரக்ஷையாம். வலவருகே திருவாழிபிடிக்குமவன் போலேகாணும் ரக்ஷகனாவான். தன்னைப் புரஸ்கரித்திறே "மாஶுச:" (மாஶுச:) என்றது. இவனுடைய அஹம்பு$_3$த்$_3$தி$_4$ ஶோக நிமித்தம்; அவனுடைய அஹம்பு$_3$த்$_3$தி$_4$ ஶோக நிவர்த்தகம். (முரனுள்வலஞ் சுழிந்த மொய்ம்பன்) விரோதி$_4$யைப்போக்கி ரக்ஷிக்க வல்லனென்னுமிடத்தை உபபாதி$_3$க்கிறது. முரனுடைய ஆயுஸ்ஸாகிற மிடுக்கை முடிக்கவல்ல மிடுக்கன்.

உரை— *ரக்ஷணபரிகரமான திருவாழியை வலவருகே யுடையனாய், முராஸுரனுடைய ஆயுஸ்ஸால் வந்த ப$_3$லத்தைப் போக்கின மிடுக்கையுடையனானவன் ரக்ஷகனாமிடத்தில்*

வ்யா:—(அரணும் நமக்கு என்றும் ஆழி வலவன்) வலக்கையிலே ஆஶ்ரிதரக்ஷணத்திற்குறுப்பான திருவாழியைப் பிடிக்கவல்ல ஸர்வஶக்தியே நமக்கு என்றும் ரக்ஷகனாவான். சரமஶ்லோகத்திலே "அஹம்" என்று வலக்கையாழி இடக்கைச் சங்கமுடைய தன்னைச் சுட்டிக்காட்டியன்றோ 'மா ஶுச:" [நீ (உன் பாபங்களை நினைத்து) வருந்தாதே] என்றான்: அதுபோலே இவரும் 'ஆழிவலவன்' என்று அவனைச் சுட்டிக்காட்டி அவன் நமக்கு ரக்ஷை என்கிறார். இச்சேதனன் 'அஹம்' என்று அஹங்கரிப்பது ஸம்ஸார ஶோகங்களுக்கெல்லாம் காரணமாகிறது. அப்பரமன் 'அஹம்' என்று தன ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வங்களைக் காட்டுவது இவனுடைய ஸம்ஸார ஶோகங்களையெல்லாம் போக்கடிக்கிறது. ஆழிவலவன்' என்று திருவாழியை தரிக்கவல்லவன் என்கையாலே, இவனுடைய ஸர்வஶக்தித்வம் காட்டப்படுகிறது. விரோதி$_4$களாலுண்டாகும் தடையை என் செய்வது என்னில், அவை முரனுடைய ஆயுள் பட்டது படும் என்கிறார்.—(முரன் நான் வலம் சுழிந்த மொய்ம்பன்) நரகாஸுரனுடைய மந்திரியான முரனுடைய ஆயுள் மிகுதியால் உண்டான ப$_3$லத்தைப் போக்கின ப$_3$லத்தையுடையவன்.(நாள்வலம்) என்றதற்கு 'மிகுந்த ஆயுஸ்ஸால் உண்டான ப$_3$லம்' என்றும் 'மிகுந்த ஆயுஸ்ஸாகிற ப$_3$லம்' என்றும் இருவகையாகப் பொருள் கூறலாம். (சரணமேல்) அவன் ஸர்வப்ரகாரரக்ஷகனாக நினைத்தானாகில். 'ஏல்' என்பது அருமையைக் காட்டுகிறது. இப்படி அவன் ஸர்வப்ரகார ரக்ஷகனாகத் தன்னை ஆக்குவது ஸ்வப்ரவ்ருத்திலேஶமும் அற்றவர்களாய், அவன் கைபார்த்திருக்கும் சில அதி$_4$காரிகளுக்கே என்று கருத்து.

http://acharya.org

(சரணமேஷித்யாதி) அவன் ரக்ஷகனுமிடத்தில்—ஜ்ஞானமேது. வ்ருத்தமேது. ஜந்மமேது என்றாராயாதே. ஆழிவலவனரணும்—ஆஶ்ரயணீயனும் "समोऽहं सर्वभूतेषु न मे द्वेष्योऽस्ति न प्रियः" (ஸமோஹம் ஸர்வபூ₄தேஷு ந மே த்₃வேஷ்யோஸ்தி ந

ஏது ஜ்ஞானம், ஏது வ்ருத்தி, ஏது ஜன்மமென்று வித்₃யாவ்ருத்தஜன்மங்களினுடைய நிகர்ஷம் பார்த்து உபேக்ஷியாதே — ஆபந்நராய் ரக்ஷகாபேக்ஷையுடையரான நமக்கு ஸர்வகாலத்திலும் ரக்ஷகனும். ஆனபின்பு நம்முடைய குற்றத்தைப் பார்த்துப் பிற்காலியாதே, ஶரண்யத்வைகாந்தமான ஆஶ்சர்யகு₃ணசேஷ்டிதங்களை உடையனவனையே உபாயமாக அத்₄யவஸித்து. அவன் திருநாமங்களை இடைவிடாமல் நெஞ்சே! சொல்லு; "நேர்படு

இனி, அவன் ஸர்வப்ரகார ரக்ஷகனைத் திருவுள்ளம்பற்றி விட்டானாகில், அவனுடைய க்ருபை கரைகட்டாக் காவேரிபோல் பெருகுவதை அருளிச்செய்கிறார்.— (ஏது கதி ஏது நிலை ஏது பிறப்பு என்னாதே அரணும்) தான் ரக்ஷிக்கப்புக்கவர்களுடைய ஞானம் எத்தகையது, ஒழுக்கம் எத்தகையது, பிறவி எத்தகையது என்றெல்லாம் ஆராயாமல், அவர்களுடைய ஜந்மவ்ருத்தஜ்ஞானங்கள் எத்தனை தாழ்ந்தவையாயினும் அவர்களை ரக்ஷித்தருள்வான். (நமக்கு அரணும்) ஸம்ஸாரமாகிய ஆபத்திலே சிக்கிக்கொண்டு, நம்மை ரக்ஷிப்பார் ஆர் என்று தேடும் நமக்கு ரக்ஷகனும். கர்மஜ்ஞானபக்திகள்போன்ற வேறு தகுதி நம்மிடம் இருக்கவேண்டியதில்லை என்று கருத்து. (என்றும் அரணும்) அப்படி ரக்ஷிக்கும்போது ஸர்வகாலத்திலும் ரக்ஷகனும். இப்படி இத்தலையிலே ஏதுமின்றிக்கேயிருக்க, அவன் ரக்ஷகனுமோ? என்னில்: "ஸமோஹம் ஸர்வபூ₄தேஷு ந மே த்₃வேஷ்யோஸ்தி ந ப்ரிய:" [கீதை 9-29] [எல்லா ஜீவராசிகட்கும் (என்னை ஆஶ்ரயிக்கும் விஷயத்தில்) நான் ஸமானமானவனே; (ஜந்மவ்ருத்த ஜ்ஞானங்களின் தாழ்வைப்பார்த்து) என்னால் வெறுக்கத்தக்கவன் எவனுமில்லை; (அவற்றின் உயர்வைப் பார்த்து) எனக்கு இனியவனும் எவனுமில்லை.] "யேபி ஸ்யு: பாபயோநய:" [பாபயோனியிற் பிறந்தவர்களும் (முக்தியடைகின்றனர்)]

http://acharya.org

ப்ரிய:) "येऽपि स्युः पापयोनयः" (யேऽபி ஸ்யு: பாபயோநய:) "எத்தனை நலந்தானிலாத சண்டாளசண்டாளர்களாகிலும்". (ஓதுகதி மாயனையேயோர்த்து) ஶரண்யனும் ஆஶ்சர்யபூ₄தனுமான அவனை அநுஸந்தி₄த்து அவன் திருநாமங்களைச் சொல்லு. 78.

வான் தான் முயலும் நெஞ்சு" என்று மேலே சொல்லுகிற நெஞ்சே இங்கும் முன்னிலைக்கு விஷயம். அன்றிக்கே. "நிலைவரம்பில பல பிறப்பாய்" என்கிறபடியே. மூரன் நாள் வலஞ்சுழிந்த மொய்ம்பன் ஶரணமிடத்தில். தனக்கென்ன ஒரு நியதியின்றிக்கே ஆஶ்ரிதரக்ஷணத்துக்கு உறுப்பான ஏதேனுமொரு ஜன்மவித்₃யாவ்ருத்தங்களைத் தானுடையனாய்க் கொண்டு நமக்கு என்றும் அரணும் என்றுமாம். "ஓதுகதி மாதவனையோர்த்து" என்று பாட₂மாகில். 'ஶ்ரிய:பதியையே உபாயமாக பு₃த்₃தி₄பண்ணி அவன் திருநாமங்களை ஏத்து' என்று பொருளாகக்கடவது. 78.

"குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை
நலந்தானிலாத சண்டாளசண்டாளர்களாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்(று)
கலந்தார் அடியார்தம் அடியார் எந்தம் அடிகளே" [உள்
[திருவாய் 3-7-9]

முதலான ப்ரமாணங்களிலே ஜந்மவ்ருத்தஜ்ஞானங்களால் தாழ்ந்தவர்களும் தலைசிறந்த பலனைப் பெறுகின்றனர் என்று முழங்கப்படுகின்றதன்றோ. (சரணுமேல் ஏதுகதி ஏதுநிலை ஏதுபிறப்பு என்னாதே அரணும்) என்றதற்கு அப்பிள்ளை மற்றொரு வகையாகவும் பொருள்கொண்டார். அதாவது:— "பிதா புத்ரேண பித்ருமாந் யோநியோநௌ" [ஸர்வலோக பிதாவானவன் தன் பிள்ளைகளில் ஒருவனைப் பிதாவாகக்கொண்டு பிறக்கிறான்] "எங்கின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" [திருவிருத்தம் 1] "நிலைவரம்பில பல பிறப்பாய் ஒளிவரும்" [திருவாய் 1-3-2] என்கிறபடியே ஆழிவலவனாய், முராரியானவன் ரக்ஷகனும்போது. தன் பெருமை பாராமல், ஆஶ்ரித ரக்ஷணத்துக்குப்பாங்கான ஏதேனும் ஒரு ஜந்மவித்₃யாவ்ருத்தங்களைத் தான் உடையவனாய்க்கொண்டு நமக்கு ரக்ஷகனாவான் என்கை. இனி, நாம் செய்யவேண்டியதென்ன? எனில்: (மாயனையே கதி ஓர்த்து ஓது) நம் தாழ்வைப்

http://acharya.org

79. ஓர்த்த மனத்தரா யைந்தடக்கி யாராய்ந்து
பேர்த்தால் பிறப்பேழும் பேர்க்கலாம்—கார்த்த
விரையார் நறுந்துழாய் வீங்கோத மேனி
நிரையார மார்வனையே நின்று.

கார்த்த—பசுமையான நிறமுள்ளதாய். **விரை ஆர்**—பரிமளம் நிரம்பியதான. **நறு துழாய்**—செவ்வித் திருத்துழாய் மாலையையுடையவனும். **வீங்கு ஓதம் மேனி**—தேங்கிய கடல்போன்ற திருமேனியையுடையவனும். **நிரை ஆரம் மார்வனையே**—ஒழுங்கான ஹாரங்களணிந்த திருமார்பையுடையவனுமான பெருமானையே. **நின்று**—நிலைத்து நின்று. **ஓர்த்த மனத்தார் ஆய்**—அநுஸந்தி4க்கின்ற மனமுடையவராய். **ஐந்து அடக்கி**—பஞ்சேந்திரியங்களையும் வென்று. **ஆராய்ந்து**—ஸம்ஸாரத்தின் தாழ்வை ஆராய்ந்து. **பேர்த்தால்**—அதில் நின்றும் நெஞ்சைத் திருப்பிக்கொண்டால், **பிறப்பு ஏழும்**—ஒன்றின்பின் ஒன்றாக வரக்கூடிய ஜன்ம பரம்பரைகளை. **பேர்க்கலாம்**—போக்கிவிடலாம்.

பார்த்துத் தயங்காமல், ரக்ஷகத்வத்துக்கு உறுப்பான ஆஶ்சர்யமான கு3ணங்களையும் செயல்களையும் உடைய ஸர்வேஶ்வரனையே உபாயமாக உறுதிபூண்டு. காலக்ஷேபத்துக்கு உறுப்பாக அவன் திருநாமங்களைச் சொல்லு. எண்பதாவது பாசுரத்தில் "நேர்படுவான் தான் முயலும் நெஞ்சு" என்று சொல்லப்பட்ட நெஞ்சைக் குறித்தே உபதே3ஶிக்கிறார் என்று கொள்ளவேண்டும். "ஓதுகதி மாதவனை ஓர்த்து" என்று பாடம் கொண்டால், "ஸ்ரிய:பதியையே உபாயமாக உறுதிபூண்டு அவன் திருநாமங்களைச் சொல்லு" என்று பொருள்படுகிறது. புருஷகார ஸம்ப3ந்த4த்தை அநுஸந்தி4த்து ஆறியிருக்கச் சொல்லுகிறார். ஆக, தாயும் தந்தையுமாயிருந்து நம்மை ரக்ஷிக்கிறவர்களிருக்கும்போது நம் தாழ்வை நினைத்துக் கலங்காமல் அவர்களை ரக்ஷகராக உறுதிபூண்டு ஆறியிருக்கையே நாம் செய்யவேண்டியது என்றாயிற்று. 78.

79. **அவ:**— அநாதி3காலமாக நாம் மலைமலையாகப் பாபங்களைப் பண்ணியிருக்கும்போது, அவற்றைப்போக்க அநந்தகாலம் வேண்டாவோ? எனில், ஶுபா4ஶ்ரயமான திருமேனியோடுகூடிய அவனை அநுஸந்தி4த்து ஶப்3தா3தி3 விஷயங்களில் பற்றின்மை

http://acharya.org

அவ:— (ஓர்த்த மனத்தராய்) அநாதி₃காலம்பண்ணின பாபத்தைப்போக்கும்போது அநந்த காலம் வேண்டாவோ? என்னில்; அவனையநுஸந்தித்து ஶப்₃த₃ாதி₃களிலே அநாத₃ரம் பிறக்கச் சடக்கெனப் போக்கலாமென்கிறது.

வ்யா:—(கார்த்தவித்யாதி) அழகிய திருத்துழாய் மாலையை உடையவனுமாய், தேங்கின கடல்போலேயிருக்கும் திரு

அவ:—அநாதி₃காலம் பண்ணின பாபத்தைப்போக்கும் போது அனந்தகாலம் வேண்டாவோ? என்னில்: அவனை அநுஸந்தி₄த்து ஶப்₃த₃ாதி₃ விஷயங்களில் அநாத₃ரம் பிறக்கவே சடக்கெனப்போக்கலாமென்கிறார்.

உரை:— பசுத்த நிறத்தையுடைத்தாய். பரிமள ப்ரசுர மான செவ்வித்திருத்துழாயாலே அலங்க்ருதனாய், தேங்கின

உண்டானால் பாபங்கள் உடனே பறந்தோடிப்போம், பாபமூலமான பிறப்புகள் நீங்கும் என்கிறார்.

வ்யா:— பாலே மருந்தாமாபோலே, நம்முடைய பாபங்களாகிய பெரிய வியாதி நீங்குவதற்கு மருந்தாய், அமுதமாயிருக்கும் திருமேனி யின் அழகிருக்கும்படியைப் பின்னடிகளாலே காட்டி, முன்னடி களாலே அதிலே நெஞ்சைச் செலுத்தினால் எல்லாம் தன்னடையே ஸித்₃தி₄க்கும் என்கிறார். (கார்த்தமேனி) காணக் கண் கூசும் எரி மேனியாயிராமல், கண்டார் கண்குளிரும் பசுத்த நிறத்தையுடைய திருமேனி. இதனால் கண்ணை இதர விஷயங்களில் நின்றும் மீட்க வல்லது என்று உணர்த்தப்படுகிறது. (கார்த்த துழாய்)என்று கூட்டி, பசுமையான திருத்துழாய் என்றும் பொருள் கொள்ளலாம். (விரை யார் நறும் துழாய் மேனி) "ஸர்வக₃ந்த₄:" என்று தானே ஸர்வ க₃ந்த₄ங்களும் நிறைந்திருப்பதாய், அதற்கு மேலே நறுமணம் மிக்க துழாய்மாலையாலே அலங்கரிக்கப்பெற்ற திருமேனி, இதனால் மூக்கை இதர விஷயங்களில் நின்றும் மீட்கவல்லது என்று உணர்த்தப்படுகிறது. 'விரை' என்றும், 'நறும்' என்றும் இரண்டும் மணத்தைக் குறிக்கும் பத₃ங்களாகையால் ஒன்று மேனிக்கும், ஒன்று துழாய்க்கும் விசேஷணமாகக் கொள்ளப்பட்டது. அன்றிக்கே, 'நறும் துழாய்' என்றது துழாயின் செவ்வியைக் காட்டுவதாகவும், 'விரையார்' என்று அதன் மணத்தைக் காட்டுவ தாகவும் கொள்ளலாம். (வீங்கோத மேனி) அலை ஓய்ந்து நித்திரை

http://acharya.org

மேனியை உடையவனுமாய், ஶப்₃த₃ாதி₃களை நாக்குவளைக்க லாம்படி ஆப₄ரணவழகையுடையவனை. (நின்று ஓர்த்த

கடல்போலே இருண்டு குளிர்ந்த வடிவழகையுடையனும். ஒழுங்குபட்டிருக்கிற திருவாரத்தாலே அலங்க்ருதமான திருமார்வையுடையவனையே ஒருபடிப்படநின்று. நிரந்தரமாக

புரிகையாலே தேங்கியிருக்கும் கடல்போன்று இருண்டு குளிர்ந்த திருமேனி. வீங்கல்—நித்திரை புரிதல். இவனும் யோகநித்திரை செய்கின்றானன்றோ. அன்றிக்கே, வீங்குதல் பொங்குதலாய், பொங்கும் கடல்போன்ற திருமேனி என்றுமாம். சந்திரனைக்கண்டால் பொங்கி ஆரவாரம் செய்யும் கடல்போலே, இவனும் அடியாரைக்கண்டால் பொங்கியெழுந்து, "மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு" "ஸ்வரேணோவாச ப₄க₃வாந் பரிபூ₄தார்ணவத்₄வநி:" [ரகு₄வம்ஶம் 10-35] [கடலின் ஒலியை வெல்லும் முழக்கத்தையுடைய ப₄க₃வான் (பெரிய) ஸ்வரத்துடன பேசினன்] என்கிறபடியே முழங்குகின்றவனன்றோ. 'கார்த்தமேனி' என்னும்போது கறுப்பு நிறத்தை மாத்திரம் உணர்த்திற்று. இங்கு ரஸமயமான கடலை உபமானமாகச் சொல்லுகையாலே, ஸர்வரஸமாயிருக்கையையும், குளிர்ந்திருக்கையையும், முழங்குதலையும் காட்டுகிறது. ஆகையால் புநருக்தியில்லை. இதனால், ரஸநேந்த்₃ரியமான நாக்கையும், ஸ்பர்ஶேந்த்₃ரியமான த்வக்கையும், செவிப்புலனையும் இதர விஷயங்களினின்றும் மீட்கவல்லது என்று காட்டுகிறது. இனி, ஶப்₃த₃ாதி₃களினின்றும் இந்திரியங்களை மீட்கத் திருமேனிதான் வேண்டுமோ? அதில் உள்ள ஓர் திருவாப₄ரணம் போதாதோ என்கிறது.—(நிரை ஆர மார்வனையே) ஒழுங்குபட்டிருக்கும் ஆரமணிந்த திருமார்பை உடையவனையே; ஒழுங்குபட்டிருக்கும் ஆரம் ஒன்றே, ஒழுங்கற்ற ஶப்₃த₃ாதி₃ விஷயங்களை நாக்கு வளைத்து (பரிஹஸித்து) இந்திரியங்களை அவற்றினின்றும் மீட்கவல்லது என்று கருத்து. ஆக, இவ்வளவால் தி₃வ்யமங்க₃ளவிக்₃ரஹம் தியானிக்க எளிதான ஶுபா₄ஶ்ரயமாகவும், மிகவினிதாகவுமிருக்கையாலே—நெஞ்சையும், மற்ற இந்திரியங்களையும் ஶப்₃த₃ாதி₃களினின்றும் ஈர்க்கவல்ல உபாயமாயிருப்பது என்று காட்டப்பட்டது; இனி, (நின்று ஓர்த்த மனத்தராய்) என்று தொடங்கி, இந்தத் திருமேனியில் நெஞ்சைச் செலுத்துவதால் விளையும் பயனைப் பேசுகிறது; (நின்று ஓர்த்த மனத்தராய்) இப்படி நமது இந்திரியங்களுக்கெல்லாம் பரிபூர்ணமாக

மனத்தராயித்யாதி) நின்று அநுஸந்தி₄த்த மநஸ்ஸை யுடையராய், இந்த்₃ரியங்களை விஷயங்களில் போகாதபடி அடக்கி, அவை பொல்லாதென்று ஆராய்ந்து. ஸம்ஸாரத்தைப் போக்கப்புக்கால் போக்கலாம். ஏழ்பிறப்பென்றது உபலக்ஷணம்; ஜன்மமடங்கப் போக்கலாமென்றபடி. 79.

அநுஸந்தி₄க்கிற மனஸ்ஸையுடையராய். ஶ்ரோத்ராதி₃க ளான ஐந்து இந்த்₃ரியங்களையும் விஷயங்களில் போகாதபடி நியமித்து. ஸம்ஸார தோ₃ஷத்தை அநுஸந்தி₄த்து. அதில் நின்றும் ஹ்ருத₃யத்தை மீளவிட்டால்—ஒன்றின் பின் ஒன்றாக வரக்கடவ ஜன்மபரம்பரைகளை அநாயாஸேந போக்கலாம். அவனுடைய ஸ்வாபா₄விகமான வடிவழகை யும் ஒப்பனையழகையும் அநுஸந்தி₄த்தால் ஶப்₃த₃ாதி₃ விஷ யங்களை நாக்கு வளைத்து உபேக்ஷிக்கலாமென்று கருத்து. 79.

இரையிடவல்ல திருமேனியையும், துழாய் மாலையையும், திருவாப₄ ரணங்களையும் உடையவனையே சலியாமல் நின்று இடைவிடாமல் அநுஸந்தி₄க்கிற மனத்தையுடையராய். பால் குடிக்கக் கால்பிடிக்க வேணுமோ? தேனிருக்க, வேப்பெண்ணெயின் அருகில் செல்வார் உண்டோ? ப₄க₃வத்₃விஷயத்தில் நெஞ்சைச் செலுத்தியபின் அதில் நின்றும் மீளவும், ஶப்₃த₃ாதி₃களில் மறுபடியும் கண்வைக்கவும் இயலுமோ? என்று கருத்து. (ஐந்தடக்கி) பஞ்சேந்திரியங்களையும் அடக்கி, இப்படித் தலைவனுன நெஞ்சு ஶுபா₄ஶ்ரயமான திருமேனி யிலே ஈடுபட்ட பின்பு, அதற்கு வேலைக்காரர்களான மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இந்திரியங்களையும் ஶப்₃த₃ாதிவிஷ யங்களில் செல்லாமல் மீட்பது மிக எளிது என்று கருத்து. இப்படி மீட்டாலும், அநாதி₃காலமாக அவற்றில் ஈடுபடுத்தி வந்த ருசி வாஸனைகளைப் போக்க—அவற்றின் தாழ்வையும், ஸம்ஸாரத்தின் தாழ்வையும் இடைவிடாமல் அநுஸந்தி₄க்கவேணும் என்கிறது,— (ஆராய்ந்து) ஶப்₃த₃ாதி₃ விஷயங்களின் தாழ்வையும், அவற்றில் பற்றறுந்தாலும் அறுக்கவொண்ணாத புத்ரமித்ரகளத்ராதி₃மயமான ஸம்ஸாரத்தின் தாழ்வையும் இடைவிடாமல் அநுஸந்தி₄த்து. (பேர்த்தால்) இப்படி அநுஸந்தி₄த்தால், நெஞ்சம் எளிதில் ஶப்₃த₃ாதி₃விஷயங்களிலும் ஸம்ஸாரத்திலும் ருசிவாஸனைகளும் அற்றுப் போகவிடும் என்று கருத்து. (பேர்த்தால் பிறப்பேழும் பேர்க்க

http://acharya.org

தமிழ் இணைய ... நூலகம்
வ.எண் 2255
நாள் 27-10-09

80. நின்றெதிராய நிரைமணித்தேர் வாணன் தோள்
ஒன்றிய வீரைஞ்ஞூ றுடன துணிய—வென்றிலங்கும்
ஆர்படுவான் நேமி யரவணையான் சேவடிக்கே
நேர்படுவான் தான்முயலும் நெஞ்சு.

நின்று—(கூசாமல்) எதிரே வந்து நின்று. எதிர் ஆய—எதிரியாய்ப் போர்செய்ய வந்தவனும். நிரை மணி தேர்—ஒழுங்காக அழுத்தின மணிகளையுடைய தேரின்மேல் ஏறி வந்தவனுமான. வாணன் ஒன்றிய ஈர் ஐஞ்ஞூறு தோள்—ப$_3$ாணாஸுரனுடைய அடியொன்றாய் வளர்ந்த ஆயிரந்தோள்களும். உடன்—ஒரே காலத்தில். துணிய—அறுப்புண்டு விழும்படியாகக் காரியஞ்செய்து. வென்று—வெற்றி பெற்று. இலங்கும்—(அதனால்) ஒளிவீசுகின்ற. ஆர்படு—கூர்மையையுடைய. வான்—வலிய. நேமி—திருவாழியாழ்வானையுடையவனாய். அரவு அணையான்—ஶேஷஶாயியான எம்பெருமானுடைய. சே அடிக்கே—சிவந்த திருவடிகளிலே. நேர்படுவான்—கிட்டுவதற்காக. நெஞ்சு—(எனது) நெஞ்சு, தான்—தானே. முயலும்—உத்ஸாஹப்படுகின்றது.

லாம்) இப்படி இந்திரியங்களோடுகூடிய நெஞ்சை ஸவாஸ[illegible]ாக ஶப்$_3$த$_3$ாதி$_3$ விஷயங்களினின்றும் பேர்த்தால், ஜந்மகாரணமான பாபங்கள் நீங்கிவிடுமாகையாலே, விரகர் நெடுஞ்சுவர் தள்ளுமாபோலே, பல்பிறப்புகளையும் சடக்கெனப் பேர்த்துவிடலாம். (பிறப்பு ஏழும்) என்று உபலக்ஷணமாய், "புநரபி ஜநநம் புநரபி மரணம் புநரபி ஜநநீஜட$_2$ரே ஶயநம்" [(மரணத்திற்குப்பின்) மறுபடியும் பிறப்பு; மறுபடியும் இறப்பு; மறுபடியும் ஓர் தாயின் கருக்குழியில் கிடப்பது] என்கிறபடியே ஒன்றன்பின் ஒன்றாக ஓயாமல் வரும் பல பிறப்புகளையும் காட்டுகிறது. 'பேர்க்கலாம்' என்றது விரைவிலும், எளிதிலும் நீக்கிவிடலாம் என்பதைக் காட்டுகிறது.

ஆக, இப்பாசுரத்தால்—அநாதி$_3$காலமாகச் சேர்த்த பாபங்களைப் போக்க அநந்தகாலம் முயலவேண்டாவோ? என்று கலங்கவேண்டா; திருமேனியை அண்டைகொண்ட ப$_3$லத்தாலே இந்திரியங்களை அடக்கி, விஷயங்களில் ருசிவாஸனைகளற்று, பாபங்கள் நீங்கப்பெறுகையாலே பாபமூலமான பல்பிறப்புக்களையும் போக்கிவிடலாம்—என்று சொல்லிற்றாயிற்று. 79.

அவ:— (நின்றெதிராய) நம்மால் இந்த்3ரியஜயம்பண்ணி அவனை அநுஸந்தி4த்து ஸம்ஸாரஸம்ப3ந்த4ம் அறுக்கப்போகாது; அவன் ப்ரதிப3ந்த4கத்தைப்போக்க. அவனை அநுஸந்தி4க்க ஆசைப்படாநின்றது நெஞ்சென்கிறார்.

வ்யா:— (நின்றெதிராயவித்யாதி) தாமஸதே3வதையை ஆஶ்ரயிக்கையாலே ஸர்வேஶ்வரனென்றறியாதே எதிரிட்டு,

---

அவ:— ப்ரதிகூலநிரஸந ஸ்வபா4வனானவனைப் பெற வேணுமென்று தமக்கு முன்னே தம் திருவுள்ளம் அவ்விஷயத்திலே ப்ரவணமானபடியை அருளிச்செய்கிறார்.

உரை— ருத்3ரனை அண்டை கொண்ட ப3லத்தாலே ஸர்வேஶ்வரனென்று அறியாதே கூசாமல் முன்னே வந்து நின்று எதிராய் நின்றவனாய், ஒழுங்குபட அழுத்தின மணிகளோடே கூடின தேரிலே ஏறிவந்த பா3ணாஸுரனுடைய அடியொன்றாய்ப்பணைத்திருந்துள்ள ஆயிரம் தோளும் ஏகோத்3யோகே3ந அறுப்புண்டு விழும்படியாக ஜயித்து,

---

80. அவ:— 'இப்படி இந்திரியங்களை அடக்கி, ஸம்ஸாரத்தின் தாழ்வை அநுஸந்தி4த்து ஶப்3த3ாதி3களில் ருசிவாஸனையையும் அறுத்து ஸம்ஸாரஸம்ப3ந்த4த்தை நீர் அறுத்துக் கொண்டீரோ?' என்ன, 'நான் இதற்காக எம்முயற்சியையும் மேற்கொள்ளவில்லை; என் பாபங்களை அவன் போக்க. விரோதி4நிரஸநத்தையே இயல்வாகக் கொண்ட அவனைப் பெறவேணுமென்று எனக்கு முன்னதாக என் நெஞ்சு தானே அவனிடத்தில் ஈடுபடுகிறது' என்கிறார்.

வ்யா:— (நின்று எதிராய) தமோகு3ணம் மிகுந்த உருத்திரனை ஆஶ்ரயிக்கையாலே, 'கண்ணன் ஸர்வேஶ்வரன்' என்று அறியாமல், அச்சிவனை அண்டைகொண்ட ப3லத்தாலே கூசாமல் முன்னே வந்து நின்று எதிரிட்டவனாய். (நிரை மணித்தேர் வாணன்) ஒழுங்காகப் பதித்த ரத்தினங்களோடு கூடிய தேரிலேறி வந்த பா3ணாஸுரன். அண்டைகொண்ட ப3லத்தோடு, ஐஶ்வர்யப3லத்தையும் உடைய ஆஸுரப்ரக்ருதியாகையாலே தக்க த3ண்ட3னையை அளித்தான் என்கிறார் மேலே.— (ஒன்றிய ஈரைஞ்ஞூறு தோள் உடன் துணிய) அடிமரம் ஒன்றாய், அதிலிருந்து பல கிளைகள் வளர்வதுபோலே, ஒவ்வொரு தோளிலிருந்தும் பணைத்த ஐந்நூறும் ஐந்நூறுமான ஆயிரம் கைகளும் ஒரே சக்ரப் பிரயோக3த்தில் ஒரேயடியாக மலைக்கொடுமுடிகள்போலே வெட்டுண்ணும்படியாக.

http://acharya.org

தேரையுடையவனுன பாணனுடைய தோளோடே தோளொன்றிய அல்லாத ஆயிரந்தோளும் துணியும்படிக் கீடாக வென்று. ஒளியையும் கூர்மையையுமுடைய திருவாழியையுடைய

அத்தாலே ஒளிவிடாநிற்பதாய், கூர்மையை உடைத்தாய், அதிப்ரபலமான திருவாழியையுடையனை அனந்தசாயியுடைய சிவந்த திருவடிகளிலே நெஞ்சானது எனக்கு முன்னே இட்டுவதாகத் தானே உத்ஸாஹியாநின்றது.

'தோள் ஒன்றிய' என்றுமாம்; தோளிலே ஒன்றிய என்றபடி. 'ஈரைஞ்ஞூறு' என்று ஒவ்வொரு தோளிலிருந்தும் வளர்ந்துள்ள ஐந்நூறும் ஐந்நூறுமான கைகளைச் சொல்லுகிறது. இது அப்பிள்ளை நிர்வாஹம்; அன்றிக்கே, 'ஒன்றிய' என்றது 'தோளோடு தோள் ஒன்றிய' என்று பொருள்படுவதாகக்கொண்டு, அத்தகைய ஆயிரம் தோள்களில் இருக்கவேண்டிய இரண்டு தோள்களை மாத்திரம் விட்டுவிட்டு, கர்வஹேதுவான மற்ற தோள்களை ஒரே ப்ரயோகத்தில் துணித்தான் என்றும் கொள்ளலாம். இது பெரியவாச்சான்பிள்ளை நிர்வாஹம். திருப்பல்லாண்டில், "மாயப் பொருபடைவாணனை ஆயிரம் தோளும் பொழி குருதி பாயச் சுழற்றிய" [திருப்பல் 7] என்றவிடத்து வியாக்கியானத்தில், "வாணனுடைய தலையை அருதொழிந்தது குற்றம் போராமையன்று; உஷை பித்ருஹீநை ஆகாமைக்காகவும், 'தேவதாந்தர பஜநம் பண்ணுவார்க்குப் பலம் இது' என்னுமிடத்துக்கு மச்சமாகவும் (அடையாளமாகவும்). அதாவது,— 'பரிவின்றி வாணனைக் காத்தும்' [திருவாய் 3-10-4] என்று ப்ரதிஜ்ஞை பண்ணி, யுத்தத்திலே இவனைக் காட்டிக்கொடுத்து, ஸபரிகரனாய்க்கொண்டு முதுகுகாட்டிப்போனான் ரக்ஷகன். ரக்ஷ்யன் தோள் துணியுண்டான்; 'உன்னை ரக்ஷிக்கப்புக்கு நான் பட்டதோ' என்றும், 'உன்னை ஆஶ்ரயித்து நான் பட்டதோ' என்றும் இருவரும் கூடக் கட்டிக்கொண்டு கதறுகையிறே பலமாய்விட்டது" என்று பெரியவாச்சான்பிள்ளை அருளியது இங்கும் அநுஸந்திக்கத்தக்கது. (வென்று இலங்கும் நேமி) இத்தகைய வெற்றியாலே ஒளிவிடாநிற்கும் திருவாழியாழ்வான். "பாழியந்தோளுடைப் பற்பநாபன் கையில் ஆழிபோல் மின்னி" [திருப்பாவை 4] என்கிறபடியே எம்பெருமானுடைய வெற்றிகண்டு ஒளிவிடுவதன்றோ திருச்சக்கரம்.

http://acharya.org

அநந்தசாயியுடைய திருவடிகளிலே அணைய நெஞ்சானது தானே ப்ரவர்த்தியாநின்றது. 80.

81. நெஞ்சால் நினைப்பரியனேலும் நிலைப்பெற்றென்
நெஞ்சமே பேசாய் நினைக்குங்கால்—நெஞ்சத்துப்
பேராதுநிற்கும் பெருமானை யென்கொலோ
ஓராது நிற்ப துணர்வு.

என் நெஞ்சமே—எனக்கு வசப்பட்ட மனமே. நெஞ்சால் நினைப்பு அரியன் ஏலும்—(எம்பெருமான்) நெஞ்சால் நினைக்கமுடியாத பெருமை வாய்ந்தவனேயாயினும் (அவனுடைய பெருமையை நினையாமல் எளிமையையே நினைத்து), நிலைப்பெற்று—காலூன்றி நின்று. பேசாய்—அவனைப்பேசப் பார்; நினைக்குங்கால்—நாம் ஒருமுறை நினைத்தாலும்,

---

ஆர்படுகை — கூர்மையையுடைத்தாகை. அரங்களையுடைத்தாகை என்றுமாம். வான்—வலி. 80.

(ஆர்படு நேமி) இப்படி அஸுரனின் ஆயிரம் தோள்களையும் ஓரேயடியாகத் துணிக்கவல்ல கூர்மையை உடைய திருச்சக்கரம். ஆர்படுகை—கூர்மையை உடையதாகை. அன்றிக்கே, அரங்களையுடைய திருவாழி என்றும் கொள்ளலாம். (வான் நேமி) மிகப் பெரிய சக்கரம். வலிமிக்க சக்கரம் என்றுமாம். இத்தால் தன் பேரனை அநிருத்தனுக்காக, அவனுடைய அபேக்ஷையில்லாமல் அவன் விரோதியான வாணனை வலியழித்ததுபோலே, என் விரோதிகளையும் என் அபேக்ஷையில்லாமலே தானே அழித்தான் என்றதாயிற்று. இப்படி விரோதி போனபின்பு அநுபவிக்கும் வடிவழகைச் சொல்லுகிறது.— (அரவணையான்) ஆதிசேஷசயனத்தில் 'கிடந்ததோர் கிடக்கை' [திருமாலை 23] என்று அடியார் ஈடுபடும்படி பள்ளிகொண்டிருப்பவன். (சேவடிக்கே நேர்படுவான் நெஞ்சு தான் முயலும்) அவனுடைய சிவந்த திருவடிகளையே அணைந்து கைங்கர்யம் செய்ய என் நெஞ்சு தானே முயலாநின்றது. என் முயற்சியை எதிர்பாராமல் என் விரோதிகளைப்போக்கி, என் நெஞ்சை எனக்கு முற்பட்டுத் தன்னிடம் ஈடுபடும்படியாக எம்பெருமான் செய்தான் என்று கருத்து. 80.

http://acharya.org

நெஞ்சத்து—நெஞ்சு தன்னிலே. பேராது நிற்கும்—விட்டு நீங்காமல் நிலைத்து நிற்கின்ற. பெருமானை—எம்பெருமானை. உணர்வு—நமது நெஞ்சானது. ஓராது நிற்பது என்கொலோ—நினையாமல் வாளாவிருப்பது ஏனோ?

அவ:—(நெஞ்சால்) கீழ் ஸம்ஸாரிகளுக்கு இல்லாதது தமக்குண்டானவாறே நெஞ்சு பகவத்விஷயத்திலே மண்டிற்றென்று கொண்டாடினார். விஷயத்தைப் பார்த்தவாறே அடியிட்டிலதாயிருந்ததென்கிறது.

அவ:— ஸம்ஸாரிகள் நெஞ்சுபோலே அந்யபரமாயிருக்கையன்றிக்கே என் நெஞ்சு பகவத்ப்ரவணமாய்த்து என்று கொண்டாடினவர் விஷய வைலக்ஷண்யத்தைப் பார்த்தவாறே இவ்விஷயத்திலே நெஞ்சு முதலடியிட்டதில்லை என்று தோற்றி. அவன் துர்ஜ்ஞேயனாகிலும் அவனை அநுஸந்தி, என்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்து அவனை இம்மனஸ்ஸு அநுஸந்தியாமைக்கு ஹேது ஏதோவென்று ஸ்வகதமாக அருளிச்செய்கிறார்.

---

81. அவ:— 'ஸம்ஸாரிகளுடைய நெஞ்சுபோலே ஶப்தாதி விஷயங்களிலேயே மண்டியிராமல், என் நெஞ்சு எம்பெருமானிடம் தானே ஈடுபடாநின்றது', என்று சென்ற பாசுரத்தில் 'நெஞ்சைக் கொண்டாடினார். அடுத்த கணத்திலே பகவத் விஷயத்தின் பெருமையை அநுஸந்தித்தவுடன், 'இவ்விஷயத்திலே நெஞ்சு இப்போதுதானே அக்ஷராப்யாஸம் செய்யத்தொடங்கியிருக்கிறது' என்று தோற்றி, 'அவன் இப்படி அறப்பெரியனாகையாலே அறிய அரியவனாயினும், பின் வாங்காமல் நீ அவனையே அநுஸந்திக்கவேணும்' என்று முற்பகுதியில் தம் திருவுள்ளத்துக்கு உபதேஶித்து, பிற்பகுதியிலே, 'அவனை இந்நெஞ்சு அநுஸந்திக்காமல் பின்வாங்குவது ஏனோ?' என்று தமக்குத் தாமே கேட்டுக்கொள்ளுகிறார் இப்பாசுரத்தில்.

http://acharya.org

வ்யா:— (நெஞ்சாலித்யாதி) நெஞ்சமே! உன்னால் நினைக்கப் போகாதாகிலும். (நிலைப்பெற்றென்னெஞ்சமே பேசாய்) ஐஶ்வர்யங்கண்டு பிற்காலியாதே அநுபவியாய். (நினைக்குங்காலித்யாதி) ஒருகால் நினைக்கில், நாக்குண்டா

உரை— பரிச்சி₂ன்ன வஸ்துக்₃ராஹகமான மனஸ்ஸால் பரிச்சே₂தி₃த்து நினைக்கவொண்ணாத பெருமையையுடையனா யிருந்தானேயாகிலும் அவன் பெருமையை நினைத்துப் பிற்காலியாதே ஆஶ்ரிதஸுலப₄னென்று அநுஸந்தி₄த்து காலூன்றி த₄ரித்துநின்று எனக்கு ப₄வ்யமான நெஞ்சே! அவனைப் பேசப்பாராய். இப்படிச் சொன்னவிடத்திலும் திருவுள்ளம் மெத்தென்று இருந்தவாறே தனக்குப் பாங்கான ஸமயத்திலே இவன் ஒருகால் நினைத்துக் கைவாங்கி

வ்யா:— (நெஞ்சால் நினைப்பரியனேலும்) அளவுபட்ட பொருள்களையே அறியும் நெஞ்சாகிற உன்னால் அளவுபடுத்தி அறியவொண்ணாத பெருமையை உடையவனானாலும். (நிலைப் பெற்று என் நெஞ்சமே பேசாய்) எனக்கு வசப்பட்டிருக்கும் நெஞ்சே! அவனுடைய பெருமையை நினைத்துப் பின்வாங்காமல், 'அடியார்க்கு எளியவன்' என அறிந்து, பரத்வவெள்ளத்தால் ஒதுக்கப்படாமல் காலூன்றி தரித்துநின்று, அவனைப் பேச முயல்வாய்! இப்படி ஆழ்வார் உபதே₃ஶித்த பின்பும், 'இதற்கு நாக்கு உண்டா, அல்லது இருந்தும் நா எழவில்லையோ?' என்று ஸந்தே₃ஹிக்கும்படி நெஞ்சு ப₄க₃வத்விஷயத்தைப் பேசாமலே மெத்தென்றிருக்க, 'இது ஏன் இப்படியிருக்கிறது?' என்று தமக்குத் தாமே கேட்டுக்கொள்கிறார் பாசுரத்தின் எஞ்சிய பகுதியாலே— (நினைக்குங்கால் நெஞ்சத்துப் பேராது நிற்கும் பெருமானை) " ஸ்தி₂தே மநஸி ஸுஸ்வஸ்தே₂ ஶரீரே ஸதி யோ நர: தா₄துஸாம்யே ஸ்தி₂தே ஸ்மர்த்தா" [வராஹசரமம்] [மனம் நிலை நிற்கையில், சரீரம் நோயற்று ஸுகமாயிருக்கையில், வாதம், பித்தம், ஶ்லேஷ்மம் என்னும் மூன்று, தா₄துக்களும் ஸமமாயிருக்கையில், எந்த மனிதன என்னை நினைக்கிறானோ] என்கிறபடியே தனக்கு ஸௌகர்யமாயிருக்கும் ஏதோவொரு ஸமயத்தில் இவன் ஒருமுறை ஸர்வேஶ்வரனை ரக்ஷகனாக நினைத்துப் பின் மறந்தாலும், நினைத்த அக்கணத்திலேயே அவன் நெஞ்சிலே

http://acharya.org

நாவெழாவென்ற நெஞ்சுவிட்டுப் போகவறியாத ஸர்வேஶ்வரனை. "கண்ணுள்ளே நிற்குங்காதன்மையால் தொழில்" என்கிறபடியே. (என்கொலோவித்யாதி) அவனை நினையாதே மணலை முக்கப்பார்க்கிறதோ? அவனை நினையாதே தானுண்டாம்படி எங்ஙனே? "ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" 81.

னால் பின்னை எப்போதும் நெஞ்சம்விட்டுப் போகமாட்டாமே நித்யவாஸம்பண்ணும் ஸர்வேஶ்வரனை அறிவுக்கு வாய்த்தலையான மனஸ்ஸானது அநுஸந்தி₄யாதே இருக்கிறது என்னோ? வேறே சில து₃ராராத₄தே₃வதைகளைப் பற்றவிருக்கிறதோ? ஶப்₃தா₃தி₃ விஷயங்களைப் பற்ற இருக்கிறதோ? இம்மனஸ்ஸு எத்தை நினைத்து அவனை நினையாதிருக்கிறது? என்று ஸ்வக₃தமாக அநுஸந்தி₄த்தாராய்த்து. 81.

குடியேறி, அதற்குப்பின் இவன் தன்னை நினைத்தபோதோடு நினையாதபோதோடு வாசியற எப்போதும், 'இந்த நெஞ்சுக்கு நாக்குதான் உண்டா? இருந்தும் நா எழவில்லையோ' என்று ஐயுறும்படி தன்னைப் பேசாமலிருக்கும் இவ்ன் நெஞ்சைவிட்டுப் போகமாட்டாமல் நித்யவாஸம் செய்யும் ஸர்வேஶ்வரனை, "கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில், எண்ணிலும் வரும் என்னினி வேண்டுவம்?" [திருவாய் 1-10-2] என்கிறபடியே ஒரு கால் தொழுதாலும், எண்ணினாலும் எளியனாயிருக்கிறானன்றோ எம்பெருமான். (என்கொலோ ஓராது நிற்பது உணர்வு) "ஒண்தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு" [முதல்திருவ 67] என்கிறபடியே அவனை அறிவதற்கென்றே ஏற்பட்டதாய், அவனை அறியாவிடில் ஸத்தைபெறாத (உளதாக மாட்டாத) அறிவு புறப்படும் இடமான இந்நெஞ்சம், இவனை நினையாமலிருப்பது ஏனோ? கண்ணெதிரே பாயும் அமுத வெள்ளத்தைப் பருகாதே இரும்பைக் காய்ச்சிக் குடிக்கநினைக்கிறதோ? ஆராவமுதாய், எளியனான அவனை விட்டு, சுவையற்றவராய், ஆராத₄னைக்கரியரான வேறு தே₃வதைகளைப் பற்றலாமென்றிருக்கிறதோ? ஆற்றுநீர் பாய்ந்துவரும்போது, கண்டத்தை அடைக்கும் மணலை விழுங்க நினைக்கிறதோ? பருகு

http://acharya.org

82. உணரி, லுணர்வரிய னுள்ளம் புகுந்து
புணரிலும் காண்பரிய னுண்மை—இணரணைய
கொங்கணைந்து வண்டறையும் தண்டுழாய்க் கோமானை
எங்கணைந்து காண்டு மினி.

உணரில்—(அப்பெருமானை நாமாக) அறியப்பார்த்தாலும். உணர்வு அரியன்—(அவன்) அறியவொண்ணாதவன்; (அவன் தானே). உள்ளம் புகுந்து புணரிலும்—நெஞ்சிலே வந்து புகுந்து அணைந்தாலும். உண்மை காண்பு அரியன்—உள்ளபடி அறியக் கூடாதவன்; இனி—இப்படியான பின்பு, இணர் அணைய—பூங்கொத்துகள் தாழும்படியாக. கொங்கு—தேனிலே. வண்டு—வண்டுகள். அணைந்து—வந்துகிட்டி (மதுவைப்பருகி). அறையும்—ரீங்காரம் செய்யப்பெற்ற. தண்—குளிர்ந்த. துழாய்—திருத்துழாய் மாலையை அணிந்துள்ளவனை. கோமானை—அந்த ஸர்வேஶ்வரனை. இனி—இந்நிலையில். எங்கு—எவ்விடத்தில். அணைந்து—கிட்டி. காண்டும்—காணக்கடவோம்?

அவ:— இம்மனஸ்ஸை இன்னதாகிறதென்? ஒருவர்க்கும் ஒருவகையும் அறியவொண்ணாதபடி இருப்பானாய், நிரதிஶயபோக்யனுமாயிருந்தபின்பு, இனியவனை நாம் கிட்டிக் கொண்டோமாய்த் தலைக்கட்ட விரகுண்டோ? என்கிறார்.

நீர் போலேயிருக்கும் அவனைவிட்டு, ஶப்தாதி விஷயங்களை அநுபவிக்க நினைக்கிறதோ? இம்மனம் நாம் உபதேஶித்த பின்பும் எதை நினைத்து அவனை நினையாமலிருக்கிறது? என்று தம் ஆற்றாமையாலே நெஞ்சை அதிஶங்கைபண்ணித் தமக்குத் தாமே கேட்டுக்கொள்கிறார். ஆக, இப்பாசுரத்தால், நெஞ்சால் அளவிட்டறியமாட்டாத அவன் பெருமை சொல்லிற்றாயிற்று. 81.

82. அவ:— இம்மனத்தை வெறுத்துப் பயனென்ன? எவராலும் எவ்வகையிலும் அளவிட்டு அறியமுடியாதபடியிருப்பவனாய், கைவிடமுடியாதபடி ஒப்பற்ற இனிமையை உடையவனாயிருக்கும் அவனை நாம் அணுகி அநுபவித்து முடிப்பதற்கு வழியுண்டோ? என்கிறார்.

http://acharya.org

வ்யா:— (உணரிலுணர்வரியன்) தன்னாலுமறியப் போகாது; இவனாலுமறியப்போகாது. "தனக்கும் தன் தன்மை அறிவரியானை" ஸ்வயத்நத்தால் காண்பார்க்குக் காணப் போகாது. (உள்ளமித்யாதி) தானே வந்து ஹ்ருத₃யத்திலே புணர்ந்தானேயாகிலும் அவனுடைய உண்மை அறியப்

உரை:— ஆரேனுமொருத்தர்க்கும் ஸ்வயத்னத்தாலே அறியப்பார்க்குமளவில் அறிவரியனாயிருப்பானொருவன். இவ் வருமை தீர அவன் தானே ஹ்ருத₃யத்திலே வந்து புகுந்து கலந்தானாகிலும் இவ்வளவென்று பரிச்சே₂தித்துக் காண்கைக்கரியனாயிருப்பானொருவன். இது பரமார்த்த₂ம். இப்

வ்யா:— (உணரில் உணர்வரியன்) எவரேனும் இவனைத் தம் முயற்சியாலே அறியப்பார்த்தார்களாகில், அறிய அரியவனாயிருப்பான். நம்மைப்போன்ற அல்பஜ்ஞர்களுக்கு மாத்திரமல்ல; பேரளவுடைய ஸநகாதி₃களுக்கும், ப்₃ரஹ்மருத்₃ராதி₃களுக்கும் அறிய அரியவனாயிருப்பன். "ஸோ அங்க₃ வேத₃ யதி₃வா ந வேத₃" [அவன் தானே தன் பெருமையை அறிவானோ, மாட்டானோ] "தனக்கும் தன் தன்மை அறிவரியானை" [திருவாய் 8-4-6] "தாம் தம் பெருமை அறியார்" [பெரியதிரு 5-2-1] என்கிறபடியே நித்யஸர்வஜ்ஞனான அவனாலேயே அவன் பெருமையை அளவிட்டறியமுடியாது. ஸ்வயத்நத்தால் அவனை அறியமுடியாதாகிலும், அவன் தானே தன்னைக் காட்டக்கண்ட உம்மைப் போன்றவர்கள் அறியத்தட்டென்ன? என்ன, அப்போதும் அளவிட்டறியமுடியாது என்கிறார்,— (உள்ளம் புகுந்து புணரிலும் உண்மை காண்பரியன்) நம் முயற்சியால் அறியமுடியாத அருமை தீர இவன்தானே நம்முடைய உள்ளத்தில் புகுந்து நம்மோடு புரையறக்கலந்தானாகிலும், இவனுடைய தன்மைகளில் ஒன்றொன்றையும் இவ்வளவென்று அளவிட்டுக் காண அரியவனாயிருப்பவன். 'எத்திறம்' என்று மயங்கிவிழுமித்தனை. 'உண்மை' என்று மேன்மை, நீர்மை முதலான ஒவ்வொரு தன்மையைக் காட்டுகிறது. 'உண்மை காண்பரியன்' என்றதற்கு உள்ளபடி காணமுடியாதவன் என்றும் கொள்ளலாம். அன்றிக்கே, (உள்ளம் புகுந்து புணரிலும் காண்பரியன்) என்று இவனுடைய (ஸ்வரூபஸ்வப₄ாவங்களின்) அளவிட்டறியமுடியாமையைக்காட்டி, (உண்மை) இவ்வர்த்த₂ம் ஸத்யமானது என்கிறாராகவுமாம். இப்படிக் காண

http://acharya.org

போகாது. (இணாரணையவித்யாதி) காணவரியனென்று கைவாங்கப்போகாதென்கிறது. பூங்கொத்துக்கள் தாழும்படிக்கீடாக மதுவைப் பாநம் பண்ணின வண்டுகள் ஸப்$_3$தி$_3$யாநின்ற திருத்துழாய் மாலையையுடைய ஸர்வேச்வரனை எங்கே கிட்டிக் காண்போமினி? 82.

படியானபின்பு. பூங்கொத்துக்கள் தாழும்படிக்கீடாக தேனிலே வண்டுகள் வந்து கிட்டி அத்தைக்கழுத்தே கட்டளையாகப் பருகிச் செருக்கி அதுக்குப் போக்குவிட்டு ஸப்$_3$தி$_3$யாநின்றுள்ள குளிர்ந்த திருத்துழாயையுடைய ஸர்வேச்வரனை எங்கே கிட்டிக் காணக்கடவோம்? 'காண்பரியன் உண்மை' என்றானபோது ஒருவர்க்கும் இவ்வளவென்று அளவிட்டுக் காணவரிதான வைலக்ஷண்யத்தை யுடையவனென்று பொருளாகக் கடவது. இணர்--பூங்கொத்து. 82.

வொண்ணாதவனாகில் அவனைக் கைவிட்டு விடலாமே? என்ன, அவன் இனிமையைப் பார்த்தால் கைவிடமுடியுமோ? என்கிறார்.— (இணர் அணையக் கொங்கு அணைந்து வண்டு அறையும் தண்துழாய்க் கோமானை) பூங்கொத்துக்கள் தாழும்படியாக, தேனிலே வண்டுகள் மொய்த்து, தேனைக் கழுத்தளவும் பருகிச் செருக்கடைந்து, அச்செருக்குக்குப் போக்குவீடாக ரீங்காரம் செய்யும் குளிர்ந்த திருத்துழாயை மாலையாக உடைய ஸர்வேஸ்வரனை. இத்தகைய திருத்துழாயை தரித்திருப்பதே இவன் ஸர்வேஸ்வரன் என்று காட்டித்தருகிறது என்று கருத்து. தண்துழாயை இன்னவிடத்தில் தரித்திருப்பவன் என்று குறிப்பிட்டுக் கூறாமையாலே, "தோளிணைமேலும் நன் மார்பின்மேலும், சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடையம்மான்" [திருவாய் 1-9-7] என்று இதையே பாத$_3$ாதி$_3$கேசாந்தமாக தரிப்பவன் என்று தோற்றுகிறது. (இனி எங்கணைந்து காண்டும்) இப்படி அறிவரிய பிரானாய், கைவிடவொண்ணாத இனிமையையுடையவனாக அவனிருக்கும்போது, அவனை எந்தக் காலத்தில், எந்த தேசத்தில் அணுகிக் கண்டுமுடிக்கக்கடவோம்? அநந்த காலத்திலும், நேரே ஸாக்ஷாத்கரிக்கும் பரமபதத்திலும் அவனை அளவிட்டு அறியமுடியாது என்று கருத்து. 82.

http://acharya.org

83. இனியவன் மாய னெனவுரைப்ப ரேலும்
இனியவன் காண்பரியனேலும்—இனியவன்
கள்ளத்தால் மண்கொண்டு, விண்கடந்த பைங்கழலான்
உள்ளத்தி னுள்ளே யுளன்.

இனி—இப்போது. அவன்—அந்த ஸர்வேஸ்வரன். மாயன்—அறிவரிய ஆஸ்சர்யபூ$_4$தன்', என—என்று. உரைப்பர் ஏலும்—சொல்லுவார்களேயாகிலும். இனி—இப்போது. அவன்—அப்பெருமான், காண்பு அரியன் ஏலும்—கண்டு அநுப$_4$விக்க இயலாதவனேயாகிலும், கள்ளத்தால்-வஞ்சனையால். (மாவலி பக்கலிலே சென்று) மண் கொண்டு—பூ$_4$மி த$_3$ானம் வாங்கி. விண் கடந்த பை கழலான் அவன்—ஆகாசம் முதலிய மேலுலகங்களையும் ஆக்ரமித்துக்கொண்ட பரந்த திருவடிகளையுடையனான அப்பெருமான். இனி—இப்போது. உள்ளத்தின் உள்ளே உளன்—எனது ஹ்ருத$_3$யத்தினுள்ளே (வேறிடமறியாமே) நிலைத்து நிற்கிறான். (இந்தப் பெரும்பேறே போதும் என்கை.

வ்யா:— (இனியவனித்யாதி$_3$) வர்த்தமான த$_3$ஶையில் ப்ரக்ருதியிலே (ஸம்)ப$_3$ந்தி$_4$த்து "मम माया दुरत्यया" (மம

அவ:— இப்படி இவன் ஒருவராலும் காணவும் நினைக்கவுமொண்ணாதானொருவனாகிலும். அவன், இருந்தபடியிருக்க; இப்போது முந்துற முன்னம் என் ஹ்ருத$_3$யத்திலே புகுந்து ஸன்னிதி$_4$பண்ணாநின்றானென்கிறார்.

உரை:— ப$_4$க$_3$வத்ஸௌலப்$_4$யத்தின் ஏற்றமறியாத வாய்கரையரானவர்கள் இப்போது அந்த ஸர்வேஸ்வரன்

